தொகு முகை

# தமிழ்

## 12-13

## கட்டுரையும் - சிறுகதையும்
## நாவலும் - நாடகமும்

2017 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்துவதற்கானது

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பதிப்பு - 2020

© EPD

ISBN 978-25-0569-0

இந்நூல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்
இல 105 - 1 லேக் வீதி, அம்பன்தல, முல்லேரியா புதிய நகரத்தில்
அமைந்துள்ள பராமவுன்ட் சொலூவின்ஸ் பிரைவட் லிமிடெட்
அச்சகத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சகலருக்கும் மகிழ்ச்சியாக வாழ முடியுமான சிறந்ததொரு சமூகத்தைக் கட்டியெழுப்புவது கல்வியின் அடிப்படை நோக்கங்களுள் ஒன்றாகும். இதற்குத் தேவையான அறிவு, திறன், மனப்பாங்குகளை வழங்குவதில் நூல்களுக்குத் தனித்துவமான இடமொன்றுள்ளது.

கல்வி வெளியீட்டுத் திணைக்களம் மூலம் மேலதிக வாசிப்பு நூல்கள் வெளியிடப்பட்டு சாதாரண விலைக்குப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவது மேற்படி நோக்கத்தை அடைவதற்கு மேற்கொள்ளும் ஒரு முயற்சியாகவேயாகும்.

க. பொ. உயர்தரம் மற்றும், உயர் பரீட்சைகளுக்குத் தயாராவோர் மற்றும் நூல்கள் வாசிப்பதில் ஆர்வமுள்ள ஏனையோரின் பயன்பாட்டின் பொருட்டே இந்நூல் தயாரிக் கப்பட்டுள்ளது. எனவே இந் நூல்கள் மூலம் உச்சப் பயனைப் பெற்றுக் கொள்வது உங்கள் பொறுப்பாகும்.

இந்நூலை ஆக்குவதில் பல்வேறு விதத்திலும் உதவி ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுறுபாய
பத்தரமுல்ல
2020.03.13


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்றில்

க. பொ. த உயர்தரத்தில் கற்கும் மாணவர்களின் கற்றலை இலகுபடுத்தும் நோக்கில் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் பாடநூல்களை வெளியிட்டு வருகின்றது. இவ்வரிசையில் தமிழை ஒரு பாடமாக பயிலும் மாணவர்களின் கற்றல் அடைவு மட்டத்தை உயர்த்தும் நோக்குடன் சங்ககாலம் முதல் தற்காலம் வரையிலான செய்யுள் பகுதிகளையும், கவிதைகளையும் உள்ளடக்கிய தொகுமுகை என்ற நூலை வெளியிட்டது. அந்த நூலுக்கு நமது கல்விப் புலத்தில் கிடைத்த வரவேற்பைத் தொடர்ந்து உரைநடைப் பகுதிகளைதாங்கிய இந்நூல் மலர்ந்துள்ளது. 'தொகுமுகை' என்ற பெயரிலேயே உயர்தர வகுப்புகளுக்கான தமிழ் பாடநூல்கள் அமைவது உகந்தது எனும் ஆசிரியப் பெருந்தகைகளின் வேண்டுதலை ஏற்று அதே மகுடத்தில் இந்நூலையும் தொடர்ந்து வரவிருக்கும் இலக்கணம், இலக்கிய வரலாறு ஆகிய நூல்களையும் உங்கள் கைகளில் தவழ விட உவகை கொண்டுள்ளோம்.

சிறுகதை, நாவல், நாடகம் ஆகிய உரை நடை ஆக்க இலக்கியங்களையும் கட்டுரைகளையும் தாங்கிய இம்முகையின் ஒவ்வொரு அலகும் படைப்பாளி அறிமுகம், படைப்பு, அரும்பதங்கள்/ பேச்சு வழக்குச் சொற்கள், உட்கருத்து, படைப்பாக்க நுட்பங்கள் கற்றல் வினா ஆகியவற்றை உள்ளடக்கியதாய் வடிவமைக்கப்பட்டுள்ளது.

வாசிப்பு என்பது உட்கருத்தை கண்டுபிடிப்பது மட்டுமல்ல அதற்கும் அப்பால் 'படைப்பு' எவ்வாறு கட்டப்பட்டுள்ளது என்பதனையும் அதனைக் கட்டிய படைப்பாளியின் மனநிலை படைப்பாற்றல் முதலியவற்றை அளவிட மாணவர்கள் பயிற்சி பெறவும் வேண்டும் அதற்கெனப் பயிற்றப்படுவதினூடாக மாணவர்களின் ஆய்வு மனம் விரிவடையும். இதனூடாக தமிழில் உரைநடை அடைந்த மாற்றங்கள் வளர்ச்சி பற்றிய தேடலில் நமது புலம் செழுமைப்படும். அந்த செழுமைக்கான விதைப்புகள் வகுப்பறையில் நடைபெறும்போது பெறுபேறு மட்டுமல்ல தமிழும் உயர்வெய்தும் என்ற நோக்கில் கற்றல் வினாக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக ஐந்தாம் வினா பாடத்திற்கு அப்பால் பிள்ளைகளும் ஆசிரியர்களும் சிறகு விரிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் விதைக்கப்படுகின்றது. ஆய்வு நோக்கில் உயர்தர மாணவர்களின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் அமையும் போது எதிர்காலக் கல்விச் சூழலில் நமது பிள்ளைகள் வெற்றி பெறுவர் என்பது திண்ணம்.

மாற்றமடைந்து வரும் உலகில் மொழியே வேகமாகவும் நேரிடையாகவும் முகம் கொடுக்கின்றது. நமது தமிழ் உரைநடையின் பல்பரிமாணத்தைத் புரிந்துகொள்வதற்கான நுழைவாயிலாக ஒவ்வொரு அலகும் வடிவமைக்கப்பட வேண்டும். உங்களது உயரிய ஆலோசனைகளையும் கருத்துக்களையும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். நாம் அணிசேர் வதினூடாக நமது கல்விப் புலத்தை விளக்கம் பெறச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எமக்கு நிறையவே உண்டு.

**நன்றி**

- நூலாக்கக் குழு -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்காணிப்பும் மேற்பார்வையும்

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## வழிகாட்டல்

**டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி**

ஆணையாளர் (அபிவிருத்தி)

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## இணைப்பாக்கம்

**சி. காண்டீபன்**

அபிவிருத்தி அலுவலர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## எழுத்தாளர் குழு

**ஜனாப் எம். எச். எம் ஜவ்பர்**

விரிவுரையாளர்

அரசினர் ஆசிரியர் கலாசாலை

கொட்டகலை.

**ஜனாப் எம். முஸ்தபா மஃஸூர்**

அதிபர்

கொ/ அல் - ஹிக்மா கல்லூரி

கொழும்பு - 12.

**தா. பத்மா பத்மநாதன்**

ஆசிரியர்

க/ மலைமகள் இந்து மத்திய கல்லூரி

தெல்தோட்டை

**எஸ். கேசவன்**

விரிவுரையாளர்

சியன கல்வியியற் கல்லூரி வேயான்கொடை.

**எஸ். ரமேஸ்**

ஆசிரியர்

யா/ மகாஜனக் கல்லூரி

தெல்லிப்பழை.

**கெ. சந்திரகுமாரி**

ஆசிரியர்

கொ/ விவேகானந்த கல்லூரி

கொழும்பு 13.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தர்ஷினி ரதன்**

அபிவிருத்தி உத்தியோகத்தர்

மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சு

## பதிப்பாசிரியர் குழு

**கலாநிதி. எஸ். சுதர்ஷன்**

விரிவுரையாளர்

தமிழ் மொழித்துறை

பேராதனைப் பல்கலைக்கழகம்.

**நா. சீதரன்**

சிரேஷ்ட விரிவுரையாளர் (ஓய்வு)

தமிழ் மொழித்துறை

தேசிய கல்வி நிறுவகம்

மஹரகம.

**சி. காண்டீபன்**

அபிவிருத்தி அலுவலர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## மொழிப் பதிப்பு

**கே. பாலறஞ்ஜனி**

கல்வி மற்றும் ஆய்வு உத்தியோகத்தர்

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்.

## சரவை நோக்கு

**இ. மகேந்திரன்**

ஆசிரியர்

நேர்வூட் த.ம.வி.

## நூல் வடிவமைப்பு

**நடேஷன் துஷாந்தன்**

நூல் வடிவமைப்பாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**தர்மகுலேந்திரன் சசிரேகா**

நூல் வடிவமைப்பாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## அட்டை வடிவமைப்பு

**சத்திவேல் சத்தியசீலன்**

நூல் வடிவமைப்பாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகு முகை

## கட்டுரையும் - சிறுகதையும்

## நாடகமும் - நாவலும்

# தமிழ்

## 12 - 13

2017 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்துவதற்கானது

**கல்வி வெளியீட்டுத் திணைக்களம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## கட்டுரைகள்


1. தமிழ்த் தொண்டு — 01
2. தமிழர் நாகரிகத்தில் கிராம வாழ்க்கை — 08
3. மானுடம் தழுவிய கவிஞர்கள் — 19
4. இலக்கிய விமரிசனம் — 26
5. இலங்கையாற்றுப்படை — 36
6. சம்பாஷணை ஒரு கலை — 47




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதைகள்

7 தியாகம் 56

8 தேர் 72

9 எனக்கு வயது பதின்மூன்று 95

10 கூத்து 105

11 நெருக்கடி 117

## நாடகம்

12 இரு துயரங்கள் 130

## நாவல்

13 ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கின்றது 151



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தொண்டு



சுவாமி விபுலானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுரையாளர் அறிமுகம்

| | |
|---|---|
| **பெயர்** | சுவாமி விபுலாநந்தர் |
| **காலம்** | 28.10.1905 – 05.01.1975 |
| **இடம்** | காரைதீவு – மட்டக்களப்பு |
| **கல்வி** | கலைமாணி<br>விஞ்ஞான இளமாணி<br>மெதடிஸ் மிஷன் பாடசாலை – கல்முனை<br>அர்ச். மைக்கேல் கல்லூரி – மட்டக்களப்பு<br>கேம்பிரிஜ் பல்கலைக்கழகம். |
| **பணி** | தமிழ்ப் பேராசிரியர் – அண்ணாமலைப் பல்கலைக்கழகம்<br>தமிழ்ப் பேராசிரியர் – இலங்கைப் பல்கலைக்கழகம்<br>அதிபர் – இந்துக் கல்லூரி – மானிப்பாய் |
| **படைப்பு** | யாழ் நூல்<br>மதங்க சூளாமணி<br>விபுலாநந்தக் கவிமலர் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் வளர்த்த முடிமன்னராகிய சேர, சோழ, பாண்டியருங் கழிந்து போயினர். அகத்தியனாரை முதலாகக் கொண்ட புலவர் பெருமக்கள் குழுமியிருந்து தமிழாராய்ந்த முச்சங்கங்களும் அழிந்துபோயின. செல்வத்தில் வளர்ந்த சீமாட்டி அல்லலுற்றலைகின்ற தன்மை போலத் தமிழ்மாது பொலிவிழந்து தோன்றுகின்றாள். இவளுக்குத் தொண்டுபுரிய முன்வருவார் யாவருளர்? இப்பூமண்டலத்தில் இப் பொழுது வழங்குகின்ற மொழிகள் தோற்று முன்தோன்றிய தமிழ்மொழியானது இன்றும் நிலைபெற்று நின்று இரண்டுகோடி மக்களுடைய வழக்குமொழியாக விளங்குகின்றது. தமிழர் உலகத்தின் பல பாகங்களிலும் வசித்து வருகின்றார்கள். வாணிகத்திலும் தொழிற்றுறைகளிலும் ஈடுபட்டவர்களாய்த் தென்னாபிரிக்கா, மத்திய அமெரிக்கா, மலாயா, சிங்கப்பூர் முதலிய பிற தேசங்களிலும் பலவகை இயற்கை வனப்புவாய்ந்த நமது தாய்நாடாகிய இவ்விலங்கைத்தீவிலும்; திருவேங்கடந் தென் குமரி எல்லையாகவுடைய பழந்தமிழ் நாட்டிலும் தமிழர் வசித்து வருகின்றனர். இரண்டுகோடி மக்களால் வழங்கப்பட்டு வருகின்ற இம்மொழி உயிருடைய மொழி என்பதை மறுக்கவல்லார் யாவர்? தமிழ் அழிந்துபோகவில்லை; உயிருடனிருக்கிறது. அரசியல் மாற்றங்களினாலும் பிற மொழியாட்சியினாலும் தன்னியல்பிற் குன்றிச் சோர்வினாலயர்ச்சியடைந்த தமிழ்மாது மீண்டும் விழித் தெழுந்துவிட்டாள். அன்னையாகிய தமிழ்மாது விழித்தெழுந்த சிறப்பினைக் கண்ட பாவலரும், நாவலரும் இவளுக்குத் திருப்பள்ளியெழுச்சி கூறுகின்றனர். காரிருட்காலங் கழிந்துவிட்டது. புதிய ஊக்கத்தோடு எழுந்த நம் அன்னையினுடைய அடியினை மலருக்கு வணக்கஞ் செலுத்துவோமாக.

வாழ்க்கையினது மர்மத்தையறிந்து கொள்ளுவதற்கு உபயோகமான கல்வியே கல்வியெனப்படுவது. வாழ்க்கையின் இரகசியங்களை ஊடுருவி நோக்குமாற்றல் உத்தம கவிகளுக்கு இருப்பதுபோலப் பிறருக்கில்லை. புறநானூறென்னும் சங்கத் தொகை நூலிலும், சீவகன் சரிதையிலும், கம்பராமாயணத்திலும் அழகுபெற வகுத்துச் சொல்லப்பட்டிருக்கின்ற தெள்ளிய உண்மைகளை மனத்தினெண்ணி மாசறத் தெரிந்து கொண்டு அவற்றின் வழிநின்று வாழ்க்கையை நடத்துபவன் உயர் நிலையடைவான் என்பதற்கு ஐயப்பாடில்லை. கலைமகளுடைய அருளினைப்பெற்ற கவிவாணர் நான்முகத்தேவனைப்போலப் புத்துருவங்களையாக்க வல்லவர்கள். கலைநூல்களை ஓதியுணர்ந்த கல்விமான் இப்புத்துருவங்களைத் தெளிவாக நோக்கி மனத்துக்கணதை யமைத்துக் கொண்டு தன்னுடைய வாழ்க்கையை அவற்றுக்கு நேராகச் சீர்படுத்து கின்றான். நோக்கம் உயர்வடையச் செய்கை உயர்வடையும். செய்கை உயர்வடைய வாழ்க்கை உயர்வடையும்.

வாரீர் சகோதரர்களே! நாமிவ்வுலகத்தில் ஏனைய தேசத்தாரோடு ஒத்த பான்மை யினராய்ச் சிறப்புறவேண்டுமாயின், நாம் நமது தாய்மொழிக்குத் தொண்டுபுரிதலை மேற்கொள்ளல் வேண்டும்.

*பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்*
*தமிழ்மொழியிற் பெயர்த்தல்வேண்டும்*
*இறவாத புகழுடைய புதுநூல்கள்*
*தமிழ்மொழியி லியற்றவேண்டும்*
*மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்*
*சொல்வதிலோர் மகிமையில்லைத்*
*திறமான புலமையெனிற் பிறநாட்டோ*
*ரதை வணக்கஞ் செய்யவேண்டும்.*

என ஆற்றல்சான்ற கவியரசராகிய சுப்ரமணிய பாரதியார் வற்புறுத்திக் கூறுகின்றார். தமிழ் பழமை வாய்ந்தது, தொண்டர்நாதனைத் தூதிடைப்போக்கியது என்றின்னன பழங்கதைகளை நமக்குள்ளே பேசிக்கொள்வதில் எய்துதற்குரிய பிரயோசனம் யாது மில்லை. நாற்றிசை மக்களும் நமது நாகரிகத்துக்கு ஏற்றமுரைக்க வேண்டுமென நாமெண்ணுவோமாயின் தமிழ் நூல் பொதிந்த கருவூலத்தினுள்ளேயமைந்து கிடக்கும் நன்மணிகளையெடுத்து அவற்றினது மதிப்பை யாம் பிறருக்கு உணர்த்து தல் வேண்டும். பிறநாட்டாரிடத்திலுள்ள அரிய பெரிய விஞ்ஞான நூல்களையும் பிறவற்றையும் மொழிபெயர்த்துத் தமிழுக்கு உரிமையாக்க வேண்டும். அனைவரும் எளிதிலுணர்ந்துகொள்ளத்தக்க இலகுவாகிய தமிழ் நடையில் உயிர்க்குறுதி பயக்கும் உயர்ந்த சாத்திரங்களை எழுதுவித்தல் வேண்டும். தேகத்துக்கு வலிமையும் மனத் துக்கு உறுதியையுந் தரத்தக்க எண்ணங்கள் தமிழ் நாடெங்கும் பரவுதற்கு முயற்சித்தல் வேண்டும்.

ஒரு தேசத்தில் வாழுகின்ற மக்கள் தமது அரசியல் நிலை, பொருளாதார நிலை, சமூகவாழ்க்கை நிலை என்பவற்றைச் சீர்ப்படுத்திக்கொள்ள முயல்வாராயின் முதலிலே தாமெய்தவேண்டுமென்றெண்ணுகிற நிலையை அவர் தம் மனத்திடையே தெளிவுற உருவகப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இது உத்தமக் கவிகளுடைய கருத் தினை நுனித்துநோக்கி அமைக்குந்தரத்தது. இந்நாளில் நடந்து வருகின்ற நாகரிக வழக்கங்களுக்கும், பல தேசத் தொடர்புகளுக்கும் இயைபாகும்படி நித்தியமான உண்மைகளை மக்களுடைய உள்ளத்திற் படியும்படியாக எடுத்துச் சொல்லும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றலுடையவனே தன்னுடைய நாட்டுக்குப் புத்துயிரளிக்கவல்ல உண்மைக் கவியா வான்.

இத்தகைய ஒரு கவியைத் தமிழ்நாடு பெற்றது இந்நாடு செய்த பெருந்தவப் பயனேயாகும். கவியரசராகிய சுப்ரமணிய பாரதியார் இவ்வுலக வாழ்வை நீத்துப் பல வருடங்களாகவில்லை. இதற்கிடையில் அவருடைய கவி தேசமெங்கும் செறிந்து நாட்டிலுள்ள மக்களுக்குப் புத்துயிரளித்து வருகின்றது. இத்தகைய கவி சிரேட்டர்கள் இன்னும் பலரை இந்நாட்டில் உதிக்கச் செய்யுமாறு உலகமாதாவாகிய பராசக்தியை வேண்டிக்கொள்வோமாக.

வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டிய பல நூல்கள் மிகப் பலவிருக்கின்றன. நியாயம், வைசேஷிகம், சாங்கியம், யோகம், பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை என்கின்ற வேறுவகைப்பட்ட தத்துவ விசாரணை நூல்களை மேல் நாட்டாசிரியர்கள் தம்மொழியிற் பெயர்த்தெழுதித் தமக்கு உரிமையாக்கிக் கொண்டனர். வேத வேதாந்தங்களுக்கு மொழிபெயர்ப்பும், உரையும் ஆங்கிலம் முதலிய மேனாட்டு மொழிகளிலுண்டு. தமிழிலோவென்றால் சூத்திரருக்கும் பெண்களுக்குந் தகவுடையனவெனக் கூறப்பட்ட சில புராணக் கதைகள் மாத்திரமே மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. சிற்பம், ரசாயனம், ஆயுர்வேதம், அர்த்தவேதம், தநுர்வேதம், காந்தருவவேதம், கணிதம், தருக்கம் என்றின்னன பலவாய துறை களிலே கடல்போல விரிந்து கிடக்கின்ற சாத்திரங்களைத் தமிழிலே மொழி பெயர்த்தெழுதினால் அதனால் விளையக்கூடிய நலத்துக்கு எல்லை கூறமுடியுமா? வடமொழியிலுள்ள நூல்களைத் தமிழிற் பெயர்த்தெழுத முயல்வது சிறந்த தமிழ்த்தொண்டாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அரும்பதங்கள்

**கவிவாணர்** - கவி ஆற்றல் மிக்கவர்

**நித்தியம்** - வழமை

**நியாயம்**
**வைசேஷிகம்**
**சாங்கியம்**
**யோகம்**
**பூர்வமீமாம்சை**
**உத்தரமீமாம்சை**
- இந்துமத அறுவகைத் தத்துவ நூல்கள்

**தருக்கம்** - காரண காரியத் தொடர்புடன் விளக்குதல்.

## மையக் கருத்து

பழமையும் பெருமையும் வாய்ந்த தமிழும் தமிழ் பேசுவோரும் இவ்வுலகில் சிறப்புற வேண்டும் எனில் தமிழ் மொழிக்குத் தொண்டு புரிதல் வேண்டும்.

## துணைக் கருத்துக்கள்

- பிறமொழிகளிலுள்ள அறிவியல் மற்றும் ஏனைய துறைசார்ந்த சிறந்த நூல் களைத் தமிழில் மொழிபெயர்த்தல் வேண்டும்.
- தமிழ் மொழியிலுள்ள அரிய கருத்துப் பொக்கிஷங்களைப் பிறரும் அறியச் செய்தல் வேண்டும்.
- உத்தமக் கவிகளின் கருத்தினை நுனித்துநோக்கி தாம் எய்த விரும்பும் நிலையை மனதில் உருவகப்படுத்திக் கொள்ளவேண்டும்.
- பயனுள்ள புதிய நூல்களை இலகு தமிழ் நடையில் உருவாக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எடுத்துரைப்பு முறை

- உதாரணங்களினூடாகவும் ஒப்பீட்டு ரீதியாகவும் விளக்குதல்.
- அறிஞர்கள் கூறிய கருத்துக்களை மீள் வலியுறுத்தல்.
- வினாக்களைத் தொடுப்பதன் மூலம் வாசகரைச் சிந்திக்கத் தூண்டுதல்.
- உளப்பாட்டுத் தன்மைப் பன்மைநிலையில் தன்னோடு வாசகரையும் ஈர்த்துச் சேவையாற்றத் தூண்டும் பாங்கில் அமைதல்.

## மொழிநடை


- கருத்துச் செறிவுமிக்க இலக்கிய நடை.
- தேவைக்கேற்ற பிறமொழிச் சொற்களின் பயன்பாடு

## கற்றல் வினாக்கள்

1. தமிழ்மொழி உயிருடனிருக்கிறது என்பதற்குக் கட்டுரையாசிரியர் முன்வைக்கும் சான்றுகள் எவை?
2. ''வாழ்க்கையின் மேம்பாட்டிற்கு உறுதுணையானவைகள் கல்வியும் இலக்கியமுமேயாகும்'' என்ற கருத்து வலியுறுத்தப்பட்டிருக்குமாற்றினை எடுத்துக் காட்டுக.
3. ''பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்'' என்ற கூற்று கட்டுரையாளரினால் நிறுவப்படுமாற்றினை விபரிக்குக.
4. பாரதியார் மீதான அடிகளாரின் ஈடுபாடே இக்கட்டுரையின் வெளிப்பாடாகும், தெளிவுபடுத்துக.
5. 'விபுலாந்தரின் சிந்தனைகள் இன்றைய தமிழ் மொழி வளர்ச்சியில் தவிர்க்க இயலாதவை' கருத்துரைக்குக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் நாகரிகத்தில் கிராம வாழ்க்கை



புதுமைப்பித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுரையாளர் அறிமுகம்

| | |
|---|---|
| **பெயர்** | புதுமைப்பித்தன் – **சொ. விருத்தாசலம்** |
| **காலம்** | 25.04.1906 – 30.06.1948 |
| **இடம்** | திருப்பாதிரிப் புலியூர் |
| **கல்வி** | கலைமாணி<br>யோவான் கல்லூரி – திருநெல்வேலி<br>இந்துக் கல்லூரி – நெல்லை மாவட்டம் |
| **பணி** | உதவி ஆசிரியர் - ஊழியன், தினமணி, தினசரி<br>திரைக்கதை வசனகர்த்தா |
| **படைப்பு** | சிறுகதைகள் - புதுமைபித்தன் சிறுகதைகள்<br>கட்டுரைகள் - 32 இற்கு மேற்பட்டவை<br>கவிதைகள் - 19 இற்கு மேற்பட்டவை<br>குறுநாவல் - சிற்றன்னை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரிகம் என்பது என்ன? பிராதஸ்னானம், திருநீற்றுச் சம்புடம் ஆகியவற்றை வைத்துச் சிலர் நாகரிகத்தை அளக்கின்றார்கள். வேறு சிலர் ஒரு வெடிகுண்டுக்கு இருக்கும் நாச சக்தியையும், மின்சார விளக்கின் வெளிச்ச உக்கிரத்தையும் கொண்டு கணிக்கிறார்கள். இன்னும் சிலருக்கு ஏன் இப்படியே எத்தனை விதமானாலும் அடுக்கிக் கொண்டே போகலாம். நாகரிகம் என்ற கருத்து ஓரளவு மேற்சொன்ன வற்றின் களையுடன் சோபிக்கும் ஒரு தன்மை என்பதுடன் அதற்கு அதீதமானது மாகும். நாகரிகம் என்பது, சமுதாயம் இற்றுப் போகாமல் எடுத்துக் காட்டிய ஞாப கச் சரடு, நினைவுப் பாதை, சமுதாயம், எறும்புச் சாரை போல் ஊர்ந்து ஊர்ந்து, பழக்கப்பட்டுப் போன பாதை, அது இருந்து வருவதற்கு உயிர் கொடுத்து வருவது இந்த ரீதியில் கவனித்தால், நாகரிகம், என்பது வெறும் பிழைப்புக்கும், பிறகு சுகானுப வத்துக்கும், அதன் பிறகு உள்ளத்தில் உடைந்து மசியும் நினைவுக் கோயில்களுக்கும் ஆதாரபீடமாக அமைந்திருப்பதாகும். நாகரிகத்தை அமைக்கிறதற்குக் கிராமம் என்ன செய்கிறது?

கிராம வாழ்க்கை என்பது கிராம்யமான ஒரு காரியம் அல்ல. ஏதோ வன போஜனத்துக் காகப் போகிறவர்கள், வழக்கமாக உட்காரும் ஸோபாவை இழப்பதால், தமக்குக் கிடைப்பதாகக் கருதிக்கொள்ளும் சுகானுபவம் போன்றதல்ல. 'கிராமத்துக்குப் போங்கள்' என்று உருக்கமான பிரசங்கங்கள் பட்டணத்துக்காரர்களை நெட்டி நெட்டித் தள்ளுகின்றன. 'சார், நான் ரிட்டயரானதும் ஏதாவது சுகமா ஒரு கிராமத்திலே போய்க் கழிக்கலாம்னு ப்ளான் போட்டிருக்கேன். நீங்க என்ன நினைக்கிறியள்?' என்கிறார் ஒருவர். இருபத்தியைந்து வருஷ உழைப்பால் உடலைக் கெடுத்துக் கொண்டதுடன், நேர்ச்சைக் கடனுக்காகக் கையைக் கும்பிட்டபடி உயரத் தூக்கி சூம்ப வைத்துக் கொண்ட பைராகி மாதிரி காலை பத்து மணி முதல் மாலை 5 மணி வரை மூளையை ஒரே திசையில் விரட்டி விரட்டி இற்றுப்போக வைத்துக் கொண்ட ஒருவருக்குத் தாம் எரிந்து சாம்பலாக வேண்டிய சுடுகாட்டுக்கும், தம்முடைய மிச்ச வாழ்வுக்கும் இடையில் கிடக்கும் ரேழியாக கிராமம் தென்படுவதில் அதிசயமில்லை. அது அவர் பண்ணின புண்ணியம். டில்லி சர்க்கார் காரியாலயத்தில் ஒரு மகன், என்ஜினியரிங் கம்பெனியில் ஒரு மகன், ஒரு அட்வகேட் ஜெனரலின் மகனுக்கு சக தர்மிணியாக ஒரு மகள், காலேஜுக்கு ஐம்பது மைல் வேகத்தில் மோட்டார் சைக்கிளில் போவதுதான் மோட்ச சாம்ராஜ்யம் என்று நினைக்கும் சுந்தா, இவ்வாறு ஒரு படியாகத் தமது வாரிஸ் வர்க்கத்தைப் பங்கீடு செய்துவிட்டு, தம்முடைய அஜீரணம், 1936 வருஷமோட்டார் கார், தொய்ந்துபோனகாதில் வைத்து ஊசலாடும் வைரக்கம்மல் மனைவி, விட்டமின் விசாரம், திருக்குறள் உபாசனை ஆகியவற்றுடன் இவர் போய் ஒரு கிராமத்தில் குடியேறுகிறார் என்று வைத்துக் கொள்வோம். பத்திரிகையும், பழக்கூடையும் பட்டணத்திலிருந்து வந்து கொண்டே இருக்கும். ஆறு நிறையத் தண்ணீர் போனாலும் வென்னீரில்தான் குளிப்பார். உடம்புக்குள் குளிர் பெய்வதுபோல் தென்றல் இழைந்தாலும் பிளானல் சட்டை போட்டுக் கொண்டு, வெள்ளிப் பூண் தடியோடு உலாவ, அதாவது வாக்கிங்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவார். எதிரே உட்காந்திருக்கும் வெட்டியான் கைகட்டி வாய் புதைத்து, 'எசமான் புத்தி' என்று சொல்லிக் கொண்டு எழுந்திருப்பான். அவ்வளவுதான் அவர் கிராமத்தில் அனுபவிக்கப் போகிறதும், அனுபவிக்கிறதும். ராவணன், மண்ணோடு பெயர்த்துச் சீதையைத் தூக்கிக்கொண்டு போய், அசோக வனத்தில் சிறை வைத்தானாம். அது நிஜமோ பொய்யோ எனக்குத் தெரியாது. ஆனால் நான் சொன்னேனே, இந்த மாஜி உத்தியோக வர்க்கம், அது பட்டணத்தில் கொஞ்சம் பெயர்த்துக்கொண்டு போய், கிராமத்தில் போட்டு, அதன்மேல் உட்கார்ந்து கொண்டுதான் கிராமத்தைப் பார்க்கிறார்கள், கிராமத்தை அனுபவிக்கிறார்கள். இவர்களுக்குக் கிராமம் தென்படாது, அனுபவத்துக்கும் கிட்டாது. இவர்களது இந்த ராவண கைங்கரியத்துக்குள் அகப்படாத கிராமம் என்பது என்ன என்று கேட்கிறீர்களா? அப்படிக் கேளுங்கள்.

நீங்கள் நெல்லுக் காய்ச்சி மரம் என்று கேள்விப்பட்டிருகிறீர்களா? உணவு வகையில் ஒன்றை கொடுக்கும் புல் வகையில் ஒன்றல்லவா என்று தாவர நிபுணர் உறுமுகிறார். ஆமாம். அப்படியும் சொல்லுவார்கள் நெல்லுக் காய்ச்சி மரம் என்றால், பட்டணத்துக் காரனைப் பற்றிக் கிராமவாசி செய்யும் கிண்டல் என்று அர்த்தம். உங்கள் மோட்டார் காரை அவன் உன்னிப்பாகப் பார்த்தால், நீர் அவனை உதாசீனமாகப் பார்க்கிறீர் அல்லவா? அதற்கு அவனுடைய பதில் அது.

கிராமத்தில் சினிமா இருக்காது; ஷேவிங் ஸோப் கிடையாது; சிகரட் அகப்படாது; ஆனால் சுகம் உண்டு; அதாவது வாழத் தெரிந்தவர்களுக்கு.

எனக்குத் தெரிந்த கிராமத்தைக் கொஞ்சம் வர்ணிக்கிறேன். அதற்கு ஒரே ஒரு தெருதான் உண்டு. அக்கிரஹாரம் இல்லை. தெருவின் ஒரு கோடியில் கிராம முனிஸீபும் மறு கோடியில் கணக்குப்பிள்ளையும் இருக்கிறார்கள். இருவர் கோபத்துக்கும் ஆளாகாமல் பிழைத்துக்கொள்ளத் தெரிந்த தலையாரி, இந்தத் தெருவுக்குக் கூப்பிடு தூரத்தில் உள்ள மறவர் தெருவில் இருக்கிறான். இன்னும் பத்துப் பதினைந்து வீடுகள், இந்த வீர மறக் குலத்துக்கு நிழல் தருகிறது. இவர்கள் வாளையும் வேல்கம்பையும் விட்டெறிந்து ரொம்ப காலமாச்சு ''சாதியிலே மறவனாக்கு'' என்று அதட்டிக் கொண்டு ஏர் பிடித்து உழுகிறார்கள். இவர்களுக்கும் எட்டாத் தொலைவில் பள்ளர்கள் சேரி நாம் நினைவை விட்டு விரட்ட முயலும் கெட்ட நினைப்பைப்போல, அவர்கள் அங்கு அக்ஞாதவாசம் பண்ணுகின்றார்கள். ஊருக்கு ஒரு மைதானம் உண்டு. சாதாரணமாக மாடு படுத்திருக்கும். ஊர்த் தேவதை திருவிழாவில், வானத்தையே கூரையாகக் கொண்ட கலை மண்டபமாகும். சாணி தட்டவும், நெல் உலர்த்தவும் ஏற்றவையானது. இந்த ஊரிலே சைவச் சாப்பாட்டைச் சமயா சமயத்தில் நிவேதனமாகவும் பொதுவாக அந்தக் கிராமத்தான் வணக்கத்தையும் பார்த்துப் பசியாறும் பிள்ளையாருடைய கோவில் உண்டு.

ஊர் எல்லையிலே ஊரின் காவல் தேவதை பேராய்ச்சி கோவில் உண்டு. கோவில் கோவில் என்றதும் பிரமாதமான கற்கனவுகள் என்று நினைத்து விடவேண்டாம். கிராம முன்சீபு பிள்ளையவர்கள் வீட்டைப்போல அடக்கமானதுதான்; அவரது மன இருட்டைப்போல இங்கே கர்ப்பக்கிரகமும் இருட்டிக் கிடக்கும். கலசம் மட்டும் பேராய்ச்சி கோவிலை, கோவிலென்று வேறுபடுத்திக் காட்டும். மற்றப்படி ஒன்றுதான் இந்தத் தேவதை அசைவம். வருஷத்துக்கு ஒரு தடவையாவது ரத்தம் காணவேணும். இல்லாவிட்டால், குடியே முழுகிப் போச்சு.

பட்டப்பகலானாலும் கர்ப்பக்கிரகத்தில் கும்மிருட்டு. கூர்மையாகக் கவனித்தால், வெள்ளையும் அதற்கப்புறம் அதன் மையத்தில் ஒரு கறுப்பு. இன்னும் பார்த்தால் விறைத்துப் பார்க்கும் கண்கள், பிறகு இருட்டு திரண்டு திரண்டு பத்தாயிரம் கை களில் வேலும் சூலமும் தாங்கி, எல்லையையே இமை கொட்டாமல் காத்து நிற்பது தெரியவரும். பட்டப் பகலானாலும், அதைக் கண்டு பயப்படுவோரைக் கண்டால், நாம் அவர்களைக் கேலி செய்யக்கூடாது. நாகரிகம் பட்டுப்போன பிறகு மனித வர்க்கம், ஏதோ எப்போதோ ஒரு காலத்தில், எது பயத்துக்கு வித்தாக இருந்ததோ, அதைப் பயம் போக்கும் மருந்தாக வசக்கிக்கொள்ள முற்பட்ட ஒரு சாதனத்தைக் கண்டு மிரளாமலிருப்பது பிசகு. இருட்டிலே, காட்டிலே மின்னுகிற புலிக் கண்ணைப் பார்த்து அதில் அன்பு பெய்து வைத்துக் கற்பனை பண்ணின காரியம் இந்தப் பேராய்ச்சி. இந்தத் தாயின் மகத்துவத்தைப் பற்றிக் கிராமத்துப் புலவர் பாடுவதைக் கேட்டால், ஆஸ்பத்திரி எதற்கு, மலேரியா, மகமாரி எதிர்ப்பு மருந்து வகை, ஊசிகுத்து முறை எல்லாம் எதற்கு என்றெல்லாம் படும். அந்தவூரில் நிஜமான ஆட்சி பேராய்ச்சியின் ஆட்சிதான். அந்த ஊர்க்காரர்கள் பயப்படுகிறதுபோல, அவ்வளவு கொடுமைக்காரி அல்ல அவள். மகா கண்டிப்புக்காரி.

அந்தவூர்க்காரர்கள் மனப்பண்பாடு நீங்கள் எதிர்பார்க்கிற மாதிரி அவ்வளவு நாஸூக்காக இருக்காது. மிஞ்சி மிஞ்சிப் போனாலும் அவர்கள் கற்பனை எல்லாம்,

*சோளப் பொரி மத்தியிலே*
*சுட்டு வச்ச தோசையைப் போல்*
*சுட்டு வச்சதோசையைப் போல்*
*தோணுமிந்தச் சோதி நிலா*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என்றுதான் அவர்கள் பாடுவார்கள்.

*அருந்த அமரர் கலக்கிய நாள்*
*அமுதம் நிறைந்த பாற்கலசம்*
*இருந்திடை வந்து எழுந்ததென*
*எழுந்த தாழி வெண் திங்கள்*

என்று ஒரு சந்திரோதயத்தில் இதிகாச நாடகத்தைப் பார்க்கும் மனப்பண்பு அவர்களிடம் தென்படாது. நெஞ்சிலும் தோளிலும் உரம் உண்டு; உள்ளத்தில் பரிவு உண்டு.

*மேழி பிடிக்கும்கை.*
*வேல் வேந்தர் நோக்கும்கை*
*ஆழி பிடித்தே அருளும்கை*

என்று அவ்வைக் கிழவி சொன்னதுபோல ரொம்பவும் பின்னிப் பிணைந்த கைத்தொழில் நாகரிகமாக இருந்தாலும், சமுதாயத்தின் ஸ்திரத் தன்மைக்கு அவசிய மும் ஆதாரமுமானது விவசாயம் பலர் எண்ணுகிறது போல மட்டம் அல்ல.

தமிழ் இலக்கியத்திலே ஒரு கிழவி திரிந்து வருகிறாள். அவளுக்குப் பட்டணத்து நாகரிகத்தின் நெடி பிடிக்காது. எடுத்தெறிந்து பேசி உதறியடித்து விடுவாள் கிராமவாசி கள் உள்ளப் பண்பைக் காண்பதற்குச் செய்து வைத்ததுபோல இருக்கிறது அவளுடைய பாட்டு.

*அண்டி நெருக்குண்டேன்,*
*தள்ளுண்டேன் நீள்பசி யினாலே*
*சுருக்குண்டேன் சோறுண்டிலேன்*

என்று சுருக்கமாகச் சொல்லுகிறாள். இது எங்கு என்று கேட்டால் அதைவிட வினோதமாக இருக்கும்.

*'வண் தமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்தில்*
*உண்டபெருக்கம் உரைக்கக்கேள்'*

என்று பொக்கை வாயைக் காட்டிக் கேலி செய்கிறாள் கிழவி. அவள் பார்த்தது எல்லாம், நான்மாடக் கூடல் கல் வலிது என்பதுதான்.

*'வெய்தாய் நறுவிதாய் வேண்டளவும் தின்பதாய்*
*நெய்தான் அளாவி நிறம் பசந்து - பொய்யாய்*

*அடகென்று சொல்லி அமுதத்தை ஊந்தாள்*

*கடகம் செறிந்த கையாள்.'*

என்று பெண்ணின் வளை போட்ட கை இலக்கியத்தில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. அவள் கண்ட கைகள் தான் அது.

*இன்னொருவன் அவன் பேர் பூதன்.*

*பெயர் தான் ஆளை மிரட்டுகிற மாதிரி.*

*வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்.*

*முறமுறெனவே புளித்த மோரும்*

*அவ்வைக் கிழவியின் பசியை ஆற்றுகிறது.*

கிராமங்கள், இந்த மாதிரி திசைமாறித் திரிவோருக்கு மட்டும் அன்ன சத்திரமல்ல, நாகரிகத்தின் முதற்படி அன்னவிசாரம். பசிப்பகையை விரட்டும் முதல் மதில் கிராமங்கள். சமுதாயத்தின் சித்தம் அல்லது விவேகம் மாதிரி நகரங்கள் இருக்கலாம். இருக்க வேண்டும்; ஆனால் அவற்றின் உயிர்ப்புக்கும் தெம்புக்கும் தெளிவுக்கும் அவசியமான ரத்தத்தைத் தருபவை கிராமங்களேயோகும். கிராமம் தூர்ந்துவிட்டால், நகரம் பாழ், இது பொது நியதி, மிகவும் பின்னிப் போன யந்திர நாகரிகம் வந்து விட்டாலும் அந்த அடிப்படைக்கு வாய்ப்பான கிராமங்கள் இருந்துதான் தீரும். எல்லாம் பட்டணங்களாகிவிட முடியாது. பட்டணங்கள் என்றால், சிந்தனையின் பயனால் இயற்கையின் கை பார்க்காமல் வாழ மனிதன் வகுத்துக்கொள்ளும் ஏற்பாடு என்பதுதான் பொருள்.

*கன்னலென்ற சிறு குருவி ககனமழைக் காற்றால்*

*மின்னலென்னும் புழுவெடுத்து விளக்கேற்றும் கார்காலம்*

என்று பட்டணத்துக் கவிராயர் சமத்காரமாகப் பாடி விடுவார்கள், ஆனால் உடை முள்ளையும் இண்டஞ் செடியையும், சுள்ளென்று அடிக்கும் வெயிலையும், ஆற்று வெள்ளத்தையும் கொடுங்காற்றையும் சகாக்களாகப் பாவித்து, அவற்றுடன் சேர்ந்து அவற்றையும் வசக்கி வயலில் வளத்தைப் பார்க்கிறவன் வாழுமிடந்தான் கிராமம்.

*'வரப்பு உயர நீருயரும்*

*நீருயர நெல்லுயரும்'*

இதுதான் சமுதாய வளர்ச்சியின் ஆதார சக்தி. பட்டணத்தில் பிழைக்கலாம். வாழ முடியாது. தனிமையாக நடமாடப் பட்டணம் வாக்கானது. ஆனால் கிராமத்தில் ஒதுங்கி வாழ உங்களை விடமாட்டார்கள். யாராவது புதிதாக வந்துவிட்டால் போதும்,


Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

''யாரைத் தேடுதிய? ஓ! அவுகளா; ஏலே காத்தான், நாவன்னா வீட்டுக்குக் கூட்டிக் கிட்டுப் போ'' என்று வீட்டு வரைக்கும் கொண்டு போய்விட்டுத் திரும்புவார்கள். மறுநாள் விடியற்காலம் பார்த்துவிட்டால் நீங்கள் ஒதுங்கிப் போனாலும் உங்களை வாயைத் திறந்து நாலு வார்த்தையாவது பேச வைத்து விடுவார்கள். அவர்களுக்கு நேரம், அவகாசம் பார்க்காமல் வந்து உட்கார்ந்து பேசுவதற்குத் தெரியும். கிராமத்துக்காரன் ஒவ்வொருவனும் அந்த ஊர் சரித்திர ஆசிரியன். அந்த ஊர்ப் பிள்ளையார் பிரதிஷ்டை பண்ணினது ஆலடி வயலில் வெள்ளம் மண்ணடித்து விட்டது, மூக்கன் மதகைத் திறக்காது போயிருந்தால் கரையே உடைத்துக்கொண்டு ஊர் அழிந்து போயிருக்கக்கூடிய ஆபத்து, நல்ல பாம்பை மண்வெட்டியினால் ஒரே வெட்டில் இரண்டு துண்டாக்கிப் போட்ட செம்பிலி, நடுச்சாமத்தில் பேராய்ச்சி ஊர் பார்த்து வருவதைப் பார்த்து ரத்தம் கக்கிச் செத்துப்போன தொப்ளான் ஆகிய எல்லோரையும் நீங்கள் வெகுசீக்கிரத்தில் பரிச்சயம் செய்துகொள்ள முடியும். அச்சடித்த புஸ்தகங்களைப்போல இவர்களுடைய சரித்திரங்களும் கொஞ்சம் அமிதமான புளுகுகள் நிறைந்திருக்கும். சமூக நலத்துக்காக அங்கீகரிக்கப்பட வேண்டிய சில பொய்களைச் சரித்திர சித்தாந்தம் அமைக்கிற மாதிரி இந்தக் கிராமத்து மனிதக் கும்பலும் தன்னுடைய வம்ச பரம்பரை இற்றுப் போகாமல் இருக்க கட்டிவைக்கும் ஞாபகக் கோவைதான் இவையும், சிறிது மட்டரகமான பொய்களாக இருந்தாலும் சரித்திரமென்றே மதிப்போம்.

*ஆற்றங்கரை மரமும், அரசவையில்*
*வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே*

என்று பயப்படுகின்றான் கிராமத்துக்காரன். கிராமத்துக்காரனுக்குத் தன்னிச்சையாக நடமாடித் திரிவதற்கு இடவசதி வேண்டும். அவன் சிந்தனை சொற்பமாக இருந்தாலும், அது பறந்து திரிந்துவர விசாலமான இடம் வேண்டும் என்று ஆசைப்படுகிறான். பட்டணத்திலே தென்படும், குறிப்பிட்ட ஒழுங்குமுறை, ஜன நெருக்கத்தினால் எடுத்துக் கூட்டி அமைத்துக் கொண்ட ஏற்பாடுகள் எல்லாம் அவனுக்குக் கட்டோடு பிடிக்காது. அவன் பசி வந்தபோதுதான் சாப்பிட ஆசைப்படுவான்; ஆனால், உங்கள் ஹோட்டல்களில் பத்து மணிக்குப் போனால் மோரும் சாதமும் கிடைத்தால் உங்கள் அதிஷ்டம். பட்டணத்துக்கு வந்தால், முங்கி முழுகிக் குளிக்க, அவனுக்குக் குழாய் தண்ணீர் போதாது. இரண்டாவது நாள் 'அய்யா நான் போய்விட்டு வருகிறேன்' என்று மூட்டை கட்டிவிடுவான். நீங்கள் அங்கே போன இரண்டாவது நாளே, 'ரொம்பல்லா இருக்கு சார்' என்று சொல்லி விட்டுப் புறப்பட்டு விடவில்லையா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேச்சு வழக்கு

**பைராகி** - துறவி

**மேழி** - கலப்பை

**அஜீரணம்** - ஒவ்வாமை

**முன்சீபு** - தலைவர்

**விசாரம்** - ஆராய்ச்சி

**சர்க்கார்** - அரசாங்கம்

**சோபிக்கும்** - பிரகாசிக்கும்

**உபாசனை** - ஆராதனை/ வழிபாடு

**நிவேதனம்** - படையல்

**சமத்காரம்** - பேச்சுத் திறமை

**அக்கிரகாரம்**- பிராமணர் குடியிருப்பு

**பிளானல்** - குளிரைத் தாங்கும் துணி வகை

**பிராதஸ்னானம்** - சூரிய உதயத்திற்கு முன்னால் நீராடல்

**திருநீற்றுச் சம்புடம்** - திருநீறு வைக்கும் செம்பு/ பாத்திரம்

**வனபோஜனம்** - சோலை முதலியனவற்றில் நடக்கும் விருந்து

**ஞாபகச் சரடு** - நினைவுச் சின்னம்/ ஞாபகங்களின் தொகுப்பு

**அஞ்ஞாதவாசம்** - பிறர் அறியாமல்/ அடையாளம் காணமுடியாதபடி வாழ்தல்

**ரேழி** - இணைக்கும் வழி

**ராவண கைங்கரியம்** - மண்ணோடு சீதையைத் தூக்கிச் சென்ற இராவணனின் செயல்

## மையக் கருத்து

கிராம மக்களின் தனித்துவமான வாழ்க்கை முறையும் அதன் சிறப்பியல்புகளும்.

## துணைக் கருத்துக்கள்

- கிராமத்திலிருந்து நகரம் வேறுபடும் விதம்.
- கிராமத்தின் அமைப்பும் அதன் வசீகரமும்.
- கிராமத்தவர்களின் விருந்தோம்பற் பண்பு.
- கிராம மக்களின் உடல் வலிமையும் குணவியல்புகளும்.
- கிராமிய நம்பிக்கைகளும் மரபுகளும்.

## எடுத்துரைப்பு முறை

- புனைவுப் பாங்கான முறையில் கருத்துக்களை முன்வைத்தல்.
- ஒப்பிட்டு விளக்கும் பாங்கில் அமைதல்.
- வினாக்களை எழுப்பி வாசகரை ஈர்த்தல்.
- பாடல்களை மேற்கோள்காட்டல்.

## மொழிநடை

- இலக்கிய நடை.
- பிறமொழிச் சொற்பயன்பாடு.
- வட்டார வழக்குப் பிரயோகம்.
- அங்கதச் சுவைமிக்க நடை.
- வர்ணனைப் பாங்கிலான மொழிநடை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்றல் வினாக்கள்

1. கிராமிய மக்களின் நம்பிக்கைகள், நகரத்தவர்களின் மனநிலை என்பனவற்றை புதுமைப்பித்தன் விபரிக்குமாற்றினை விளக்குக.
2. கிராமத்தின் மீதான புதுமைப்பித்தனின் ஈடுபாடு கட்டுரையில் வெளிப்படு மாற்றினைத் தெளிவுபடுத்துக.
3. ‘கிராம மக்கள் நகைச்சுவை உணர்வுமிக்கவர்கள்’ இக்கூற்றின் பொருத்தப் பாட்டை ஆராய்க.
4. கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள பாடல்களை அடிப்படையாகக் கொண்டு கிராமிய மற்றும் நகர்ப்புற விருந்தோம்பற் பண்பை ஒப்பிடுக.
5. ‘இன்றைய கிராமங்களின் மறுவாழ்வு இளந்தலைமுறையினரின் கைகளில் உள்ளது’ பொருத்தப்பாட்டை ஆராய்க.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மானுடம் தழுவிய கவிஞர்கள்



க. கைலாசபதி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கட்டுரையாளர் அறிமுகம்

| | |
|---|---|
| பெயர் | க. கைலாசபதி |
| காலம் | 05.04.1933 - 06.12.1982 |
| இடம் | கோலாலம்பூர் (பிறப்பு) |
| கல்வி | கலாநிதி - பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகம்<br>* இந்துக் கல்லூரி - யாழ்ப்பாணம்<br>* றோயல் கல்லூரி - கொழும்பு |
| பணி | துணைவேந்தர் - யாழ்ப் பல்கலைக்கழகம்<br>தமிழ்த்துறை விரிவுரையாளர் - பேராதனைப் பல்கலைக்கழகம்<br>விரிவுரையாளர் - கொழும்புப் பல்கலைக்கழகம்<br>பிரதம ஆசிரியர் - தினகரன் |
| படைப்பு | **கட்டுரை** - இருமகாகவிகள்<br>பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்<br>அடியும் முடியும்<br>இலக்கியமும் திறனாய்வும் முதலியன<br>**நாடகம்** - குரல்கள் (முதலான நாற்பது நாடகங்கள்)<br>**மொழி பெயர்ப்பு நாடகம்** - திறந்த கல்லறை<br>**ஆய்வு** - வீரயுகக் கவிதைகள் |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இவ்வாண்டு தமிழ் கூறும் நல்லுலகம் மகாகவி சுப்பிரமணியப் பாரதியாரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. உலகின் பல பகுதிகளில் பாரதிக்கு அஞ்சலி செலுத்தப்படுகிறது. சில மொழிகளில் பாரதியின் ஆக்கங்கள் பெயர்க்கப்படுகின்றன. தமிழ்க் கவியாகத் தோன்றிய பாரதி, நாளடைவில் அனைத்திந்தியக் கவியாகவும் உலகப் பெருங் கவிஞருள் ஒருவனாகவும் ஏற்றுக் கொள்ளப்படும் நிலை எழுந்துள்ளது. இப்பெருமை பாரதிக்கு எவ்வாறு கிட்டியது? அவனது உள்ளார்ந்த ஆற்றலையும் உலக நோக்கையும் பலரும் உணரத்தொடங்கியதும் அவன் ஒரு மகாகவி என்னும் உண்மை உறுதிப்படலாயிற்று. இலக்கிய கர்த்தாக்களின் புகழுக்கும் பரிணாம வளர்ச்சி உண்டு.

உலக இலக்கிய ஆசிரியர்களின் உன்னதமான வரிசையில் பாரதியாரை வைத்து நாம் எண்ணுவதைப் போலவே தமிழ் இலக்கியப் பரப்பிலும் காலத்துக்குக் காலம் உருவாகிய பெரும்புலவர்களின் வரிசையில் அவரை வைத்துப் பாராட்டுகின்றோம். வள்ளுவர், இளங்கோ, கம்பர், பாரதி என்று வரிசைப்படுத்துவது இப்பொழுது வழக்கமாகிவிட்டது. கால அடைவை ஒட்டியது இவ்வரிசை. சங்ககாலத்தில் வாழ்ந்த சான்றோரில் ஒருவரான பரணரிலிருந்து நமது காலத்தில் வாழ்ந்த பாரதிதாசனார் வரையில், தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் சிறப்புக்குரிய புலவர்கள் எத்தனையோ பேர் தோன்றியிருக்கின்றனர். ஆயினும் மகாகவிகள் என்று விதந்துரைக்கக் கூடியவர்கள் வெகு சிலரே.

ஆற்றல் வாய்ந்த கவிஞராக விளங்கிய பாரதியாரே தனக்கு முன் சென்ற கவிகுல திலகங்களைத் தமிழ்ப்பெருங் கவிஞரை நினைவு கூர்ந்த வேளைகளில், வள்ளுவர், இளங்கோ, கம்பர் ஆகிய மூவரையுமே குறிப்பிட்டிருக்கிறார். ஔவையார் முதல் இராமலிங்கர் வரை பல புலவர்களைக் குறிப்பிட்டு, அவர்களின் சிறப்பியல்புகளை விவரித்திருக்கிறாரெனினும் வேற்று மொழியாளரும் ஏற்றுப் போற்றக்கூடிய தமிழ்க் கவிஞர்களாக முற்கூறிய மூவரையுமே குறிப்பிட்டார். பாரதியாரின் கவிதை களையும் கட்டுரைகளையும் ஏனைய படைப்புக்களையும் தமிழுலகம் உவந்து அங்கீகரித்துக் கொண்டிருப்பதைப் போலவே அவரின் அபிப்பிராயங்கள் பலவற்றையும் அடிப்படை உண்மைகளாக ஏற்றுக்கொண்டுள்ளது. வள்ளுவரும், இளங்கோவும், கம்பரும் பாரதிக்கு முன்னரே தமிழ் இலக்கிய உலகில் பெருமைக்குரியவர்களாய்க் கருதப்பட்டவர்கள். ''கல்வியிற் பெரியர் கம்பர்'' என்ற முதுமொழி நன்கு பிரசித்த மானதே.

வள்ளுவரின் குறளடிகளை எடுத்தாளாத தமிழ்ப்புலவர்கள் இல்லை என்றே கூறி விடலாம். சிலம்பின் செல்வாக்கு நாட்டார் இலக்கியம் வரை படர்ந்திருப்பதை நாம் அறிவோம். ஆயினும் முப்பெரும் கவிஞர்களைப் பாரதியார் சிறப்பித்துக் கூறியபின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவே நம்மவர்க்கு ஆதாரமான அளவு கோலாயிற்று. பாரதியார் பாராட்டியதாலும் முன்சென்ற மூவர்க்கும் பெருமை பெருகியிருக்கிறது.

இவ்விடத்தில் ஒன்று கவனிக்கத்தக்கது. தனக்கு முன்னிருந்த பெருங் கவிஞரை இனங்கண்டு வரிசையறிந்து பாரதியார் கூறும் பொழுது அறிந்தோ அறியாமலோ தனது இலக்கிய நோக்கினை அடிப்படையாகக் கொண்டே அவர்களை வரிசைப்படுத்தியிருப்பான் என்று கூறுவது தவறாகாது. பொதுவில் நாம் ''இலக்கியம்'' என்று கூறும்பொழுது நம் உள்ளத்தில், சிந்தனையில் - பல எண்ணக்கூறுகள் ஏககாலத்தில் எழுகின்றன. ஒருவரது கல்வி, பயிற்சி, உணர்வு, அனுபவம், உலகநோக்கு இவற்றுக்கேற்ப இலக்கியம் பற்றிய 'வரைவிலக்கணம்' வேறுபடும். எனினும் சாதாரணமாக சொல்லலங்காரம், சப்தநயம், உவமை, உருவகம் முதலிய சிறப்புக்களும் உணர்வினைத் தாக்கி வாழ்க்கைக்குப் புதிய விளக்கத்தைத் தரவல்ல கருத்துமே கவிதைக்கு உயிர்நாடியாக இருப்பதைப் பலரும் ஏற்றுக்கொள்வர். இது ஒரு கவிஞனின் பொது இலக்கணம். எல்லாக் கவிஞர்களுக்கும் இச்சிறப்பியல்புகள் ஏதோ ஒரு அளவில் அமைந்திருத்தல் வேண்டும். இவர்களுள் பெருங் கவிஞராகப் பரிணமிப்பவர்கள் மொழியாற்றல் முதலியவற்றைக் குறைவின்றிப் பெற்றிருக்கும் அதே வேளையில், தாம் வாழும் காலத்துச் சமுதாயத்தின் அடிப்படைப் பிரச்சினைகளை அறிந்து, அவற்றுக்குப் பரிகாரம் காண முற்படுபவர்களாகவும் இருக்கின்றனர். தத்தம் அனுபவங்களின் துணை கொண்டு கவிபாடத் துவங்கும் பலர் அவ்வநுபவங்களின் மட்டத்திலேயே தங்கிவிடுகின்றனர். ஆனால் பெருங்கவிஞன் தன் சொந்த அநுபவங் களை மாத்திரம் பொருளாகக் கொள்ளாது மனுகுலத்தின் நிலைமையினை உணர்ந்து அதனோடு தான் கலந்து எழுதுகின்றான். உதாரணமாகப் பாரதி அடிமைப்பட்டுக் கிடந்த பாரத சமுதாயத்தில் வாழ்ந்தவன் தன்னளவிலும் தனது சமுதாயத்தைப் பொருத்த அளவிலும் அடிமைத்தனத்தை அறிந்தவன். அடிமைத்தனத்தை உள்ளும் புறமும் கண்டவன். அது அவனது அடிப்படை அநுபவம். அவ்வநுபவத்துடன் உலகை நோக்கிய பொழுது வேறுபல சமுதாயங்களும் நாடுகளும் அடிமைத்தனத்திலும் தாழ்வுற்று இழி நிலையிலும் அல்லற்படுவதைக் கண்டார். அங்கே பொதுமை உணர்வு எழுகிறது. 'மண்ணுலகத்து மானுடன் தன்னைக் கட்டிய தளையெலாம் சிதறுக' என்று உலகளாவிய கண்ணோட்டத்தில் அவன் குரல் எழுப்பினான். இந்த உணர்வுடனேயே பழந்தமிழ்ப் பனுவல்களையும் நோக்கினான்.

வையத்தில் மானுடன் வாழ்வாங்கு வாழ வழிகாண முற்பட்ட வள்ளுவன், இராமராச்சியம் என்ற கற்பனைக்கு அடிப்படையான இலட்சியமான அரசு ஒன்றை இலக்கியத்தில் உருவாக்கிய கம்பன், அறம், அரசியல், வாழ்க்கை இவற்றுக்கிடையே இருக்கக்கூடிய தொடர்பு எத்தகையது என்பதைக் குடிமக்கள் காப்பியம் ஒன்றின் மூலம் அலசி ஆராய்ந்த இளங்கோ ஆகியோரைப் பாரதி கண்டான். இம்மூவருமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனி ஒரு அரசனைப்பற்றியோ, தெய்வத்தைப்பற்றியோ, வள்ளலைப்பற்றியோ, அல்லது குறிப்பிட்ட குலம், சாதி என்பனவற்றையோ பாடினார் அல்லர். மனுகுலம் பற்றிப் பாடினர். ''மானுடம் வென்றதம்மா'' என்றே கம்பனும் குறிப்பிட்டான். தாம் வாழ்ந்த காலத்துச் சமுதாய நிறுவனங்களும் நியதிகளும் குறைபாடுடையவை என்னும் நம்பிக்கையுணர்வின் உந்துதலினாலேயே இப்பெருங் கவிஞர்கள் மானுடன் கேடின்றி வாழத்தக்க கற்பனை உலகுகளைப் படைக்க முற்பட்டனர்.

காலத்துக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்த அவர்கள், காலத்தைக்கடந்து சிந்தித்தனர், செயலாற்றினர். அதனாலேயே காலத்தை வென்ற கவிஞராகினர். வள்ளுவன் வகுத்த அறம் அவன் காலத்து நடைமுறைகளின் திரட்சி அன்று மனிதன் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவன் விழைந்த சமுதாய நெறியை நூலில் வடித்தான்.

தனது காலத்தின் அவலங்களையும் பிரச்சினைகளையும் உணர்வு பூர்வமாகவும் அறிவு பூர்வமாகவும் தெளிந்து கொள்ளும் ஒருவனே கால உணர்வுடன் செயற்பட முடியும். அவன் கூறும் முடிவுகள் பூரணமானவையாக அமையாமற் போகலாம். ஆனால் இவ்வுலகை மாற்றியமைக்க வேண்டும் என்ற உணர்வு தோன்றியவுடனேயே அவனது படைப்புக்குத் தனியாற்றல் பொருந்தி விடுகின்றது. அத்தகைய ஆற்றலை அளவு கோலாகக் கொண்டே பெருங்கவிஞர்களை இனங்கண்டு கொள்கின்றோம். அந்த முறையிலேயே வள்ளுவர், இளங்கோ, கம்பன், பாரதி முதலியோர் மகாகவிகள் என மதிக்கப்படுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரும்பதங்கள்

**விதந்துரைத்தல்** - பரிந்துரைத்தல்

**ஏககாலம்** - ஒரே காலம்

**பரிகாரம்** - தீர்வு

**தளை** - கட்டுப்பாடு/ தடை

**பனுவல்** - இலக்கியம், நூல்

## மையக் கருத்து

மானுட விடுதலைக்காக இவ்வுலகை மாற்றியமைக்கும் உணர்வோடு பாடல்களைப் பாடியவர்களே பெருங்கவிஞர்களாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றார்கள். அவ்வகையில் வள்ளுவர், இளங்கோ, கம்பர், பாரதி ஆகியோர் மகாகவிகளாக அடையாளப்படுத்தப்படுகின்றார்கள்.

## துணைக் கருத்துக்கள்

- பாரதியின் படைப்புகளை உலகம் அங்கீகரிப்பதைப் போலவே அவரது அபிப்பிராயங்களையும் ஏற்றுக்கொண்டுள்ளது.
- அடிமைப்பட்டுக் கிடந்த சமுதாயத்தில் வாழ்ந்த பாரதி ஏனைய அடிமைச் சமுதாயங்களின் அல்லல்களையும் கண்டு பொதுமை உணர்வு மீதுரப்பெற மானிட விடுதலைக்கான கண்ணோட்டத்துடனேயே பழந்தமிழ்ப் பனுவல்களையும் நோக்கினான்.
- ஒருவனிடத்தில் இருக்கும் இவ்வுலகை மாற்றியமைக்க வேண்டும் என்ற உணர்வு தோன்றியவுடன், அவனது படைப்பிற்குத் தனியாற்றல் பொருந்திவிடுகிறது. அதனை அளவுகோளாகக் கொண்டே பெருங்கவிஞன் இனங்காணப்படுகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எடுத்துரைப்பு முறை

- பாரதியாரால் பெருங்கவிஞர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ள வள்ளுவர், இளங்கோ, கம்பர் ஆகியோரைப் முன்வைத்து ஆராய்தல்.
- பெருங் கவிஞர்களுக்கான அளவு கோலாக மானிட விடுதலைக்கான உணர்வை வலியுறுத்தல் - மேற்படி பண்பினால் பாரதியையும் பெருங்கவிஞர்கள் வரிசையில் சேர்த்தல்.
- தான் வலியுறுத்த வந்த கருத்துகளைத் தர்க்கரீதியாக முன்வைத்தல்.
- வரலாறு, இலக்கிய உதாரணங்களை முன்வைத்தல்.

## மொழிநடை

- எளிமையான மொழி நடை.
- உதாரணங்களினூடாக முன்வைக்கும் நடை.

## கற்றல் வினாக்கள்

1. கவிஞர்கள் அனைவரும் பெருங்கவிஞர்களாக ஏற்றுக் கொள்ளப்படாமைக் கான காரணங்கள் யாவை?
2. 'மண்ணுலகத்து மானுடன் தன்னைக் கட்டிய தளையெலாம் சிதறுக' என்று பாரதியைப் பாடத் தூண்டிய பின்னணி யாது? தெளிவுபடுத்துக.
3. தமிழ்க் கவிஞர்களின் வரிசையில் பாரதிக்குரிய இடத்தை இக்கட்டுரை நிறுவுமாற்றினை எடுத்துக்காட்டுக.
4. பெருங்கவிஞர்களுக்குரிய பண்புகளாகக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளன வற்றை விபரிக்குக.
5. உமக்குப் பரிச்சயமான கவிஞர் ஒருவரின் படைப்புக்களில் மானுடம் தழுவிய பண்புகள் வெளிப்படுமாற்றினை விளக்குக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய விமரிசனம்



அ. சீனிவாச ராகவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுரையாளர் அறிமுகம்

| | |
|---|---|
| **பெயர்** | அ. சீனிவாசராகவன் |
| **காலம்** | 23.10.1905 – 05.01.1975 |
| **இடம்** | கண்டியூர் – தமிழ்நாடு |
| **கல்வி** | சென் ஜோசப் கல்லூரி - திருச்சிராப்பள்ளி |
| **பணி** | ஆங்கிலப் பேராசிரியர்<br>கல்லூரி அதிபர்<br>பத்திரிகையாசிரியர் – சிந்தனை<br>மொழிபெயர்ப்பாளர் |
| **படைப்பு** | கவிதை – **மேல் காற்று** (தொகுப்பு) முதலியன<br>நாடகம் – **உதய கன்னி** முதலியன<br>கட்டுரை – புதுமெருகு (தொகுப்பு)<br>சுயசரிதை – நம்மாழ்வார்<br>ஆய்வு நூல் – ஒரு நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை |
| **விருது** | சாகித்திய அகடெமி விருது |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பழைய கதை உங்களுக்குத் தெரிந்ததுதான். நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றங் குற்றமேயென்று தமிழ்ப்புலவன் நக்கீரன் சிவபெருமானிடம் பேசிய இரசமான கதை.

இன்றும் நம்முடைய தமிழ் நாட்டிற் புலமையினஞ்சாத உறுதிக்கு எடுத்துக்காட்டாக நக்கீரன் நிற்கிறான்.

தமிழன் இன்றும் நக்கீரனைப் பாராட்டுவதில் வியப்பொன்றுமில்லை. குற்றத்தைச் சொன்னால் நெற்றிக்கண்ணைத் திறக்குஞ் சிவபெருமான்கள் இந்தக் காலத்திலும் நம்மிடையே வாழ்கிறார்கள். தாம் கண்ட உண்மைக்கு உண்மையாய் நிற்கும் நக்கீரர்களை மட்டும் அதிகமாகக் காணோம். இலக்கிய விமரிசனமென்பது ஒரு கலை; இலக்கியம் எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவு முக்கியமானது இலக்கிய விமரி சனம்; இலக்கிய வளர்ச்சிக்கே இந்த விமரிசனம் இன்றியமையாத சாதனம்; உண்மை யும் தீரமும் உறுதியும் படைத்த இலக்கிய விமரிசனம் இப்போது தமிழுக்குத் தேவையென்பதுதான் என்னுடைய கட்சி. ஆகவேதான் நக்கீரர்கள் வேண்டுமென் கிறேன்.

இதனாலே கதையிலே தோன்றும் நக்கீரன் செய்யும் இலக்கிய விமரிசனஞ் சரியான தென்பது என்கருத்தன்று. அந்தக் கதை உண்மை நிகழ்ச்சிகளைச் சொல்லுகிறதோ, என்னவோ, கதையைக் கட்டியவன் மனதில், அதாவது தமிழனுடைய மனதில், ஒருகாலத்தில் நக்கீரன் கட்சி நியாயமானது; நக்கீரன் கையாண்ட விமரிசனமுறை ஒழுங்கானது என்ற எண்ணமிருந்திருக்கவேண்டும். இப்போதும் பல தமிழறிஞர் களிடையே இந்த எண்ணம் இருந்து வருகிறது. நக்கீரன் கட்சி நியாயமானதா என்று முதலிற் பார்ப்போம்.

கதைதான் உங்களுக்குத் தெரியுமே. தருமியென்ற ஏழைப் பார்ப்பானொருவன் பாட்டொன்றோடு பாண்டியன் சபைக்கு வந்து சேர்ந்தான்; பாட்டைப் பாடினான்.

*"கொங்குதேர் வாழ்க்கை*
*யஞ்சிறைத் தும்பி*
*காமஞ் செப்பாது*
*கண்டது மொழிமோ"*

என்று தொடங்குகிறது பாடல்.

'பூவின் வாசத்தை ஆராயும் வாழ்க்கை நடத்துந் தும்பி/ அழகிய சிறகையுடை யாயே, எனக்காக ஒருதலைப்பட்சமாக நான் விரும்புவதைக் கூறாமல் நீ கண்டதைச் சொல்' என்று ஒருவன் கேட்கிறான். அப்படிக் கேட்பது யார்? என்ன நிலையிலே


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கேட்கிறான்? என்ன கேட்கிறான்? பாட்டைத் தொடர்ந்து பார்ப்போம்.

*"கொங்குதேர் வாழ்க்கை*
*யஞ்சிறைத் தும்பி*
*காமஞ் செப்பாது*
*கண்டது மொழிமோ*
*பயிலியது கெழீஇய*
*நட்பின் மயிலியற்*
*செறியெயிற் றரிவை கூந்தலின்*
*நறியவு முளவோ*
*நீயறியும் பூவே"*

பாட்டிலே பேசுவது ஒரு காதலன். தன் காதலி தன்னோடு பலகாலம் பழகியதை யெண்ணுகிறான். மயில் போன்ற அவள் சாயலை எண்ணுகிறான். அவளுடைய நெருங்கிய பல் வரிசையை எண்ணுகிறான். அட, தும்பி, எத்தனையோ பூக்களைப் பார்த்திருக்கிறாயே, என் காதலியின் கூந்தலைவிட வாசனை பொருந்திய பூக்களை நீ கண்டதுண்டோ, சொல், என்று கேட்கிறான். காதலனொருவனுடைய அன்பின் வேகம் பாட்டில் வடிவாகிறது. அருமையான பாட்டென்று நீங்களும் நானும் நினைக்கிறோம்.

ஆனால், நக்கீரன் சொன்னது தெரியுமல்லவா?. கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டா, என்று கேட்டுப் பாட்டைக் குறை கூறினான் நக்கீரன். இதற்கு இறைவனாலுஞ் சமாதானங் கூற முடியவில்லையென்று சொல்லும்போது நக்கீரனெழுப்பிய தடை நியாயமானதென்ற கருத்து உதயமாகிறது. உண்மையில் இந்தக் கதையில் வரும் நக்கீரன் இலக்கியத்தினியல்பை உணரவில்லை. இலக்கியம் எதைப்பற்றிப் பேசியபோதிலும், உண்மையில் அது பேசுவது மனித அனுபவத்தைப் பற்றியே என்பதை இந்த நக்கீரன் எண்ணவில்லை. உலகத்திலே உள்ள காட்சிப் பொருள்களைப் பற்றியெல்லாம் இலக்கியம் பேசுகிறது. உண்மைதான், ஆனால், எந்த முறையிலே, எந்த நோக்கோடு பேசுகிறது என்பதை அவதானிக்கவேண்டும். காட்சிப் பொருளைக் காட்சிப் பொருளாக அல்ல; கருத்தை எழுப்பிய கருவியாகவே இலக்கியம் பேசும். ஆகவே, இலக்கியத்திற் காதலியின் கூந்தல் மணமுடையதாகும்; இதுபோலவே தாமரை விளக்கந் தாங்கும்; கொண்டல் முழவம் பரிமாறும்; மயில் பரதநாட்டியம் புரியும்; குவளை கண்விழித்து நோக்கும்; கவிஞன் கற்பனையிலுதித்த மருதமென்ற அரசி கொலுவீற்றிருப்பாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய உலகிலே சென்றால் இவைபோன்ற அற்புதங்களெத்தனையோ அங்கங்கே கண்ணில் தென்படும். உள்ளதை அதாவது வெளியில் உள்ள காட்சிப்பொருள்களை, புறநிகழ்ச்சிகளை அல்ல, அவற்றைக் காணுமுள்ளத்திலெழும் பல்வேறுவிதமான சிந்தனைகளை, உணர்ச்சிகளை, பாவனைகளை அல்லவா இலக்கியம் சித்திரிக்கிறது?

இதை நம்முடைய கதையிலே தோன்றும் நக்கீரனுணரவில்லை. இறையனாரும் உணரவில்லை. ஆனால், பழைய இலக்கண ஆசிரியர்கள் ஒருவாறு உணர்ந்திருந்தார் கள். அவர்களுடைய கொள்கையில் மூன்று அருமையான அம்சங்களிருப்பதைக் காணலாம். ஒன்று, இலக்கியங் கண்டதற்கிலக்கணமியம்புவது; இரண்டாவது, பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல; மூன்றாவது, நாடக வழக்கு, அதாவது இலக்கிய வழக்குப் புற நிகழ்ச்சிகளைப் பொறுத்தமட்டில் உலகியல் நடைமுறையினின்றும் மாறுபடுவது பொதுவாகத் தவறாகாது. இதற்கு ஆதாரமான பழைய சூத்திரங்களைச் சொல்ல நான் விரும்பவில்லை. உங்களுக்குத் தெரிந்ததை மறுபடியுஞ் சொல்வானேன்.

ஆனால், பிற்காலத்தில் இலக்கியத்திற்குயிராதாரமான இந்தப் பரந்த கொள்கையைப் புறக்கணித்து விட்டோம். இலக்கிய மதிப்புரையென்றால் நக்கீரனைப்போற் குற்றங் காணுவதென்ற எண்ணம் எப்படியோ நம்மிடையே வேரூன்றி விட்டது. விமரிசகன் தடைகளை எழுப்புவதும் இலக்கிய கருத்தா அதற்குச் சமாதானங்கூற முயல்வதுமான தடை விடையென்ற முறையானது சாதாரணமாய் வழக்கத்திலிருந்து வந்தது. தடைகளெல்லாம் பழைய இலக்கண விதிகளையொட்டியே எழுந்தன. விடைகளும் அவ்வாறே வண்டு, மலரைச் சங்காக ஊதுமென்ற புகழேந்தியின் வருணனைக் கெழுந்த தடை ஞாபகமிருக்குமே? மலர் சங்கானால் வண்டு அதன் காம்பிலல்லவா ஊதவேண்டுமென்ற தடைக்கு, வண்டு கள்ளையுண்டு மயங்கி முன்பின் தெரியாமல் தவித்தது நியாயமேயென்ற விடைபிறந்தது சமத்காரமாகத்தானிருக்கிறது. என்றாலும் இந்தத் தடைவிடை முறை இலக்கியத்தினியல்பைப் பற்றிய அடிப்படையான ஆராய்ச்சியிலிருந்து தோன்றாமல் இலக்கண விதிகளைத் திருப்பித் திருப்பிப் பேசுங் குறுகிய குற்றச்சாட்டு முறையாகி விட்டது. இலக்கண விதிகளைப் பின்பற்றுவது தவறென்று நான் சொல்லவில்லை. அவையெல்லாம் பழைய இலக்கிய மரபையொட்டி எழுந்தவை. அவற்றை ஒரேயடியாகப் புறக்கணிப்பதால் இலக்கிய வளர்ச்சி தடைப் படுவதோடு மொழியைக் கருவியாகப் பயன்படுத்தக்கூட இயலாமற் போகும். மொழியினழுத்தமுந் தெளிவும் மறைந்து விடும். ஆனால், அனேகமாக நம்முடைய பழைய இலக்கண விதிகள் இலக்கியத்தின் கருவியான மொழியைப் பற்றியவை. எழுத்து, சொல், அணியிவற்றைப்பற்றி நுட்பமாக நம்முடைய முன்னோர்களாராயந் தார்கள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலக்கியத்திற்குப் பொருளிலக்கணங் காணவேண்டுமென்று அவர்கள் முற்பட்டார் கள்; கண்டார்கள். ஆனால் இலக்கியப் பொருள்களின் தன்மையை, அடிப்படையான முறையில் மேல்நாட்டில் அரிஸ்டாட்டில் காலத்திலிருந்து இன்றுவரை ஆராய்ந்திருப் பது போல் நாமாராயவில்லை. நூலுக்கிலக்கணம் வகுத்தபோது நூலினழகு பத்து வகையிலே கிட்டுமென்று நன்னூலார் சொன்னார். அதுபோலக் குற்றமும் பத்து உத்தி முப்பத்திரண்டு இவை எல்லா நூலுக்கும் பொருந்தும். வான சாத்திரமோ, இரசாயன மோ நூலாக அமைந்தால் அந்த நூலிலும் சுருங்கச் சொல்லுதல், விளங்கவைத்தல், நவின்றோர்க்கினிமை முதலியன அழகாகவும், குன்றக்கூறல், மிகைபடக்கூறல் முதலியன குற்றங்களாகவும், தொகுத்துச் சுட்டல், வகுத்துக் காட்டல், முதலியன உத்திகளாகவும் அமையக்கூடும். இவை இலக்கிய நூல்களுக்கு மட்டுமுரித்தான விதிகளல்ல. தேரையர் வைத்தியமும், கம்பராமாயணமும் நூல்கள். ஆனால் ஒன்று வைத்தியம், அறிவியல் நூல்; இன்னொன்று கவிதை, இலக்கிய நூல்.

ஒரு நூலெப்போது இலக்கியமாகிறதென்ற ஆராய்ச்சியை நாம் விரிவாகச் செய்யாமல் இருந்துவிட்டோம். இலக்கிய வகைகளையும், உலா, பரணி, பெருங்காப்பியம், பிள்ளைத்தமிழென்று நூலின் வெளிப்படையான சில அம்சங்களை வைத்துக்கொண்டு வகுத்தோம். ஆனால் இந்த வகைகளிற் சேராத புதிய நூல் ஒன்று தோன்றினால் அதை மதிப்பிடுவதற்கு, இலக்கியத்திற்கே பொதுவாக இலக்கியத்துவமொன்றை நாம் சிருட்டி செய்துகொள்ளவில்லை. பழைய இலக்கணங்களில் தொல்காப்பியத்தில் இறையனாரகப்பொருளில், நன்னூலிற் சில சூத்திரங்களிலிந்த இலக்கிய தத்துவம் பேசப்படுகின்றதென்று நீங்கள் சொல்லலாம். சூத்திரங்களிருந்தால் அவற்றை இன்று அடிப்படையாகவோ, கொண்டு, விரிவாக இலக்கிய தத்துவத்தை விசாரணை செய்ய வேண்டுமென்றே நான் சொல்லுகிறேன்.

இலக்கிய விசாரணை செய்யாமலா நம்முடைய சாற்று கவிகள் தோன்றியிருக்கின்றன. நம்முடைய உரையாசிரியர்களை விட நுட்பமாக நூலையாராய்ந்தவர்களுண்டா என்று கேட்கிறீர்கள். சாற்றுகவிகள் கேவலம் உபசார வார்த்தைகளாக இல்லாத போதுகூட, ஒரு நூலின் பெருமையைப் பொதுப்படக் கூறுவனவேயல்லாமல் அவற்றை இலக்கிய விமரிசனமாகக் கொள்ள முடியாது. நம்மாழ்வாருடைய பெருமையிலீடுபட்ட ஒருவர்.

*ஈதோ திருநகரி யீதோ பொருநைநதி*
*ஈதோ பரம பதத்தெல்லை யீதோதான்*
*வேதம் பகர்ந்திட்ட மெய்ப்பொருளினுட்பொருளை*
*யோதுஞ் சடகோப னூர்.*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என்று பாடினார். இந்தப்பாட்டு இலக்கிய விமரிசனமா? இதிலிருந்து இதைப் பாடியவர் நம்மாழ்வாருடைய பாட்டில் எவ்வளவு ஈடுபட்டாரென்பது தெளிவா கிறது. ஆனால் திருவாய்மொழியின் இயல்பைப்பற்றியோ அது எவ்வாறு சிறந்த இலக்கியமாகிறது என்பதைப்பற்றியோ இந்தப் பாட்டிலிருந்து ஒன்றுந் தெரிந்து கொள்ள முடியாது. ஆனால் துரதிட்ட வசமாக நம்முடைய தமிழ்நாட்டில் இலக்கியமொன்றைப்பற்றிப் பெருமையாகவோ குறைவாகவோ அழுத்தமாகப் பேசிவிட்டால் அதுவே விமரிசனமென்ற எண்ணத்துடன் சிலரெழுதி வருகிறார்கள். ஓகோகோ, இதுவே பாட்டென்று பேசுவதும், சீ, சீ இதுவும் பாட்டா என்பதுஞ் சாதாரணமாக நாம் கேட்கலாம். இவ்வாறு பேசுகிறவர்கள் தங்களனுபவத்தை உண்மையாகவே வெளியிடலாம். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் அவர் களனுபவம் மற்றெல்லாராலும் ஒப்புக்கொள்ளக்கூடியதென்பதற்கும், அந்த அனுப வத்தை ஆராய்ந்து, அது எவ்வாறு ஏற்பட்டதென்பதைத் தெளிந்து சஹ்ருதயன் உள்ளத்தில் இந்த அனுபவந்தான் ஏற்படுமென்பதற்கும் அவர்கள் இலக்கிய தத்துவ உணர்வோடு, தருக்கரீதியாக மற்ற இலக்கியங்களோடு தாங்கள் விமரிசனஞ் செய்யும் இலக்கியத்தையும் ஒப்பிட்டுக் காரணங் காட்டவேண்டும்.

இந்தக் கோஷ்டியார் தத்துவ விசாரத்தோடு பழைய உரையாசிரியர்களையும் ஒப்புக்கொள்வதில்லை. சொல்லின் பொருளையும், யாப்பையும் அணிகளையும் பற்றிப் பேசிக்கொண்டு, உரையாசிரியர்கள் பாட்டை மறந்துவிடுகிறார்கள்; மறைத்தும் விடுகிறார்களென்பதே இவர்கள் விடுக்குங் குற்றச்சாட்டு. ஓரளவுக்கு இஃது உண்மையே. உரையாசிரியர்கள் பலர் இலக்கியத்திற்குக் கருவியாக அமையும் மொழியோடு நின்றுவிடுகிறார்கள்.

காமஞ் செப்பாது கண்டது மொழிமோ, என்ற அடியிலே மோ என்பது முன்னிலை அசையென்பார்கள். பேசாத தும்பி பேசக் கூடியதாகக் கருதப்படுவதற்குப் பழைய தொல்காப்பிய விதியான, " சொல்லா மரபினவற்றொடு கெழீஇச் செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியும்", என்ப திடந்தருகிறதென்பார்கள். தும்பியென்றது முன்னிலையாக்கல், கண்டது மொழிமோ என்றது சொல்வழிப்படுத்தல், கூந்தலில் நறியவுமுளவோ என்றது நன்னயமுரைத்தல் என்றெல்லாம் பேசுவார்கள். ஆனால், பாட்டினருமையை, அஃதெவ்வாறு கவிதையாகின்றதென்பதை மறந்துவிடுவார்கள். உரையாசிரியர்கள் செய்த தொண்டு அருமையானது. சொல்லையும் அணியையும், வேறிலக்கியக் கருவிகளையும் துல்லியமாக ஆராய்ந்திருக்கிறார்கள். ஆனால் இது போதாது. இதற்குமேல் தத்துவரீதியில் இலக்கியத்தைப்பற்றி அவர்கள் பேசவில்லை. இலக்கிய விசாரத்தை வெளிப்படையாக விரிவாக அவர்கள் செய்யவில்லையென்பதே என் நினைவு.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலக்கியமென்பது ஒரு கலை. அதன் கருவியான மொழியைப்பற்றிய நுட்பமான ஆராய்ச்சி நம்மிடமுள்ளது. ஆனால் கலையின் பண்பைப் பற்றிய ஆராய்ச்சியை நாம் செய்யவேண்டும். அதை அடிப்படையாகக் கொண்டே இலக்கிய விமரிசனம் தோன்றும். இதைத் தத்துவரீதியான இலக்கிய விமரிசனம் என்று சொல்லலாம். ஆனால் இலக்கியமென்பது வளர்ந்துவரும்போது அதற்கு முன்னிருந்த பழைய இலக்கியத்தோடு தொடர்பில்லாமல் வளருவதில்லை. கம்பன் விருத்தப்பாவைக் கையாண்டானென்றால் அதற்குச் சீவகசிந்தாமணி ஆசிரியன் வழிகாட்டியாக இருந்தானென்பதை மறக்க லாகாது. இந்தவகையிலே நம் நாட்டின் இலக்கியத்தைத் தொடர்ந்து வளர்ந்து வந்த ஒரு சீவனாகக் கருதி, ஒரு காலத்து இலக்கியத்திற்கும் இன்னொரு காலத்து இலக்கியத்திற்குமுள்ள தொடர்பையும், எப்படி அந்த அந்தக் காலத்திற் புதிய வகைகள், புதிய முறைகள் தோன்றின என்பதைப் பற்றியுமாராய்வது இலக்கிய விமர்சனத்தி லொரு பகுதி, இதைச் சரித்திரரீதியான இலக்கிய விமரிசனமென்று கருதலாம். இலக்கியம் ஆகாயத்தில் முளைப்பதன்று, ஒரு சமுதாயத்தில் வாழ்ந்த ஒருவனுடைய அனுபவமே இலக்கியமாகிறது. ஆகவே அவன் எந்த சமுதாயத்தில் வாழ்ந்தான்? அவனுக்கும் மற்றவர்களுக்குமிருந்த உறவென்ன? அவனுடைய வாழ்க்கைச் சரிதம் அவனுடைய இயல்பைப்பற்றி என்ன தெரிவிக்கிறது என்பதெல்லாம் ஆராய்ந்து அவனுடைய இலக்கியத்தின் தன்மையை உணர இந்த அறிவைப் பயன்படுத்திக் கொள்வதும் இலக்கிய விமரிசனத்தில் ஒரு முறை. இதை வாழ்க்கைச்சரித ரீதியிலமைந்த இலக்கிய விமரிசனமென்று கொள்ளலாம். இவை தவிர, ஒரு புலவனுக்கும் இன்னொரு புலவனுக்கும் இலக்கியப்பண்பைப் பொறுத்தமட்டில் என்ன என்ன ஒற்றுமை, என்ன என்ன வேறுபாடுள்ளது; இளங்கோவடிகள் குரலுக்கும் கம்பன் குரலுக்குமுள்ள வேற்றுமையென்ன; என்று தனிப் புலவர்களுடைய பண்பை ஆராய்வதும் இலக்கிய விமரிசனத்தின் வேலை. இதை ஒப்புமைரீதியான இலக்கிய விமரிசனமென்று சொல்லலாம். இவ் விமரிசன வகைகள் ஒவ்வொன்றிற்கும் தனி முறைகள் உண்டு; அடிப்படையான விதிகளுமுண்டு.

ஆனால் இலக்கிய விமரிசனம் எந்த வகையானதாக இருந்த போதிலும் ஒரே நோக்கத்தைக் கொண்டுதான் வழங்க வேண்டும். இலக்கியத்தின் பெருமையை உணருவதற்கும் அனுபவிப்பதற்கும் விமரிசனம் வழிகாட்டல் வேண்டும். விமரிசகன் இலக்கணத் தராசைக் கையிலேந்தி இலக்கியத்தை நிறுக்கும் நக்கீரனல்லன். இலக்கியத் திற்கு ஓயாமற் பொருள் விளக்கமும் இலக்கணக் குறிப்புந் தரும் உரையாசிரியனல்லன். 'ஓகோ...' என்று களித்து, 'சீ, சீ...' என்று ஒதுக்குங் குழந்தையுமல்லன். பிரபஞ்சத்தைக் கண்டு தன் மனத்திலெழுமனுபவத்தைச் சொல்லில் தேக்குவது இலக்கியமானால், அந்த இலக்கியத்திலுள்ள அனுபவத்தைத் தெளிவாக்கி அது எவ்வாறு சொல்லிலே தேங்குகிறதென்பதைக்காட்டி, இந்த அனுபவம் சொல்லிலே தேங்கும்போது ஏன் எவ்வாறு கலையாகிறது என்பதைத் தத்துவ ரீதியில் ஆராய்ந்து, கலானுபவத்தின்

எல்லை நிலமான ஆனந்தத்திற்கழைத்துச் செல்வதே இலக்கிய விமரிசனமாகும். இதனால் மொழி வளரும்; இலக்கியம் வளரும்; தத்துவ விலாசமேற்படும்; கலானுபவஞ் சித்திக்கும்; சஹ்ருதயம் அதாவது கலைஞனோடொன்றி நின்று அவன் பெற்ற ஆனந்தத்தைப் பெறும் அபூர்வசக்தி, தானாகவே நம்மை வந்தடையும்.

## அரும்பதங்கள்

| | | | |
|---|---|---|---|
| **புலமை** | - நுட்பமான அறிவாற்றல் | **கெழீஇய** | - நெருங்கிய |
| **சஹ்ருதயன்** | - ஆதரிப்பவன் | **எயிறு** | - பல் |
| **கொங்கு** | - மகரந்தம் | **நறிய** | - வாசனை மிக்க |
| **தேர்** | - ஆராய் | **சமத்காரம்** | - பொருந்தக்கூடிய |
| **காமம்** | - விருப்பம் | **பரமபதம்** | - இறைவன் திருவடி |

## மையக் கருத்து

இலக்கிய விமர்சனம் என்பது ஒரு கலை. மனித அனுபவத்தைப் பற்றிப் பேசும் இலக்கிய விமர்சனம், இலக்கியப் பெருமையை உணர்வதற்கும் அனுபவிப்பதற்கும் வழிகாட்டும்.

## துணைக் கருத்துக்கள்

- இலக்கியம் என்பது உள்ளத்தில் எழும் பல்வேறுவிதமான சிந்தனைகளையும் உணர்ச்சிகளையும் சித்திரிக்கும் ஒரு கலை.
- இலக்கிய விமர்சனங்கள் இலக்கியங்களை வளப்படுத்தும்.
- இலக்கிய விமர்சனமானது சொல்லில் தேங்கி நிற்கும் மனித அனுபவத்தை தத்துவ ரீதியில் ஆராய்ந்து, அது கலை இலக்கியத்தோடு ஒன்றி நிற்க உதவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எடுத்துரைப்பு முறை

- கொங்குதேர் வாழ்க்கை... என்ற பரிச்சயமான பாடலினூடாகவும் அது சார்ந்த நக்கீரனின் விமர்சனத்தை ஆராய்வதினூடாகவும் இலக்கிய விமர் சனம் மற்றும் அதன் அவசியம் என்பனவற்றை எடுத்துரைத்தல்.
- வினாக்களை எழுப்புவதனூடாக வாசகனை முன்னிலைப்படுத்தி உரையாடு வதைப் போல அமைந்திருத்தல்.
- இலக்கிய, இலக்கண சான்றுகளை எடுத்துக் காட்டுவதினூடாகவும் மேலைத் தேய அணுகுமுறைகளை ஒப்பிடுவதினூடாகவும் கருத்துக்களைத் தெளிவு படுத்தல்.
- தர்க்க ரீதியாகக் கருத்துக்களை முன்வைத்தல்.

## மொழிநடை

- இயல்பானதும், இலக்கியச் செறிவுடையதுமான மொழிக் கையாட்சி.
- தேவையான இடங்களில் பிறமொழிச் சொற்களின் பயன்பாடு.

## கற்றல் வினாக்கள்

1. கட்டுரையாளரின் இலக்கியம் பற்றிய கருத்துக்களை விளக்குக.
2. இலக்கிய விமர்சனம் அமையவேண்டிய முறைபற்றிய கட்டுரையாசிரியரின் கருத்தைத் தெளிவுபடுத்துக.
3. 'காட்சிப் பொருளைக் காட்சிப் பொருளாக அல்ல கருத்தை எழுப்பிய கருவியாகவே இலக்கியம் பேசும்' என்ற கூற்றை விளக்குவதற்கு ஆசிரியர் பயன்படுத்தியுள்ள உதாரணங்களை எடுத்துக்காட்டுக.
4. 'கொங்குதேர் வாழ்க்கை...' என்று தொடங்கும் பாடல் இக்கட்டுரைக்கு வலுவூட்டுமாற்றினை எடுத்துக்காட்டுக.
5. தந்தை மகள் உறவு சார்ந்து அண்மைக்காலத்தில் வெளிவந்த திரையிசைப் பாடல்கள் பற்றிய உமது கருத்துக்களை முன்வைக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையாற்றுப்படை



க. நடேசபிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுரையாளர் அறிமுகம்

| | |
|---|---|
| பெயர் | சு. நடேசபிள்ளை |
| காலம் | 21.05.1895 - 15.01.1965 |
| இடம் | தஞ்சாவூர் – தமிழ்நாடு |
| கல்வி | கலைமாணி – இலண்டன்<br>சென் ஜோசப் கல்லூரி – திருச்சி |
| பணி | வழக்கறிஞர்<br>அதிபர், ஆசிரியர் – பரமேஸ்வராக் கல்லூரி, திருநெல்வேலி |
| படைப்பு | கட்டுரை – இயற்றமிழ்<br>காவியநூல் – சகுந்தலை வெண்பா |
| விருது | இலக்கியக் கலாநிதிப் பட்டம் (இலங்கைப் பல்கலைக்கழகம்) |

இராமாயணம் முழுவதும் கட்டுக்கதை என்ற கொள்கையுடையோரும் இக்காலத்தில் உளர். அவர்கள் இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கையை ஒரு கற்பனை நாடாகக் கருதுவர். இராமாயணத்தைப் பற்றி ஜெர்மன் பாஷையில் ஓர் ஆராய்ச்சி நூல் எழுதிய ஜக்கோபி (Jacobi) என்பவர், சீதை என்ற சொல் உழவுசால் எனப்பொருள்படுமாகலின், இராமாயணம் உழவுத் தொழிலை உருவகப்படுத்தற்கு எழுந்த காவியம் என்று கூறினர். வேறு சில ஆராய்ச்சியாளர்கள், வட இந்தியாவிலிருந்து ஆரியர் விந்திய மலைக்குத் தெற்கே பரவிய வரலாற்றை இராமாயணம் விளக்குகிறதென்று கொள்வர்.

இராமாயணத்திற் சொல்லப்பட்ட செய்திகளில் ஓரளவு உண்மையுண்டென்ற கொள்கையுடைய மேனாட்டறிஞர்களில் பார்ஜிட்டர் ஒருவராவர். அவர் இந்தியாவில் பல ஆண்டுகளாக உத்தியோகத்தில் அமர்ந்து, வடமொழி நூல்களிலுள்ள வரலாற்றுப் பகுதிகளைத் துருவி ஆராய்ந்தவர். இராமபிரான் சஞ்சரித்ததாக இராமாயணம் கூறும் இடங்களைப்பற்றி அவர் எழுதிய கட்டுரையில், தென்னிந்தியாவுக்கு அணித்தாயுள்ள இலங்கையே இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கையாகும் என்று தமது அபிப்பிராயத்தை வெளிப்படுத்தினார். இதுவே பல நூற்றாண்டுகளாக இந்தியாவிலுள்ள மக்கள் மனதிற் பதிந்த கொள்கையாக இருப்பினும், சில ஆராய்ச்சியாளர்கள் இதைப் பற்றி ஐயம் நிகழ்த்தி வேறு கொள்கைகளை வெளியிட்டுள்ளார்கள்.

இவ்வாராய்ச்சியாளர்களில் ஒரு சாரார், இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கை இந்தியாவுக்கப்பால் வெகு தூரத்திலுள்ள ஜாவா, சுமாத்ரா பிரதேசம் என்பர். வேறு சிலர், சர்தார் கீபே என்பவரைப் பின்பற்றி, இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் இலங்கை இருந்ததாகக் கருதுவர். இந்த இரண்டு கொள்கைகளும் பொருத்த மற்றவையாகத் தோன்றுகின்றன. சாவகத்தீவு என்று தமிழிலக்கியம் கூறும் ஜாவா முற்காலத்தில் யவத்வீபம் எனறு வடமொழியில் வழங்கியது. வான்மீகி முனிவர் கிஷ்கிந்தா காண்டத்தில் யவத்வீபத்தை இலங்கையினின்று வேறுபட்ட பிரதேசமாகவே காட்டியுள்ளார். சுக்கிரீவன் கிழக்குத் திசையிலுள்ள நாடுகளைக் கூறும்போது யாத்வீபத்தையும், தெற்குத் திசையிலுள்ள நாடுகளைக் கூறும்போது இலங்கையையும் குறிப்பிடுவதினின்று, இலங்கை யவத்வீபம் ஆகாதென்று வெள்ளிடை மலைபோல விளங்கும். இனி, இலங்கை சமுத்திர மத்தியில் உள்ளதன்று. வான்மீகி முனிவர் பன்முறையும் கூறுகின்றார். சமுத்திரமில்லாத இடத்தில் இலங்கை இருந்ததாக சர்தார் கீபே எண்ணுவது வெறும் கற்பிதமாகும்.

இலங்கை என்று இப்பொழுது வழங்கப்படுகின்ற தீவே பல நூற்றாண்டுகளாக இப்பெயருடன் விளங்கிவருகின்றது. இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்தில் இந்நாடு இலங்கை என்றே வழங்கப்படுவது தமிழறிஞர் நன்கு தெரிந்ததாகும். அக்காலத்தில் இந்நாட்டை ஆண்ட மன்னனைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' கடல் சூழிலங்கைக் கயவாகு '' என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. கி. மு. ஐந்தாம் நூற்றாண்டினின்று இந்நாட்டின் சரித்திரத்தைத் தொடர்ந்து கூறும் மஹாவம்சம் என்ற பழைய இதிகாசத்தில் இந்நாடு ஆதிமுதல் அந்தம் வரையில் இலங்கை என்றே வழங்கப்படுகிறது. கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் வடஇந்தியாவினின்று இலங்கைக்கு வந்த விஜயன் என்ற அரசகுமாரன் அக்காலத்தில் இலங்கையிலிருந்த யக்ஷர்களுக்கு அரசியான, குவேனியை மணந்த சரித்திரத்தை மஹாவம்சம் கூறுமிடத்து, இலங்கையின் மலைப்பிரதேசத்தில் யக்ஷர்களின் தலைநகரமாகிய இலங்காபுரி இருந்ததென்று குறிப்பிடுகின்றது. ''திரிகூடபர்வதம் என்கிற மலையின் உச்சியில் விளங்கிய இலங்கா புரியை இராவணன் தனது தலைநகரமாகக் கொண்டிருந்தான்'' என்று இராமாயணம் கூறுவது ஈண்டு நினைவு கொள்ளத்தக்கது.

திரிகூடபர்வதத்தைப் பற்றி கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த வீரபாண் டியன் குறிப்பிடும் ஒரு சாசனம் எமது ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுத்துவதாக உள்ளது. இச்சாசனம் சில ஆண்டுகளுக்கு முன் புதுக்கோட்டை சமஸ்தானத்திற் கிடைத்தது. பாண்டியப் பேரரசைத் தென்னிந்தியாவில் நாட்டிய ஜடாவர்மன் சுந்தரபாண்டியனது சகோதரனாகிய வீரபாண்டியன் இலங்கையை வென்றது சரித்திரப் பிரசித்தமான செய்தியாகும். இச்செய்தியை வீரபாண்டியன் தன் சாச னத்திற் கூறும் போது, தனது வெற்றிக்கு அடையாளமாகப் பாண்டிய அரசின் மீன் இலச்சினையை இலங்கையிலே திருக்கோணமலையிலும் திரிகூடபர்வதத்திலும் பொறித்ததாக விவரிக்கின்றான். இலங்கைக்கு அப்பாலுள்ள புதுக் கோட்டையிற் கிடைத்த இச்சாசனத்தின் ஒரு பகுதி முற்றும் உண்மையான செய்தியாகும் என்பதற்கு இப்பொழுதும் இலங்கையிற் சான்று இருக்கின்றது. திருக்கோணமலையிலுள்ள கோட்டை வாசலில் இன்றும் இரட்டைமீன் இலச்சினை விளங்குவதைக் காணலாம். மூனறு நூற்றாண்டுகளுக்கு முன் போர்த்துக்கேயர் திருக்கோணமலையிலிருந்த சிவாலயத்தைத் தகர்த்தபோதிலும், பாண்டிய இலச்சினைக் கல்வெட்டு அவர்களது கொடிய செயலினின்று தப்பி, இன்றும் சிதைவுபடாமலிருப்பது பெரிய விந்தையே. வீரபாண்டியன் திருக்கோணமலையில் மீன் இலச்சினை பொறித்தது உண்மையாயின், அவன் சாசனத்திற் கூறியவாறு, திரிகூடபர்வதத்திலும் அவ்விலச்சினையைப் பொறித் திருக்க வேண்டும். அவன் கூறும் திரிகூடபர்வதம் இலங்கையில் எப் பாகத்தில் உள்ளது ? இதையாம் அறிந்தால், இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கை இந்நாடுதான் என்று அறுதியிட்டுத் தீர்மானிக்கலாம்.

இந்நாட்டை இராமாயணத்துடன் சம்பந்தப்படுத்தும் பல ஐதிகங்கள் கர்ண பரம்பரையாக வழங்கிவருகின்றன. சீதாப்பிராட்டி சிறைவாசமிருந்த அசோ கவனம் இந்நாட்டின் உயர்ந்த சிகரங்களில் ஒன்றாகிய ஹக்கலா என்ற இடத்தைச் சார்ந்ததென்று அங்குள்ள சாதாரண மக்கள் வாயினின்று இப்பொழுதும் கேட்கலாம்.

இது சீதாதலாவா என்று கூறப்படும். இதற்கப்பாற் சிறிது தூரத்திலுள்ள பாலுகம என்ற இடம் அனுமானால் எரியுண்டது என்று சொல்லப்படுகிறது. பாலுகம என்பதன் பொருள் பாழடைந்த கிராமம் என்பதாம். இந்த இடத்திற் புற் பூண்டும் முளைப்பதில்லை. ஹக்கலாவிலிருந்து ஹப்புத்தலை என்ற இடத்திற்குப் போகிற வழியில் வெளிமட என்னும் அழகிய கிராமத்தின் பக்கத்தில் இராமலங்கா என்ற ஓரிடம் இருக்கிறது. இங்கே தான் இராவணண் இறுதியாகப்போர் செய்து வீழ்ந்தான் என்றும், அதுமுதல் இவ்விடம் இராமலங்கா எனப் பெயர் பெற்றது என்றும் இங்குள்ள புத்த பிக்குகள் ஒரு கர்ண பரம்பரையான ஐதீகத்தைக் கூறுகின்றார்கள். இதற்கருகில், துரும்வெலா பன்சாலா என்ற இடத்திற் சீதாபிராட்டி தன் கற்புநிலையினின்று தவறவில்லை என்று இராமபிரான் முன்னிலையிற் சத்தியம் செய்ததாக ஓர் ஐதிகம் வழங்கி வந்ததென்று மேஜர் போர்ப்ஸ் 1840 - ம் ஆண்டில் வெளியிட்ட ''இலங்கையிற் பதினோராண்டுகள்'' என்ற தனது புத்தகத்திற் கூறியுள்ளார். இவ்வாங்கிலேயப் படை வீரர் நூறு ஆண்டுகளுக்கு முன் அடர்ந்த காடுகள் செறிந்திருந்த இம்மலைப்பிரதே சத்திற் குதிரை மேற்சென்று பல இடங்களைப் பார்த்து ஆங்காங்கு இருந்த சிங்கள மக்கள் வாயிலாக இராமாயண சம்பந்தமான பல ஐதிகங்களைக் கேட்டு, அவற்றைக் குறிப் பிட்டிருக்கின்றார். இம்மலைப் பிரதேசத்தில் இராவண எல்லா என்று ஒரு குன்று இருக்கின்றது. இதில் நீளமான ஒரு குகை உண்டு. இராவணன் தன் தலைநகரிலிருந்து அந்தரங்கமாக வெளிச்செல்வதற்கு இக்குகையை உபயோகித்து வந்தான் என்று சொல்லப்படுகின்றது.

மேற்கூறிய ஹக்கலா என்னும் இடத்தினின்று ஹப்புத்தலை என்னும் இடம் வரையிலுள்ள மலைப்பிரதேசம் எவருக்கும் வியப்பை உண்டாக்கக் கூடிய காட்சி யைத் தருகின்றது. ஹக்கலாவிலிருந்து பாலுகமவுக்குச் சென்று இம்மலைப்பிரதேசத் தின் உன்னதக் காட்சியை அங்கிருந்து பார்ப்பவர்களுக்கு ஒருவித மருட்கை உணர்ச்சி உண்டாகிறது. மூன்று பக்கங்களையுடைய அகன்ற பிரதேசமாக இது காணப்படுகின்றது. மூன்று பக்கங்களிலும் செங்குத்தாக ஏறக்குறைய ஐயாயிரம் அடி உயரமுள்ள மலைத் தொடர்கள் பயங்கரத் தோற்றத்துடன் எழுகின்றன. இவற்றிற்கிடையில் முப்பதுமைல் அளவு அகன்று ஒரு பதிந்த வள்ளம் போல் ஏறக்குறைய சம பூமியாக இப்பிரதேசம் விரிந்து கிடக்கின்றது. இதன் மத்தியிலேதான் இராவணன் போர்செய்து வீழ்ந்த இடமெனப்படும் இராமலங்கா இருக்கின்றது; இதன் எல்லைப் புறத்திலேதான் எரியுண்டதாகச் சொல்லப்படும் பாலுகம இருக்கின்றது. இராமாயணத்தில் இலங்கையைப் பற்றிய வருணனைகளைப் படித்தவர்களுக்கு இதுதான் திரிகூடபர்வதமென்று ஓரையமின்றி உடனே தோன்றும்.

திரிகூடபர்வதத்தின் உச்சியில் இராவணனது தலைநகரமாகிய இலங்காபுரி விளங்கிற் றென்றும், இந்நகரம் நிலவில் ஆகாயத்தில் மிதப்பது போல் அனுமானுக்குத்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தோன்றிற்றென்றும் இராமாயணம் கூறும். திரிகூடபர்வதத்தின் மூன்று பக்கங்களே இந்நகருக்கு இயற்கை மதில்களாக அமைந்திருக்கின்றன. இக்காரணத்தால் இலங்காபுரியைப் பகைவர்கள் எவரும் அணுகமுடியாதென்று இராவணன் இறுமாந் திருந்தது வியப்பன்று. இப்பிரதேசத்தில் இப்பொழுதுள்ள பண்டாரவெலா, தியட்ட லாவா என்ற நகரங்களும் இரவில் ஆகாயத்தில் மிதப்பன போன்ற அழகிய காட்சி யைத் தருகின்றன. இப்பிரதேசத்தின் தெற்கெல்லையாகிய ஹப்புத்தலையினின்று பகற்பொழுதில் தென்சமுத்திரத்தையும், அதன் பக்கத்தில் அம்பாந்தோட்டையிலுள்ள உப்பளத்தையும் பார்க்கலாம். இராமருடைய சேனை தென் சமுத்திரத்தின் கரை யோரமாக வருவதை இராவணன் தன் தலை நகரிலிருந்து பார்த்தான் என்று இராமா யணம் கூறுவது இப்பிரதேசத்தின் அமைப்புக்குப் பொருத்தமாகவே உள்ளது. இராமருடைய சேனை தென்சமுத்திரக்கரையிலுள்ள டொண்ட்ரா (தேவேந்திர நுவரா) என்ற இடத்திலிருந்து மலைப்பிரதேசத்திலுள்ள அலுத்நுவரா என்னும் இடத்துக்குத் தேவர்கள் விழாவைப் போல, சூரிய சந்திரக் கொடிகளுடன் அணிவகுத்துச் சென்றதென்று ஹெக்தார கோறளையைப் பற்றிய ஒரு பழைய சாசனம் கூறுகின்றது. இதனின்று இராமர்சேனை இலங்காபுரிக்குச் சென்ற வழியைப்பற்றி இங்கு ஓர் ஐதிகம் இருப்பது புலப்படும். மலைத்தொடர்களை மதில்களாகக் கொண்ட இலங்காபுரியை இவ்வழியினாலேதான் அணுகக் கூடுமென்பதை இராவணனது சகோதரனாகிய விபீஷணனிடமிருந்து உளவறிந்து இராமர்சேனை இவ்வழியாகச் சென்றதென்று யூகிக்கக்கிடக்கின்றது.

அநுமான் இலங்கா புரியை அடைந்து சீதையைக் கண்டு பின் இராமரிடம் திரும்பும் காலத்தில், அரிஷ்ட பர்வதத்திற் சிறிது நேரம் தங்கியதாக வான்மீகி முனிவர் கூறுகின்றார். இப்பர்வதத்தைப் பற்றிய சான்று இந்நாட்டில் உள்ளது. அசோகன் மகனாகிய மஹிந்தன் தேவநம்பியதிஸ்ஸா என்ற இந்நாட்டு மன்னனைப் புத்த சமயத்துக்குத் திருப்பியபின், பௌத்த வழிபாட்டிற்குரிய இடங்களாகிய விஹாரங்கள் அநுராதபுரத்திலும் அதன் பக்கத்திலும் கட்டப்பட்டன. அவ்விகாரங்களுள் ஒன்று அரிட்ட விஹாரம் என்று மஹாவம்சம் கூறும். இவ்விஹாரம் இதற்கருகிலுள்ள ரிட்டிகலா என்ற மலையின் பெயரைத் தழுவியதாகும். கலா என்ற சிங்களச் சொல் மலையைக் குறிக்கும் அரிஷ்டம் என்ற சொல் அரிட்டம் என்று மருவி, பின் முதல் அகரம் காலகதியில் நழுவி, ரிட்டி என வந்ததென்று கூறப்படுகின்றது. இம்மலை இராமாயணத்துடன் சம்மந்தப்பட்டது என்பதை இங்குள்ளவர் அறியாராயினும், இராமாயணம் கூறும் இலங்கை இந்நாடுதான் என்று நிச்சயித்தற்கு இம்மலையின் பெயர் ஓர் அரிய சான்றாக இருக்கின்றது.

இராவணன் வாழ்ந்த இடம் பாண்டிய நாட்டிற்கு எதிரில் இருந்ததாகச் சுக்கிரீவன் தன் சேனை வீரர்களுக்குக் குறிப்பிட்டதை வான்மீகி ராமாயணத்திற் கிஷ்கிந்தா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காண்டத்தில் 41 ஆம் சர்க்கத்திற் காணலாம். அப்பகுதியின் மொழிபெயர்ப்பை இங்கு தருகின்றோம்: "அகஸ்திய முனிவரின் அநுக்ரகம் பெற்று.....மஹாநதியாகிய தாம்ரபர்ணியைக் கடப்பீர்களாக .... அங்கிருந்து நடப்பீர்களாயின்,பாண்டிய நகர துவாரத்திற் சுவர்ணமாகி முத்துக்களால் அலங்காரம் செய்யப் பெற்ற நன்கு நிர்மிக்கப்பட்ட பொற்கபாடத்தைக் காண்பீர்கள். அங்கிருந்து சமுத்திரதீரம் சென்று சீதையைத் தேடும்பொருட்டு சமுத்திரத்தைத் தாண்டும் விஷயத்தை ஆலோசித்து நிச்சயித்துக் கொள்வீர்களாக. அங்கு சமுத்திரதீரத்தினிடையில் அகஸ்தியரால் வைக்கப்பட்ட மகேந்திரம் என்னும் பர்வதம் இருக்கின்றது.... அந்தச்சமுத்திர மத்தியில் இக்கரையில் நூறு யோஜனை விஸ்தீர்ணமுடையதும் மனிதர்களுக்குப் போக முடியாமல் மிக்க விளக்கமுற்றதுமாகிய ஒரு தீவு இருக்கின்றது. அந்தத் தீவு முழுமையும் சீதா தேவியைத் தேடுங்கள். அந்தப் பிரதேசமே துர்ப்புத்தியும் தேவேந்திரனை நிகர்த்த தேஜஸ்டையவனும் இராக்ஷதர்களுக்குப் பிரபுவும் நம்மால் வதைக்கத்தகுந்தவனுமாகிய இராவணனுக்கு வாசஸ்தானம்" இங்கு பாண்டியருக்குப் பழைய தலை நகரமாயிருந்த கபாடபுரமும் அதனோடு தொடர்புற்ற மஹேந்திர மலையும் குறிப்பிடப்பட்டுள்ளன. வான்மீகி முனிவர் இந்தச் சர்க்கத்திற் கூறியதையே தழுவிக் கம்பநாடரும்.

*"தென்றமிழ்நாட் டகன் பொதியிற் றிருமுனிவன்*
*தமிழ்ச்சங்கஞ் சேர்கிற்பிரேல்*
*என்றுமவ னுறைவிடமா மாதலினா*
*லம்மலையை யிறைஞ்சியேகிப்*
*பொன்றிணிந்த புனல் பெருகும் பொருநையெனுந்*
*திருநதியின் பொழியநாகக்*
*கன்றுவளர் தடஞ்சாரல் மகேந்திரமா*
*நெடுவரையுங் கடலுங்காண்டிர்"*

என்று செய்யுளியற்றியுள்ளார். கம்பர் காலத்துக்கு ஏறக்குறைய நூறாண்டுகளுக்கு முன் வடமொழியில் இயற்றப்பட்ட சம்புராமாயணம் இலங்கையை '' சிம்ஹளத்வீபம்'' என்றே வெளிப்படையாகக் கூறுகின்றது.

தமிழ் நாட்டில் மிகப் பழையகாலந் தொட்டு இராமர், சேனை பாண்டிநாட்டைச் சார்ந்த சேது வழியாகத்தான் சென்றது என்ற கொள்கை இருந்துவருதற்கு ஒருசான்று சங்க இலக்கியமாகிய அகநானூற்றில் 70 ஆம் செய்யுளிற் காணப்படுகின்றது. அது


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வருமாறு:

*வெல்வேற் கவுரியர் தொன்முது கோடி*

*முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்றுறை*

*வெல்போர் இராமன் அருமறை கவிந்த*

*பல்வீழ் ஆலம் போல்*

*ஒலியவிந் தன்றிவ் வழங்கல் ஊரே.*

இராமர் பாண்டிநாட்டைச் சார்ந்த தனுஷ்கோடியில் ஓர் ஆலமரத்தின் கீழிருந்து இரகசிய ஆலோசனை நடத்திய செய்தி இங்கு கூறப்படுகின்றது. இச்செய்யுள் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.

தனுஷ்கோடிக்கு அருகிலுள்ள இராமேசுவரத்தில் இராமர் சிவபெருமானை வழி பட்டார் என்ற ஐதிகம் பன்னெடுங் காலமாகப் பரத கண்டம் முற்றிலும் வழங்கி வருகின்றது. கி. பி ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்த சுவாமிகள் இந்த ஐதிகத்தை இராமேசுவரப் பதிகத்திற் குறிப்பிட்டுள்ளார்கள்.

''சேது'' என்ற பெயர் பிரசித்தமானது. இச்சொல் அணையைக் குறிக்கும். தனுஷ் கோடியினின்று இராமரின் சேனை கடலைக் கடந்து இலங்கை செல்வதற்கு அணை கட்டியதாகச் சொல்லப்படுவதால், தனுஷ்கோடிக்கு இப்பெயர் மிகப் பழையகாலம் தொட்டு வழங்கி வருகின்றது. இவ்வணைக்குச் சான்றாக இப்பொழுதும் இவ்விடத்தினின்று இலங்கையைச் சேர்ந்த மன்னார்த் தீவு வரையில், மணல் திட்டுகளால் ஆகிய ஒரு தொடர் முப்பது மைல் தூரம் கடலிற் காணப்படுகின்றது. இதை ஆங்கிலத்தில் ஆதாம் அணை என்று கூறுவர். இவ்வணையைப் பற்றி என்சைக் ளோபீடியா பிரிட்டானிக்கா என்ற பலபொருட் பேரகராதியிற் சில விபரங்களை அறியலாம். சில திட்டுகள் கடல் மட்டத்துக்கு மேலும், சில திட்டுகள் மூன்று அல்லது நாலடி ஆழத்துக்குக் கடலுள் அமிழ்ந்தும் இருக்கின்றன. ஐந்நூறு ஆண்டுகளுக்குமுன் இத்திட்டுகள் இடையீடின்றி ஒரே தொடராக இருந்தன என்றும், பின்னர் ஒரு கடுமையான புயல் வீசியபோது இவற்றில்இடையிடையே பிளவு ஏற்பட்டதென்றும் தெரியவருகின்றது. இயற்கையிலேயே அணைபோல் இருந்த இம் மணல்திட்டுத் தொடரை ஒரு சேனை கடக்கத்தக்கதாக இராமரின் படைவீரர்கள் செய்தனரென்று கொள்ளுதல் தகும். இவ்வணை நூறுயோசனை தூரமிருந்தது என்று வான்மீகி முனிவர் கூறுவதைக் கணக்கிட்டு இது நானூறு மைலுக்கு மேற்பட்ட தாகையால் இப்பொழுது இலங்கையென்று வழங்கப்படும் நாட்டிற்கு இக்கணக்கு பொருந்தாது என்று வாதிப்பார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளர். வான்மீகி வேறு பல சந்தர்ப்பங்களிலும் காவியரீதியில் நூறுயோசனை என்ற பிரயோகத்தை அதிசயோத்தி அலங்காரமாய்ப் பன்முறை உபயோகிக்கின்றபடியால் இங்கு நூறுயோசனை என்பது அதிக நீளத்தைக் குறிக்குமென்றே கொள்ள வேண்டும்.

மேற்கூறிய மணல் திட்டுகள் ஆரம்பிக்கும் இடமாகிய சேதுக் கரையைத் தான் வான்மீகி முனிவர் மஹேந்திரதுவாரம் எனக் கூறினாரென்று யூகிக்க இடமுண்டு. மஹேந்திரமலை சேதுநாட்டினின்று திருச்செந்தூர், கன்யாகுமாரி என்னும் இடங்கள் வரையிற் பூமியில் அமுந்தியதாகச் செல்லும் கந்தமாதனம் என்கிற மலைத்தொடரைக் குறிக்கும் எனக் கொள்வதற்கு ஆதாரமிருக்கிறது. கன்னியாகுமாரியின் பக்கத்தில் மஹேந்திரம் என்ற பெயருடன் ஒரு மலை இப்பொழுதும் உள்ளது.

சேது நாட்டிலுள்ள திருவுத்தரகோசமங்கையில் ஆகமம் வெளிப்படுத்தப்பட்டது என்ற திருவிளையாடல் ஐதிகத்தை மாணிக்கவாசக சுவாமிகள்,

*மன்னு மாமலை மகேந்திர மதனில்*

*சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்*

என்று குறிப்பிடுவதால், மஹேந்திரம் சேதுநாட்டில் உள்ளது என்பது தெளிவாகின்றது.

இதுகாறும் காட்டிய ஏதுக்களால், இப்பொழுது இலங்கை என்று வழங்கும் இந்நாடே இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கை எனத் தீர்மானிக்கலாம். கிரேக்க பாஷையிற் கிறிஸ்து சகாப்தத்திற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன், ஹோமர் என்ற மகாகவி இயற்றிய இலியடு என்னும் காவியத்திற் கூறப்பட்ட டிராய் என்ற நகரம் அக்கவிஞரின் கற்பனையே அன்றி உண்மையில் இருந்ததில்லை எனப் பல மேதாவிகள் கருதியதுண்டு. ஆனால் சில ஆண்டுகளுக்கு முன், புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் டிராய் இருந்த இடத்தைக் கண்டுபிடித்து அந்நகரத்தின் அமைப்பை நிரூபித்தனர். அதுபோல, இலங்காபுரி என்று இராமாயணத்திற் கூறப்பட்ட தலைநகரம் இந்நாட்டிற் பூர்விக காலத்தில் இருந்ததென்று வருங்காலத்தில் நிரூபிக்கப்படும் என்று நம்புகின்றோம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அரும்பதங்கள்

| | | | |
|---|---|---|---|
| **யக்ஷர்கள்** | - இயக்கர்கள் | **திரிகூடம்** | - மூன்று முடி |
| **பர்வதம்** | - மலை | **மருட்கை** | - மயக்கம் |
| **கபாடம்** | - கதவு | **சாசனம்** | - கல்வெட்டுச் சான்றுகள் |
| **அநுக்ரகம்** | - ஆசி | **நகர துவாரம்** | - நகர வாயில் |
| **தேஜஸ்** | - பிரகாசம் | **இதுகாறும்** | - இதுவரை |
| **ஏதுக்கள்** | - சான்றுகள் | **யோசனை** | - தூரத்தை குறிக்குமோர் பண்புடைய அலகு |

## மையக் கருத்து

இராமாயணம் என்ற இதிகாசத்தில் கூறப்படும் இலங்கைத் தீவு என்பது இன்றைய இலங்கையையே குறிக்கிறது.

## துணைக் கருத்துக்கள்

- இலங்கையில் தற்போது பயன்படுத்தி வரும் சில இடப் பெயர்கள் இராமாயணத்துடன் தொடர்புற்றுள்ளன.
- அவ்விடப் பெயர்களுள் சில மருவியுள்ளன.

## எடுத்துரைப்பு முறை

- இலக்கிய, வரலாற்றுச், சாசனச் சான்றுகள், ஐதீகங்கள், வெளிநாட்டு அறிஞர்களின் கருத்துக்கள் என்பனவற்றினூடாக முன்வைத்தல்.
- இலங்கையின் இடப்பெயர்களையும் நில இயல்புகளையும் ஆதாரமாகக் கொண்டு ஆராய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொழிநடை


- வடமொழிப் பயன்பாடு
- இலக்கிய நடை
- ஒப்பீட்டு மற்றும் விபரிப்பு முறைகளினூடாக விளக்குவதற்குப் பொருத்த மான மொழியாட்சி.

## கற்றல் வினாக்கள்

1. இராமாயணத்தில் கூறப்பட்ட இலங்கையே, இன்றைய இலங்கை என்ப தனைப் புதுக்கோட்டைச் சமஸ்தானத்தில் கிடைத்த சாசனத்தை அடிப்படை யாகக் கொண்டு நிறுவுமாற்றினை விளக்குக.
2. இன்றைய இலங்கையை இராமாயணத்துடன் தொடர்புபடுத்தும் ஐதீகங் களை விபரிக்குக.
3. ஆதாம் அணை பற்றிய வான்மீகியின் கூற்றையும் அதனைக் கட்டுரை ஆசிரியர் மறுத்துரைக்கும் பாங்கினையும் தெளிவுபடுத்துக.
4. இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கையின் இடப்பெயர்களைக் கூறி, அவை இராமாயணத்துடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ள விதத்தை எடுத்துரைக்குக.
5. இக்கட்டுரையில் விபரிக்கப்படும் இடங்கள் இலங்கையின் சுற்றுலாத் துறை அபிவிருத்தியில் பெறும் முக்கியத்துவத்தினை ஆராய்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பாஷணை ஒரு கலை



வ. ராமசாமி அய்யங்கார்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கட்டுரையாளர் அறிமுகம்

| | |
|---|---|
| **பெயர்** | வ.ரா – **வ. ராமசாமி அய்யங்கார்** |
| **காலம்** | 17.09.1889 – 23.08.1950 |
| **இடம்** | தஞ்சாவூர் – தமிழ்நாடு |
| **கல்வி** | உயர் கல்வி – உயர்நிலைப்பள்ளி – திருவையாறு<br>சென் பீற்றர்ஸ் கல்லூரி – தஞ்சாவூர் |
| **பணி** | பத்திரிகையாசிரியர் – சுதந்திரன், தமிழ்நாடு, ஊழியன், மணிக்கொடி, வீரகேசரி |
| **படைப்பு** | கட்டுரை – வசந்த காலம்<br>– கலையும் கலை வளர்ச்சியும்<br>– புண்ணியமும் பலவீனமும்,<br>– மகாகவி பாரதியார்<br><br>நாவல் – கோதைத்தீவு<br>– சுந்தரி<br>– சின்னக்காப்பு |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசட்டாளன் ஒருவனைப்பற்றி, மிகவும் ஏளனமாகப் பேச விரும்புகையில், 'அவன் பரம அசடல்லவா? அழுதாலும் சுரத்தோடு அழ, அவனுக்குத் தெரியுமா' என்று சொல்லுவார்கள். அழுதாலும், சுரம்போட்டு அழ வேணுமாமே! இது வேடிக்கையாக இருக்கிறதல்லவா? வேடிக்கையைப் போல தோன்றும் இதில், மகத்தான உண்மை ஒன்று பொதிந்து கிடக்கின்றது.

கலை அழகையும் கட்டுப்பாடு ஒழுங்கையும் பெறாத எதுவும் சாமர்த்தியமாகவும் கெட்டிக்காரத்தனமாகவும் கருதப்படமாட்டாது என்ற உண்மையைத்தான், மேலே சொன்ன வேடிக்கை வாக்கியம் குறிப்பிடுகின்றது. எவ்வித சத்தம் வெளியே வந்தாலும், அது சங்கீதத்தின் தன்மையைத் தாங்கி நிற்க வேண்டும் என்பது கட்டாயம் போலும்! அதாவது, காதுக்கு இனிப்பாயில்லாத ஒலி எதுவும் வெளிவரப்படாது என்பதை இந்த வாக்கியம் வற்புறுத்துகின்றது. சத்தத்தைப்பற்றியே, இவ்வளவு கடுமையான கட்டளை இருக்கும் பொழுது, பிரயோகம் செய்யும் சொற்களைப் பற்றிய கட்டளை, இன்னும் எவ்வளவு கடுமையாக இருக்காது?

'அவனோடே என்னடா பேச்சு! அவன் வெறும் கூச்சல் போடுவான்' என்று சொல்லு கிறார்களல்லவா? காலம் இடம் அளந்தும், ரஸ பாவத்தை உணர்ந்தும் பொருளை அனுபவித்துப் பேசாத சம்பாஷணை, கூச்சலைக் காட்டிலும் கேவலமானது என்று சொல்லவும் வேண்டுமா?

காந்தி - இர்வின் ஒப்பந்தப் பேச்சு முற்றுப் பெறும் சமயத்தில், மகாத்மா காந்தியும் வைஸ்ராய் இர்வினும் விடியற்காலம் மூன்று மணி வரைக்கும் பேசிக் கொண்டிருந்தார்கள். இந்த சம்பாஷணையில், அர்த்தமும் ரஸமும்: பாவமும் நிறைந் திருக்க வேண்டும். வெறும் கூச்சலாயிருந்தால், அதுவும் படாடோபப் பேச்சாயிருந் தால், இருவருடைய சம்பாஷணையும் ஐந்து நிமிடத்துக்குள் முடிவடைந்திருக்கும்.

அர்த்தம், ரஸம், பாவம், விஷயம் - இவைகள் நிறைந்திருக்கும் பேச்சிலேதான் கலையழகு இருக்கிறது. மகாத்மாவோடு பேச வைஸ்ராய் இர்வினுக்கு எவ்வளவு ஆவலோ, அவ்வளவு பயம் வைஸ்ராய் வில்லிங்டனுக்கு.

'நான் காந்தியைக் கண்டு பேசமாட்டேன். நான் சொல்லுவதற்கெல்லாம் அவர் குதர்க்க அர்த்தம் செய்து என்னை எப்படியோ, அவர் நினைக்கிற நினைப்பில் மாட்டிக்கொள்ளும் படியாகச் செய்து விடுகிறார்' என்று வைஸ்ராய் வில்லிங்டன் சொன்னாராம்.

குதர்க்கம் செய்யும் வேலை, மகாத்மாவுக்குத் தெரியவே தெரியாது. சொல்லுக்கு உண்மையானதும் இயற்கையானதுமான அர்த்தத்தில், அதை கொள்ளுவதுதான் மகாத்மாவின் பழக்கம். எனவே, சூதான சொல்வலை வீசி ஏய்க்கப் பார்ப்பவர்கள், மகாத்மாவின் சாதுவலையில் அகப்பட்டுக் கொள்கிறார்கள். உதாரணம் ஒன்று பாருங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராயர் சமஸ்தானத்தில் தெனாலிராமன் என்ற மேதாவி வாழ்ந்து வந்தான். ஒரு நாள் ராயர், அர்த்தமில்லாமல் தெனாலிராமன் பேரில் கோபித்துக்கொண்டு,'ராமா நீ சிறிது காலத்துக்குத் தலைமறைவாய் இருக்க வேண்டும்' என்று கட்டளையிட்டார். இந்தக் கட்டளைக்கு என்ன அர்த்தம்? ராயருடைய கண்ணில் தெனாலிராமன் சிறிது காலத்துக்குப் படப்படாது என்பதுதான் அந்தக் கட்டளைக்கு, உண்மையும் இயற்கையுமான அர்த்தம். இப்படி அர்த்தம் செய்து கொள்ளுவதுதான் மகாத்மாவின் சுபாவம்.

இந்தக் கட்டளையை தெனாலிராமன் எப்படி நிறைவேற்றினான் தெரியுமா? சட்டியை தலையில் வைத்துத் தலையை மூடிக்கொண்டு, தெனாலிராமன் ராயரின் முன்னால் போய் நின்றான். அவன் 'தலைமறைவாய்' நிற்கிறானாம்! தெனாலிராமனைப் போல, விகடமாகவும் விபரீதமாகவும் அர்த்தம் செய்து, ஏய்க்கப் பார்க்கும் ராஜதந்திர நிபுணர் வில்லிங்டன், க்ஷணப்பொழுதில் மகாத்மாவிடம் மாட்டிக்கொள்வார்.

சில பெரியார்கள், தங்கள் போலிப் புலமையைக் காண்பிப்பதற்காக, சந்தர்ப்பத்துக்குச் சிறிதும் பொருத்தமில்லாத பெரிய பெரிய சொற்களைப் பிரயோகம் செய்து, பிறரைப் பயமுறுத்தப் பார்க்கும் ஆபாச வித்தைக்குச் சம்பாஷணை என்ற பெயர் கொடுக்கலாமா? எந்த வகையாலும் தாங்கள் சொல்லுவதை பிறர் தெரிந்துகொள்ளக் கூடாது என்ற பேச்சுப் பழகிறவர்கள் சாமர்த்தியசாலிகளே அல்ல. அவர்கள் அசட்டாளர்கள் அல்லது மோசக்காரர்கள்.

சம்பாஷணையில் இதமும் இங்கிதமும் இல்லாமல் போனால், ரஸப்படாது. 'உனக்குத் தெரியாது. அந்த விஷயத்தைப்பற்றி, அந்த மனுஷியனைப்பற்றி எனக்கு எல்லாம் தெரியும்' என்பதைத்தான் இப்பொழுது, அடிக்கடி சம்பாஷணையில் காண்கிறோம்! சர்வாதிகாரித் தோரணையில் இவ்வாறு பேசுவது, பேசுகிறவன் மிகக் கேவலமான அல்பன் என்றும் தற்பெருமைக்காரன் என்றும் சந்தேக மன்னியில் தெளிவுபடுத் திவிடுகிறது.

விஷயத்தை விளக்கமாக, தெளிவுடன் சொல்லத் தெரியாதவர்கள், உனக்கு இது புரியாது' என்று பல்லவி பாடுவார்கள். அழகான பாஷையை வைத்துக்கொண்டு 'உனக்கு புரியாது' என்று சொல்லுவது மதியீனமும் மோசமும் கலந்த 'புளித்தகாடி' அதில் சந்தேகமே இல்லை.

நாம் எந்தப் பொருளில் ஒரு சொல்லைப் பிரயோகம் செய்கிறோமோ, அதே அர்த்தத்தில் மற்றவர்களும் எளிதில் அதை கொள்ளுவார்களா என்பதை செவ்வனே தெரிந்து கொண்டுதான், அந்தச் சொல்லை உபயோகிக்க வேண்டும். நாம் நினைக்கிறபடி மற்றவர்கள் அர்த்தம் செய்யாமல் போனால், சம்பாஷணை அநேகமாய் கைகலப்பில் முடிந்து, விபரீதமாகி விடும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிறரை அவமானப்படுத்தும் படியாக பேசவேபடாது. 'நீங்கள் பேசுகிறது மடத்தன மாயிருக்கே' என்று அடிக்கடி நம்மவர்கள் பேச்சில் சொல்லி விடுகிறார்கள். இவை வரம்பு கடந்த வார்த்தைப் பிரயோகமாகும். ஒருவனுக்கு' மடையன் 'என்று நற்சாட்சிப் பத்திரம் கொடுப்பதற்கு, மற்றவன் சர்வகலாசாலையா? இந்த அற்ப அகம்பாவத்தால், வெகு சமயங்களில், இருவருக்குள் நல்லுறவு முறிந்து போகின்றது. பகைமையையும் மனக்கசப்பையும் எளிதிலே சம்பாதித்துக் கொள்ளும் நாகரிகமில்லாத வழி இது.

எதையும் யோசிக்காமல், ''வெடுவெடு'' என்று வார்த்தைகளைக் கொட்டிவிடுவது விவேகத்தையும் நல்ல பழக்கத்தையும் பண்பாட்டையும் காண்பிக்காது. 'ஸ்பிலாஷ்' என்று இங்கிலீஷ் வார்த்தை இருக்கிறது. இது பத்திரிகை சம்பந்தமான சொல்.

''இந்த ஒப்பந்தம் லண்டன் நகரில் 'ஸ்பிலாஷ்' செய்யப்பட்டது'' என்று இங்கிலீஷில் வந்த தந்தியை, ஒரு நண்பர், வினோதமாகத் தமிழ்ப்படுத்தி, சேதியையே சின்னா பின்னப் படுத்திவிட்டார். இந்த ஒப்பந்தம் லண்டன் நகரில், (பத்திரிகையின் முக்கிய மான இடத்தில்) கொட்டை எழுத்தில் பிரதான்யம் கொடுக்கப்பட்டது என்பது இதன் அர்த்தம் 'ஸ்பிலாஷ்' என்ற வார்த்தையை நண்பர் கேள்விப்பட்டதில்லை. இங்கிலிஷ் அகராதியைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தார். இது நவீன வார்த்தையானதால், அகராதியிலும் இல்லை.

எனவே, அவர் வார்த்தையின் அர்த்தத்தை யூகம் செய்தார்.'ஸ்பிலாஷ்' என்றால் முறிந்து போதல் என்று முடிவு செய்து கொண்டார். இந்த ஒப்பந்தம் லண்டன் நகரில் முறிந்து போய்விட்டது என்று அர்த்தம் செய்து எழுதிவிட்டார். பத்திரிகையும் வெளிவந்து விட்டது. என்ன விபரீதமான அர்த்தம்! ஒப்பந்தம் நிறைவேறிற்று என்பதற்குப் பதிலாக, ஒப்பந்தம் முறிந்து போய்விட்டது என்று பத்திரிகையில் வந்தால், படிப்பவர்களுக்கு வயிற்று எரிச்சலை உண்டாக்காதா?

இத்தகைய பொறுப்பற்ற மேதாவிகள் சம்பாஷணையில் கலந்து கொண்டால், பேச்சு எவ்வளவு ரஸமாயிருக்கும் என்று நீங்கள்தான் கற்பனை செய்துகொள்ள வேண்டும்.

ஆரம்பத்தில் (உயிர் உலகத்தில் தோன்றிய காலத்தில்) வார்த்தைதான் இருந்தது என்று பைபிள் (கிறிஸ்தவ வேதம்) சொல்லுவது அற்புதமானது. உலகம் தோன்றிய நாள் முதலாக இருந்து வரும் சொற்களை உபயோகிக்கும் வழி தெரியாமல், அவைகளின் மூலமாக மனிதர்கள் விஷயங்களை தெளிவுபடுத்த முயலாமல், வம்பையும் மாற் சரியத்தையும் உண்டாக்கும் அற்புதத்தைப் பற்றி என்ன சொல்லுவது என்று தெரிய வில்லை.

பதார்த்தம் என்ற சொல் இருக்கிறது. பதத்துக்கு அர்த்தம் பதார்த்தம்; அதாவது சொல்லுக்கு உருவமாய் நின்று, அதை விளக்கிக் காண்பிப்பது பதார்த்தம். ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமானை குறிப்பிடுவது சொல். சொல்லை விளக்கிக் காண்பிப்பது சாமான். எனவே, யாதொரு குழப்பமும் இல்லாமல் சொற்களின் பொருளை எளிதிலே தெரிந்து கொள்ள முடியும்.

பதார்த்தத்தைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளாமல் ஏன் பேச வேண்டும்? சொல்லப் போகும் விஷயத்தைப்பற்றி மனதில் தெளிவு படுத்திக் கொள்ளாமல் பேச முயலுவது அறிவுடைமையாகாது. காந்தி பேசினாலும், எழுதினாலும், ஏன் சுவாரஸ்யமாயிருக் கிறது? பாரதியாரின் எழுத்து தமிழர்களை ஏன் பரவசப்படுத்துகிறது? தங்கள் உள்ளத்தில் காணுவது இன்னதுதான் என்று அவர்களுக்குத் தெளிவாக தெரிகிறது. தெளிந்த கருத்துக்களை, சந்தேகமில்லாமல் அர்த்தம் செய்து கொள்ளக்கூடிய சொற்களின் மூலமாக, அவர்கள் வெளியிடுகிறார்கள். மேலும் அந்த எழுத்துகள் நம்மோடு அவர்கள் உடன் இருந்து பேசும் சம்பாஷணைகளைப் போலவே, இருக்கின்றன. அவைகளில் கலை அழகு நிரம்பியிருக்கிறது.

கலை அழகு நிறைந்த சம்பாஷணையின் மூலமாக, உலகத்தின் தன்மையையே மாற்றிவிட முடியும் என்று பிரசங்கத்திலும் பேச்சிலும் நிபுணர் என்று தற்காலத்தில் மதிக்கப்படும் பெரியார் ஒருவர் சொல்லுகிறார். பேச்சுக்கு இருக்கிற சக்தி அவ்வளவு என்று அவர் சொல்லுகிறார். அனுபவத்திலிருந்து தோன்றும் உண்மையை அலக்ஷியம் செய்ய முடியுமா? சம்பாஷணையில் இனிப்பையும் மாண்பையும் ரசிக்க முடியாத முறையில், நம்மவர்கள் பேச்சுப் பேசுகிறார்கள். ஒரு சபையில், தனி ஒரு மனிதன் கூட வெட்கப்பட்டு தலை குனியும்படியான முறையில் பேசுவது, நாகரிகமாகாது. தடிமுண்டுத்தனமாகப் பேசுவது, பேச்சில் சேர்ந்ததே அல்ல. அது சச்சரவை வர வழைக்கும் கூச்சலாகும்.

சம்பாஷணையில் நிகரில்லாதவர்கள் என்று சொல்லக்கூடிய சிலரைக் குறிப்பிடு கிறேன். பேச்சில் யோகி அரவிந்தர் இணையில்லாதவர் என்றே நான் சொல்லுவேன். பாரதியாரும் அப்படியே. காந்தி சம்பாஷணையில் பேசும் பொழுது பலாப் பழத்தில் ஈ மொய்ப்பது மாதிரி கூடிக்கொள்வார்கள். இவ்வளவு அழுத்தமாயும் தெளிவுடனும் பேசும் இன்னொருவரை நான் கண்டதில்லை என்று காந்தியைப்பற்றி பிரபல அமெரிக்க ஆசிரியர் கந்தர் எழுதுகிறார். லெனின், சம்பாஷணையில் வெகு சாமர்த்தியசாலியாம். இங்கிலிஷ் ஆசிரியர் பர்னாட்ஷா வெடுக்கு வெடுக்கென்று பேசு வாராம். சிரித்து சிரித்து வயிறு புண்ணாகப் போகுமாம். கலை அழகு நிறைந்திருப்பின், சம்பாஷணை, சங்கீதத்தின் கவர்ச்சியையும் வேதத்தின் உட்பொருளையும் கவிதையின் கற்பனை சோபையையும் கலைக் கூத்தர்களின் ஜால வித்தையையும் ஒருங்கே சேர்த்து காண்பிப்பது போல இருக்கும். அத்தகைய சம்பாஷணை, தமிழ் நாட்டில் கூடிய விரைவில், நிறைந்திருக்குமா?


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அரும்பதங்கள்/ வட்டாரவழக்கு

| | | | |
|---|---|---|---|
| **கழை** | - மூங்கில் | **ரஸம்** | - இரசனை |
| **தோரணை** | - பாவனை | **புளித்தகாடி** | - புளித்த கள் |
| **பாவம்** | - மெய்ப்பாடு | **சோபை** | - அழகு, ஒளி |
| **சம்பாஷணை** | - உரையாடல் | **ஜால வித்தை** | - மாயவித்தை |
| **ஆபாச வித்தை** | - தகாத செயல் | **பிரதான்யம்** | - நிறைவேறுதல் |
| **க்ஷணப் பொழுது** | - நொடிப் பொழுது | **குதர்க்கம்** | - விதண்டாவாதம் |
| **மாற்சரியம்** | - அகம்பாவம், ஆணவம் | **மன்னுதல்** | - உறுதியாக / மிகுதல் |

**அசட்டாளன்** - கருத்தில்லாத பேச்சாளன், அறிவிலி, அறியாமை உள்ளவன்

## மையக் கருத்து

சம்பாஷணை என்பது கலையழகும் கட்டுப்பாடும் பயனும் நிறைந்ததாக அமைதல் வேண்டும்.

## துணைக் கருத்துக்கள்

- கலையழகு மிக்க பேச்சில் அர்த்தம், ரஸம், பாவம், விஷயம் ஆகியன உள்ளடங்கியிருக்கும்.
- கலையழகு மிக்க உரையாடல் ஆவலையும் பொறுமையையும் தரக்கூடியது.
- ஒருவர் பயன்படுத்தும் சொல்லை அதே அர்த்தத்தில் மற்றவர்களும் புரிந்து கொள்ளத்தக்க வகையில் அந்தச் சொல்லை உபயோகிக்க வேண்டும்.
- பிறரை அவமானப்படுத்தும்படியான உரையாடல், உரையாடுபவர்களுக் கிடையேயான நல்லுறவை முறித்துவிடும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- எதையும் யோசிக்காமல் வார்த்தைகளைப் பிரயோகிப்பது விவேகத்தையும் நல்ல பழக்கத்தையும் பிரதிபலிக்காது.
- விடயம் பற்றிய மனத் தெளிவுடனான பேச்சு அறிவுடைமையின் பாற்படும்.
- நல்ல சம்பாஷணையின் மூலமாக உலகின் தன்மையையே மாற்றிவிட முடியும்.
- கலையழகுமிக்க சம்பாஷணையில் ஏனைய கலைகளுக்குள்ள இயல்பு களையும் நுட்பங்களையும் கண்டுணர முடியும்.

## எடுத்துரைப்பு முறை

- சாதாரண கிராமப்புற மக்களின் உரையாடல் முதல் அறிஞர்களது உரை யாடல் வரை எடுத்துக்காட்டி விளக்குதல்.
- வரலாற்றுச் சம்பவங்களை உதாரணங்களாகக் காட்டல்.
- மேற்கோள்களை எடுத்துக் காட்டுதல்.
- கட்டுரையின் ஆரம்பம் முதல் முடிவு வரை தேவைக்கேற்ப வினாக்களை வினவிக் கட்டுரையை வளர்த்துச் செல்லல்.
- பொருத்தமான அணிகளைக் கையாளல்.

## மொழிநடை

- வடசொற்களையும் ஏனைய ஆங்கிலச் சொற்களையும் பயன்படுத்தல்.
- பேச்சுவழக்குக் கையாளல்.
- ஆங்காங்கே நகைச்சுவை இழையோடுதல்.
- மரபுத் தொடர்களை கையாளல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்றல் வினாக்கள்

1. 'சூதான சொல்வலை வீசி ஏய்க்கப்பார்ப்பவர்கள் மகாத்மாவின் சாது வலையில் அகப்பட்டுக் கொள்கின்றார்கள்' என்ற தொடரின் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?
2. கலைத்துவமிக்க சம்பாஷணையின் அவசியம் பற்றிக் கட்டுரையாசிரியர் கூறும் கருத்துக்கள் யாவை?
3. இக்கட்டுரையில் கையாளப்பட்டுள்ள வரலாற்றுச் சம்பவங்களையும் அவை கட்டுரையுடன் தொடர்புபடுமாற்றினையும் தெளிவுபடுத்துக.
4. இக்கட்டுரையில் பேச்சுவழக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளமையின் பொருத்தப் பாட்டை விளக்குக.
5. இனிய சம்பாஷணைகளிலேயே கருத்தாடல்களின் வெற்றி தங்கியுள்ளது என்பதை இளந்தலைமுறையினர் உணர்ந்து கொள்ளவேண்டும் - விவாதிக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகம்



கு. அழகிரிசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதையாசிரியர் அறிமுகம்

| | |
|---|---|
| **பெயர்** | கு. அழகிரிசாமி |
| **காலம்** | 23. 09. 1923 – 05. 07. 197 |
| **இடம்** | கோவில்பட்டி இடைச்சேவல் கிராமம் |
| **கல்வி** | எஸ்.எஸ்.எல். சி சித்தி |
| **பணி** | ஆசிரியர்<br>எழுதுவினைஞர்<br>பத்திரிகையாளர். |
| **படைப்பு** | கட்டுரை – இலக்கியத்தேன், தமிழ் தந்த கவியின்பம் முதலியன<br>நாவல் – புது வீடு புது உலகம், தீராத விளையாட்டு, வாழ்க்கைப் பாதை முதலியன<br>நாடகம் – வஞ்சமகள், கவிச்சக்கரவர்த்தி முதலியன<br>சிறுகதை – தவப்பயன், புதிய ரோஜா, அன்பளிப்பு முதலியன<br>மொழிபெயர்ப்பு – விரோதி, பணியாவிட்டால் முதலியன |
| **விருது** | சாகித்திய அகாடமி விருது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில்பட்டி மளிகைக் கடை கதிரேசன் செட்டியார் காலையில் பலகாரம் சாப்பிட மணி பத்து ஆகும். அப்புறம் ஒரு பத்து நிமிஷம் உட்கார்ந்து, சாப்பிட்ட சிரமத்தைப் போக்கிக்கொள்ள வேண்டும். அதன்பின் கடையை நோக்கிப் புறப்படுவார். சரியாகப் பதினைந்து நிமிஷ நடை. பத்து இருபத்தைந்துக்குக் கடையில் வந்து உட்காருவார். கையில் கடிகாரம் கட்டாமலே நிமிஷக்கணக்கு தவறாமல் வருஷம் முந்நூற்று அறுபத்தைந்து நாளும் ஒரே மாதிரியாக அவர் கடைக்கு வருவதும் வீடு திரும்புவதும் இந்தக் காலத்துக் கடைச் சிப்பந்திகளுக்கு ஓர் அதிசயமாக இருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை - அவர் அந்தக் காலத்து மனுஷர். அவர் பழகிய உலகம் அவரை விட்டாலும் அவர் அதை விடத்தயாராக இல்லை.

அன்றும் காலை 10.25க்குக் கடைக்கு வந்தார். கடைக்குள் நுழையும்போது முகத்தை எப்படி வைத்துக்கொள்ள வேண்டுமோ ஒரு குறிப்பிட்ட முறையில் வைத்துக் கொள்ள வேண்டும். அப்படி வைத்துக்கொண்டார். இம் முகபாவத்தின் பிரதான அம்சம் கடுகடுப்பு, பிரதானமில்லாத அம்சம் ஒரு மாதிரியான விறைப்பு. இந்த முகபாவத்தைக் கடையில் உட்கார்ந்திருக்கும் வரையில் எக்காரணத்தைக் கொண்டும் மாற்றமாட்டார். நண்பர்களோ, அந்தஸ்துமிக்க வாடிக்கைக்காரர்களோ வரும்போது அவர் சிரிக்கவோ, புன்னகை செய்யவோ வேண்டிய அவசியம் ஏற்படும். அதையும் இந்த முகபாவத்தை மாற்றாமலே நிறைவேற்றிவிடுவார்.

கடையில் வந்து உடகார்ந்த செட்டியார், கணக்கு எழுதும் சோமசுந்தரம் பிள்ளையை ஒரு தடவை ஏறிட்டுப் பார்த்தார். பிள்ளையும் அவ்வண்ணமே செய்தார். பிறகு செட்டியார் முகத்தைத் திருப்பி, பெட்டியைத் திறந்து அங்கே கிடக்கும் சில்லறைக் காசுகளைக் கையால் துழாவிவிட்டு, கடைச் சிப்பந்திகளை அந்த நான்கு பேரையும் - மொத்தமாகவும் தனித்தனியாகவும் பார்த்தார். இனி வசைபுராணத்தை ஆரம்பிக்க வேண்டியதுதான்! எதைச் சாக்காக வைத்துக் கொண்டு ஆரம்பிக்கலாம் என்று ஒரு கணம் யோசித்தார். ஒரே ஒரு கணம்தான். சாக்குக் கிடைத்துவிட்டது.

''ஏண்டா, தடிப் பயகளா? நீங்க என்ன பரதேசிகளா? சந்யாசிகளாடா? எருமை மாட்டுப் பயல்கள்! விடிஞ்சதும் நாலு வீட்டுக்கு யாசகத்துக்குப் போற பிச்சைக்கா ரப் பயல்கூட இப்பிடி சாம்பலை அள்ளிப் பூச மாட்டானேடா? தரித்திரம் பிடிச்ச பயகளா! நீங்க வந்து கடையிலே நுளைஞ்சீங்களோ இல்லையோ, யாவாரம் ஒண் ணுக்குப் பாதியாப் படுத்துப் போச்சு. இன்னும் மிச்சம் மீதியையும் படுக்க வச்சிட்டுப் போகவாடா, இப்படி நெத்தியிலே அள்ளிப் பூசிக்கிட்டு வந்திருக்கீங்க சாம்பலை?..'' கடையில் புதிதாகச் சேர்ந்திருந்த ஒரு சிப்பந்தி, ''நீங்களும் விபூதி பூசியிருக்கீங்களே, மொதலாளி?'' என்று கேட்டுவிட்டான்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

''அடி செருப்பாலே! நாயே! வாயைத் தொறக்கிறியா நீ? (கணக்குப்பிள்ளை யைப் பார்த்து) பார்த்தீரா சோமசுந்தரம் பிள்ளை? பயல் எதுத்திலே வெவகாரம் பண்றான்? ஜோட்டாலே அடிச்சு வெளியே பத்தும் இவனை! நமக்குச் சரிப்படாது. கஞ்சிக்கில்லாமே செத்த பயல்களை எரக்கப்பட்டுக் கடையிலே வச்சது என் முட்டாள் தனம், சோமசுந்தரம்பிள்ளை''......, என்று செட்டியார் பொரிந்து கொண்டிருக்கும்போது, கணக்குப்பிள்ளை அந்தப் புதுப் பையனைப் பார்த்து, ''வேலையைப் போய்ப் பாரேண்டா. மொதலாளி கிட்ட எப்படிப் பேசணும்கிறது கூடத் தெரியல்லையேடா, ஒனக்கு! உம்....போ! போய் வேலையைப் பாரு'' என்றார்.

அந்தப் பையனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. போதாக் குறைக்கு மற்ற மூன்று பையன்களும் திரும்பிக் கொண்டு அவனைப் பார்த்துச் சிரித்தார்கள்.

செட்டியார் அதோடு அவனை விட்டு விட்டார். மற்றொரு பையனைப் பார்த்து அஸ்திரத்தைத் தொடுத்தார்; ''ஏ கழுதே! ஒன்னைத்தானே! பருப்புலே ஒரே கல்லாக் கெடக்குன்னு சொன்னனே, பொடைச்சி வச்சியா, கழுதை?''

''பொடைச்சிட்டேன், முதலாளி. கல்லு ஒண்ணும் இல்லையே?''

''என்னடா! இல்லையா? அப்போ நான் பொய்யா சொல்றேன்? டேய்! இந்த மாதிரி நீ பேசிக்கிட்டே இருந்தா, செருப்படி வாங்கிக்கிட்டுத்தான் இந்தக் கடையை விட்டுப் போகப் போறே. ஆமா, நல்லா யாவுகத்திலே வச்சுக்கோ. வேலையை ஒழுங்காச் செய். சோமசுந்தரம் பிள்ளை, பய பேச்சைப் பார்த்தீரா? பார்த்துக்கிட்டீ ரான்னேன்? கடைக்கு வர்ரவனெல்லாம் ஒருத்தன் பாக்கியில்லாமே, 'என்ன செட்டியாரே, இப்படிக் கல்லைப் போட்டிருக்கிறீரே பருப்புலே'ன்னு கேக்கறான். இவன் என்னடான்னா 'பொடைச்சேன்; கல்லில்லே'ங்கிறானே! உம்... ஏ கழுதை! நீ பொடைச்சுது நெசந்தானா? கேட்டதுக்குப் பதில் சொல்லு! இல்லே, இப்படியே கடையை விட்டுக் கீழே எறங்கு...''

சோமசுந்தரம் பிள்ளை அந்தப் பையனைப் பார்த்து, ''பொடைச்சேன், கல்லைச் சுத்தமாப் பொறக்கிட்டேன் மொதலாளின்னு சொன்னா என்னப்பா? நெசத் தைச் சொல்றதுக்கென்ன?'' என்றார். அந்தப் பையன் பதில் சொல்லாமல் நின்றான். செட்டியார் கடைப் பையன்கள் அத்தனை பேரையும் மொத்தமாகப் பார்த்து, ''போங்கலே, எம் மூஞ்சியிலே முளிக்காதீங்க. ஒங்களைக் கட்டிக்கிட்டு மாரடிக்கிற துக்கு ஒரு குத்துக்கல்லைக் கட்டிக்கிட்டு மாரடிக்கலாம்... தொலைஞ்சி போங்கடா'' என்று விரட்டினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைப்பையன்கள் நால்வரும் உள்ளே போய்விட்டார்கள். உள்ளே போனதும் பழைய மூவரும் சிரித்தார்கள்.

மறுநிமிஷமே செட்டியார் அவர்களை அழைத்தார். "ஏண்டா, எங்கடா கூண்டோட கைலாசம் போயிட்டீங்க? உள்ளே சமுக்காளத்தை விரிச்சுப் படுத்துத் தூங்குங்கடா; நல்லாத் தூங்குங்க! இங்கே வர்ரவங்களுக்குப் புளியும் கடுகும் நான் நிறுத்துப் போடுறேன்."

புதுப் பையன் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, " நீங்கதானே மொதலாளி, உள்ளே போகச் சொன்னீங்க? நாங்க எது செஞ்சாலும் குத்தமாச் சொல்றீங்களே..." என்று, இரண்டு வாரங்களாக அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தைக் கக்கியே விட்டான்.

அவன் பேசியதைக் கேட்டு மற்றப் பையன்கள் முகத்தைத் திருப்பிக்கொண்டு சிரிக்க, செட்டியார் தம் முகத்தை இன்னும் கடுகடுப்பாக வைத்துக்கொண்டு சோமசுந்தரம் பிள்ளையை ஏறிட்டுப் பார்க்க, பிள்ளை அந்தப் பையனைப் பார்த்து, "ஏண்டா, பேசாதே பேசாதேன்னு ஒனக்கு எத்தனை தரம் சொல்றது? என்ன பயல்டா நீ? போய் அந்த ஈரங்காயத்தை மூடையிலேருந்து எடுத்துக்கிட்டு வா.... இங்கே பொட்டியிலே ஈரங்காயமில்லே" என்றார்.

"அதெல்லாம் எங்கே தெரியுது? எல்லாம் சொல்லித்தான் நடக்கவேண்டியிருக்கு. ஏண்டா, சோறு திங்கிறீங்களே, அதையும் சொன்னாத்தான் திம்பீங்களோ? இல்லை, கேக்கிறேன். இப்படி அறிவுகெட்ட பயல்களா வந்து நமக்குன்னு சேந்திருக்காங்களே, அதைச் சொல்லும்... டேய், ஒன்னைத்தாண்டா! அந்த முத்தையா பிள்ளை பாக்கியைப் போய்க் கேட்டியா? அதையும் சொன்னாத்தான் செய்வியா?"

"கேட்டேன், மொதலாளி."

"கேட்டியாக்கும்? கெட்டிக்காரன் தான்! கேட்டு வாங்கணும்னு தோணலியோ?"

"பாக்கியைக் குடுத்திட்டாரு" என்று பெருமிதத்தோடு சொன்னான் பையன்.

"அட! என்னமோ இவன் சாமர்த்தியத்திலே வாங்கின மாதிரியில்லே பேசுறான்! கடன் வாங்கினவர் குடுக்காமலா இருப்பாரு? முத்தையா பிள்ளை யோக்கியன். இவனைப் போல முடிச்சுமாறிப் பயலா இருப்பாருன்னு நெனைச்சான் போல இருக்கு. அதனாலேதான் 'குடுத்திட்டாரு' ன்னு ரொம்பச் சவடாலாச் சொல்றான். ஏய், நீ எப்படிடா போய்க் கேட்டே? கண்டிப்பா கேட்டியா"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கண்டிப்பாத்தான் கேட்டேன், மொதலாளி....''

''கண்டிப்பாக் கேட்டியா? உன்னை யாருடா அப்படிக் கேக்கச் சொன்னது? எதம்பதமாப் பேசணும்னு ஒனக்கு எத்தனை தரம் சொல்லியிருக்கேன்? கண்டிப்பாப் பேசினா நாளைக்கு எவண்டா கடைக்கு வருவான்?..''

அப்போது சோமசுந்தரம் பிள்ளை குறுக்கிட்டு, சாவதானமாக, ''முருகையா, அந்தப் பெரிய கணக்கு நோட்டை இப்பிடி எடு'' என்றார். செட்டியார் முருகையாவை விட்டுவிட்டார். மற்றொரு பையனை ஏறிட்டுப் பார்த்துக்கொணடிருந்த சமயத்தில் ஷண்முகம்பிள்ளை கடைக்கு வந்து சேர்ந்தார்.

''அண்ணாச்சி, வாங்க!'' என்று அவரை வரவேற்ற செட்டியார். அந்தப் பைய னைப் பார்த்து, ''ஏய் பரதேசி! நான் உனக்கு என்ன சொன்னேன்? என்னலே சொன் னேன்?...'' என்று கேட்டுக் கொண்டிருக்கும்போதே, ஷண்முகம் பிள்ளை பேச்சுக் கொடுத்தார். ''செட்டியாரையா, நாளைக்கு மதுரைக்குப் போறேன்...'' என்று தாம் சொல்லவந்த விஷயத்தை ஆரம்பித்தார். செட்டியாரும் கவனத்தை அவரிடம் திருப் பினார். அத்துடன் சாமான்கள் வாங்கவும் இரண்டொருவர் வந்தார்கள். பையன்கள் சுறுசுறுப்பாக வேலையில் ஈடுபட்டார்கள்.

கதிரேசன் செட்டியார் எப்பொழுது பார்த்தாலும் கடைச் சிப்பந்திகள் மீது இப்படிச் சீறி விழுவதைப் பல வருஷங்களாகப் பார்த்துக்கொண்டு வந்தவர் ஷண்முகம் பிள்ளை. ஒரு நாள் கூட செட்டியார் அன்பாக ஒரு பையனைப் பார்த்துப் பேசியதில்லை. மாதத்தில் பத்து நாட்களாவது அவர் செட்டியார் கடைக்கு வந்து சிறிது நேரம் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்து விட்டுப் போவார்.

அவர் வந்து விட்டால் கடைப் பையன்களுக்கு ஒரே கொண்டாட்டம். ஏனென்றால், அவரோடு பேசிக் கொண்டிருக்கும்போது செட்டியார் சஹஸ்ரநாம அர்ச்சனையைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்துவிடுவார் என்பது அவர்களுக்குத் தெரியும்.

செட்டியாரும் கூட அர்ச்சனையை நிறுத்துவதற்கு அதை ஒரு நல்ல சந்தர்ப்பமாகக் கருதுவார்! சோமசுந்தரம்பிள்ளை குறுக்கிட்டுக் கடைப் பையன்களுக்குப் புத்தி சொல்ல தொடங்கி விட்டாலும், கொஞ்சம் மூச்சு விட்டு ஓய்வெடுத்துக்கொள்வார். பையன்களைத் தாம் திட்டும்போது தடுத்து நிறுத்துவதற்கு ஒரு ஆள் வேண்டும் என்பதற்காகவே சோமசுந்தரம்பிள்ளையை அந்த முப்பது வருஷகாலமும் தம் கடையில் கணக்குப்பிள்ளையாக வைத்துக்கொண்டிருக்கிறார் என்று சொன்னாலும் தவறில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டியாரின் குணாதிசயங்களெல்லாம் கடைப்பையன்களுக்கு மனப்பாடம். இரண்டு வாரங்களுக்கு முன் வந்து சேர்ந்த புதுப் பையன் வெங்கடாசலத்துக்கு இன்னும் முதற்பாடம்கூடச் சரிவரப் புரியவில்லை. அதனால்தான் அவனுக்குச் செட்டியார் திட்டும்போது உள்ளூற மனம் குமுறியது. ''பிச்சைக்காரன்'', ''கஞ்சிக்கு இல்லாதவன்'', ''நாயே, பேயே'' என்று எத்தனையோ இழிசொற்களைச் சேற்றிலே தோய்த்து எடுத்துச் செட்டியார் வீசியிருக்கிறார். அவன் சொல்லாமல் கொள்ளாமல் கடையைவிட்டு ஓடிவிடலாம் என்று நினைத்தாலும், தன் தகப்பனாரின் கண்டிப்புக்குப் பயந்து இன்னும் அங்கேயே இருந்து கொண்டிருந்தான்.

அவனுடைய ரோஷத்தை கண்டும், செட்டியார் தங்களைத் திட்டுவதைக் கண்டும் மற்றப் பையன்கள் சிரித்ததற்குக் காரணம் அவர்களுக்கு மானமோ ரோஷமோ இல்லாததுதான் என்று யாராவது நினைத்தால், அதைவிடப் பெரிய தவறு வேறொன்று இருக்கமுடியாது. அவர்கள் அங்கே இருந்து பழகியவர்கள். செட்டியாரின் வார்த்தைகளுக்குப் பொருள் கிடையாது என்று மனப்பூர்வமாக அவர்கள் நம்பினார்கள். அதற்குப் பல காரணங்கள் உண்டு: ஒன்று, வேறு எந்தக் கடையிலும் கடைச் சிப்பந்திகளுக்குக் கொடுக்கும் சம்பளத்தைவிட இங்கே அதிகச் சம்பளம். தீபாவளிக்குப் புது வேஷ்டிசட்டைகளுடன் ஆளுக்குப் பத்து ரூபாய் ரொக்கமும் கொடுப்பார் செட்டியார். கடை வேலையைத் தவிர தம்மை மறந்துகூட வீட்டு வேலை செய்யச் சொல்லமாட்டார். அவருடைய வீட்டுக்குக் கடைப் பையன்கள் போனால் முகத்தில் கடுகடுப்பில்லாமல், 'ஐயா, ராசா' என்று அன்போடு பேசுவார். ஏகதேசமாகச் சாப்பிடச் சொல்வதும் உண்டு. எல்லாவற்றையும்விட முக்கியமாக, யார் என்ன புகார் சொன்னாலும், எந்தப் பையனையும் வேலையிலிருந்து நீக்குவதே கிடையாது. பையன்கள் வாலிபர்களாகிக் கல்யாணம் செய்துகொள்ளும்போது, கல்யாணச் செலவுக்கு ஒரு கணிசமான தொகையும் கொடுப்பது வழக்கம். அவர் கடையில் வேலை பார்த்த பையன் பெரியவனாகித் தனிக் கடை தொடங்க நினைத்தால், அதற்கும் உதவி செய்வார். அப்படி அவர் கைதூக்கி விட்டு இன்று மூன்று பேர் அதே ஊரில் மளிகைக் கடைகளை லாபகரமாக நடத்திக்கொண்டு வருகிறார்கள். - இந்த ரகசியங்களெல்லாம் கடைப் பையன்களுக்குத் தெரியும். அதனால்தான் அவருடைய வசைபுராணத்தை ஏதோ வழக்கொழிந்த ஓர் அந்நிய பாஷையில் இயற்றப்பட்ட காவியமாகக் கருதி ஒதுக்கித் தள்ளிவிட்டார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் பையன்கள் விபூதி பூசி வந்ததைக் கண்டு சீறி விழுந்ததைப் பார்த்த புதுப் பையன், மறுநாள் வெறும் நெற்றியோடு வந்துவிட்டான். அவ்வளவுதான்: ''நீ என்னடா சைவனா? இல்லை, வேதக்காரனா? (கிறிஸ்தவனா?) என்னலே முழிக்கிறே? ஒன் மூஞ்சியைப் பார்த்தா எவண்டா கடைக்கு வருவான்?.... நெத்தியைச் சுடுகாடு மாதிரி வைச்சிக்கிட்டு....

''போய் விபூதியை எடுத்துப் பூசு'' என்று கணக்குப் பிள்ளை அவனுக்குப் புத்தி சொன்னார். செட்டியார் திட்டுவதை உடனே நிறுத்திவிட்டார்.

அன்று ஷெண்பகவல்லியம்மன் கோவிலில் கடைசி நாள் விழா. பெரிய மேளக் கச்சேரி, வாண வேடிக்கைகள் எல்லாம் ஏற்பாடாகியிருந்தன. வெளியூர்க் கூட்டம் தெருவெல்லாம் நிரம்பி வழிந்தது. அன்று ஒரு மணி நேரம் முன்னதாகவே - அதாவது, எட்டு மணிக்கே - கடையை அடைத்து விட்டுத் தாமும் கோவிலுக்குப் போகலாம், மற்றவர்களையும் வீட்டுக்கு அனுப்பிவிடலாம் என்று முடிவு கட்டியிருந்தார் செட்டியார். ஏழரை மணிக்கெல்லாம் ஷண்முகம்பிள்ளை வந்தார். செட்டியார் தம் ஓய்வொழிச்சலற்ற வசை புராணத்தை நிறுத்தி, ''அண்ணாச்சி, வாங்க'' என்று புன்னகையோடு அவரை வரவேற்றுவிட்டு, ''மதுரைக்கு நேத்துத்தானே போனீங்க'' என்று ஆச்சரியத்தோடு கேட்டார்.

''அங்கே சோலி? போன காரியம் முடிஞ்சதும் திரும்பவேண்டியதுதானே? இன்னிக்குக் காலையிலே முதல் வண்டிக்கே வந்துட்டேனே! குளிச்சுச் சாப்பிட்டேன். கொஞ்சம் அசந்து தூங்கினேன். தூங்கிப்பிட்டு வர்ரேன்......''

செட்டியார் கடிகாரத்தைப் பார்த்தார். மணி ஏழே முக்கால். இதுதான் சமயம் என்று ஆரம்பித்து விட்டார்.

''ஏண்டா! தீவட்டித் தடியன்களா?

''என்ன மொதலாளி'' என்று இரண்டு பையன்கள் ஏககாலத்தில் கேட்டார்கள்.

''என்ன மொதலாளியா? நானும் ஒரு மணி நேரமாப் பார்த்துக்கிட்டே இருக்கேன், இந்தப் பயக வாயைத் தொறந்து கேக்கட்டும்னு. நீங்க எங்கே கேப்பீங்க? ஒங் களுக்குச் சாமி ஏது, சாத்தான் ஏதுடா? அப்படி தெய்வ பக்தி இருந்தா, ஒங்க மூஞ்சியிலே கொஞ்சமாச்சும் களை இருக்குமே! அறிவுகெட்ட பயகளா, இண்ணைக்கு திருநாள் ஆச்சே, ஊர் பூராவும் கோயிலுக்குப் போய்ச் சாமி கும்பிடுதே, நாமளும் போகணும்னு ஏண்டா ஒங்களுக்குத் தோணல்லே?''


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அப்போது ஷண்முகம் பிள்ளை, ''மொதலாளி சொல்லாமே எப்படிக் கடையைப் போட்டுட்டுச் சாமி பார்க்கப் போவாங்க? நீங்க சொல்றது நியாயமில்லியே, செட்டியாரையா!'' என்றார்.

''ஆமா, அண்ணாச்சி, சாமி கும்பிடுறது கூட மொதலாளியைக் கேட்டுத்தான் கும்பிடணும்! நீங்களும் அவங்க கட்சியிலே சேர்ந்து பேசுங்க!'' என்றார் செட்டியார்.

சோமசுந்தரம் பிள்ளை, பையன்களைப் பார்த்து, கடையை அடைப்பதற்கு எல்லாவற்றையும் எடுத்து உள்ளே வைக்கச் சொன்னார். அவர்களும் ஜரூராக அந்த வேலையில் இறங்கினார்கள்.

செட்டியார் மிகவும் கவலையோடு, ''இந்தப் பயகளோட கத்திக் கத்தி என் தொண்டைத் தண்ணிதான் வத்துது, அண்ணாச்சி, சேச்சேச்சே!'' என்று சலித்துக் கொண்டார்.

ஷண்முகம் பிள்ளை சிரித்தார்.

சிறிது நேரத்தில் கடையை எடுத்து வைத்துப் பூட்டி முடித்ததும் பையன்கள் கோயிலுக்குப் போக உத்தரவுக்குக் காத்திருந்தார்கள்.

''என்னடா, கோயிலுக்குத்தானே?'' என்று கேட்டார் செட்டியார்.

''ஆமா, மொதலாளி''

''கோயிலுக்கு வெறுங்கையை வீசிக்கிட்டுத்தான் போகப்போறீங்களா?''

பதில் இல்லை.

''என்னடா, நான் கேக்கிறேன், பேசாம நிக்கிறீங்களே? வாயிலே என்ன கொளக்கட்டையா இருக்கு?''

அதற்கும் பதில் இல்லை.

''பாருங்க, அண்ணாச்சி, வாயைத் தொறக்கிறாங்களா, பாருங்க, கோயிலுக்குப் போறதுன்னா தேங்கா, பளம், சூடமெல்லாம் கொண்டு போக வேண்டாமா?''

''கொண்டுதான் போகணும்'' என்றார் ஷண்முகம் பிள்ளை.

''அது இந்தப் பயகளுக்குத் தெரியுதா, பாருங்க... கடவுளே! கடவுளே!'' என்று தலையில் அடித்துக் கொண்டு, ''டேய்! இந்தாங்கடா, ஆளுக்கு ஒத்த ரூவா போய், தேங்கா, பளம் வாங்கிட்டுப் போங்க, 'எங்க தலையிலே ஏன் களிமண்ணை வச்சே, சாமி? மூளையை வைக்கலேண்ணாலும் வெள்ளை மெளுகையாவது வச்சிருக்கக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாதா? ன்னு சாமியைக் கேளுங்கடா'' என்று சொல்லிவிட்டு நான்கு பேருக்கும் நான்கு ரூபாய்களைக் கொடுத்தார். பையன்கள் போய்விட்டார்கள்.

செட்டியார் சாவிக் கொத்தோடு வீட்டை நோக்கி நடந்தார்.

சாப்பிட்டுவிட்டு அம்பாளின் நகர்வலத்தைப் பார்ப்பதாக உத்தேசம். அம்பாள் கடைத்தெருவுக்கு வர மணி பதினொன்றாகிவிடும் என்பது அவருக்குத் தெரியும். ஷண்முகம்பிள்ளையும் அவரும் பேசிக்கொண்டே போனார்கள். அப்போது ஷண்முகம்பிள்ளை தாம் வெகு நாட்களாகக் கேட்க நினைத்ததை அன்று அப்பட்ட மாகக் கேட்டுவிடத் துணிந்தார்.

"என்ன செட்டியாரையா, நம்ம சிநேகிதத்தைப் பொறுத்துக் கேக்கிறேன் கோவிச்சு க்கிட மாட்டீங்களே?"

"என்ன அண்ணாச்சி, ஒங்களை எப்போ நான் கோவிச்சிருக்கேன்? என்ன இப்படிக் கேக்கிறீங்க? நமக்குள்ள என்ன வேத்துமை?"

"இல்லை நீங்க ரொம்பதயாள குணத்தோட இருக்கிறீங்க, ஊரிலேயும் ஒங்களைப்பத்திப் பெருமையாப் பேசிக்கிறாங்க. கடைப் பையன்களுக்கு உங்களைப் போலச் சம்பளம் குடுக்கிறவங்க இல்லேன்னும் எனக்குத் தெரியும். எல்லாம் நல்லா தான் இருக்கு. ஆனா, ஏன் இப்பிடி இருபத்து நாலு மணி நேரமும் கடைப்பையன்களைத் திட்டிக்கிட்டே இருக்கிறீங்க? எப்போவந்து பார்த்தாலும், எவனையாவது நிப்பாட்டி வச்சிக்கிட்டுப் பொரியிறீங்களே, எதுக்கு? கொஞ்சம் அன்பா ஆதரவா இருக்கலாமில்லே?"

''அண்ணாச்சி, அன்பாதரவா இல்லேன்னா நான் திட்டுவனா? அதைக் கொஞ்சம் யோசனை பண்ணிப் பாருங்க. பயகளை நெசமா எனக்குப் பிடிக்கலேன்னா, ஒரே சொல்லிலே கடையை விட்டு வெளியேத்திப்பிட்டு மறுசோலி பாக்கமாட்டனா? சொல்லுங்க, இந்த முப்பது வருசத்திலே, ஒருத்தனை நான் வேலையை விட்டுப் போகச் சொல்லியிருக்கிறனா? பயக விருத்திக்கு வரணும்னுதானே தொண்டைத் தண்ணியை வத்த வச்சிக்கிட்டிருக்கேன்? கத்திக் கத்தி என் உசுரும் போகுது.''

"ஏன் கத்தணும் நல்லபடியா ஒரு சொல் சொன்னாப் பத்தாதா?"

''அப்படியா சொல்றீங்க, அண்ணாச்சி? சரிதான் நல்லபடியாச் சொன்னா பயகளுக்குத் திமிர் இல்லே ஏறிப்போகும்? ஒடம்பு வளையுமா? அந்தக்காலத்திலே நான் கடைப் பையனா இருந்தப்போ எங்க மொதலாளி பேசினதை நீங்க கேட்டிருக் கணும்... ஹும், அதிலே பத்திலே ஒரு பங்குகூட நான் பேசியிருக்க மாட்டேன். பேசவும் தெரியாது.''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்பேர்ப்பட்ட மொதலாளியா அவரு!''

''என்னங்கிறீங்க? என்னப்பத்தி மட்டுமா? என் தாயி, தகப்பன், பாட்டன் - அத்தனை பேரையும் சேர்த்துக் கேவலமாப் பேசுவாரு. புளுத்த நாய் குறுக்கே போகாது. ஒருநாள் என் மூஞ்சியிலே அஞ்சு பலப் படியையே தூக்கி வீசிட்டாரு. தலையைக் குனிஞ்சனோ, தப்பிச்சனோ! அப்படியெல்லாம் வசக்கிவிடப் போய்த்தான் நானும் கடைண்ணு வச்சு, யாவாரம் பண்ணி, இவ்வளவு காலமும் ஒருத்தன் பாத்து ஒரு கொறை சொல்றதுக்கு இடமில்லாமே நிர்வாகம் பண்ணிக்கிட்டு வர்றேன்....''

ஷண்முகம் பிள்ளை செட்டியாரின் வார்த்தைகளைக் கேட்டுச் சிரிக்க நினைத்தார். ஆனாலும் அப்புறம் சிரித்துக் கொள்ளலாம் என்று அதை அடக்கிக்கொண்டு, ''செட்டியாரையா! ஒங்க மேலே தப்பில்லே ஒங்க மொதலாளியைச் சொல்லணும். ஒங்களுக்கு நல்லாத்தான் பாடம் சொல்லிக் குடுத்திருக்காரு...''

செட்டியாருக்கு அவர் சொன்னது விளங்கவில்லை. அதனால் ''என்ன அண்ணாச்சி? என்ன சொல்றீங்க? என்று கேட்டார்.''

''ஒங்களைப் பார்க்க எனக்கு உண்மையிலேயே பாவமா இருக்கு. இப்படிக் கத்தினா மொதல்லே ஒங்க ஒடம்புக்கு ஆகுமா?''

செட்டியாரும் தம் நிலையை எண்ணி தாமே வருந்தினார்: ''என்ன செய்றது? நாம வாங்கின வரம் அப்படி. அந்தச் சோமசுந்தரம்பிள்ளை நடுவிலே ஏதாச்சும் செய்வாரு. அதுதான் சாக்குன்னு கொஞ்சம் வாயை மூடுவேன். அவரு இல்லேன்னா நான் கத்திக் கத்தி மூச்சே போயிருக்கும். பயக நல்லாத் தலை எடுக்கணுமேன்னு தான் பாக்கிறேன். அவங்க தாய்தகப்பன்மாரு என்னை நம்பி ஒப்படைச்சிருக்காங்களே... என்னமோ அண்ணாச்சி, ராத்திரி ராத்திரி வீட்டிலே வந்து படுத்துக்கிட்டே நானா நெனச்சி வருத்தப்பட்டுக்கிடுவேன். ஒவ்வொரு சமயம் தொண்டை கட்டிக்கிடும். பாலிலே பனங்கல்கண்டும் மொளகும் போட்டுக் குடிப்பேன். மொதலாளின்னு ஆயிட்டோம், செய்றதைச் செய்யத்தானே வேணும்? அந்த சம்புகவல்லி புண்ணியத்திலே இதுவரையிலும் ஒடம்புக்கு ஒண்ணு வந்து படுத்ததில்லை.''

''சரி சரி, எவ்வளவு காலம்தான் ஒடம்பு தாங்கும்? இனிமே ஒவ்வொண்ணையும் அப்பிடி அப்பிடி கொறைச்சிக்கிட்டு வரவேண்டியதுதான். நமக்குப் பகவான் தொண்டையை என்ன வெங்கலத்திலையா படைச்சிருக்கான்?''

ஷண்முகம்பிள்ளை சிரித்துக்கொண்டே சொன்ன புத்திமதி, நியாயமானதாகவே செட்டியாருக்குப்பட்டது. ஆனாலும் அதை ஒப்புக்கொள்வது சுயநலம் என்று கருதினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அண்ணாச்சி நீங்க என்னதான் சொல்லுங்க; பயக நல்லபடியாத் தலையெடுக்கணும். இவ்வளவு காலமும் இப்படி இருந்துட்டு இனி எவன் எக்கேடு கெட்டா என்னண்ணு என்னாலே இருக்க முடியாது. இனிமே என்ன? வயசு அறுபதாச்சு. உசுரை வச்சிருந்து என்னத்தைச் சாதிச்சிறப் போறோம்?'' என்று தியாக உணர்ச்சியோடு பேசினார். பேச்சில் ஒரு உறுதி நிறைந்திருந்தது.

ஷண்முகம்பிள்ளை அதைப் பார்த்து, ''அப்பிடின்னா, நித்தியப்படி அர்ச்சனை நடக்கும்ணுதான் சொல்லுங்க'' என்று சொல்லிவிட்டு உரக்கச் சிரித்தார்.

செட்டியார் அவருடைய சிரிப்பைப் பார்த்து மிகவும் மனம் நொந்துகொண்டு, ''என்னமோ அண்ணாச்சி, ஒங்களுக்கு சிரிப்பா இருக்கு. பாருங்க, இப்போ ஒங்க கிட்டே சரியாக்கூடப் பேச முடியல்லே, தொண்டை வலிக்குது. நான் பொறந்த வேளை!'' என்று அழமாட்டாத குறையாகச் சொல்லியபடி நடந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருஞ்சொற்கள்

| | |
|---|---|
| **ஜோட்டு** | - செருப்பு |
| **முடிச்சுமாறி** | - திருடன் |
| **சவடால்** | - பெருமிதம் |
| **ஏகதேசம்** | - இருந்தாற் போல |
| **ஜரூர்** | - வேகமாக |
| **நித்தியப்படி** | - வழக்கமாக |
| **வசைபுராணம்** | - தொடர்ந்து ஏசுதல் |
| **அஸ்திரம்** | - அம்பு |
| **பாஷை** | - மொழி |
| **எதம்பதம்** | - பக்குவம் |
| **சோலி** | - அலுவல் |
| **யாசகம்** | - பிச்சை |
| **சம்புகவல்லி** | - ஷெண்பக வல்லியம்மன் தெய்வம் |

## மையக் கருத்து

தனக்கு ஏற்படும் பாதிப்புகளைப் பொருட்படுத்தாது பிறரை முன்னேற்ற முனையும் ஒருவரது மனநிலை.

## கதைக்களம்

மளிகைக் கடை

## பாத்திர வார்ப்பு

### கதிரேசன் செட்டியார்

- கதையின் பிரதான பாத்திரம்
- தொழிலில் அக்கறையுடைவர்.
- தனக்குக் கீழ் பணிசெய்வோரை நெறிப்படுத்தி முன்னேற்றும் விருப்புடையவர். அதற்காகக் கடையில் எப்போதுமே கடுகடுப்பாக காணப் படுபவர்.
- கடைச் சிப்பந்திகளுக்கு கடுமையான வார்த்தைகளால் ஏசுபவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கடைச் சிப்பந்திகளின் முன்னேற்றத்திற்காகத் தன்னை வருத்தி செயற் படுபவர்.
- இயல்பில் தயாளகுணமுடையவர்.
- வேலை நேரம் தவிர்ந்த வேளைகளில் தொழிலாளர்களுடன் அன்பாகப் பேசுபவர்.
- கடை வேலைகள் தவிர பிற வேலைகளைக் கொடுக்காதவர்.
- நேரத்திற்கு மதிப்பளிப்பவர்.

**சோமசுந்தரம் பிள்ளை**

- முதலாளிக்கும் கடைச் சிப்பந்திகளுக்கும் இடையில் இணைப்புப் பால மாக தொழிற்படுபவர்.
- முதலாளிமீது விசுவாசம் உடையவர்.
- சமாளித்துப் பேசும் தன்மையுடையவர்.
- சமயோசிதமாகப் பேசும் ஆற்றலுடையவர்.
- முதலாளியின் குணமறிந்து செயலாற்றுபவர்.

**ஷண்முகம் பிள்ளை**

- முதலாளியின் நற்குணங்களும் உள்ளார்ந்த உணர்வுகளும் வெளிப்படு வதற்குக் காரணமான பாத்திரம்.
- நட்பைப் பேணுபவர்.
- மனம் திறந்து பேசுபவர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**கடைச் சிப்பந்திகள்**

- முதலாளியிடம் ஏச்சு வாங்கினாலும் அவரது உண்மையான குண வியல்பை அறிந்து வைத்துள்ளமையால் முரண்படாதவர்கள்.
- முதலாளியின் வசை புராணத்தைக் கவனத்தில் கொள்ளாதவர்கள்.
- முதலாளியின் இயல்பறியாததால் புதுச்சிப்பந்தி கோபப்படுபவனாகக் காணப்படுகிறான்.

## *எடுத்துரைப்பு முறை*

- செட்டியாரது கடைச் சிப்பந்திகளுடனான ஊடாட்டத்தின் மூலமும் சண்முகம் பிள்ளையினுடனான உரையாடல் மூலமும் கதைக்கரு வெளிப்படுத்தப் படுகின்றது.
- செட்டியாரின் அனுபவ வெளிப்பாடுகளினூடாகவும் சம்பவச் சித்திரிப்புக் களினூடாகவும் கதை வளர்க்கப்படுகிறது.
- நகைச்சுவை உள்ளிட்ட பல்வேறு உணர்வு வெளிப்பாடுகள் கதையை மெருகூட்டுகின்றன.

## *கதைப்பின்னல்*

- கடையொன்றில் நடைபெறும் நாளாந்த செயற்பாடுகளின் ஊடாகக் கதை தொடங்குகிறது.
- சிப்பந்திகளுடனான செட்டியாரின் கடுமையான வார்த்தைப் பிரயோகங்கள் அவரைக் கண்டிப்பானவராகக் காட்டுகின்றன.
- சண்முகம்பிள்ளையுடனான உரையாடலும் சிப்பந்திகளுடனான கனிவான செயற்பாடுகளும் செட்டியாரின் உண்மையான இயல்பையும் மனப் பாங்கையும் புலப்படுத்துகின்றன.
- கதை முடிவில், தொண்டை வலியினால் வருந்தும் செட்டியாரின் தியாகம் வெளிப்பட்டு அவர்மீதான அனுதாபத்தை ஏற்படுத்துகின்றது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மொழிநடை

- உணர்வுச் செறிவான மொழிநடை.
- வட்டார வழக்குச் சொற்களை ஆங்காங்கே பயன்படுத்திய பேச்சுவழக்கு கையாளப்பட்டுள்ளது.
- பிறமொழிச் சொற்பாவனையும் காணப்படுகின்றது.

## கற்றல் வினாக்கள்

1. செட்டியாரின் குணவியல்பு வெளிப்பாட்டில் துணைப்பாத்திரங்களின் பங்களிப்பை மதிப்பிடுக.
2. ''அண்ணாச்சி, அன்பாதரவா இல்லேன்னா நான் திட்டுவனா...'' என்ற கூற்று இக்கதையில் பெறும் முக்கியத்துவத்தை விபரிக்குக.
3. தியாகம் என்ற தலைப்பின் பொருத்தப்பாட்டினை விளக்குக.
4. அங்கதச் சுவையுடனான மொழிநடை இக்கதையின் வெற்றிக்குப் பங்களிக்கும் விதத்தினைத் தெளிவுபடுத்துக.
5. காரணமின்றித் திட்டுவது முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு செல்வதற்கு ஒரு வழியாகுமா? உமது வாழ்க்கை அனுபவத்தைக் கொண்டு கருத்துரைக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்



ஏஸ். பொன்னுத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதையாசிரியர் அறிமுகம்

| | |
|---|---|
| **பெயர்** | எஸ். பொன்னுத்துரை – **எஸ். பொ** |
| **காலம்** | 04.06.1932 – 26.11.2014 |
| **இடம்** | நல்லூர் – யாழ்ப்பாணம் |
| **கல்வி** | கலைமாணி<br>அண்ணாமலைப் பல்கலைக்கழகம்<br>யாழ்/ புனித சம்பத்தரிசியார் கல்லூரி<br>யாழ்/ பரமேஸ்வராக் கல்லூரி |
| **பணி** | ஆசிரியர்<br>நிறுவுனர் – மித்திர பதிப்பகம் |
| **படைப்பு** | சிறுகதை – வீ, ஆண்மை, அவா, உறவுகள் முதலியன<br>நாவல் – தீ. சடங்கு, தேடல் முதலியன<br>நாடகம் – ஈடு, வலை முதலியன<br>மொழிபெயர்ப்பு – மகாவம்சம் முதலியன<br>தொகுப்பு – பெருங்காப்பியம் பத்து<br>தத்துவம் – கீதையின் நிழலே<br>சொற்பொழிவு – பனிக்குள் நெருப்பு<br>ஆய்வு – இஸ்லாமும் தமிழும்<br>சுயசரிதை – வரலாற்றில் வாழ்தல் |
| **விருது** | இயல் விருது – தமிழிலக்கியத் தோட்டம் – கனடா |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகதார் என்றழைக்கப்படும் ஆறுமுகம் துயிலெழுவது ஒரு திருக்காட்சி. தலையணையையும்போர்வையையும்உட்திணித்துப்பாயைப்பக்குவமாகச்சுருட்டிவைப்பது ஒரு கலை. கொட்டாவியை மறைபொருளெதுவுமின்றி ஊளையிட்டு, கைகளை நீட்டி மடக்கி, உடலை உலுப்பிச் சோம்பலை முறித்தால், துயிலெழுபடலத்தின் ஓரம்சம் நிறைவுறும். தலைமாட்டில் நெருப்புப் பெட்டியும், தாவடிப் புகையிலைச் 'சுத்து'ம் எப்பொழுதும் தயாராக இருக்கும். 'சுத்தை' நேர்த்தியாகப் பற்ற வைத்தால், கால்கள் தம் இச்சையாகவே கொல்லைப் பக்கம் நடக்கத் தொடங்கும். எப்பொழுது தொடக்கம் வைகறை துயிலெழும் வழக்கத்தை வாலாயப்படுத்திக் கொண்டார் என்பது அவருக்கே ஞாபகமில்லாத சங்கதி.

அறுபது ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து விட்டார். கடிகாரத்தைப் பார்க்காது, கடிகாரத்தின் விநாடிமுள்ளைப் பார்க்கிலும் நுணுக்கமான நேரக்கணக்கில் இயங்குவது அவருடைய இரத்தத்திலேயே ஊறியிருக்கின்றது. கொல்லையிலே கழிவுக்கருமத்தை முடித்து, அடிக்கழுவி, கிணற்றடிக் கமுக மரத்திலே தொங்கும் குரும்பை, பாதியிற் கிடக்கும் உமிக்கரியினாற் பற்களைச் சுத்தஞ்செய்து, திண்ணைக்கு மீளுவார். 'இறப்பில்' தொங்கும் வெண்சங்கிலே கதிர்காமத்து விபூதி இருக்கும். வலக்கை விரல்களுக்குள் எடுத்து 'சிவ... சிவ....' என்று உச்சரிக்கும்பொழுது, நல்லூர்க்கந்தனின் உதயகாலப் பூசைமணி கேட்கும்.

'இன்றும் சிவ... சிவ....' என்று விபூதி பூசும்பொழுது, உதயகாலப் பூசை மணி கேட்கின்றது. காலஓட்டத்திலே தரிக்காது நடைபெறும் நித்தியகருமங்கள்.

இன்று வருடப் பிறப்பு.. முதன் முதலில் இந்த எண்ணந்தான் முகத்தாருக்கு ஏற்படுகின்றது. எத்தனையோ வருடப்பிறப்புகள் வந்து போய்விட்டன. அவற்றுடன் எத்தனையோ வருடங்களும் ஓடிமறைந்துவிட்டன. பார்வதிப்பிள்ளையைக் கல்யாணஞ் செய்த முதல் வருடம் வந்த வருடப்பிறப்பு; இராமேசுவர நேர்த்திக் கடனுக்குப் பிறகு சுப்பிரமணியனைப் பெற்று, முருகண்டியிலே மயிர்நீக்கக் கடன் செய்த மறுநாள் வந்த வருடப்பிறப்பு; சௌந்தரம் கல்யாணமாகி, மருமகனுடன் வந்த வருடப்பிறப்பு; தகப்பனுக்குத் தலைக் கொள்ளி வைத்து, கோடி கட்டாதே கழிந்த வருடப்பிறப்பு; பார்வதிப்பிள்ளை போய், நாளே காடாகிக் கிடந்த வருடப்பிறப்பு; - இப்படிப் பல. கால ஓட்டம் அவர் தம் உழைப்பை விழுங்கி, உடலைச் சருகாக்கி விட்டது.

முன்னர் போல சுறுசுறுப்பில்லை. நல்லெண்ணெய்யில் வெதுப்பிய கத்தரிக்காயுடன் மூன்று நீற்றுப்பெட்டி பிட்டுச் சாப்பிட்டும், நாலு மரவள்ளிக்கிழங்கைச் சுட்டுப் பச்சை மிளகாய் சகிதம் போட்டுக் கொண்டாற்றான் காலைப்பசி அடங்கும் என்பன இளைஞப் பருவ நினைவுகள். பிள்ளைகளைப் படிக்க வைத்து உத்தியோகக்காரராக்கியதனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு பாண் துண்டுகளைக் 'கொறி' க்கும் பழக்கம் முகத்தார் வீட்டிலும் பரவிவிட்டது. படுத்த படுக்கையாக வைக்கும்படியாக உடம்பிற்கு அப்படியொன்றுமில்லை. முதுமை உணர்வு வலுக்கின்றது. சிறிது வாதக்குணம் போன்ற எண்ணமும் மேலிடுகின்றது. திடீரெனக் குந்தி எழும்பச் சிரமப்படுகின்றார். இதனைப் பிள்ளைகள் அறிந்து கொள்ளாத வகையில் நடந்து கொள்ளுகின்றார். கடைக்குட்டி மகளைப் பற்றித்தான் கொஞ்சம் கவலை.

திண்ணையிற் குந்தி, கப்புடன் சாய்ந்து கொள்கின்றார்.

'அவள் பொடிச்சிதான் பாவம். தாயத்தின்னியாப் போயிட்டுது. படிப்பை முடிச்சுப் போட்டு, மூலையிலே கிடந்து பெருமூச்சு விடுகுது. அவளை மேலை படிக்க வைக்கலாமெண்டு மூத்ததுகள் விரும்பினதுதான். வேணுமெண்டால், உதுகளின்ரை பொம்பிளைப் பிள்ளையள் படிச்சு உத்தியோகம் பாக்கட்டும். இளையவனின்ரை பாடு பிழையில்லை. ஒரு மாதிரி ஒரு வேலையிலை கொழுவீட்டான். ஏதோ கொம்பனியிலைதான் வேலையாம். ஆனா, சம்பளம் புழையில்லை, மேலுக்கு நல்லா வரலாமெண்டு மூத்தவனும் மச்சான்மாரும் சொன்னாங்கள். அவன் கடைக்குட்டி எண்டு வீட்டோடை இருந்து சாப்பிட்டுப் பழகியவன். மூண்டு நாலு மாசம் அதுவுமில்லை. கயிற்றப்பட்டு வாழ்ந்தால்தானே, பேந்து பின்னடிக்குத் தங்கடை பாடுகளைத் தாங்களே பாக்குங்கள். நல்லூரான்ரை புண்ணியத்திலை எல்லாம் தங்கடை சீவியப்பாடுகளைப் பார்க்கக் கூடிய நிலைக்கு வந்துட்டுதுகள். என்ரை கெட்டித்தனம் என்ன இருக்கு? ஆண்டவன் அளந்தபடி நடக்குது... விடியப்புறக் கோச்சியிலே மூத்தவன் வருவான். அவன் மறந்தாலும் அலுத்தாலும் அவன்ரை மனுஷி கமலா இஞ்சை வராமலிருக்காள்.

என்னெட்டைக் கைவியளம் வாங்கிறதிலை அவளுக்கு அவ்வளவு நம்பிக்கை... ஓம்... அதுகளின்ரை மூத்ததுக்கும் - உந்தப் புது நாணயப் பேர் சட்டெண்டு மனசிலை வாறேல்லை... அவள்தான் அம்சதொனிக்குப் பத்து வயசுக்கு மேலை இருக்கவேணும்... என்ன பத்து? பதினொண்டுக்கு மேலை. கடுக்கண்ணுற பருவம்.. ஓ, இவ போயே நேற்றெண்டாப் போலை இருக்குது... ஆனா, வருசம் அஞ்சாகுது. அவள் புண்ணியஞ் செய்தவள். எல்லாப் பாரத்தையும் என்ரை தலையிலை சுமத்திப் போட்டுப் போயிட்டாள்.'

இடைவெட்டில், மனோகரன் நேற்று எழுதியிருந்த கடிதம் முகத்தாருடைய ஞாபகத்துக்கு வருகின்றது. வருடப் பிறப்பன்றே கொழும்புக்குத் திரும்பிவிட வேண்டுமென்று எழுதியிருந்தான்.

'அதுவும் சரிதான். எங்கடை வாகடங்கள் நெடுகச் சரிவருமே? இப்ப தான் போய் வேலையிலை சேர்ந்திருக்கிறான். லீவு கீவு எடுத்துப் பழுதாக்கப்படாது.'


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

''அப்பனே முருகா ''

வீட்டின் சின்ன அறைக்கதவு திறக்கப்படுகின்றது. 'கடைக்குட்டி' பத்மாதான் வருகிறாள்.

'என்னதான் பேரளவிலை பெரியபிள்ளை எண்டாலும், வீட்டிலே சின்னப் பிள்ளை தானே? சரியா, இவ பார்வதிப் பிள்ளையை உரிச்சு வச்ச மாதிரி இருக்கிறாள். இவளை ஒப்பேத்திப் போட்டனெண்டால், பேந்தென்ன? சிவனே எண்டு கண்ணை மூடலாம். இவன் மனோகரனை இவவின்ரை அண்ணரின்ரை பொடிச்சிக்குத்தான். பெடியங்களின்ரை காரியத்தை நிதானமாச் சொல்லேலா.'

முதற் காரியமாகப் பத்மா வீட்டு முற்றத்தைக் கூட்டி, சாணகத் தண்ணீர் தெளித்து முடிக்கின்றாள். வருடப்பிறப்பன்று விடியும் முன்னரே, அன்றைய வழமையான கடமைகளைச் செய்து முடிக்கும் வேட்கை. வருடப்பிறப்பன்று எல்லாக் காரியங் களையும் விக்கனமின்றி உரிய முறைப்படி நிறைவேற்றி விட்டால், வருடம் முழுவதும் அவ்வாறே அமையுமென்னும் நம்பிக்கையில் ஊறித்திளைத்த மனம். வருடப்பிறப்பன்று பழங்கறிகளுக்கு மதிப்பில்லை. கறிச்சட்டிகளை அடுக்களைக்கு வெளியே, இடப்பக்கமாகவுள்ள செவ்விளநீர்க் கன்றடியிற் பரப்பி வைத்து, சாம்பல் தோய்த்தெடுக்கப்படும் 'பொச்சு' மட்டையாற் தேய்த்துக் கழுவத் தொடங்குகின்றாள். திண்ணையிலே குந்தியிருந்து, சிந்தனையிலாழ்ந்திருக்கும் தந்தையை அவள் கண்கள் கவனிக்கின்றன. மரவள்ளிக்கிழங்கு காய்ச்சிய சட்டியில் அடிப்பிடித்திருந்த பாகத்தைப் பொச்சு மட்டையால் நன்றாகச் சுரண்டிக் கொண்டே பேச்சுக் கொடுக்கின்றாள்.

''என்ன அப்பு.. இண்டைக்கு காலமைக் கோச்சியிலை மூத்தண்ணர் வருவாரல்லே?''

''ஓம் புள்ள, சுப்பிரமணியம் வராமல் வருஷம் பிறக்குமே? என்னதான் இருந்தாலும் அவன் வருஷத்துக்கு வராமல் இருப்பானே?''

'எப்பிடியும் அவன் வருவான். காதுப்பிடியிலை கமலா கூட்டியந்திடுவாள். கோச்சி இன்னும் நாவற்குழியைத் தாண்டியிருக்காது. இப்ப நடக்கத் துவங்கினாலும், நேரத்தோடை ஸ்ரேஷனுக்குப் போயிடலாம். ஆனா, அவனுக்கு உதொண்டும் புடிக்கிறேல்லை. ''நான் எங்கனட வீட்டுக்கு வாறதுக்கு ஆரும் வந்து வழிகாட்டத் தேவையில்லை'' எண்டு எத்தினை கோசு கோவிச்சது எனக்கல்லோ தெரியும்?...

''புள்ளை. தேத்தண்ணிக்கு உலை வைக்கல்லையே?''

''வைச்சிட்டன்''

''கொக்கா பரிமளம் இன்னும் எழும்பல்லையே?... உங்கடை அத்தாரும் வலுநேரஞ்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செண்டுதான் வந்தவர். சரியாச் சாப்பிட்டிருக்கவும் மாட்டார்.''

முகத்தாரின் இன்னொரு மகளான பரிமளத்தின் கணவனும் கொழும்பிலே தான்வேலை பார்க்கின்றான். பரிமளம் தைப்பொங்கலுக்குத் தந்தையின் வீட்டிற்கு வந்தவள், திரும்பிப் போகவில்லை. கணவன் சதாசிவம் நேற்றிரவு யாழ்தேவியிலே தான் திரும்பியிருக்கிறான்.

'பாவம் அதுகளுக்கு ஆண்டவன் ஒண்டும் குறை வைக்கேல்லை. இதுக்கிடை யிலை முப்பதினாயிரம் கொட்டி புதுமோடியிலை ஒரு வீடும் கட்டிப் போட்டுதுகள். கதைச் சாங்கத்திலை வைகாசி நாளுக்குத்தான் குடியேறுவினம் போலை கிடக்குது. பேந்தென்ன நெடுகிலும் குடியிருக்கப் போகினமோ? வாடகைக்குத்தான் விடு வினம். காரும் ஒண்டு வாங்கியிருக்கினமாம். அதை இன்னும் ஒரு நாளும் யாழ்ப் பாணத்துக்குக் கொண்டுவரல்லை. அதுகளின்ரை அன்புக்கும் அந்நியோன்யத்துக்கும் ஒரு குழந்தையைத்தான் ஆண்டவன் குடுக்கேல்லை. சாதகத்திலை பின்னடிச் சந்ததி விருத்தி எண்டுதான் இருக்கு. ஏழு வருஷத்துக்குப் புறகுதான் சதாசிவமும் தலைச்சனாப் பிறந்தவனாம். கொழும்பிலை பேர் போன டாக்குத்தரிட்டை எல்லாம் காட்டினவை. அதுகளுக்கு ஒரு குறையுமில்லை எண்டுதான் சொன்னவையாம்...'

''கோப்பியை ஆர்றதுக்கிடையிலை குடியுங்கோ அப்பு'' என்று பத்மா கோப்பி கிளாஸை நீட்டுகிறாள்.

''என்ன புள்ள, முட்டைக்கோப்பி அடிச்சிருக்கிறாய். அத்தாரும் நிக்கிறார். இப்ப சுப்பிரமணியமும் வந்திடுவான்... அவன்ரை அசோகன் முட்டைக் கள்ளனல்லே?''

''இஞ்சை தாராளமா முட்டையள் இருக்குது. புட்டுக்கும் பொரிச்சும் வைக்கலாம். ''

முகத்தார் கோப்பியைக் குடிக்கிறார்.

''மெய்ய புள்ளை... கொக்கா சௌந்தரம் இஞ்சை நேத்து வந்திட்டுப் போனவளல்லே? என்ன சொல்லிப் போட்டுப் போனவள்? மத்தியானச் சாப்பாட்டிற்கு வருவா ளாமோ?''

''அத்தான் நேத்துத்தான் வந்தவராம். அவரின்ரை சகோதரி - அவைதான் பறங்கித் தெருவார் - மத்தியானச்சாப்பாட்டுக்கு வீட்டை வருவினமாம். பின்னேரம் போலைதான் வரவசதிப்படும் எண்டுசொன்னவ. எதுக்கும் கைவியளத்துக்கு முகுந்தனை அனுப்பி வைக்கிறாவாம்.''

சௌந்தரம் பெரிய குடும்பக்காரிதான். இருந்தாலும் சீமாட்டி ஒரு சீதேவி. ஆறு பஞ்சானும் குஞ்சுகளையும் ஒரு குறையுமில்லாமல் படிப்பிக்கிறாள். ஏதோ ஆனை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சேனையையே சீதனமாகக் குடுத்தனான்.? புருஷன் தங்கராசா உண்மையிலை ஒரு தருமராசாதான். புள்ளையளின்ரை படிப்புக்காக குடும்பத்தை ஊரோடை விட்டிட்டுப் போயிட்டான். அங்கை கடைச் சாப்பாட்டோடை வயித்தை வாயைக் கட்டிச் சீவிக்கிறான். அங்கையும் இங்கையுமாக ரெண்டு சிலவுகளைச் சமாளிக்கிறதுக்கு கந்தோர் விட்டாப்புறகு வேற வேலயளையும் பாக்கிறதாம். அந்தந்த வயசிலை ஓடியாடிப் பிரயாசைப்பட்டு உழைச்சு சம்பாரிக்கத்தான் வேணும். அதுக்கு ஏத்த சாப்பாடு வேண்டாமே? நல்லவேளை... பெட்டையள் கீழ்க்கண்டுகள் தான். அந்த அளவிலை ஒரு ஆறுதல்.. வந்தவனுக்கு ரெண்டு வேளை தன்ரை கையாலை சமைச்சுக் குடுக்காமல் இஞ்சை ஓடியாறாளோ? பொம்பிளைப்புள்ளையள் கரை சேரு மட்டுந்தான் எங்கடை....'

''என்ரை மடிசஞ்சையும் சால்வையையும் எடுத்துத்தா புள்ளை.''

''இவ்வளவு வெள்ளணத்தோடை கடைக்குப் போகப் போறியளே?''

''இல்லை, உந்த முச்சந்திமட்டும் போயிட்டு வாறன். தச்சேலா ஏதேன் அரியது நரியது கிடைச்சால்...''

சாறணை உதறிக்கட்டிக்கொண்டு, 'மடிசஞ்சை' இடுப்பிலே சொருகி, ஏகாவடமிடச் சால்வையை எறிந்து படலையைக் கடக்கிறார்.

ரோஜா இதழ்ப்படுக்கையான மென்மைசேர் நினைவுகளில், ஏதோ ஒரு முள்ளின் உறுத்தல், கால்களின் இயக்கத்திலேயே படரும் நடை. சந்திக்கடைப் பசுபதியின் குரல் அவரைக் கடைப்பக்கம் ஆகர்ஷிக்கின்றது.

''எப்பிடி அண்ணர்? வருஷம் எத்தினை மணிக்குப் பிறக்குதாம்? கைவியளம், நாள்வேலைக்கு நேரம் எப்பிடிப் போட்டிருக்கு?'' பத்துப் பேரிடம் கேட்டும் பசுபதிக்குப் பொச்சந் தீரவில்லை.

''பத்து இருபத்தெட்டுக்குத் தான் வருஷம் பிறக்குது. கைவியளத்துக்கு இண்டைக்கு நாள் போடேல்லை. ஆனா, பொது நாள் உடனையே குடுத்தாலும் பாதகமில்லை.''

முகத்தார் பஞ்சாங்கம் பார்த்து வைப்பதில் வெகுஒழுங்கு. கடிகாரம் பார்க்கும் பழக்கமில்லாத அவர், எந்தச் சுபவேளையையும் விநாடி தப்பாமற் சொல்லுவார்.

''நான் ஒருநாளும் இந்த நேரம் காலம் பாத்துக் கொண்டு இருக்கிறேல்ல.... வருஷப்பிறப்பண்டைக்கே துவங்கீட்டால் சரி தானே? இல்லாட்டில் இழுவல். ரெண்டு மூண்டு நாளைக்கும் நாள் போடமாட்டாங்கள்.... அதுக்காகக் கடையைப் பூட்டி வைக்கிறதே?''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஓமோம்... எல்லாம் நம்பிக்கையைப் பொறுத்ததுதான் பசுபதி'' என்ற முகத்தார், ''கோச்சி இன்னும் வரேல்லைப் போலை'' என வேறு திசையிற் கதையைத் திருப்புகின்றார்.

''நேமாயிட்டுது... வருஷத்துக்கு இஞ்சினை வாற சனக்கூட்டத்தோடை வாற ரயில் கொஞ்சம் முந்திப் பிந்தித்தான் வந்து சேரும். உங்கடை மற்ற மேன் குமாரசாமியும் இண்டைக்கு வாறார் போல இருக்குது. தம்பியும் இஞ்சாலைப் பக்கம் வந்து வெகுகாலமாகப் போச்சுது.''

நெஞ்சிற் குத்திக்கொண்டிருந்த முள், ரோஜா இதழ்ப் படுக்கைக்குள் இனிதாக மறைகின்றது.

குமாரசாமி வருவான் என்பது முகத்தாருக்கு தெரியாது. அவனை எந்த விசேடத்திற்கும் வீட்டில் யாருமே எதிர் பார்ப்பதில்லை. அவனுடைய போக்கு அப்படி இருப்பினும், குமாரசாமி வருவது தனக்குப் புதினம் என்பதை முகத்தார் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

''இஞ்சை பாத்தியளே நோட்டீசை. முத்தமிழ் மன்றம் வருஷக் கொண்டாட்டம் நடத்துதாம். நாடகங்களும் நடத்துறாங்களாம். அதுகளுக்குத் தலைமை தாங்க குமாரசாமி வருகுதாம்''

பசுபதி நோட்டீசைக் கொடுக்கிறான்.

இப்பொழுது முகத்தாருக்குக் கண் கொஞ்சம் வெள்ளெழுத்து. ஆனாலும் கொட்டை எழுத்தில் அச்சடிக்கப்பட்டுள்ள மகனுடைய பெயரைக் கண்டுபிடிக்கின்றார். மனம் மலர்கின்றது. முகபாவம் மாறாமல் நோட்டீசைத் திருப்பிக் கொடுக்கின்றார்.

''கண்ணும் புகைச்சலாய்க் கிடக்குது.''

''நான் வாசிச்சுக் காட்டட்டே?''

''வேண்டாம் பசுபதி, நான் வாறன். மூத்தவன் போறான் போல இருக்குது காரிலை.''

மூத்தவனைச் சொல்லி விடைபெற்றுக் கொண்டாலும் முகத்தாருக்குக் குமாரசாமியைப் பற்றிய எண்ணமே மேலோங்கியிருக்கின்றது. குமாரசாமி, முகத்தாரின் இரண்டாவது புத்திரன். சிறுவயதிலேயே படித்து முன்னுக்கு வந்து கொண்டிருந்தான்.

அவன்ரை மூளைக்கு அவன் உப்புடியே இருக்கவேணும்? சீமைப்படிப்பெல் லாம் முடிச்சு, ரெண்டு மூண்டு காரும் நாலைஞ்சு பங்களாவும் வைச்சல்லோ வாழ வேணும்? அந்தக் காலத்திலை கண்ணூறுபட்டுப் போறாப்போலை சொல்லுவானுகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பிரமணியனைக் காட்டி செளந்தரத்துக்கு மாப்பிள்ளை; குமார சாமியைக் காட்டி பரிமளத்துக்கு மாப்பிள்ளை...'

அதே நாக்குகள் திசை திருப்பி, அவரை மல்லாத்திக் கிடத்திக் குறி சுட்டபொழுது...

'பிஞ்சிலை பழுத்தவன். தமையன் இருக்கக்கூடியதாக, ரெண்டு குமருகள் வீட்டுக் குள்ளை பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கக் கூடியதாக, இவனுக்குக் கலியாணப் பைத்தியம்... அதுவும் ஊர் பேர் தெரியாத வேதக்காரிச்சியாம்.. தூ, இவன்ரை படிப்பு நாக்கு வழிக்கத்தான் உதவும். இவன் தன்ரை படிப்பைத் தூக்கி எறிஞ்சுப் போட்டு கக்கூசு வாளியைத் தூக்கித் திரியட்டும்...

'இத்தகைய வார்த்தைகள் மார்பு மயிரைப் பொசுக்கி, இதயக் குலையை வெதுப்பி யெடுத்தபொழுது.... குறுக்கு இழைகளைத் தறி தலையிலே மின்சார வேகத்தில் இணைக்கின்றன. சின்னத் தலையிடிக்கும், காய்ச்சலுக்குங்கூடச் சீனிச் சுருளும், தேயிலைச்சரையும், வெற்றிலைப் பாக்குப்பெட்டியுங் 'காவி'க் கொண்டு வந்தவர்கள், குமாரசாமியின் அவசரக்கலியாணத்தின் பின்னர், முகத்தார் வீட்டுப்படலையைத் திறக்க முகஞ்சுழித்துக் கூசினார்கள். அப்பொழுது சுப்பிரமணியம் எல்லாவற்றிற்கும் ஆறுதலாக இருந்துங்கூட, முகத்தார் இந்தப் பென்னம்பெரிய உலகத்திலே தன்னந் தனியாக விடப்பட்ட உணர்வுகளுடன் தத்தளித்தார்.

நானோ, அவனோ என்னத்தைச் செய்யிறது? எல்லாம் அளந்த படிதான் நடக்கும். அவன்தான் ஒரு புத்தியிலை செய்திட்டான். இனி, விரலை வெட்டியே எறியிறது? வெக்கம் ரோஷத்தை விட்டிட்டு ஒருக்காப் போய் அதுகளைப் பாத்தன். அவள் பொடிச்சி புழையில்லை. குணவதி எண்டதை முகத்தைப் பார்த்தோடனை சொல்லுவினம். இவன்ரை குணத்துக்கு அவளிலைதான் பச்சம் வைக்கவேணும். வேதக்காரிச்சி எண்டாப் போலை என்ன? சாதி குலம் பாத்துக் கூழ்ப்பானைக்கை விழுந்தவை எத்தனை பேர் இருக்கினம்? இவன் எண்டாப்போலை ஒழுங்காகக் கோயில் குளம் போறவனே? விபூதி பூசுறவனே? அவள் பொடிச்சியையும் கோயிலுக்குப் போகாமல் மறிச்சுப் போட்டானாம். அவனுக்கு உடம்புமட்டும் பயித்தங்காய் போலை. ஆனா, உடும்பைப் போலத்தான் பிடிவாதம். இவ பார்வ திப்பிள்ளை எண்டாப் போல குறைஞ்ச பிடிவாதக்காரியோ?.. அவன்ரை போக்கு ஒரு தனிப்போக்கு இஞ்ச ஒருத்தருக்கும் விளங்குறேல்லை, "உங்கை யாழ்ப் பாணத்துக் கிடுகுவேலியளாலை சங்கையை மறைச்சுக்கொண்டு மனச்சாட் சிக்கு விரோதமாக நடித்துக்கொண்டே வாழ்பவருக்கு என்ரை போக்கு விளங்காது, என்ரை போக்கு எனக்கு விளங்கும்" எண்டு ஒருநாள் உங்கினை சத்தம் போட்டான். இதுகளிலையும் புழையில்லை. ஒட்டி நடக்காதவனோடை என்ன சகவாசம் எண்டு விலகிக்கொண்டுதுகள். புறம்பு காட்டி நடக்கிற உவையளோடை எனக் கென்ன


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தொடர்சல் எண்டு அவனும் விலகிக் கொண்டான். அவன்ரை மூண்டு பிள்ளையளும் படிப்பிலை வலு விண்ணராம். எனக்கெண்டா அதுகளைப் பார்க்க ஆசைதான். இவவின்ரை ஆண்டுத் திவசத்துக்குத்தான் ஒரு பொடியனைக் கூட்டியந்தான். 'அப்பப்பா' எண்டு அவன் வாழைப் பழத்தோடை என்ரை மடியைவிட்டு இறங்கவும் மாட்டான். பொங்கல்- புது வருஷம் - தீபாவளி எண்டு மூண்டு கொண்டாட்டம் வருகுது. ஒண்டுக்கும் வாறேல்லை. எப்பவாவது இருந்திட்டு ஒருநாள் தனியா வருவான். புள்ளையளின்ரை சுகபலனைப் பற்றிச் சளப்புவான். குசினிக்கை போய்தானே ஏதாவது போட்டுத் தின்னுவான். அங்கை கூட்டம் இஞ்சை கூட்டம் எண்டு சொல்லுவான். உடனையே போயிடுவான், பேந்து விசாரிச்சுப் பாத்தால் அண்டைய கோச்சியிலையே ஊருக்குத் திரும்பீட்டான் எண்டு தெரியவரும்.. மெய்தான் அவன்ரை போக்கு இஞ்சை ஒருத்தருக்கும் விளங்கேல்லை. அதோட அந்தப் போக்கில ஒருத்தருக்கும் விருப்பமுமில்லை.

ஒரு மாதிரியான கோபத்தணல் இவையளின்ரை மனங்களிலை இருக்குது. என்ன இருந்தாலும் சகோதர பாசம் எண்ட சாம்பல் அதுகளை மூடிவைச்சிருக்குது. வீட்டிலை எல்லாரும் அவனைக் குறையாத்தான் பேசுவினம். நான் மட்டுந்தான் அவன்ரை பக்கத்திலை பேசுறது, என்ன இருந்தாலும் அவனும் என்ரை மேன்தானே? இதுகள் இதுகளின்ரை போக்கு, அவன் அவன்ரை போக்கு. கையிலே இருக்கிற அஞ்சு விரலும் சமமே? ஒண்டுக் கொண்டு வித்தியாசமில்லையே? வீட்டுக்குள்ளையும் உப்புடித்தான்... ஊருக்குள்ளை அவனுக்குத்தானே பேரும் நடப்பும்? அவன் இவ்வளவு உதவரங் கெட்டவனெண்டால் ஊரிலை உப்புடிப் பேர் இருக்குமே? இதுகளுக்குப் படிச்சும் புத்தியில்லை, இவங்களைக் குடும்பத்துக்காகப் பெத்தன். குடும்பம் தேர் போலை நடக்குது. அவனை ஊருக்காகப் பெத்தன் அவன் றோட்டளக்கிறான் எண்டு வைச்சுக் கொள்ளுவம். அதுக்காக அவனை நான் மெச்சிக் கதைக்கிறதும் இதுகளுக்குச் சிலநேரம் புடிக்கிறேல்லை. ஓரவஞ்சக மனுஷன் எண்டுகூட நினைக்குதுகள். ''நீங்கள் என்னத்தைத்தான் சொன்னாலும், அவனும் என்ரை புள்ளைதான்'' எண்டு சொல்லுவன். இதுகளும் பேக் கூத்துத்தான் ஆடுகிறது. ஏதோ நான் அவன்தான் என்ரை புள்ளை எண்டு சொல்லிப் போட்டதைப் போலை. தாய் மனம் பித்துத்தான். இவவும் இப்ப இல்லை. என்ரை மனமும் பித்துத்தான். இது ஒண்டை மட்டும் நான் குமாரசாமியைப் பற்றி மறக்கமாட்டான். இவையள் ஆயிரத்தைச் சொல்லட்டும். சுப்பிரமணியமா இருக்கட்டும்; சவுந்தரம் பரிமளமாக இருக்கட்டும்; மனோகரன் - பத்மாவாக இருக்கட்டும்; முகத்தார் ஆறுமுகத்தின்ரை புள்ளையெண்டுதான் ஊர்த்தே சத்திலை தெரியும்... ஏன் சதாசிவம் தங்கராசா எண்டாப் போலை என்ன? என்ரை மருமக்கள் எண்டாத்தான் நல்ல விளப்பமாகத் தெரியும். ஆனா, கடைத்தெருவிலை எத்தினை பேருக்கு என்னைக் குமாரசாமியின்ரை அப்பனெண்டுதான் தெரியுமெண்டு இவையளுக்குத் தெரியுமே? அண்டைக்குப் பஸ்ஸிலை நான் தெல்லிப்பழைக்குப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகேக்கிள்ளை ஒரு பொடியன் ''நீங்கள் குமாரசாமியின்ரை தகப்பனல்லோ?'' எண்டு கேட்டுப் போட்டு, தான் குந்தியிருந்த இடத்தை எனக்குத் தாறான். அந்தப் பொடியனும் பெரிய படிப்புத்தானாக்கும்.

''என்ன முகத்தார்? என்ன பொடியள் எல்லாம் வந்திட்டினமோ?'' ஐயம்பிள்ளை தன்னுடைய படலையில் நின்றபடி குரல் கொடுக்கிறார்.

''கோச்சி அப்பவே வந்திருக்கவேணும்''

''சுப்பிரமணியம் வராமல் நிற்கமாட்டான். மனோகரனும் வாறானாமோ?''

''ஓம். கடுதாசி போட்டிருந்தான்.''

''படலையிலை நிண்டு கதைக்கிறியள்? கடைக்குப் போறதுக்கு முந்திக் கொஞ்சம் பாவிச்சிட்டுப் போகலாமெண்டால்... என்ரை மனுஷியைத் தெரியாதே? ஆற்றையேன் சாட்டிலை தான்... உள்ளுக்கை வாருங்கோவன்.''

''இப்ப வாதக்குணமாவும் இருக்குது. ஒத்துக்கொள்ளுதுமில்லை''

''இது நித்தமே முகத்தார்? ஒரு வருஷம் பெருநாளுக்குத்தானே? உங்களைத் தூரத்திலை கண்டோடனையே, உங்களோடை தான் வருஷத்தைத் துவங்க வேணுமெண்டு ஆசை வந்திட்டுது.''

''ஏன்தான் உன்ரை ஆசையையும் கெடுப்பான்?''

முகத்தார் ஐயம்பிள்ளையுடன் கொஞ்சம் 'முஸ்பாத்தி' பண்ணிவிட்டு, அவருடனேயே கடைக்குச் சென்று, மக்கள் - பேரப்பிள்ளைகள் ஆகிய சகலருக்கும் இதமாகக் கறி - காய்கறி -பழ வகைகள் வாங்கிக்கொண்டு வீடு திரும்பும்பொழுது பத்து மணியாகிவிட்டது.

வீடு கலகலப்பு நிறைந்து காணப்படுகின்றது. சுப்பிரமணியமும் குடும்பமும் வந்தால் சத்தத்திற்குக் குறைவில்லை. பிள்ளைகள் புத்தாடை புனைந்து காணப்படு கின்றார்கள்.

'ஐயம்பிள்ளையோடை மினக்கட்டு நான்தான் நேரம் பிந்தீட்டன் போலை கிடக்குது. சுப்பிரமணியம் எல்லாப் புள்ளைகளுக்கும் ஒரு நிறத்திலைதான் உடுப்புகள் வாங்கியிருக்கிறான். இஞ்சை பாருங்கோவன் இவன் கடைக் குட்டி தன்ரை சட்டைதான் திறமெண்டு சண்டை பிடிக்கிறதை... ஓ, பரிமளமும் சதாசிவமும் கூட முழுகீட்டினம். உந்த உடுப்புகள் சரியான விலையாம். வருஷப்பிறப்புக்கு நெடுகிலும் உவை உப்புடித்தான் எடுக்கிறவை. கோயிலுக்குப் போகப் புறப்பட்டு


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நிற்கினை போலை. நல்லூரானே இதுகளுக்கு ஒரு புள்ளைப் பாக்கியத்தைக் குடு... சே, கண்ணூறு பட்டிடப்பிடாது.. பத்மாவுக்கு உந்தச் சீலை வடிவாத்தான் கிடக்குது. சாமத்திய வீட்டுக்குள்ளை சீலையோடு பாத்ததுக்கு இப்பதான் சந்தனக் கலர் நிறத்திலை தனக்கொரு சீலை வாங்கியர வேண்டும் எண்டு மனோகரனுக்கு எழுதினவள். அவன்தான் வாங்கியந்திருக்க வேணும்... இன்னும் சுப்பிரமணியமும் கமலாவும் முழுகி முடிக்கேல்லைப் போலை.... உங்கை கிணத்தடியிலை நிக்கினம்.'

''புள்ளை பத்மா! இத்தக் கறி சாமான்களைக் கொண்டுபோய் குசினிக்கை வை.''

''அப்பு காலைச்சாப்பாடும் இல்லாமலே கடைக்குப் போனவர்? நீங்கள் வருவியளெண்டு முட்டையும் பொரிச்சுக் காத்திருந்ததுதான் மிச்சம்.''

''அவன் ஐயம்பிள்ளை விடேல்லை. அவனோடை அப்படியே கடைக்குப் போனதும் நல்லதாப் போச்சுது. சவ்வு கிவ்வு இல்லாத நல்ல இறைச்சி கிடைச்சுது. சின்னதுகள் உறைப்புத் தின்னாயினம். பால்கறி வைக்க ஈரல் கிடைச்சுது. கொத்தார் இறைச்சி வகை தின்னாதவர். நல்லொரு பாரை கிடைச்சுது. மிச்சம் பொரியலுக்கும் உதவும். கைவியளத்தை முடிச்சிட்டுப் போயிருந்தால் கடையிலை ஒரு மண்ணும் வாங்கியிருக் கேலாது.''

''அப்புவுக்கு இந்த வருஷப்பிறப்பு நல்ல முழுவியளத்தோடை துவங்கியிருக்குது.'' என்று சொல்லிக்கொண்டே, பெரிய உமலைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு அடுக்களைப் பக்கம் பத்மா போகின்றாள்.

''இந்த வேட்டிதான் பெத்தப்பாவுக்கு'' என்று கூறிக்கொண்டே 'பீஸ்' வேட்டி ஒன்றை 'ரீப்போ' வில் அசோகன் வைக்கின்றான். ''சித்தப்பாவும் அப்பாவுக்குக் கரை போட்ட வேட்டி ஒண்டு வாங்கியந்தவர்.'' என்பதையும் அறிவிக்கின்றான். எவ்வளவோ தடுத்தும் பரிமளம் கேட்கவில்லை. அவள் நேற்றே 'பரமாஸ்' சோடி ஒன்று எடுத்துக் கொடுத்துவிட்டாள். தான் முன்னர் கொண்டு வந்த வேட்டியுடன் பெத்தப்பாவின் மற்றைய உடுப்புகளையுங்கொண்டு வந்து அடுக்கி ''டோய் பெத்தப்பாவுக்கு இந்த முறை நாலு புதுவேட்டி'' என்று உரக்கக் கத்தினான்.

''மூன்று வேட்டிதானே? ஒன்று சால்வையல்லோ?'' என்று மூலையில் நின்று மூத்தவள் ஹம்ஸதொனி திருத்துகின்றாள்.

''வீண் சிலவு. எவ்வளவு சொன்னாலும் கேக்கமாட்டுதுகள். அதுகளுக்கு ஏதோ செய்ய வேணுமெண்ட ஆசை. வீட்டோடை நிக்கேக்கிள்ளை உதெல்லாத்தையும் மனோகரன்தான் உடுத்துக்கிழிப்பான். இப்ப அவருமல்லோ எடுத்துத்தரத் துவங்கியிருக்கிறார். இதுகளை இனி உடுத்துக் கிழிக்கிறதுக் சௌந்தரத்தின்ரை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மூத்தவன் முகுந்தன் தான் இருக்கின்றான். அவனும் இந்த மார்கழியிலை சீனியர் சோதினை எடுக்கப் போறானாக்கும்.''

ஈரச்சீலையுடன் கமலா பெரிய அறைக்குள் ஓடுகிறாள். முற்றத்தில் கம்பிக்கொடிக்குப் பக்கத்தில் நின்று தலையைத் துவட்டிக் கொண்டிருந்த சுப்பிரமணியம்; ''மருத்து நீர் அந்தா கிணத்துக் கட்டிலை இருக்குது. போய்க் குளிச்சிட்டு வாருங்கோ அப்பு '' என்கிறான்.

''என்ன அவசரம்? மனோகரனும் முழுகீட்டு விடட்டன். எங்கை அவனைக் காணேல்லை?''

''உதுகள் ஏதோ ஐஸ்கிறீம் வேணும் சீனிச் சித்தப்பா எண்டதுகள்; அவன் வாங்கப் போயிட்டான் போலை கிடக்குது. அவன் ஆறுதலாகக் குளிக்கட்டும். நீங்கள் முதலிலை குளியுங்கோ; வருஷம் பிறக்கப்போகுது; கும்பம் வைக்கவல்லோ வேணும்?''

'ஓமோம்.' முகத்தார் கிணற்றடிக்குப் போகின்றார். கட்டியிருக்குஞ் சாறத்துடன் குளிப்பது அவருடைய வழக்கம். 'சனி நீராடு' என்று வாரத்திற்கு ஒரு முறை; மூன்று பெருநாள் நீராட்டம் பிரத்தியேகமாக வந்துசேரும். தலையிலே மருத்துநீரை வைத்து நன்றாகத் தப்புகின்றார்.

''சித்தப்பா, சித்தப்பா'' என்று அசோகன் ஆர்ப்பரிக்கிறான்.

குமாரசாமி வந்திட்டானோ?

ஆசையுடன் எட்டிப் பார்க்கிறார். தொட்டாச்சுருங்கி இலைகள் கூம்புகின்றன.

'இல்லை', அவன் மனோகரன்தான். மூண்டு நாலு மாசத்திலை கொஞ்சம் வளர்ந்திருக்கிறான். சொந்தமாகச் சம்பாரிக்கத் துவங்கீட்டால் கொஞ்சம் பூரிப்புத் தானே? நல்ல தாராளமாச் சிலவழிக்கிறார். ஓம், போய்க் கொஞ்சமாசந்தானே? இன்னும் கொழும்புப் பழக்கங்கள் நல்லாப் புடிபடேல்லைப் போலை... குமார சாமியை இன்னும் காணேல்லை. சிலவேளை, நல்ல நாளும் பெருநாளுமா எல்லாரும் கொண்டாட்டத்திலை நிக்கேக்கிள்ளை நான் ஏன் குழப்புவான் எண்டுபோட்டு நிண்டிடுவானோ?'

இந்த எண்ணம் ஏற்பட்ட, காலையில் இலேசாக உறுத்திய நெஞ்சில் முள் ஆழமாக இறங்குகின்றது. வலி தாங்கமாட்டாது அவஸ்தைப்படுகின்றார். அவஸ்தைப் பரிகார எத்தனத்தில் பெருமூச்சொன்று நீள்கின்றது... இயந்திர வேகத்தில் கைகள் துலாக் கயிற்றை மேலும் கீழுமாக இழுக்க வாளி வாளியாகத் தண்ணீர் தலையிலேயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டப்படுகின்றது.

''நானும் நல்ல வேளைக்குத்தான் வந்திருக்கிறன். எல்லாரும் மருத்து நீராட்டம் முடித்தாயிற்றுப் போலை... பத்மா இதைப் புள்ளையளுக்குப் பிரிச்சுக் குடு.''

'இது நிச்சயமாக் குமாரசாமியின்ரை குரல் தான். உந்த வெண்கலக்கடை யானையின்ரை குரல் அவன்ரைதான்.'

தண்ணீர் காதுக்குள் புகுந்து, தன் மனக்குகை நினைவுகளுக்கு உருவங்கொடுத்தது. மாரீச ஜாலம் நடைபெறுகின்றதோ என்று கூட ஒரு கணம் நினைக்கின்றார். இருந்தாலும் ஆசை இழுக்கின்றது.

''அப்பு எங்கே?''

''அவர் குளிக்கிறார். அப்பு! சின்னண்ணர் வந்திருக்கிறார்.'' என்று பத்மா குரல் வைக்கின்றாள்.

துளிர்க்கும் நம்பிக்கை, பச்சையின் பசுமையை உறிஞ்ச, மறைப்புத் தட்டிக்கு மேலால் எட்டிப் பார்க்கின்றார்.

முற்றத்தில் குமாரசாமி சிரித்தபடி நிற்கிறான். அவன் பக்கத்தில் பத்மா நின்று, அவன் கொடுத்த 'சரை' யிலிருந்த இஞ்சு விசுக் கோத்துகளைப் பங்கிடுகின்றாள். சுப்பிரமணியத்தின் கடைக்குட்டி, வேற்று முகத்தைக்கண்டு பயந்த மாதிரி, கதிரையின் பின்னால் மறைவதை அவன் கவனிக்கத் தவறவில்லை. அவனுடைய பயத்தைக் கவனித்த குமாரசாமி, ''நானுஞ் சித்தப்பாதான்... ஒருத்தருஞ் சொல்லித் தரேல்லையா?'' என்று சொல்லி மீண்டுஞ் சிரிக்கின்றான்.

'அதே சிரிப்பு. இவன்ரை சிரிப்பு ஒரு நாளும் மாறாது... என்னைப் போலை அந்தச் சுருட்டை மயிர் முன் குடும்பி வைச்சது போலை நிக்கிறதும் மாறாது. என்னதான் மனக் கோவங்கள் இருந்தாலும், அவன்ரை அந்தச் சிரிப்பைக் கண்டோடனை ஒருத்தருக்கும் அவனை ஏசப் பேச மனம் வராது. ஆரையும் மருட்டும்.'

''என்ன வாறனெண்டு அறிவிக்க ஒரு போஸ்டு கார்டு கிடைக்காமல் போச்சுது உனக்கு'' என்று முகத்தார் கடிந்து கொள்ளுகிறார்.

''எல்லாம் அவசரந்தான், அப்பு... போஸ்ட் காட் என்னத்துக்கு? நான்தான் நேரிலை வந்திட்டனே... அது கிடக்க பத்மா வருஷத்துக்குச் சீலை கட்டியிருக்கிறாள்.'' குமாரசாமி பத்மாவை அந்தக் கோலத்தில் அப்பொழுதுதான் முதன்முறையாகப் பார்க்கின்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஓம். இவன் மனோகரன் தன்ரை முதல் சம்பளத்திலை எடுத்துக் கொண்டாந்து குடுத்திருக்கிறான்'' வாளிக் கயிற்றைப் பிடித்துக் கொண்டே முகத்தார் சம்பாஷணையில் ஈடுபடுகின்றார்.

''அத்தான் எங்கே பத்மா? காரிலையே வந்தவர்?''

''இல்லை. ராத்திரி உத்தரதேவியிலை வந்து சேந்தவர். இப்ப அக்காவோடை கோயிலுக்குப் போயிட்டார்.'' என்று கூறிக்கொண்டே பத்மா அடுக்களைப் பக்கம் போகின்றாள்.

''புதுக் காரொண்டு எடுத்ததெண்டு கேள்விப்பட்டன். என்ன சாதிக்காராம்?''

''எனக்கென்னடா தெரியும்?''

''காரின்ரை விலையளும் இப்ப என்ன மாதிரி ஏறிக் கிடக்கு தெரியுமே? உங்காலை வீட்டுப் பொடியன் - அவன்தான் ரத்தினகோபால் - காரை வித்துப் போட்டு 'ஸ்கூட்டர்' வாங்கியிருக்கிறானாம்..''

''காரை விக்கேல்லையாம்... இசுக்கூட்டரும் வாங்கினவனாம்.''

''இப்ப ஏதும் சாமான் கீமான் வாங்க முடியுமே? அதுதான் வித்துப் போட்டான். அவன்ரை காரை ராசாத் தோட்ட சங்கரப்பிள்ளைதான் வாங்கினதாம். அவன்ரை கல்யாணப் பேச்சுக்கால் எப்பிடியாம்?''

''அது குழப்பிப்போய்க் கிடக்குதாம்.''

''நீங்கள் மானிப்பாய்ப் பகுதியிலை இருந்து வந்த சம்பந்தத்தையல்லோ சொல்லுறியள்? இது இங்காலை கோப்பாய்ப் பகுதியிலையாம்..''

''அதைப் பற்றி நான் கேள்விப்படேல்லை.''

தூணுடன் சாய்ந்துகொண்டு நிற்கும் மனோகரனைப் பார்த்து, ''தம்பி, உங்கடை கொம்பனியை அரசாங்கம் கெதியா எடுக்கப்போகுது போலை, தென் யூ வில் ஒல்சோ பிக்கம் ஏ கவுண்மென்ட் சேவண்ட்'' என்கிறான்.

''அப்படி நடக்காது...''

''நீ இருந்து பாரன் தம்பி... அப்பு! தங்கராசா அத்தானுக்கு அடுத்தமாசம் உத்தியோக உயர்வு கிடைக்கப்போகுதாம். தெரியுமோ?''

''உதுகள் எனக்குத் தெரியுமே?''


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

''முந்தநாள் அவரை ஸ்டேசனிலை கொண்டாந்து விடேக்கிள்ளை தான் அப்பிடி ஒரு புரமோஷன் கிடைச்சாலும் கிடைக்கும் எண்டு அத்தான் சொன்னவர்'' மனோகரன் தனக்குத் தெரிந்த சமாசாரத்தைச் சொல்லுகிறான்.

'இவன் ஊருக்கு வாறதே அத்தி பூத்தாப் போலை. ஆனா ஊரிலை நடக்கிற ஒண்டையும் விடாமல் அறிஞ்சு வைச்சிருக்கிறான்.'

முகத்தார் அவசர அவசரமாக மூன்று நான்கு 'பட்டை' களை ஊற்றி முழுக்கைச் சுபத்துடன் முடிகிறார்.

வந்துகொண்டே, ''ஆனைக்கோட்டை வைத்தியரின்ரை பொடிச்சியைப் பற்றிக் கேள்விப்பட்டனீயே...'' என்றார்.

''ஓமோம். நான் கேள்விப்பட்டன். சாதி ஒரு மாதிரி எண்டு தான் இவை கூத்தாடினவை. அவன் நல்ல பொடியன். கெலகதரையிலை படிப்பிக்கிறான்.''

''ஓ.... என்னவோ உப்பிடித்தான் ஒரு பேர் சொல்லுகினம்...''

தலையைத் துவட்டும்பொழுது, எந்தப் புத்தாடையை அணிவது என்னும் யோசனை அவரை ஆக்கிரமித்துக் கொன்கிறது. சிறுபிள்ளைத்தனமன்று. பெரிய பிள்ளைகளுக்குள் தன்னுடைய செயலால் மனத்தாங்கல் ஏற்படக்கூடாது என்பதில் அக்கறை.

அதற்கிடையில், ''நீங்கள் ஏன் ஈரத்தோடை நிக்கிறியள்? இதைக் கட்டுங்கோ. நீங்கள் விரும்பிக் கட்டுவியளே, நீலக் கட்டம் போட்ட சாறம்'' என்றபடி கையில் வைத்திருந்த ஒரு பார்சலை நீட்டுகின்றான்.

குசேலனின் அவல் முடிச்சை அவிழ்த்து உண்ட கண்ணனின் உள்ளத்திலேகூட இவ்வளவு மகிழ்ச்சி தோன்றியிருக்க முடியாது.

விரித்து உடுக்கின்றார்.

சலனமெதுவுமின்றி மற்றவர்களைப் பார்க்கிறார்.

மௌனம்.

''அப்புவுக்கு நல்லாத்தான் இருக்குது...'' வெளியே வந்த பத்மா மௌனத்தைக் கலைக்கின்றாள்.

''நீ நிண்ட ஊராலை வந்தனீயே? இரன்; கும்பம் வைக்கப் போகிறன். பொதுநாளா இருக்கிறதாலை உடனையே கைவியளம் குடுக்கலாமெண்டிருக்கிறன்.''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இல்லை அப்பு. எனக்கு உதுகளிலை அவ்வளவு நம்பிக்கை இல்லை எண்டது தெரியுந்தானே? அதோட விடியக் காலமையே கார்க்காரனிட்டைக் கைவியளம் வாங்கீட்டன்.''

முகத்தாரின் முகத்தில் மூட்டம்.

''இவன்தான் புதுநாணயமாப் புறந்தவன். ஒண்டிலும் நம்பிக்கை இல்லாதவன் டேய்! புத்தகப் படிப்பும், நீ எழுதுற கதையளும் நாடகங்களும் படிப்பில்லை. ஆவது அறிவது அறிவல்ல; வீட்டிலை வேவது அறிவதுதான் அறிவு. ஊரோடை ஒத்து வாழுறதுதான் படிப்பு'' - இவ்வளவு நேரமும் அமைதியாக இருந்த சுப்பிரமணியம் சொல்லுகிறான்.

''அதுக்கில்லை அண்ணை. நான் அஞ்சாறு பேரோடை வந்திருக்கிறன். ஊராங்கடை காசிலை அவங்களை இவ்வளவு தூரம் கூட்டியந்தனான். இந்த ஊருக்கு அவங்கள் புதிசு. அவங்களை ஹோட்டலிலை விட்டிட்டு நான் இஞ்சை மினக்கடுறது அவ்வளவு வடிவில்லை எண்டுதான் சொல்ல வந்தனான்.. அப்ப நான் வாறன்'' பதிலுக்குக் காத்திருக்காமல் திரும்புகின்றான்.

'என்ன இருந்தாலும் மரியாதை தப்பாது. ஆர் சொன்னாலும் தலையைக் கவண்டு கொண்டுதான் கேப்பான். மரியாதைக்காகத்தான். ஆனா, தான் நினைச்சதைத்தான் செய்வான்.'

''சின்னண்ணை.. இஞ்ச கோப்பி கொண்டந்துட்டன். குடியுங்கோவன்..'' என்று பத்மா கோப்பி கிளாஸை நீட்டுகிறாள். பதிலொன்றும் பேசாமல் அதை வாங்கிக் குடித்துவிட்டு, கிளாஸைத் திருப்பிக் கொடுக்கின்றான்.

முற்றத்து மாங்கன்றில், கும்பத்துக்கு மாவிலைகள் ஒடித்துக்கொண்டே, ''அப்ப மத்தியானச் சாப்பாட்டுக்கெண்டாலும் வாறியோ?'' என்று முகத்தார் கேட்கின்றார். நப்பாசையின் உள்முடிச்சு அவ்வினாவிற் காளத்திரியாட்டமிடுகின்றது.

''அவன்தானே அப்பு சொல்லிப் போட்டான். கூட்டாளியளை விட்டுப் போட்டு வரேலாது எண்டு'' என்று சுப்பிரமணியம் சொல்லுகின்றான். வழக்கத்தில் மூத்தவன் அதிகம் பேசுவதில்லை.

''அப்ப வாறன்... எல்லாருக்கும் வாறன்'' என்று கூறி அவசரமாகப் படலையைத் திறக்கும் குமாரசாமி, ஒரு கணந் தரித்து, ''அப்பு, இண்டைக்கு எங்கடை நாடகம் பின்னேரம் முத்தவெளியிலை நடக்கும்... நல்லா இருக்கும்... நேரம் இருந்தா வாருங் கோவன்.'' என்று குரல் கொடுத்துச் செல்லுகிறான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பம் வைத்து கைவிசேடம் பரிமாறப்பட்டாகிவிட்டது. விறாந்தையிலுள்ள 'செற்றி'க் கதிரைகளில் அமர்ந்து சுப்பிரமணியமும், சதாசிவமும் பேசிக் கொண்டிருக் கின்றார்கள். அவர்களுடைய பேச்சு சதாசிவம் புதிதாக வாங்கியுள்ள காரைச் சுற்றிச் சுழல்கின்றது. அவர்களுக்குச் சற்றுத் தூரத்தில், தூணிலே சாய்ந்தவாறு சௌந்தரத்தின் சார்பாக கைவிசேட வைபவத்திற் கலந்துகொண்ட முகுந்தன் நிற்கிறான்.

'அவன் மூத்த மாமனுக்கு நல்ல மரியாதை.'

கமலா, பரிமளம், பத்மா ஆகிய மூவரும் சமையல் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றார்கள். ஹம்சதொனியும் பெரிய மனுஷி மாதிரி கூடமாட வேலை செய்கின்றாள். குத்திப் பலகையில் இருந்துகொண்டு, அவர்களுக்கு மனோ கரன் தன்னுடைய கொழும்பு அநுபவங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

கறித்தேங்காய்களையெல்லாம் 'போர்'த் தேங்காய்களாக்கி முற்றத்திலே, போர்த் தேங்காயடி நடைபெறுகின்றது. யாருடன் என்ன விளையாட்டில் ஈடுபட்டிருந்தாலும், அசோகன் 'குழ'ப்பாமல் இருக்கமாட்டான். கல்லிலே பட்டுத்தான் தன்னுடைய 'கையான்' உடைந்ததாக அவன் சண்டை பிடிக்கிறான்.

புதுவருடத்துக்கு ஏனைய மக்களின் அன்பளிப்பாகக் கிடைத்த புத்தாடைகள் ரீப்போவில் இருக்கின்றன. அவற்றை முகத்தாரின் கண்கள் மேய்கின்றன.

''புள்ளை பத்மா!''

அவள் கைவேலைகளை விட்டுவிட்டு வருகின்றாள்.

''உந்த உடுப்புகளை எடுத்துவை புள்ளை. பின்னேரம் ஒருக்கா முத்தவெளிக் குப் போகவேணும், நாடகம் பார்க்க, போகேக்கை மூத்தண்ணர் வாங்கித் தந்த வேட்டியையும், கொத்தார் வாங்கித் தந்த சால்வையையுந்தான் போட்டுக் கொண்டு போகவேணும்.''

''ஐயோ, இளையண்ணர்தான் பாவம்''

''ஓம் தங்கச்சி. எளியவனாப் பிறந்தாலும், இளையவனாப் பிறக்கக்கூடாது.'' என்று மனோகரன் அடுக்களையிலிருந்தபடியே சொல்லுகின்றான்.

இதிலே என்ன நகைச்சுவையைக் கண்டார்களோ? அண்ணரும் அத்தானும் விழுந்து விழுந்து சிரிக்கின்றார்கள். மனோகரன் கையில் ஒரு நெருப்புக் கொள்ளியைத் தூக்கிக்கொண்டு, அடுக்களையின் மறைவான மூலையைப் பார்த்து நகருகின்றான்.

''இப்ப தம்பியும் பெரியாக்களைப் போலை'' என்று பரிமளம் குரல் எழுப்புகின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சும்மா சத்தம் போடாதை பரிமளம். இளையவன் எண்டாப் போலை நெடுகிலும் சின்னப்பொடியன் எண்ட நினைப்பே? அவனும் உழைக்கிறான்; சம்பாரிக்கிறான்'' என்று மச்சான் சார்பில் கமலா பேசுகின்றாள்.

'மனோகரன் சிகரெட் குடிக்கத் துவங்கீட்டான் போலை. ஓ உங்கை கிறாதியாலை புகை வருகுது. வளந்தாப் பிறகு, அது அது, அதுகளின்ரை விருப்பம்.'

'என்ன மருமகன்? சயன்ஸ் பாடங்கள்தானே? பேத்தனமா இங்கிலீஸை நெக் லட் பண்ணாதை.'

''ஹி இஸ் குட்இன் இங்லிஸ். கிறடிற் எடுப்பான்'' என்று சதாசிவம் முகுந்தனின் சார்பாக உத்தரவாதமளிக்கின்றான்.

''தூண் விழுந்திடப்போகுது அந்தக் கதிரையிலை இரன்.''

''அத்தான், உந்தத் தூணடியிலை நிண்டு பாத்தால் ஹம்சதொனி அடுப்படியிலை இருந்து வேலை செய்யிறது தெரியுதாக்கும்.''

''சதாசிவம்... வானதிக்குக் கூடப் பிந்தீட்டியள்.. அசோகனுக்கெண்டாலும் முந்தலாம். '' சதாசிவத்தின் கண்கள் பரிமளத்தைத் தேடுகின்றன.

வாயைப் பொத்தும்படி சுப்பிரமணியத்திற்குக் கமலா சைகை காட்டுகின்றாள்.

⅄ ⅄ ⅄ ⅄

விறாந்தை ஓரத்தில் விழுந்து கிடந்த ஓர் இஞ்சி விசுக்கோத்தை எட்டியெடுத்த முகத்தார், குழந்தையின் சுபாவத்துடன் ஒருவருக்குந் தெரியாமல் தன்னுடைய தளர்ந்து போன பற்களுக்கிடையில் நசுக்குகின்றார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அரும்பதங்கள்/ பேச்சு வழக்கு

**சங்கை** - மரியாதை, கௌரவம்

**இறப்பு** - கூரையைத் தாங்கும் மரம்

**பொச்சு மட்டை** - தேங்காய் மட்டை

**பொச்சந் தீரவில்லை** - திருப்தி ஏற்படவில்லை

**கைவியளம்** - கைவிஷேடம்

**வாகடங்கள்** - சமுதாயம் பாரம்பரியமாகப் பின்பற்றி வரும் சம்பிரதாயங்கள்.

**மடி சஞ்சு** - காசு வைப்பதற்காகத் துணியினால் தைக்கப்பட்ட சிறு பை

**சீமை** - வெளிநாடு

## மையக் கருத்து

குறித்த சமூகத்தில் குடும்பம் என்ற அமைப்பின் முக்கியத்துவமும் குடும்பத்தில் உறவுகளின் இயங்குநிலையும்.

## கதைக்களம்

நவீன நாகரிக மாற்றங்களுக்கு முழுமையாக உட்படாத பாரம்பரிய அம்சங்களைக் கொண்ட யாழ்ப்பாணக் கிராமம்.

## பாத்திர வார்ப்பு

சிறுகதையின் பிரதான கதாபாத்திரம் முகத்தார் என்ற ஆறுமுகம். முகத்தாரோடு தொடர்புபட்ட வகையில் ஏனைய கதாபாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுப்பிரமணியம் (மூத்த மகன்)**

**குமாரசாமி (இரண்டாவது மகன்)**

**மனோகர் (இளைய மகன்)**

**பரிமளம், சவுந்தரம், பத்மா (மகள்மார்)**

**கமலா (மருமகள்)**

**ஆறுமுகம் (முகத்தார்)**

- குடும்ப கட்டமைப்பில் ஈடுபாடுகொண்டு அதனைச் சிறப்புற இயக்குவதில் அக்கறைகொண்டவர்.
- தனது பிள்ளைகளின் மனோநிலைகள், அவற்றின் போக்குகளுக்கேற்ப அவர்கள் நடத்தையையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு.
- வேறுபாடுகள், முரண்பாடுகள் என்பவற்றுக்கிடையேயும் குடும்பத்தை நேசித்து அதனை ஒருங்கிணைப்பவர்.
- சடங்கு, சம்பிரதாயங்களில் நாட்டங்கொண்டவர்.

**குமாரசாமி**

- பிறரது கருத்துக்கள், அபிப்பிராயங்கள் பற்றி அக்கறை செலுத்தாது தனக்குச் சரி எனத் தோன்றுவதைச் செயல்படுத்துவதனால் குடும்ப அங்கத்தவர்களின் வெறுப்புக்குள்ளான பாத்திரம்.
- சமூக நோக்கினாலும் பல்துறை ஆற்றலினாலும் சமூகச் செல்வாக்கை தனதாக்கிக் கொண்டவர்.
- முற்போக்குச் சிந்தனை கொண்டவர்.
- சடங்கு, சம்பிரதாயங்களில் நம்பிக்கையற்றவர்.
- சமூகச் செயற்பாடுகளில் ஈடுபாடுகொண்டவர்.
- குடும்பத்தின் மீதான அன்பை நாசூக்காக வெளிப்படுத்துபவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எடுத்துரைப்பு முறை

- தந்தையொருவரின் கடந்தகால நினைவுகள், நிகழ்காலப் போக்குகள், பாசம், ஆசைகள், எதிர்பார்ப்புக்கள் கலந்த மனவோட்டமாகக் கதை கூறப்படுகிறது.
- நனவோடை உத்தி கையாளப்பட்டுள்ளது.

## கதைப்பின்னல்

- வருடப் பிறப்பன்று முகத்தாரின் துயில் எழுதலுடன் கதை ஆரம்பமாகின்றது.
- முகத்தார், தன்பிள்ளைகளோடு புதுவருடத்தைக் கொண்டாட ஆயத்தமாகும் தருணத்தில் தனது இரண்டாவது மகன் குமாரசாமியின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருப்பதாக நிகழ்ச்சிகள் விரித்துச் செல்லப்படுகின்றன.
- இரண்டாவது மகனின் வருகைக்குப் பின்னரான முகத்தாரின் மகிழ்ச்சிச் செயற்பாடுகள், குறிப்பாக மகனின் நாடகத்தைக் காணவேண்டும் என்ற எதிர் பார்ப்பு முதலியன உணர்வுபூர்வமாகக் கோர்க்கப்பட்டுள்ளன.
- முகத்தார் விறாந்தை ஓரத்தில் கீழே விழுந்து கிடந்த, குமாரசாமி வாங்கி வந்த இஞ்சி பிஸ்கட் துண்டை ஒருவருக்கும் தெரியாமல் தனது பற்களுக்கிடையில் ஆசையோடு நசுக்கும் செயல் முகத்தாரின் உள்ளார்ந்த உணர்வை வெளிப் படுத்துவதோடு கதை முடிவடைகிறது.

## மொழிநடை

- யாழ்ப்பாணப் பேச்சுத்தமிழ் உயிரோட்டம் மிக்கதாகக் கையாளப்பட்டுள்ளது.
- யாழ்ப்பாணப் பண்பாட்டு வழக்காறுகளினைப் புலப்படுத்தும் வகையில் மொழிநடை கையாளப்பட்டுள்ளது.
- சிறிய தொடர்களிலான வாக்கியங்களினூடாகக் கதையை நகர்த்திச் செல்லும் நடைச்சிறப்பைக் காணமுடிகிறது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கற்றல் வினாக்கள்

1. யதார்த்தமான நிகழ்வுகளில் பாத்திரங்களைப் பொருத்திக் கதையை நகர்த்து வதில் ஆசிரியரின் சாமர்த்தியம் வெளிப்படுமாற்றைத் துலக்குக.
2. முகத்தார் என்ற பாத்திரம், குடும்பம் என்ற தேரின் அச்சாணியாக விளங்கு மாற்றை எடுத்துக் காட்டுக.
3. சடங்கு, சம்பிரதாயங்களைப் பின்பற்றுவதில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இச் சிறுகதை பிரதிபலிக்கின்றதா? விபரிக்குக.
4. குமாரசாமியின் மீதான முகத்தாரின் பரிவையும், பெருமிதத்தையும் எடுத்துக் காட்டி அவை கதை வளர்ச்சிக்கு உதவுமாற்றினை விளக்குக.
5. முதியோர்களின் எதிர்பார்ப்புக்கள், விருப்புவெறுப்புகளுக்கு இன்றைய சமூகத்தில் கொடுக்கப்படும் முக்கியத்துவம் தொடர்பாக உமது கருத்துக்களை முன்வைக்குக.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எனக்கு வயது பதின்மூன்று



அ. ஸ. அப்துல் ஸமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதையாசிரியர் அறிமுகம்

| | |
|---|---|
| **பெயர்** | அ. ஸ. அப்துல் ஸமது |
| **காலம்** | 07.09.1929 - 01.07.2001 |
| **இடம்** | அக்கரைப்பற்று |
| **கல்வி** | தமிழ் சிறப்புக் கலைமாணி<br>வித்தியாலங்காரப் பல்கலைக்கழகம் – களனி<br>ஆண்கள் பாடசாலை – அக்கரைப்பற்று |
| **பணி** | விரிவுரையாளர்<br>ஆசிரியர் |
| **படைப்பு** | சிறுகதை – நூர்ஜஹான், இதயக்கதவு, சாவின் எல்லை முதலியன<br>நாவல் – பனிமலர், கனவுப் பூக்கள் முதலியன<br>கவிதை – ஆடுகொடியானை முதலியன<br>கட்டுரை – சீறா இன்பம், பாத்திமாவின் நுதல் அழகு முதலியன<br>ஆய்வு – இஸ்லாமிய இலக்கிய நோக்கு |
| **விருது** | இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எனக்கு வயது பதின்மூன்று ஆகிறது. நான் சிக்கந்தர் போடியாரின் வீட்டுக்கு வேலைக்காரியாக வந்து ஐந்து வருடங்கள் ஆகின்றன. இதுவரை நான் அறிந்த உலகம் இந்தப் போடியாரின் வீடுதான்.

'என்னைப் பெத்தவ' என்று சொல்லிக்கொண்டு என் உம்மா மாதம் ஒருக்கா போடியார் ஊட்டுக்கு வருவா. போடியார் எனக்குரிய சம்பளம் பதினைந்த ரூபாவையும் அவ்விடம் கொடுப்பார். அதுவும் சும்மா இல்லை. என் உம்மா வரும் நாள் பார்த்து, போடியார் ஊட்டில் ஏதாவது வேலை காத்திருக்கும். '' ஆசியா இந்தக் கொள்ளியைக் கொத்திவிடு, இந்தத் தேங்காய் பதினைந்தையும் உரித்து தந்திரு, நெல் மூண்டு மரைக்கால் கெடக்கு. அவிச்சுக் காய வையேன் '' இப்படி ஏதாவது வேலை வாங்கி விடுவா போடியார் பெண்சாதி, இப்படியெல்லாம் செய்தும் மத்தியானச் சாப்பாட்டுக்கு முன்னம் கையில காசக் கொடுத்து என் தாயை அனுப்பிவிடுவாள் அந்தச் சீமாட்டி.

''நான் வாறன் மகள்!'' என்று கூறிக்கொண்டு உம்மா போய்விடுவா. உம்மா இப்படி ஒரு வார்த்தை சொல்வதில் எனக்கு எவ்வித மகிழ்ச்சியும் இல்லை. அவ சொல்லாமல் போய்விட்டாற்கூட எனக்கு எவ்வித கவலையும் இல்லை. சிலவேளை இவதான் என்னைப் பெத்தவவா? ஒரு தாய் ஒரு மகள் மீது செலுத்தும் பாசம் இவ்வளவுதானா? என்ற வினாக்கள் கூட என் மனதில் எழும்.

யார் பெத்தா என்ன? யார் வளர்த்தா என்ன? இந்தப் பூமிக்கு நாம வந்திற்றம். கூடவே வயிறென்ற ஒன்றையும் மனம் என்ற இன்னொன்றையும் கொண்டு வந்திற்றம். அதுக்காக ஆடித் தொலைக்க வேண்டியதுதானே. நானும் இந்தப் பூமியில் பொறந்த ராசி, மறு வருஷமே என் வாப்பா மவுத்தாகிப் போக உம்மா கைம்பொண் ஆயிற்றா. உள்ள பிள்ளைகளை வளர்த்துக்க வக்கில்லாமல் அவைகளை இப்படி ஆரார் வீட்டுக்கோ தானம் பண்ணி வயிறு வளர்க்கிறா. மூத்தவ பருவ வயதாயிற்றா. எப்பவோ கலியாணம் ஆகியிருக்க வேணும். என் உம்மா தினசரி நெல் குத்திவிப்பா, மாதம் முடிந்ததும் என் சம்பளம் பதினைந்து ரூபாவும், காக்காட சம்பளம் இருபது ரூபாவும் கைக்கு வரும். இதக் கொண்டு உம்மா எந்தக் குமரை நிறைவேற்றுவா? எல்லாம் சேர்ந்து சோத்துக்கும் உடுப்புக்கும் போதா.'

சிக்கந்தர் போடியாருக்கு என்னைவிட இரு வயது மூத்த பெண்பிள்ளை ஒன்று இருக்கா. ஸரீனா என்று பெயர். உள்ளூர் மகா வித்தியாலத்தில் பத்தாம் வகுப்புப் படிக்கா. அந்தப்பிள்ளை பாய்களிசானும், கௌனும், தாவணியும் அணிந்து. இரட்டைப் பின்னலும் போட்டுக்கொண்டு பள்ளிக்குப் போவா. அதப் பாக்கவே எனக்கு ஆசை பொங்கும். ராஜகுமாரத்தி மாதிரி எவ்வளவு அழகா இருப்பா. பள்ளி தவிர வேறு எங்கேயும் போறதெண்டால் மடிப்புக் குலையாத கட்டைப் பாவாடையும் சேட்டும் போட்டுக்கொள்வா. அது அவவுக்கு இன்னும் அழகு. போன ஹஜ்ஜுப் பெருநாளைக்கு சிவப்பு நிறக் கட்டைப் பாவாடையும் ப்ளௌசும் போட்டிருந்தா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அந்தச் செவ்வரத்தம் பூ சிவப்பு நிறம் இன்னும் என் கண்ணைவிட்டு மாறவில்லை. இந்த உடுப்பழகுக்காகவே ஸரீனாவோடு எனக்கு ஒரு பிரியம். ஏன் பொறாமை என்று கூடக் கூறலாம். இத அறிஞ்சாப் போடியார் பெண்சாதி என்னைத் தொலைச்சிருவா...

போன ஹஜ்ஜுப் பெருநாளைக்கு கூப்பன் கடையில் சீத்தை வாங்கி எனக்கி ஒரு நீட்டப்பாவாடையும், போளைக்கைச் சட்டையும் தச்சிக் குடுத்தாங்க, அதப் போட்டுக்கிட்டு கண்ணாடியின் முன் நின்று பார்த்தேனே, என்ர அல்லாவே என்ன அலங்கோலம்; என்ர கண்ணால தண்ணீயே வந்து விடும் போலிருந்தது. அவங்கட புள்ளயப்போல நானும் ஒரு குமர்தான். வரவரத் திறந்த மார்போடு திரிய எனக்கு ஒரு வித வெட்கமாக இருக்குது. ஒரு மேலாக்காவது இருந்தா மார்பை மூடிக்கொண்டு கூச்சம் இல்லாமல் திரிவேன். இந்தப் போடியார் பெண்சாதியிடம் சொன்னேன். அதற்கு அவ'' இப்ப பொடவ சீல விக்கிற வெலக்கி, இதெல்லாம் கட்டுமாடி, இப்ப என்ன வயதா உனக்கு. அதெல்லாம் பொறகு பார்த்துக்கலாம் '' என்று சொன்னா. மன்னவன் பேச்சுக்கு மறுபேச்சு இருந்தாலும் மகாராணி பேச்சுக்கும் மறுபேச்சு உண்டோ? நான் ஒரு வேலைக்காரி என்பதை என் உடை நடையிலேயே காட்டணும் என்பது அவர்கள் எண்ணம். அழகான பாவாடையும், எழிலான தாவணியுமாக நான் திரிந்தா, அவங்க மகளுக்கும் எனக்கும் வித்தியாசமில்லாமல் போய்விடுமே!

இன்னும் இரண்டொரு வருடத்தில் நானும் பெரியபுள்ள ஆயிடுவேன். பருவம் ஆயிற்றா முஸ்லீமான நாங்க பிடவை தானே உடுக்கணும். அப்பொழுது போடியார் மகளும் பள்ளியை விட்டுடுவா, அப்புறம் அவவும் பிடவைதான் உடுப்பா அவ, விதம்விதமான பிடவையெல்லாம் உடுப்பா, எனக்கோ கூப்பன் கடைச் சீத்தையும் மருதமுனைத் தறிப் பிடவையுமாகத்தானே வாங்கித் தருவாங்க. நான் ஏழை வகுத்துல பொறந்தவள். ஸரீனாவின் தகுதிக்கு நான் எப்படி ஈடுகொடுக்க முடியும்? ஆண்டவன் தான் எங்கள இப்படி வித்தியாசம் வித்தியாசமாகப் படைச்சிற்றானா? அல்ல இப்படியான அந்தஸ்து பாகுபாடுகளை நாங்கள் தான் உண்டாக்கிக்கொண்டோமா? எனக்கு ஒன்றும் விளங்குதில்லை.

ஐந்து வருஷமாக இந்த ஊட்டில தொடர்ந்து மாடா உழைகிறேன். அதிகாலை ஸுபஹுக்கு எழுந்து தேயிலைக்குத் தண்ணி வைத்திற்று, வீடு வாசலைக் கூட்டத் தொடங்கினா, அப்புறம் இரவு ரேடியோவில் பாட்டெல்லாம் முடிந்த பொறகுதான் படுக்கையில் கொண்டு விழுவேன். எந்நேரமும் சுழன்று சுழன்று வேலை செய்வது எனக்குப் பழகிப் போயிற்று. சும்மா உட்கார்ந்திருப்பது ஏலாமலிருக்கிறது. துடிதுடிப்பானவ, அலுப்பில்லாம வேலை செய்வாள், நல்லவள் என்று போடியார் பெண்சாதி வீட்டுக்கு வருகிறவர்களிடம் என்னைப்பத்தி புகழுவா. ஒரு விஷயத்தில் மட்டும் போடியார் பெண்சாதிக்கு என்னோட கோபமும் சந்தேகமும் கூட.

ஒன்றுமில்ல, போடியாரின் மூத்த மகன் தாஹா என்னோடு கொஞ்சம் இரக்கமாகப் பழகுவார். அவரும் மகாவித்தியாலயத்தில் பன்னிரெண்டாம் வகுப்புப் படிக்கிறார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவர் உடுப்புகளைக் காயவைத்தால், நான் அதை எடுத்து மடித்துக் கொண்டு போய், அவரது அறையில் வைப்பேன். அவரது அறைக்குத் தேனீர் கொண்டு போனால், மேசையில் கிடக்கும் புத்தகங்களைப் புரட்டிப் படம் பார்த்துக்கொண்டு நின்றுவிடுவேன். அவர் எதுக்கு எடுத்தாலும், ''ஸல்மா இஞ்சவா, இந்தச் செருப்பில சேறு பட்டிரிக்கி, அதைக் கழுவிக் கொண்டுவா! குடிக்கத் தண்ணி கொண்டுவா! இந்தத் தலையணைக்கு உறைமாற்று'' இப்படி ஏதாவது வேலை சொல்லிக் கொண்டிருப்பார். ஒளிக்காமல் சொன்னால் அவர் என்ன வேலை சொன்னாலும் அதச் செய்வதில் எனக்கொரு மகிழ்ச்சி.

இந்தச் சம்பவம் ஒன்றும் போடியார் பெண்சாதிக்குப் பிடிக்காது. ''வளந்த ஆண் பிள்ளையோட கணக்காப் பழகணும்டி'' என்று என்னைக் கண்டித்துப் பேசுவா. இதுக்கு நான் என்ன செய்வேன். நான் அவரை மிக மரியாதையாகக் காக்கா எண்டுதான் கூப்பிடுவேன். ஆனால் ஒருநாள் அவர்தான் என்னைக் கையில பிடித்து இழுத்து என் கன்னத்தில் செல்லமாக அடித்தார். இத நான் யாரிடமும் சொல்லவில்லை. இவ்வளவு இரக்கமாக இருக்காரேயெண்டு எனக்கும் அவரோட ஒரு பாசம் இல்லாமற் போகுமா?

இத மனதில் வச்சித்தானோ என்னவோ ''அவளுக்கு வயதாப்போயிற்று. எப்படியும் அவள, அவள்ற வீட்டுக்கு அனுப்பினாக்கூட நல்லது. நாம வேற சின்னப் பிள்ளை யாக ஒண்டு பாப்பம்'' என்று போடியார் மனைவி, போடியாரிடம் ஒரு நாள் கூறினார்.

அதுக்குப் போடியார், ''இவள அனுப்பினா இவளப்போல பழகின பிள்ளையெண்டு இலேசில் அகப்படுமா? அதுவும் பதினைந்து ரூபாய்க்கு எங்கே கிடைக்கப்போகுது?'' என்று சொன்னார். போடியார் பெண்சாதி விழுங்கவும் முடியாமல், துப்பவும் முடியாமல் கஷ்டப்பட்டதை குசினிக்குள் நின்ற நான் பார்த்துக்கொண்டிருந்தேன்.

இந்தச் சம்பவத்துப் பிறகு நான் காக்காவோடு அவ்வளவாகப் பழகுவதில்லை. ''ஸல்மா! ஸல்மா!'' எண்டு அவர் கூப்பிட்டாக்கூட, நான் அவர்ர அறைப் பக்கமே போகமாட்டேன். ''என்னெண்டுகேளேன்'' எண்டு போடியார் பெண்சாதியும் கூறமாட்டா. பதிலுக்கு அவவே போய் ''என்ன தம்பி வேணும்?'' என்று கேட்பா, அல்லது ஸரீனா போய் அந்த வேலையைச் செய்வா. இந்த வித்தியாசம் எனக்கு விளங்காமல் நான் என்ன சிறு குழந்தையா? எனக்கு இதப்பத்தித் கவலையும் இல்லை.

இப்போது காக்கா என்கிறேன். நாளைக்கு மச்சான் என்கிற காலமும் நேரமும் வந்துவிடவா போகிறது? நான் எவ்வளவு நல்லவளாகவும், அழகியாகவும் இருந்தாலும், நான் ஏழை. அவங்க பணக்காரர். நான் தண்ணி. அவங்க எண்ணெய். ஒரு போத்தலுக்க இரண்டு இருந்தாலும் ஒன்று சேரவா போகிறது?

தின்ன உண்ண மட்டும் இவ்வீட்டில ஒரு குறையும் இல்லை. இருநூறு அவணம் முன்னூறு அவணம் என்று ஒவ்வொரு வருஷமும் நெல் வருது. இந்த நிலையில் சோற்றுப் பஞ்சம் இந்த வீட்டில் எப்பிடி வரும்? இருந்தும் உணவால் உடல் வளரும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மன மகிழ்வும் திருப்தியும் எப்பிடி வரும்? என்று நான் யோசிப்பேன். தின்பதில் குடிப்பதில்கூட நான் ஒரு வேலைக்காரியாகத்தான் நடத்தப்படுகிறேன். எனக்கு சோறு தின்ன ஒரு பீங்கான். தேனீர் குடிக்க ஒரு கோப்பை. படுக்க ஒரு தனிப்பாய். அதற்குத் தலையணையே கிடையாது. இப்படி ஒரு நடைமுறை இந்த வீட்டில் உண்டு.

எல்லோரும் சாப்பிட்டு முடிந்ததும் நான் என் பீங்கானைக் கழுவி எடுத்துப் போய் என் சோத்தை வாங்கிக் கொள்ளவேண்டும். அதுபோல எல்லோரும் தேனீர் குடித்து முடித்ததும், நான் எனது கோப்பையைக் கழுவி எடுத்துச் செல்லவேண்டும். சிறைக்கைதிகளும் இப்படித்தான் என்று யாரோ கதைத்தார்கள். நானும் இவ்வீட்டில் ஒரு சிறைக்கைதியா? தேயிலைக்குத் தண்ணீர் வைப்பது நான்; அரிசி கழுவுவது, மீன் வெட்டுவது, மரக்கறிவகை அரிவது எல்லாம் நான் உண்ணும்போதும், குடிக்கும் போதும் மட்டும் நான் இழிந்த சாதியாக எப்படி மாறுகிறேன்.

முஸ்லிம்களெல்லாம் சமமானவர்கள், சகோதரர்கள் என்று சொல்கிறார்கள். நான் மட்டும் இந்தச் சகோதரர்களில் சேரவில்லையா? என் உம்மா, ஐந்து 'வக்து'ம் ஒழுங் காகத் தொழாவிட்டாலும் நோன்பு முப்பதும் பிடிப்பா, 'தறாவீஹ்' தொழப்போவா, ஹறாம் ஹலாலுக்குப் பயந்து நடப்பா. அவ வயத்துல பிறந்து ஸல்மா என்று பெயரும் வைத்துக் கொண்ட நான் வேலைக்காரியான காரணத்தினால்தானே இழிந்த வளானேன்! என் ஆசையின்படி உடுக்கமுடியவில்லை! என் எண்ணத்தின்படி நடக்க முடியவில்லை!

அடுத்த தெருவில் ஒரு நெசவு நிலையம் இருக்கிறது. குமர்ப்பிள்ளைகளெல்லாம் அங்குபோய் தொழில் பழகுதுகள். அதன் விருப்பம்போல உடுத்திக்கொண்டு சந்தோஷமாகக் கதைத்துக்கொண்டு போகுதுகள். எனக்கு என்ன தொழில் தெரியும்? இந்த வீட்டுக்கு வந்து என்னத்தைப் படிச்சுக் கொண்டேன்! ஸல்மாவின் சிந்தனை எதிர்நீச்சல் அடிக்கத்தொடங்கிற்று. அதனைத் திருப்பி எடுப்பது இனி இயலாத காரியம்.

மறுநாள் ஸல்மா அந்த வீட்டில் இருந்து விலகினாள். போடியார் பெண் சாதி சந்தோஷமாகப் பதினைந்து ரூபாய் சம்பளத்தையும் கொடுத்தா. போடியார் அன்பளிப்பாக நூறு ரூபா கொடுத்தனுப்பினார். ஐந்து வருடங்களுக்குப் பின்னர் தன் தாய் வீட்டின் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு மன நிறைவான ஒரு வாழ்வு வாழ ஸல்மா மிக வேகமாகத்தன் வீட்டை நோக்கி நடந்தாள்.

பாய் களிசான், கௌன், மார்பகத்தில் தாவணி இத்தனையும் அணிந்துகொண்டு, எடுப்பான அழகுத் தோற்றத்தோடு, கையில் குறிப்புக் கொப்பியுடன் நெசவு நிலையம் நோக்கி நடந்து செல்லும் புதுப்பிள்ளை வேறு யாருமில்லை! அந்தப் பதின்மூன்று வயது வேலைக்காரி ஸல்மாதான். அவள் இப்பொழுது நெசவு பழகுகிறாள். அவளது கம்பீர மான நடை, களங்கமற்ற நேர்பார்வை என்பன அவளுடைய எதிர்கால வாழ்வின் வெற்றிக்கு நம்பிக்கையான ஆதாரங்களாக அமைந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரும்பதங்கள் / பேச்சு வழக்கு

**ஸுபஹு** - அதிகாலை நேரத் தொழுகை

**தறாவீஹ்** - நோன்பு கால இரவு நேரத் தொழுகை

**ஹலால்** - அனுமதிக்கப்பட்டவை

**ஹறாம்** - விலக்கப்பட்டவை

**அவணம்** - நெல் அளக்கும் அளவீடு

**போடியார்** - வயல், விவசாய நிலங்களை உடையவர்

**வக்து** - வேளை (ஐந்து நேரத் தொழுகை)

## மையக் கருத்து

பணக்கார வீடுகளில் வேலைக்கமர்த்தப்படும் ஏழைப் பெண் பிள்ளைகள், சுயமாக வாழும் விருப்பம், வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் என்பவற்றைக் கொண்டவர்கள். அவர்கள் தம்மீதான அடக்கு முறையை உணரும்போது தமக்கான சுதந்திரமான வாழ்க்கையை அமைத்துக்கொள்ளத் துணிவர்.

## கதைக்களம்

ஏற்றத் தாழ்வுகளைக் கொண்ட சமூகத்திலமைந்த ஏழைச் சிறுமி வேலைக் கமர்த்தப்பட்ட பணக்கார வீடு.

## பாத்திரவார்ப்பு

- கதை சொல்லியாக அமையும் பிரதான பாத்திரம் - சல்மா
- அதனோடு ஊடாடும் விதமாகப் பின்வரும் பாத்திரங்கள் படைக்கப் பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சிக்கந்தர் போடியார்
- போடியாரின் மனைவி
- போடியாரின் மகள் - சரீனா
- போடியாரின் மகன் - தாஹா
- சல்மாவின் தாய் - ஆயிஷா

**சல்மா**

- பணக்காரர்களின் சுரண்டல்களுக்கும் அடக்கு முறைகளுக்கும் உட்பட்ட ஏழைச் சிறுமி.
- இயலாமைக்கு உட்பட்டு, துயருற்று மனப்போரட்டத்தில் சிக்கித் தவிப்பவள்.
- சராசரி ஆசாபாசங்களைக்கூட அனுபவிக்க முடியாது ஏங்குபவள்.
- பிறரின் விருப்பு, வெறுப்புகளாலும் பாதிக்கப்படுகின்ற நிர்ப்பந்தத்திற்கு உள்ளானவள்.
- துணிகரமான தீர்மானத்தை எடுத்துச் செயற்படுபவள்.

**போடியாரின் மனைவி**

- எஜமானிக்குரிய அதிகாரத்தையும், மனிதாபிமானமற்ற நடத்தைகளையும் வெளிப்படுத்தும் பாத்திரம்.
- சிறுமிகளான சல்மாவையும் தன் மகளையும் வேறுபடுத்தி நோக்கும் ஓரவஞ்சனைத்தனம் உடையவள்.
- தனது மகனின் தவறுக்காக ஏழைச் சிறுமியைக் கண்டிக்கும் நியாயமற்ற தன்மையுடையவள்.
- சிறுமியின் ஆசைகளையும் ஏக்கங்களையும் உணராத இரக்கமற்ற மனப் பாங்குடையவள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**சிக்கந்தர் போடியார்**

- கஞ்சத்தனமும் உழைப்பைச் சுரண்டும் இயல்பும் கொண்டவர்.

## எடுத்துரைப்பு முறை

- கதை சொல்லியாக வரும் கதையின் பிரதான பாத்திரம், தன் மனவுணர்வுகளைத் துல்லியமாக வெளிப்படுத்தல்.
- முரண்பட்ட இயல்புகளையுடைய பாத்திரங்களின் ஊடாட்டத்தின் மூலம் கதைக்கருவிற்கு வலுச் சேர்த்தல்.
- பிரதான பாத்திரம் சமூகத்தைப்பற்றி விமர்சிப்பதனூடாக, சமூக ஏற்றத்தாழ்வு பற்றி வாசகரைச் சிந்திக்கத் தூண்டுதல்.

## கதைப்பின்னல்

- பணக்கார வீடொன்றில் வேலை செய்யும் ஏழைச் சிறுமியின் அன்றாடச் செயற்பாடுகளும், அவளது உணர்வுகள், இயலுமைகள் மற்றும் இயலாமைகள் போன்றனவும் ஏனைய பாத்திரங்களின் செயற்பாடுகளோடு பொருத்தி வெளிப்படுத்தப்படும் வண்ணம் இக்கதை பின்னப்பட்டுள்ளது.
- சல்மாவின் தாயான ஆயிஷா என்ற பாத்திரச் சித்திரிப்பானது, அவளது குடும்பப் பின்னணியை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.
- போடியார் வீட்டினருடனான சல்மாவின் ஊடாட்டத்திற்கூடாக வர்க்க பேதச் செயற்பாடுகளும், அதன் தாக்கங்களும் வெளிப்படுத்தப்படுகின்றமை.
- சல்மா அடக்குமுறையில் இருந்து விடுபட்டு, சுதந்திரமாகத் தொழில் செய்து தன்மானத்துடன் வாழத்துணிவது சிறுகதையின் திருப்புமுனையாக அமைகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொழிநடை


- பாத்திரங்களுக்குப் பொருத்தமான முறையில் முஸ்லிம் சமூகம் சார்ந்த வட்டாரப் பேச்சு வழக்கில் அமைந்த உரையாடல்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன.
- கட்டிறுக்கமான மொழிநடை.
- தேவைக்கேற்றவாறு பிறமொழிச் சொற்களின் பயன்பாடு.

## கற்றல் வினாக்கள்

1. ''எனக்கு வயது பதின்மூன்று'' என்ற சிறுகதையில் ஸல்மா என்ற பாத்திரம் பெறும் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.
2. கதைச்சித்திரிப்பில் கதாசிரியரின் ஆற்றல் வெளிப்படும் விதத்தினை தெளிவு படுத்துக.
3. பணக்கார வர்க்கத்தின் மனப்பாங்கு ''போடியார் மனைவி'' என்ற பாத்திரத் தினூடாக வெளிப்படுமாற்றை விளக்குக.
4. தாய் சேய் உறவில் குடும்பப் பொருளாதாரம் செல்வாக்குச் செலுத்தும் விதத் தினை ஆயிஷா, சல்மாவை முன்னிறுத்தி ஆராய்க.
5. ஸல்மா என்ற பாத்திரத்தை ஒத்தவர்கள் நமது சமூகத்தில் வாழ்கின்றார்கள் இவர்களின் வாழ்வில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதாகவே கலை இலக்கியங்கள் அமைய வேண்டும் அலசுக.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கூத்து



சீனித்தம்பி ஆறுமுகம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுகதையாசிரியர் அறிமுகம்

| | |
|---|---|
| **பெயர்** | நவம் – சீனித்தம்பி ஆறுமுகம் |
| **காலம்** | 03.10.1928 – 12.04.2017 |
| **இடம்** | ஆரையம்பதி – மட்டக்களப்பு |
| **கல்வி** | அ. த. க. பாடசாலை – ஆரையம்பதி<br>மத்திய கல்லூரி – காத்தான்குடி |
| **தொழில்** | ஆசிரியர்<br>பத்திரிகைச் செய்தியாளர் |
| **படைப்பு** | சிறுகதை – நந்தாவதி, பெரியமீனும் சின்னமீனும் முதலியன<br>நாவல் – நீலவேணி, அழகு சுடும், காளிதாசன் முதலியன<br>பயண இலக்கியம் – குமரிமுதல் சென்னை வரை |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'தன்னை மறத்தல்' என்பது ஒரு பெரிய சங்கதிதான். தன்னை மறந்த நிலையில் ஒருவர் செய்கின்ற செயலும் பெரிய சங்கதிதான்.

இந்த நியதிக்குச் சரவணமுத்துவே இதோ 'சாலுங்கரியாக' இருக்கின்றான். அவனோடு கூட, நாகண்டாப் போடியையும் சேர்த்துக் கொள்ள வேண்டியதுதான்.

⅄ ⅄ ⅄ ⅄

வயற் காட்டு தெம்மாங்கு காற்றிலே குதி போட்டு மிதந்தது...

''வரம்போ தலைகாணி, வாய்க்காலோ பஞ்சு மெத்த ஓ...

நாகங் குடைபிடிக்க நற்பாம்பு தாலாட்ட ஓ...

சீரிச்சோ நாகமது , சிவந்ததோ கண்ணிரெண்டும் ஓ...

பாம்பால ' சும்மாடு' படத்தால, 'மொக்காடு' ஓ...

வீசினான் கையை விரித்தான் சடைமுடியை - ஓ...

சங்க முழங்குதடா, சங்கரனார் கோயிலிலே - ஓ...

கொக்கும் பறக்குதடா, குளக்கரைக்கும் அப்பாலே - ஓ...''

தன்னை மறந்த உணர்ச்சி வேகத்தோடு 'தெம்மாங்கு'' க்கு இசைவடிவம் கொடுத்துக் கொண்டிருந்தான் சரவணமுத்து.

இனிமையான வைகறைப் பொழுதாலோ, வயிற்றைக் குழுமையாக நிறைத்திருந்த 'தண்ணிச் சோற்றாலோ' வலுவோடு வேலை செய்ததால் ஏற்பட்ட ' தெம்பாலோ' மட்டும் அவனுக்கு இந்த உற்சாகம் ஜனிக்கவில்லை.

அதற்கு வேறு ஒரு 'காரண'மும் இருந்தது.

அவள்

அவனை இயக்கும் ஆதார சுருதி - நாகாத்தை சற்று நேரத்துக்கு முன்னர்தான் சங்கீதத்தை அவன் செவிகளில் 'பெய்து' விட்டு கெண்டைக்கால், வயற்சுழியில் புதையப் புதைய லாகவ நடைபோட்டுச் சென்றிருந்தாள்.

சுழியில் புதைந்த அவளுடைய ஒவ்வோர் அடியும், சரவணமுத்துவின் பம்மிப் பருத்த மார்பைத் தாண்டிக்கொண்டு அவன் இதயத்தின் மீது 'மலர்த்தடத்தை'ப் பதித்து விட்டிருந்தது. 'களுக்', 'களுக்' என்ற இன்ப சுருதியோடு அவள் அடிபெயர்த்து



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வைத்த ஒய்யாரம்; சிற்சில சமயம் சுழியில் ஆழப் புதையுண்ட தன் கால்களை அவள் மீட்பதற்குச் செய்த பிரயத்தனம்; அதிலிருந்து பிறந்த பரதம் ; கை என்ற வாழைக் குருத்து ஒய்யாரலயத்தோடு வீசித் துவண்ட கோலம்; அதில் குதிபோட்ட கண்ணாடி வளையல்களின் 'கலீர்', 'கலீர்' என்ற சங்கீதம்; பனை ஓலைப் பெட்டியைத் தாங்கியிருந்த அந்தத் தலையின் கலைக் கோலம்; எதேச்சையாக நெற்றியில் விழுந்து கிடந்த கூந்தல் இழைகள் அள்ளி முடித்திருந்த கொண்டைக்குத் திருஷ்டிபட்டு விடாமல் 'கவசம்' போல் காத்து நின்ற முக்காடு; தளிர் மேனியை இறுக்கிப் பற்றி யிருந்த சட்டை; பாதி வயிறு வெளியில் தெரிய முந்தானையை இடுப்பில் அள்ளிச் செருகியிருந்த காம்பீர்யம் இவையெல்லாம் சேர்ந்து சரவணமுத்துவைப் 'பாடு! பாடு!' என்று பணித்தன.

பாடி விட்டான்.

நாகாத்தை அவன் பார்வையிலிருந்து மறைந்துவிட்டாள். அதுவரை இடுப்பில் வைத்திருந்த கையை எடுத்து ஓய்ந்திருந்த மண்வெட்டிக்கு வேலை வைத்தான் சரவணமுத்து.

மண்வெட்டிக்கு மட்டும் தான் அவன் வேலை வைத்தானா?

மனத்துக்கும் சற்று வேலை வைத்தான்.

அடுத்தநாள் இரவு நடை பெறப்போகும் 'சுபத்திரை கல்யாணம்' அவனுடைய நெஞ்சுக் 'களரி' யில் கூத்தாடியது. கூத்தில் அவனுக்குத் தரப்பட்ட பாத்திரம் அர்ஜுனன்! தன்னை ஒரு நிஜ விஜயனாகவும், நாகாத்தையைச் சுபத்திரையாகவும் 'ஒப்பனை' செய்து துள்ளியது அவன் உள்ளம். தான் வேலை செய்துகொண்டிருந்த மண்வெட்டியையே ஒரு கணம் தூக்கிப்பிடித்து விஜயனின் வில்லாக அதைப் பாவனை செய்து பார்த்துக் கொண்டான் சரவணமுத்து...

இந்த 'வீர' நினைவுக்கு மத்தியில் வயிற்றைக் குமட்டும் ஒரு காட்சியும் படரத்தான் செய்தது சரவணமுத்துக்கு! அந்தக் காட்சியின் 'பாத்திர'மான 'வேடன்' நாகண்டாப் போடியையும், அவன் வாயிலிருந்து வீசும் சாராய நாற்றத்தையும் நினைத்த போது வயிற்றைக் குமட்டியது சரவணமுத்துக்கு.

சுபத்திரை கல்யாணத்தில் ஓர் உபகாட்சியாக வரும் அருச்சுனன் பாசுபதம் பெற்ற வரலாற்றில் சிவன் வேடனாக உருமாறி வில் விஜயனை பரீட்சிக்கின்றார். இந்தக் காட்சியில் வேடனாக வருபவன் நாகண்டாப் போடி. இந்த வேடுவ நாகண்டானுக்கு நாகாத்தை மீது ஒரு கண் இருப்பது ஊரறிந்த ரகசியம். சரவணமுத்துவுக்கு இந்த 'ரகசியம்' இப்பொழுது நினைவுக்கு வந்து அவன் உள்ளத்தில் அபசுரத்தை இசைத்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று முன்னால் தன்னுடன் பேசிவிட்டுச் சென்ற நாகாத்தை கூட இந்த 'வேடன்' விவகாரத்தைப் பற்றியும் நினைவுபடுத்தி 'கெதியில் இதற்கு ஒரு முடிவுகட்ட வேண்டும்' என்று கேட்டு விட்டுச் சென்றிருந்தாள்.

சரவணமுத்து அதற்குச் சொன்ன பதிலும் அவனுக்கு இப்போ ஞாபகம் வந்து சற்று ஆறுதல் தந்தது.

''நாளைக்குக் கூத்து இருக்கிறது. கூத்தில் சுபத்திரையைக் கல்யாணம் முடிக்கிறான் அர்ச்சுனன். அது முடிஞ்ச கையோடு இந்த 'சுபத்திரை' க்கும் தாலி காட்டுகிறான் இந்த 'அருச்சுன' மகாராசன்! ...

மனவயலைத் தோண்டிக் கொண்டிருந்த நினைவு மண்வெட்டியில் திடீரென்று ஒரு தடங்கல்!

நாகாத்தை பரக்கப் பரக்க ஓடி வந்துகொண்டிருந்தாள். அவளுடைய தோற்றத்தில் காணப்பட்ட கலவரம் சரவணமுத்துவை ஒரு கணம் நிலைகுலைய வைத்த விட்டது.

தலையில் கட்டியிருந்த சால்வையை அவிழ்த்து முகத்தில் ஊறியிருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டான் சரவணமுத்து.

''என்ன நாகாத்தா? போன கையோடு திரும்பி விட்டாய்?''

'' நானாகத் திரும்பவில்லை அந்த 'நாசமறுவான்' தான் திருப்பி விட்டான்!''

'ஆர் நாகண்டானா?''

''அந்தப் 'புறக்கி' தான். இவ்வளவு நாளாக வாய்ச்சேட்டையோடு அந்த வழிசல் விட்டிரிந்துச்சி. இப்ப கையைப் புடிச்சி இழுக்கிற மட்டில் வந்திற்று!'' என்று பதட்டத்துடன் கூறிய நாகாத்தா சற்று முன்னால் தனக்கு நேர்ந்த 'விபத்தை' ப்பற்றி ஒன்றுவிடாமல் கூறிமுடித்தாள்.

விஷயம் இது தான்

சரவணமுத்துவைச் சந்தித்துவிட்டு, பரந்த அந்த வயல் வெளியைத் தாண்டி வந்து கொண்டிருந்தாள் நாகாத்தை.

சற்று முன்னம் சரவணமுத்து அவளுக்குக் கொடுத்திருந்த வாக்குறுதி, அவள் உள்ளத்தில், வளர்ந்து வரும் கதிர் பறியா வேளாண்மைப் பயிர்போல் பசுமையாகத் தலையசைத்துக் கொண்டிருந்த வயல்வெளிக்குச் சற்று தள்ளிக் காணப்பட்ட பற்றைக் காட்டின் மத்தியில் ஒரு கூட்டம் தென்னைமரங்கள். வயல் நீரில் தத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிந்த 'பனையான்' விரால் மீன்களைக் கொத்தித் தின்ன எங்கிருந்தோ ஒரு கூட்டம் கொக்குகள் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தன.

தென்னங் கூட்டத்தின் மத்தியில் நாகண்டான் நல்ல 'நிறகலை'யில் விழுந்து கிடக்கிறான். அவன் வாய், நானே அருச்சுனனடி! நாராணன் தங்கையே கேளும் பெண்ணே! என்ற 'சுபத்திரை கல்யாண'க் கூத்துப்பாட்டை பாடிக்கொண்டிருக்கிறது. அவனுக்குப் பக்கத்தில் சரிந்து கிடந்த ஒரு 'முழுசில்' கால்வாசிக்குக் குறைவாகச் சாராயம்.

காலையிலிருந்தே 'கேஸ்' ஏற்ற தொடங்கியிருக்கிறான்.

சரவணமுத்துவின் உறுதி மொழியிலும், அவன் சத்தம் போட்டுப் பாடிய அந்த வயற்காட்டுத் 'தெம்மாங்'கிலும் தன்னைப் பறிகொடுத்து விட்டு வந்துகொண்டிருந்தாள் நாகாத்தை. இடையிடையே அந்தத் 'தெம்மாங்கின்' அடிகளையும் வாய்க்குள் 'முணுமுணுக்க' அவள் மறக்கவில்லை.

பாம் பால சும்மாடு. படத்தால மொக்காடு! வீசினாள் கையைவிரித்தாள் சடை முடியை ... ! அப்பப்பா! பெருமை அவளுக்குப் பிடிபடவில்லை.

தெம்மாங்கில் வர்ணிக்கப்பட்டபடி தன் கையை ஒரு முறை வீசிப்பார்த்துக் கொள்கிறாள் அவள்.

என்ன இது?

வீசிய அவள் கை திரும்ப அதன் நிலைக்கு வரவில்லை!

ஒரு வலுவான கரம் அவள் கரத்தை அழுத்திப் பிடித்து நிறுத்திக்கொண்டிருந்தது.

'ஆய்' என்று கத்தி விடுகிறாள் நாகாத்தை. ஒரு கணம், ஒரே ஒரு கணம். அதற்குள் அவள் நிலைமையைப் புரிந்துகொண்டுவிடுகிறாள். தெம்மாங்கின் இறுதி அடி 'பளிச்' என்று நினைவுக்கு வருகின்றது. 'விரித்தாள் சடைமுடியை'

அந்த இறுதி அடி ஆணையிட்டபடி விரித்தாள் தன் சடை முடியை!

தன்னை இறுகப் பற்றியிருந்த அந்த முரட்டுப் பிடியிலிருந்து ஒரு 'திமுறு' திமுறினாள். விடுதலை! நாகண்டான் நெரித்த 'நெரி'யில் அவள் குருத்துக்கை சிவந்து விடுகின்றது கண்ணாடி வளையல்களும் நொருங்கி விடுகின்றன.

கைமட்டுமா சிவந்தது? கண்களும்தாம். நாகண்டாவின் கண்களும் சிவந்துதான் இருந்தன போதையில்!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நாகாத்தா!' இப்பதான் வாறியா? நாக்கு 'விழுந்த' நிலையில் பிறந்தது கேள்வி

'சீ' - நாகாத்தை அந்த இடத்தை விட்டு ஓடிவிடுகின்றாள்.

⅄ ⅄ ⅄ ⅄

கோவில் வீதியின் மத்தியில் குடை விரித்து நின்றது கூத்துக் களரி பழைய காலம் போல், 'களரி' யைச் சுற்றி வாழைக் குற்றியில் பந்தம் எரியவில்லை. 'டியூப் பல்ப்'புகள் தாம். 'எரிந்து' கொண்டிருந்தன. 'களரி'யைச் சுற்றி மணல் தெரியாத அளவுக்கு ரசிக கோடிகள், குழுமியிருந்தனர்.

'களரி உறங்காமல்' இருப்பதற்காக 'மத்தளம்' கம்பீரமாகப் பேசியது. அண்ணா வியாரும், அவரது கோஷ்டியினரும் எப்போதோ அரங்கேறிய 'கட்டுப் பெட்டி' நாடகத்திலிருந்து நல்ல துள்ளல் மெட்டில் சில பாட்டுக்களைப் பாடிக்கொண்டிருந் தார்கள்.

விஸ்வநாதன் - ராமமூர்த்தி ஈடுகொடுக்க முடியுமா? இந்த 'மெட்டு'க்கு?

கூத்து ஆரம்பமாகின்றது.

'கட்டியக்காரன் களரிக்குள் குதிக்கிறான். வெள்ளைச் சால்வையைத் திரையாக விரித்து, கட்டியக்காரனை மறைத்துப் பிடிக்கின்றனர் இருவர். பகல் வெற்றி கொழுத்தப்படுகின்றது. களரிக்கு வெளியில் சீன வெடி 'படபட' வென்று முழங்குகின்றது. அண்ணாவியார் அற்புதமானதொரு 'தாளக்கட்டு' வைக்கின்றார். மத்தளம் முழங்க சல்லாரி ஒலிக்க காலில் கட்டிய 'சலங்கை' 'கலீர்' கலீர்' என்று குலுங்க கட்டியக்காரன் என்ற 'பபூன்' கூத்தாடுகின்றான். அண்ணாவியார் ஆட்டு விக்க அவன் ஆடுகின்ற ஆட்டம் 'களரி'யில் கலகலப்பை ஏற்படுத்துகின்றது.

'தாளக்கட்டு' அமர்க்களம் ஓய்கின்றது. மறைத்திருந்த சால்வைத் திரை அகற்றப்படு கின்து.

'கட்டியக்காரன் வந்தான் கைதனில் பிரம்பும் கொண்டு ... என்று மேல் உச்சஸ்தாயியில் 'தம்' பிடித்துப் பாடிக்கொண்டு 'களரி'யில் தாளம் பிசகாமல் ஆடி வருகின்றான் கட்டியக்காரன்.

அவனுடைய உறவினர்களும், நண்பர்களும் 'களரி' க்குள் புகுந்து கழுத்தில் கடதாசி மாலைகளையும் தோளில் சால்வைகளையும் 'பரிசாகப்' போட்டு மகிழ்கின்றனர். சிலர் அவனுடைய இடுப்பிலும் சால்வையைக் கட்டி விடுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சம் நெருங்கிய நண்பர்கள் பிளாக்ஸுக்குள்ளிருந்து கொஞ்சம் 'அம்பாரை'யை ஊற்றிக் கொடுத்துக் கூத்துக்கலைஞர்களை உஷார்ப்படுத்தவும் தவறவில்லை!

அதையடுத்து 'சுபத்திரை கல்யாண'க் கதை ஆரம்பமாகின்றது. வில் விஜயன், பரந்தாமன், சுபத்திரை, சேடிப்பெண்கள் என்று கதாபாத்திரங்கள் 'களரி' யில் தோன்றுகின்றனர். அவர்களுக்கும் அதே வெள்ளைத்திரை மறைப்பு; பகல்வெற்றி; சீன வெடி முழக்கம்; கடதாசி மாலை கௌரவம்; சால்வை அணிவிப்பு; அண்ணாவியாரின் தாளக்கட்டு தொடரக் கூத்தின் மெயின் கதை ஆரம்பிக்கிறது. ஒவ்வொரு பாத்திரமும் தத்தம் வீர பிரதாபங்களைப் பாட்டிலும், ஆட்டத்திலும் காட்டிக்கொண்டு செல்கின்றனர்.

காட்சி மாறுகின்றது.

அர்ஜுனன் தவக்கோலத்தில் வீற்றிருக்கிறான். பன்றி ஒன்று குறிக்கிட்டு அவன் தவத்தைக் கலைக்க எத்தனிக்கின்றது. தவக்கோலத்திலிருந்து கண்விழித்த அர்ஜுனன் தன் காண்டீபத்தில் கணையைப் பொருத்தி பன்றி மீது குறிவைக்கின்றான். டீடீரென்று அந்தக் கணத்தில் தோன்றிய வேடன் ஒருவனும் அதே பன்றிக்குக் குறிவைத்து எய்கின்றான். இருவருடைய கரங்களும் ஏககாலத்தில் பன்றியின் உடலைத் துழைத்து அதன் உயிரை வாங்கி விடுகின்றன. யாருடைய அம்பினால் பன்றி இறந்தது? என்பதில் வேடனுக்கும், விஜயனுக்கும் தர்க்கம் பிறக்கின்றது. வாய்த்தர்க்கம் முற்றி கைகலப்பில் முடிகின்றது. இருவரும் ஒருவரை ஒருவர் மோதிக் கொள்ளுகின்றனர். விஜயனின் பிடியிலிருந்து வேடன் தப்புவதும் அந்த வேடனுக்குத் தன் வில் முறியுமட்டாக விஜயன் அடிப்பதும் பின்னால் அவனுடைய பக்தியையும் தீரத்தையும் வியந்து வேடனுருவில் வந்த சிவன் அவனுக்குப் 'பாஸ்பதம்' தருவதும் கதை.

இங்கோ 'களரி'யில் கதை முற்றாக மாறுகிறது.

வேடன் ஓடவுமில்லை; 'பாஸ்பதம்' அருளவுமில்லை; சுருண்டு விழுந்தான்! குருதி களரியில் பீறிட்டுப் பாயத் துடிதுடித்துப் புரண்டான்! கூத்துக்களரி இரத்தக் களரியாயிற்று.

நாகாத்தைக்காக, நாகாண்டாப் போடியை ஒரு வெறித்தனத்தில் பழிதீர்த்துக் கொண்டான் சரவணமுத்து!

விடிய விடிய நடக்கவேண்டிய கூத்து அன்று பாதியிலேயே முடிந்தது!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகண்டாப் போடி உலக மேடையில் கூத்து ஆடுவதற்காகத் தான் போட்ட 'மனித வேஷத்தை'க் கலைத்து விட்டு இந்த உலகத்தை விட்டே சென்று விட்டான்!

உலக மேடையில் கூத்தாடுவதற்காகப் புதிதாக ஒரு வேஷத்தைப் போட்டுக்கொண்டு நின்றான் சரவணமுத்து!

அவன் ஏற்க இருக்கும் பாத்திரம் குற்றவாளி!

நாகாத்தையும் கூத்தாடத் தயாராகிக் கொண்டுதான் இருக்கிறாள். அவள் ஏற்க இருக்கும் பாத்திரம் - கண்ணீர் நிறைந்தது.

## அரும்பதங்கள்

| | | | |
|---|---|---|---|
| **சாலுங்கரி** | - சிறந்த சாட்சி | **சுழி** | - சேறு |
| **தாளக்கட்டு** | - தாள ஒழுங்கு | **ஒய்யாரம்** | - அழகு |
| **பிரயத்தனம்** | - முயற்சி | **கவசம்** | - பாதுகாப்பு |
| **காம்பீர்யம்** | - கம்பீரம் | **கதிர் பறியா** | - முற்றாத |
| **பனையான்** | - மீன்வகைகளுள் ஒன்று | **நிற கலை** | - அதிக போதை |
| **களரி** | - கூத்து நடைபெறும் இடம் | | |
| **தெம்மாங்கு** | - நாட்டார் இசைப்பாடல் வகை | | |
| **பாஸ்பதம்** | - சிவனால் அருச்சுனனுக்கு வழங்கப்பட்ட அம்பு | | |

## மையக் கருத்து

பகைமையையும் கோபத்தையும் வளர்த்துக்கொள்வதும், உணர்ச்சிவசப்பட்டுத் தன்னை மறந்து செயற்படுவதும் தீராத் துயரத்திற்கு வழிவகுத்துவிடும்.

## கதைக்களம்

கிராமத்தின் வயல் வெளியும் கூத்துக் களரியும்.

## பாத்திர வார்ப்பு

### சரவண முத்து

- இளம் விவசாயியான சரவணமுத்து என்ற பாத்திரம் உழைப்பதில் ஆர்வமும் அக்கறையும் உடையதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.
- கூத்துக்கலைஞன்
- நாகாத்தை மீது தீராத காதல் கொண்டிருப்பவன்.
- ரசனை உணர்வுமிக்கவன்.
- மென்மைத்தன்மை உடையவனாயினும் உணர்ச்சி வசப்பட்டு செயற்படுபவன்.

### நாகாத்தை

- அழகுமிக்க கிராமிய இளம் பெண்.
- சரவணமுத்துவைக் காதலிப்பவள்.
- பிறிதொருவன் தன்னை ஒருதலையாகக் காதலிப்பதை வெறுப்பவள்.
- சடுதியாய் நடந்த சம்பவங்களால் வாழ்வு முழுவதும் துயருறும் நிலைக்குத் தள்ளப்பட்டவள்.

### நாகாண்டான்

- முரடன்
- கூத்துக் கலைஞன்.
- நாகாத்தையை ஒருதலையாக விரும்புவன்.
- ஒழுக்கமற்ற செயலில் ஈடுபடுபவன்.
- சரவணமுத்துவால் தாக்கப்பட்டுக் கொலையுண்டவன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எடுத்துரைப்பு முறை

- சூசிகையில் கதைக் கருவைச் சுட்டிக்காட்டி கதையை ஆரம்பித்தல்.
- சுபத்திரை கல்யாணம் என்ற கூத்துக் கதையை அடியொற்றிக் கதையை வளர்த்தெடுத்தமை.
- கலைஞன் மெல்லுணர்வு மிக்கவன். நல்லியல்புகளைக் கொண்டவன். இருப்பினும் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் எளிதில் உணர்ச்சிவசப்பட்டு செயற்பட்டு விடுகிறான். இந்த இயல்பை முன்னிறுத்தி கலைஞர்களை கதாபாத்திரங்களாக்கி கதை நகர்த்தப்படுகிறது.
- உணர்ச்சி மேலீட்டின் விளைவை வெளிப்படுத்துவதற்காகக் காதலை மையப் படுத்தி கதையை நகர்த்தியுள்ளமை.
- பாத்திர உரையாடல்கள் குறைவாகவும் ஆசிரியர் கதை சொல்லும் பாங்கு அதிகமாகவும் அமைந்துள்ளமை.
- கூத்து என்ற சொல் கலை வடிவமொன்றைக் குறிப்பதோடு அவலம் என்ற பொருளையும் தருகின்றது. இவ்விரு பொருளும் ஒருங்கே புலப்படுமாறு கதையின் தலைப்பு அமைக்கப்பட்டுள்ளமை.
- வருணனைகளைத் தேவைக்கேற்றவாறு பயன்படுத்தியுள்ளமை.
- கிராமப்புற பண்பாட்டு அம்சங்களின் பின்னணியில் கதையை நகர்த்து கின்றமை.
- தெம்மாங்குப் பாடல் குறியீட்டுப்பாங்குடன் கையாளப்பட்டுள்ளமை.

## கதைப்பின்னல்

- வயல்வெளி, கூத்துக்களரி ஆகியவற்றை நிகழ்களங்களாகக் கொண்டு கதை பின்னப்பட்டுள்ளது.
- நாகாத்தை - சரவணமுத்து காதல் உரையாடல், நாகாண்டையின் செயற்பாடு என்பனவற்றுடன் சுபத்திரை கல்யாணம் என்ற கூத்துக் கதை பின்னப்பட்டு கதை வளர்க்கப்படுகின்றது.
- கூத்தினிடையில் நடைபெற்ற எதிர்பாராத சம்பவத்துடன் கதை நிறைவு பெறு கின்றது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மொழிநடை

- மட்டக்களப்புப் பிரதேச கிராமிய மண்வாசனை கமழும் மொழிநடை.
- ஆங்கிலம் மற்றும் வடமொழிச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- இலக்கிய நடையும் பேச்சு வழக்கும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமாகக் கையாளப்பட்டுள்ளன.

## கற்றல் வினாக்கள்

1. நாகாத்தை மீதான காதல் சரவணமுத்துவின் வாழ்வில் எவ்வாறெல்லாம் செல்வாக்குச் செலுத்தியிருக்கின்றதென விளக்குக.
2. இச்சிறுகதையில் 'கூத்து' எவ்வாறு ஒரு உத்தியாகக் கையாளப்பட்டுள்ளது என்பதைத் தெளிவுபடுத்துக.
3. காட்சி, சம்பவ வர்ணனைகளில் கதாசிரியரின் ஆற்றல் வெளிப்படும் பாங்கினை விளக்குக.
4. 'நாகாத்தையும் கூத்தாடத் தயாராகிக்கொண்டுதான் இருக்கிறாள்' என்ற கூற்றினூடாகக் கதாசிரியர் உணர்த்த முனையும் விடயம் யாது? விபரிக்குக.
5. 'பகைமையையும் உணர்ச்சிவசப்படும் மனநிலையையும் கட்டுப்படுத்துவது ஆளுமையை வளர்த்துக் கொள்வதற்கான வழிகளில் ஒன்றாகும்' நீர் அறிந்த கலை இலக்கிய வடிவமொன்றை முன்வைத்து இக்கூற்றைப் பரிசீலிக்குக.

# நெருக்கடி



ந. பிச்சமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதையாசிரியர் அறிமுகம்

| | |
|---|---|
| **பெயர்** | ந. பிச்சமூர்த்தி |
| **காலம்** | 15.08.1900 – 04.12.1976 |
| **இடம்** | கும்பகோணம் – தமிழ்நாடு |
| **கல்வி** | மெய்யியல், சட்டம் ஆகிய துறைகளில் பட்டம் |
| | சட்டக் கல்லூரி – சென்னை |
| **பணி** | வழக்கறிஞர்<br>துணை ஆசிரியர் – நவ இந்தியா |
| **படைப்பு** | கட்டுரை – மனநிழல், ஒரு நாடகம் முதலியன<br>புதுக்கவிதை – காட்டு வாத்து, வழித்துணை முதலியன<br>சிறுகதை – பதினெட்டாம் பெருக்கு, விஜயதசமி முதலியன<br>குறுநாவல் – குடும்பரகசியம் |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

''சரவணமுத்து இருக்கிறாரா?'' என்ற குரலைக் கேட்டு வீட்டிலிருந்த அத்தனை குழந்தை களும் வெளியே வந்துவிட்டனர். பார்த்தால் படி முதல் வீசம்வரையில் எழுந்து வந்து சூழ்ந்துகொண்டதுபோல் இருந்தது. அதிலும் தேய்ந்து துருப்பிடித்தவைபோல் இருந்தன. குழந்தைகளின் உடையும் உடையின்மையும் பெற்றோர்களின் பொருளாதார நிலையை நன்றாக உணர்த்தின.

''யார்!'' என்றது ஒரு குழந்தை.

''சரவணமுத்து இருக்கிறாரா என்கிறேன்.''

குழந்தைகளில் ஒரு சின்னப் பெண், ''இல்லையே'' என்றாள். ''ஏண்டி இல்லை என்கிறாய். அதான் உள்ளே இருக்கிறாரே! என்ன வேணும் உங்களுக்கு?'' என்றான் கொஞ்சம் வயது வந்த பையன் ஒருவன்.

இந்த முரணான பதில்களைக் கேட்டவருக்குக் குடும்பத்தின் நிலையைப்பற்றிய எண்ணம் ஊர்ஜிதமாயிற்று.

''அவரைப் பார்க்கவேண்டும். இன்ஸ்பெக்டர் வந்திருக்கிறார் என்று சொல்லு.''

அதற்குள் சரவணமுத்துவே அலங்கோலமாக வாசல்புறம் ஓடி வந்தார். ''மன்னிக்க வேண்டும். வாருங்கள், வாருங்கள்'' என்று உள்ளே அழைத்துக்கொண்டு போய் ஒரு கிழிந்த பாயை எடுத்துப் போட்டார்.

கூடத்தில் ஒரு குழந்தை ஏதோ நோய்வாய்ப்பட்டு ஒரு கிழிந்த துணியில் படுத்துக் கொண்டிருந்தது. இன்ஸ்பெக்டர் ஒரு தடவை வீட்டை நோட்டம் பார்த்தார். வார்த் தைகளால் தெரிவிக்க இயலாத தாழ்ந்த நிலையின் சாயலே எங்கும் தென்பட்டது.

''ரொம்ப அபூர்வமாக இருக்கிறதே?''

''அபூர்வமென்ன? சும்மாத்தான்; இந்தப் பக்கம் போனேன்; இப்படியே பார்த்து விட்டுப் போகலாம் என்று தோன்றிற்று.''

''நான் கூட ஏதோ கேள்விப்பட்டேன்'' நீங்கள் காப்பாற்றினால்தான் உண்டு; இல்லா விட்டால் பிழைப்பே இதோடு முடிந்துவிடும்.

''கடுதாசு விஷயம் உமக்கு எப்படித் தெரியும்?''

''எப்படியோ தெரிந்தது. எப்பொழுது ஸ்தலத்தைப் பார்ப்பதாக யோசனை?''

''எப்பொழுது பார்க்கலாம் என்று சொன்னாலும் போவோம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவணமுத்துவின் உடல் ஒரு தரம் நடுங்கி ஒடுங்கிற்று.

''சார்! ஒன்று சொல்லுகிறேன், நீங்கள் கடவுள் மாதிரி. பெரிய மனது செய்தாலொழிய நான் கெட்டு விடுவேன். தோட்டத்திலே பார்க்க ஒன்றுமில்லை. போக வேண்டிய வேலையே இல்லை?''

''ஆ! சவுக்கைப் பயிர் செய்யவே இல்லையா?''

''இல்லை சார்.''

''சர்க்கார் பணம்?''

''இங்கே அடிபட்டுப் போய்விட்டது.''

''பெரிய குற்றமாச்சே ஐயா! பிழைப்பிலே மண் விழுந்துவிடும் என்று தெரியாதா?''

''என்ன தெரிந்து என்ன செய்கிறது சார்? இதோ இந்தக் கூடத்துக்கு ஒழிவில்லாமல் ஒரு வருஷமாக ஒருவர் மாறி ஒருவராகச் சீக்கு எனக்குச் சம்பளத்தைத் தவிரச் சில்லறை சம்பாதிக்கத் தெரியாது. நெடுக முடை. பணம் செலவழிந்து போய்விட்டது. பின்னாலே அங்கே இங்கே புரட்டிக் காரியத்தைச் செய்துவிடலாம் என்று பார்த்தேன். நடக்கவில்லை. அதற்குள்ளே எவனோ அநாமதேயத் தபாலை அனுப்பிவிட்டான். கொஞ்ச நாளைக்கு ஒட்டுங்களேன். ஏதாவது செய்துவிடுகிறேன்.''

''நான் போய் ஸ்தலத்தைப் பார்த்தே ஒரு வாரம் ஆகிவிட்டது. நீர் சொல்வதற்காக ஒரு வாரம் பொறுத்துப் பார்க்கலாம். அதற்குள் இடத்தைப் பண்படுத்திச் சவுக்கைக் கன்று வாங்கி நட்டு முளைக்கச் செய்துவிட முடியுமா?''

''முடியவேண்டும். இல்லாவிட்டால் நான் என்ன கதி ஆகிறது? பக்கத்திலே சவுக்கைப்பயிர் பண்ணியிருப்பதைப் பார்த்தீர்களா?''

''பார்த்தேன், அதை வைத்துக்கொண்டு இந்தப் புகாரைப் பொய் என்று எழுதி அனுப்பச் சொல்லுகிறீரா?''

''அப்படிச் சொல்வேனா சார்? எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. நீங்கள் எது செய்தாலும் சரிதான். வெள்ளம் தலைக்குமேலே போய்விட்டது.''

''ஒரு வாரம் இல்லை. இரண்டு வாரம் பார்க்கிறேன். அதற்குள் ஏதாவது செய்தி இருந்தால் என்னிடம் வந்து சொல்லுங்கள். நீர் வராவிட்டால் பதினாறாவது நாள் என் அறிக்கையை அனுப்பிவிடுகிறேன்.''


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இன்ஸ்பெக்டர் கூடத்தை விட்டுக் கிளம்பிவிட்டார். குறைந்த சம்பளமும் நிறைந்த சீக்குமாகச் சேர்ந்து சரவணமுத்துவை அயோக்கியன் ஆக்கிவிட்டன என்று இன்ஸ் பெக்டருக்குத் தெரிந்து என்ன லாபம்? சரவணமுத்து குடி இருந்த வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு பெரிய பங்களா. சொந்தக்காரர் விவசாயக் கம்பனி ஒன்றில் வேலை பார்த்துவந்தார். பங்களாவைவிடத் தோட்டம் அழகாக இருக்கும் என்று சொன்னால் பங்களாவுக்கு இழுக்கு ஒன்றுமில்லை. வருஷம் முந்நூற்று அறுபத்தைந்து நாளும் ஏதாவது காய்கறி கிடைக்காமல் போகாது. நாள் தவறினாலும் தோட்டத்தில் புஷ்பம் தவறாது. செடிகளும் கொடிகளும் வெகு செழுமையாகவும் அழகாகவும் இருக்கும்.

ஒழிந்த வேளைகளில் சரவணமுத்து இங்கேதான் வருவார். பங்களா சொந்தக் காரரோடு அதையும் இதையும் பற்றிப் பேசிவிட்டுப் பாக்கிப் பொழுதைத் தோட்டத்தில் போக்குவார். தரித்திரத்தில் உழலும் மனத்துக்குத் தோட்டத்துப் பச்சையும் சிவப்பும் காய்கறிகளும் புஷ்பங்களின் மணமும் விவரிக்க முடியாத ஆறுதலைக் கொடுக்கும். அன்று மாலை மகா வேதனையுடன் சரவணமுத்து, தோட்டத்தின் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தார். அன்றுதான் அவர் வேலைக்குக் காரியாலயத்தில் ‘சீட்டுக்’ கொடுத்துவிட்டார்கள். பதினைந்து நாள் பார்த்துவிட்டு இன்ஸ்பெக்டர், மொட்டை மனுவில் கண்டவிஷயம் மெய்தான் என்றும், வெறும் கட்டாந்தரையைத் தவிர ஸ்தலத்திலே வேறொன்றும் இல்லை என்றும் மேலே எழுதி அனுப்பிவிட்டார். குறிப்பிட்ட காரியத்துக்காகக் கொடுக்கப்பட்ட பணத்தை அதற்காகச் செலவழிக்காமல் சர்க்காரை மோசம் செய்துவிட்டார் என்று சரவணமுத்துவின்மீது குற்றம் சாட்டப் பட்டது. குடும்பக் கஷ்டத்தினால் தவறு நேர்ந்து விட்டது என்றும் கொஞ்சம் கெடு கொடுத்தால் பயிர் செய்துவிடுவதாகவும் மன்னிப்புக் கோரிச் சமாதானம் எழுதி வைத்தார்.

நிர்வாக முறை என்றால் தர்மப் பிரபுவா? - கொஞ்சம் ஈரமும் நெஞ்சமும் இருக்க? தாட்சண்யமின்றி வேலைக்குச் ‘சீட்டு’க் கொடுத்துவிட்டார்கள். உத்தரவு இன்றுதான் கிடைத்திருந்தது. அந்தத் துயரத்தைத் தாங்கமாட்டாமல் தான் சரவணமுத்து, பங்களாத் தோட்டத்தில் உட்கார்ந்திருந்தார். எதிர்த்தாற்போல ஒரு நாரத்தை மரம் இருந்தது. அதில் ஒரு கிளையிலிருந்து தேன் சிட்டுக்கூடு ஒன்று லோலக்கைப்போல் தொங்கிக் கொண்டிருந்தது. சரவணமுத்துவை அறியாலேயே கூட்டின் கட்டிடத் திறமை அவர் மனத்தை வசப்படுத்திவிட்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு சிட்டு, கூட்டின் வாசலண்டை போய்க் குந்திற்று. கூட்டுக்குள் இருந்து ஒரு குஞ்சு கத்திக் கொண்டே வாசலண்டை வந்து வாயைத் திறந்தது. வந்த குஞ்சின் வாயில் எதையோ ஊட்டி விட்டுப் பறந்து விட்டது குருவி. அது போன சிறிது நேரத்திற்கெல்லாம் மற்றொரு குருவி வந்து அதே காரியத்தைத் திரும்பவும் செய்துவிட்டுப் பறந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றது. இதே மாதிரி மாறி மாறிப் பல தடவை நடந்தது. குருவிகளாய் இருந்தால் கவலை இல்லாமல் இருக்குமே என்று சரவணமுத்து நினைத்துக்கொண்டார். இப்படி நினைத்துக்கொண்டிருக்கும்பொழுதே சரணமுத்துவின் பார்வை மற்றொரு மரத்தில் விழுந்தது. அந்த மரத்தில் விநோதமான கொடி ஒன்று படர்ந்திருந்தது. கொடியைப் பார்த்த உடனேயே பயிர் செய்யப்பட்ட கொடி என்பது விளங்கி விட்டது.ஆனால் மலைப்பாம்பு சுற்றிக்கொள்வதுபோல் சீந்தில் கொடி ஒன்றும் அதைச் சுற்றிக்கொண்டிருந்தது.

சரவணமுத்துவுக்கு ஏதோ ஒரு விதமான கிளர்ச்சி. கொடியின் அருகில் போய்ப் பார்த்தார். குரல்வளையைப் பிடித்து நெருக்கி ஒருவரைக் கொன்றால் கழுத்தில் குறிகள் இருக்கும் என்பார்களே அதைப் போன்ற குறிகள் பயிர் செய்யப்பட்ட கொடியில் தென்பட்டன. உலகத்தில் பிழைக்க முயலும்போது சீந்தில் கொடியைப்போல் தரித்திரமும் கூட வந்து கழுத்தை நெறிக்காமல் இருக்காதுபோல் இருக்கிறது என்ற எண்ணம் மிதந்தெழுந்தது. பங்களாச் சொந்தக்காரரின் குரலைக் கேட்டதுந்தான் சரவணமுத்து, திடுக் கிட்டுச் சுயநினைவை அடைந்தார்.

''வந்து ரொம்ப நேரம் ஆயிற்றோ?''

''ஆமாம்.''

''பூச்சி பிடித்த பீர்க்கன் இலை மாதிரி இருக்கிறதே முகம்? என்று பங்களாக்காரர் அவரை கேலியாகக் கேட்டார்''

சரவணமுத்து, பதில் சொல்லவில்லை. சொல்ல முடியவில்லை. அவர் முகத்தைப் பங்களாக்காரர் திரும்பவும் ஊன்றிப் பார்த்தார். ''எப்பொழுதும்போல் இல்லையே? என்ன விசேஷம்?'' என்று வற்புறுத்தினார். உண்மையைச் சொல்லச் சரவண முத்துவின் மனம் இடம் தரவில்லை. என்றாலும் ஏற்பட்டிருக்கும் நிலையைத் தாங்கக் கூடிய தெளிவோ சமாளிக்கக்கூடிய திறனோ அவருக்கு இல்லை. ஆற்றிலே மிதக்கும் கள்ளியைப்போன்றதுதான் அவர் மனப்பான்மை. கடைசியாக, விவரத்தை எல்லாம் கூறினார்.

''என்ன நாள் அசட்டுத்தனமையா! இந்த மாதிரி கஷ்டம் என்று முன்பே சொல்லியிருக் கலாகாதா''

''ஒரு நாள் கஷ்டமானால் சொல்லிக்கொள்ளலாம். ஓயாத கஷ்டத்தைப் பிறரிடம் சொல்லி என்ன செய்வது?''

''ரொம்பப் புத்திசாலித்தனமாக வேதாந்தமாகப் பேசுகிறீர். இப்பொழுது என்ன செய்வதாக யோசனை?''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஒன்றும் தோன்றவில்லை. கண்ணை மூடிக்கொண்டு காலை நீட்டவேண்டியதுதான்''

''ஒழிவில் பிறகு ஒடுங்கலாம். நான் சொல்வதைத் தற்பொழுது கேட்டு வையுங்கள், ஓர் அப்பீலைத் தயார் செய்து மேலே அனுப்புங்கள்.''

''என்னவென்று எழுத சவுக்கைப்பயிரோ வைக்கவில்லை. இன்ஸ்பெக்டரும் பார்த்து விட்டுப் போயிருக்கிறார். இப்பொழுது என்ன அப்பீல் போடுவது?''

''உமக்குத் தெரியாது, நான் சொல்லுகிறபடி எழுதிப்போடுங்கள்.'' என்று சொல்லி விட்டு அப்பீல் செய்யவேண்டிய விதத்தைப் பற்றிப் பங்களாக்காரர் விளக்கிக் கூறினார்.

''ஸ்தலத்தில் பயிர் இல்லாதபொழுது இருப்பது போல் எழுதச் சொல்லு கிறீர்களே!''

''ஆமாம், பயிரை உண்டாக்கிவிடுவோம்''

இன்ஸ்பெக்டர் பார்த்து...

''என்னால் ஆரம்பத்தில் பயிர் செய்ய முடியாமல் போனதினாலேதானே இவ்வளவு கஷ்டமும்.''

''கவலைப்படாதேயும், நான் செலவழித்துச் செய்து விடுகிறேன்.''

''ஒரு வருஷம் வளர்ந்திருக்க வேண்டிய பயிருக்குப் பதிலாக ஒரு மாதப் பயிரைக் காட்டினால் போதுமா?''

''நீர் இன்னும் பழைய யுகத்திலேயே இருந்துகொண்டிருக்கிறீர். இந்தக் கத்தரிப் பாத்தியை வந்து பார்த்துவிட்டுச் சொல்லையா! தோட்டத்துக் கோடியில் இரண்டு கத்தரிப் பாத்திகள் இருந்தன. ஒன்றில் கத்தரிக்காய் சாதாரணமான அளவில் காய்த் திருந்தது. மற்றொன்றில் பெரிய மணிகளைப்போல் குண்டுகுண்டாகவும் ஏழெட்டு இஞ்சு நீளமுள்ளவைகளாகவும். கத்தரிக்காய்கள் காய்திருந்தன.

''இதென்ன, அதென்ன?'' என்று சரவணமுத்து பிரமித்தார்.

''இது சாதாரண முறையில் பயிர் செய்யப்பட்ட கத்தரிப்பாத்தி. இது மின்சார ஜலம் பாய்ச்சி விஞ்ஞான முறையில் பயிர் செய்யப்பட்ட பாத்தி.''

''விஞ்ஞான ரீதியில் பயிர் செய்தால் ஒருமாதப் பயிர் ஒரு வருஷத்துப் பயிரைப்போல் தோற்றமளிக்கும் என்று சொல்கிறீர்கள்!''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அந்தக் கவலை எல்லாம் உமக்கேன்? பயிரைக் காட்ட வேண்டியது என் பொறுப்பு. அப்பீலைப் போடவேண்டியது உம் பொறுப்பு.''

''இன்ஸ்பெக்டர் பொய்யன் ஆகிவிடுவாரே!''

''வேண்டாமே; ஒரு சாண் கயிறு தருகிறேன். மயானத்துக்குப் போங்கள்! ஹரிச்சந்திரன் இருப்பார்! சாட்சியை வைத்துக்கொண்டு சுருக்கு மாட்டிக் கொள்ளுங்கள்.''

அவநம்பிக்கையுடன் சிரித்துக்கொண்டே சரவணமுத்து குறிப்பின்றி எதிரே பார்த்தார். அவரைக்கொடி ஒன்று கொழுகொம்பின் தயவுடன் மேலே படர்ந்து கொண்டிருப்பது தெரிந்தது. செயற்கையின் உதவியைக் கொண்டுதான் இயற்கைகூட ஊன்றிக்கொள்ள முடியும் என்று சொல்லுவதுபோல் இருந்தது.

''அப்பீலை நீங்களே தயார் செய்து நாளைக்கு என்னிடம் கொடுத்துவிடுங்கள். நான் மேலே அனுப்பிவிடுகிறேன்.''

''பைத்தியக்கார மனுஷன்!'' என்று அத்தாட்சி வழங்கினார் பங்களாக்காரர்.

சரவணமுத்துவின் அப்பீலைப் படித்த சென்னை மாகாண அதிகாரிக்கு ரௌத்திரம் பொங்கிற்று. மொட்டை மனுவின் பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டது என்று குமாஸ்தாவை அதிகாரி கடிந்துகொண்டார்.

குமாஸ்தா மறுத்துப் பேசாமல் இன்ஸ்பெக்டரின் அறிக்கையை எடுத்து மேஜை மேல் வைத்தார்.

அதைப் படித்த அதிகாரிக்குக் குழப்பம் உண்டாகிவிட்டது. சவுக்கைப் பயிர் செய்யப்பட்டிருக்கிறது என்று அப்பீலில் சொல்லப்பட்டிருந்தது. இன்ஸ்பெக்டரோ பயிர் செய்யப்படவில்லை என்று அறிக்கை அனுப்பி இருந்தார். எது உண்மை? யார் பொய்யன்? என்பது அவருக்கு உடனே விளங்கவில்லை.

கோபம்தான் அளவுக்கு மீறி எழுந்தது. உடனே ஸ்தலத்தைப் பார்வையிட்டு அறிக்கை அனுப்பும்படி தம் அந்தரங்க குமாஸ்தாவுக்குக் கட்டளையிட்டார்.

மூன்று நாளைக்குள் அறிக்கை வந்துவிட்டது. ஒரு வருஷத்துச் சவுக்கைப் பயிர் ஸ்தலத்தில் இருப்பதாகக் கண்டிருந்தது.

முதலெடுப்பில் அதிகாரிக்கு இன்ஸ்பெக்டரின் மேல் அவநம்பிக்கை உண்டாயிற்று. அவரைப்பற்றிக் காரியாலயத்தில் உள்ள அந்தரங்கக் குறிப்புக்களைப் புரட்டிப் பார்த்தார். இலாகாவிலேயே நேர்மைக்குப் பெயர் பெற்றவர் என்று குறிப்பிடப் பட்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரிக்கு முன்பு எழுந்த ஆத்திரம் இப்பொழுது எழவில்லை. அப்பீலைப் பைசல் செய்யவேண்டும் என்ற துறையில்தான் கவனம் சென்றது. மாகாண அதிகாரிக்குள்ள அநுபோகம் எங்கே போகும்? சரவணமுத்துவை வேலையை விட்டு நீக்கிய உத்தரவு பிசகு என்று ரத்துச் செய்துவிட்டுப் பொய் அறிக்கை அனுப்பியதாக ஏன் நடவடிக்கை எடுத்துக்கொள்ளக்கூடாது என்று இன்ஸ்பெக்டருக்கு நோட்டீஸ் அனுப்பும்படி குறிப்பிட்டுத் தம் தீர்ப்பை முடித்து வைத்தார்.

ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தமான நோட்டீஸ் கிடைக்கப் பெற்ற இன்ஸ்பெக்டர் திடுக்கிட்டார். தாம் பார்த்தது பொய் என்றோ ஸ்தலத்தில் மாறாட்டம் உண்டாகி விட்டது என்றோ அவருக்குச் சந்தேகம் இல்லை. பின்? எதுதான் உண்மை என்பது அவருக்குப் புரியவில்லை.

மறுபடியும் சவுக்கை ஸ்தலத்தைப் பார்வையிட்டார். கட்டாந்தரையாக இருந்த இடத்தில் சவுக்கை, செழுமையாக வளர்ந்திருந்தது. திகைப்பு கரைபுரண்டது.

அங்கிருந்து நேரடியாகச் சரவணமுத்துவின் வீட்டிற்குச் சென்றார்.

''இதென்ன செப்பிடு வித்தை! கட்டாந்தரையில் இரண்டு மாதத்திற்குள் பயிர் ஏற்றி விட்டீரே! அதோ எனக்கும் ஆபத்தைக் கொண்டுவந்துவிட்டீரே!''

''பக்கத்துப் பங்களாக்காரர் நான் பிழைக்கச் செய்த வழி'' என்று சரவணமுத்து முழு விவரத்தையும் கூறினார்.

இன்ஸ்பெக்டரின் வியப்பு, திடீரென்று வேறு திக்கை நோக்கித் திரும்பிற்று. ஒழுங்கு நடவடிக்கைக்கு உண்மையை அம்பலப்படுத்திப் பதில் எழுதி அனுப்ப வேண்டியது அவசியந்தானா என்ற கேள்வி மனத்தில் பிறந்தது. குழந்தைகளோ தமக்கில்லை. உத்தியோகத் துறையில் ஓய்வு பெறும் கால எல்லைகூட நெருங்கிக் கொண்டிருந்தது.

ஸ்தலத்தைப் பார்வையிட்டதில் ஏதோ மாறாட்டம் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று சமாதானம் கூறினால் ஓய்வெடுத்துக்கொள்ளும்படி மேல் அதிகாரி கட்டாயப்படுத்துவதைத் தவிர எதுவும் நிகழ்ந்துவிடாது என்று குருட்டுத்தனமாக இன்ஸ்பெக்டர் எண்ணினார்.

''சரவணமுத்து! பங்களாக்காரர் விளக்கேற்றி வைத்தார் என்று சொன்னீரல்லவா? நான் விளக்குக்கு எண்ணெய்யாக இருந்துவிட்டுப் போகிறேன்'' என்று சொல்லிக் கொண்டே தம் வீட்டிற்குக் கிளம்பினார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அரும்பதங்கள் / பேச்சு வழக்கு

| | | | |
|---|---|---|---|
| **பிசகு** | - தவறு | **கடுதாசு** | - கடிதம் |
| **ரௌத்திரம்** | - கோபம் | **சீக்கு** | - வருத்தம் |
| **சர்க்கார்** | - அரசு | **அண்டை** | - அருகில் |
| **பைசல்** | - முடிவாக்கல் | **குமாஸ்தா** | - எழுதுவினைஞன் |
| **ஊர்ஜிதம்** | - உறுதிப்படுத்தல் | **கூடம்** | - விறாந்தை |
| **முடை** | - பண நெருக்கடி | | |

**படி முதல் வீசம் வரை** - சிறியதிலிருந்து பெரியது வரை

**அநாமதேயக் கடிதம்** - யார் எழுதியதென அறியப்படாத கடிதம்

## மையக் கருத்து

நெருக்கடிக்குள்ளாகிய ஒருவரின் நிலையும், நெருக்கடியிலிருந்து அவர் மீளு வதற்கு மனிதாபிமானத்துடன் உதவியவர்களின் மனப்பாங்கும்.

## கதைக்களம்

வறுமை நிலையிலுள்ள சரவணமுத்துவின் வீடு, பங்களாவும் அதன் முன்னுள்ள தோட்டமும் சவுக்குப் பயிரிடப்பட்டுள்ள நிலமும்.

## பாத்திர வார்ப்பு

நெருக்கடிக்குள் சிக்கித்தவிக்கும் பாத்திரமாக சரவணமுத்து என்ற பாத்திரம் திகழ் கின்றது. ஏனைய துணைப்பாத்திரங்கள் சரவணமுத்துவை நெருக்கடியிருந்து மீள் வதற்கு உதவிய பாத்திரங்களாகக் காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சரவணமுத்து

- சவுக்குப் பயிரிடும் தோட்டப் பணியாளர்.
- குடும்ப வறுமையில் சிக்கித் தவிப்பவர்.
- வறுமையின் காரணமாக அரசாங்கப் பணத்தைச் சொந்தத் தேவைக்காகச் செலவழித்துவிட்டு நெருக்கடிக்குள்ளாகி இருப்பவர்.
- மனிதாபிமானத்தோடு உதவ முன்வந்தோரின் உதவிகள், ஆலோசனைகளால் நெருக்கடியிலிருந்து மீண்டவர்.

### இன்ஸ்பெக்டர்

- கடமையைக் கருத்துடன் ஆற்றும் நேர்மை மிக்க பாத்திரம்.
- சொந்த நலனைக் கவனத்திற் கொள்ளாது பிறர் துயரறிந்து மனிதாபிமானத்தோடு உதவும் மனப்பாங்குடையவர்.

### பங்களாக்காரர்

- விவசாயக் கம்பனியொன்றில் வேலை பார்க்கும், பயிர் வளர்க்கும் நுட்பமுறைகளை அறிந்த பாத்திரம்.
- காய்கறித் தோட்டச் செய்கையில் ஆர்வமுடையவர்.
- நெருக்கடியான சூழலில் இருந்து சரவணமுத்து மீள்வதற்கு ஆலோசனை கூறி உதவ முன்வந்தவர்.

## எடுத்துரைப்பு முறை

- சரவணமுத்துவின் வறுமை நிலை குடும்பச் சூழலின் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றமை.
- பொருத்தமான வர்ணனைகள் ஊடாக பாத்திரங்களின், உணர்வுகள், குடும்பச் சூழல் என்பனவற்றைச் சித்திரித்தமை.
- இயல்பான உரையாடல் கதைக்கு உயிரோட்டத்தைக் கொடுப்பதோடு, கதை சொல்லியாக கதாசிரியரே கதையை நகர்த்திச் செல்கின்றமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதைப்பின்னல்

- சரவணமுத்துவைக் காண இன்ஸ்பெக்டர் வருவதோடு ஆரம்பிக்கும் கதை படிப்படியாக சரவணமுத்துவை அழுத்தும் நெருக்கடியை வெளிப்படுத்து கின்றமை.
- சரவணமுத்துவின் நிலையை உணர்ந்து கொண்ட பங்களாக்காரர் சரவணமுத்து விற்கு உதவ முன்வருவதினூடாக கதை வளர்க்கப்படுகின்றது.
- தனக்கேற்படும் பாதிப்பைக்கூட கருத்தில் கொள்ளாது சரவணமுத்துவிற்கு உதவ முன்வரும் இன்ஸ்பெக்டரின் செயற்பாடு கதையின் திருப்புமைய மாகும்.

## மொழிநடை

- எளிமையானநடை.
- வட்டார வழக்குச் சொற்களின் பயன்பாடு.
- பிறமொழிச் சொற்பாவனை.
- அணிகள், மரபுத் தொடர்களின் பயன்பாடு.
- வர்ணனைப் பாங்கான மொழிநடை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கற்றல் வினாக்கள்

1. நெருக்கடி என்ற கதையில் வறுமை நிலை சித்திரிக்கப்படுமாற்றினை உதாரணங்களுடன் விளக்குக.
2. ''ஒருநாள் கஸ்டமானால் சொல்லிக் கொள்ளலாம். ஓயாத கஸ்டத்தைப் பலரிடம் சொல்லி என்ன செய்வது'' என்ற கூற்றினூடாக வெளிப்படும் பாத்திர மனவுணர்வினை விபரிக்குக.
3. ''நெருக்கடி என்பது சரவணமுத்துவிற்கு மட்டுமல்ல, இன்ஸ்பெக்டருக்கும் தான்'' - ஆராய்க.
4. பிச்சமூர்த்தியின் மொழிநடை கனதியும் கவித்துவமும் நிரம்பியது - இச் சிறு கதையை மையப்படுத்தி விபரிக்குக.
5. பிறரின் துயரத்தில் பங்குகொண்டுதவும் மனப்பாங்குடைய சமூகத்தைக் கட்டி யெழுப்புவது எம் அனைவரினதும் பொறுப்பாகும். கருத்துரைக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம்

# இரு துயரங்கள்



இ. முருகையன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடக ஆசிரியர் அறிமுகம்

| | |
|---|---|
| **பெயர்** | *இ. முருகையன்* |
| **காலம்** | *28.04.1935 – 27.06.2009* |
| **இடம்** | *கல்வயல், சாவகச்சேரி* |
| **கல்வி** | *முதுகலைமாணி*<br>*கலைமாணி, விஞ்ஞானம்மாணி*<br>*யாழ்ப்பாண, இலண்டன், கொழும்புப் பல்கலைக்கழகங்கள்*<br>*சாவகச்சேரி இந்துக்கல்லூரி* |
| **பணி** | *சிரேஷ்ட துணைப் பதிவாளர் – யாழ். பல்கலைக்கழகம்*<br>*கல்விப் பணிப்பாளர்*<br>*விரிவுரையாளர்*<br>*ஆசிரியர்* |
| **படைப்பு** | *கவிதை – மாடும் கயிறு அறுக்கும், நாங்கள் மனிதர் முதலியன*<br>*நாடகம் – கோபுர வாசல், கடூழியம் முதலியன*<br>*கட்டுரை– இன்றைய உலகில் இலக்கியம் முதலியன* |
| **விருது** | *சாகித்திய இரத்தினா*<br>*கலாநிதி (யாழ். பல்கலைக்கழகம்)* |

### அன்டன் பாவ்லோவிச் செகாவ் (Anton Pavlovich chekhov)

மருத்துவரான இவர் 29.01.1860 - 15.07.1904 வரையான 44 வருடங்கள் வாழ்ந்தவர். ரஷ்ய மொழிப் புனைகதையாசிரியராகவும் நாடகவாசிரியராகவும் அடையாளப்படுத்தப்பட்டவர். இவரது நாடகங்கள் 'மனநிலை சார்ந்த அரங்கியல்' நுட்பத்தை உள்வாங்கி எழுதப்பட்டதால் இவை மரபுவழி. நாடகத்தன்மையிலிருந்து விலகிக் காணப்படுகின்றன.

இவரால் எழுதப்பட்ட எதிராளிகள் (அன்ற்ற கினிஸ்ற்ஸ்) என்ற சிறுகதையைத் தழுவி எழுதப்பட்ட நாடகமே இருதுயரங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடைத் திரை விலகுமுன்னர் மண்டபத்து ஒளி மங்கத் தொடங்குகிறது. அரை மங்கலில் இசைக்குழு இந்த நாடகத்துக்கான இசையை வாசிக்கத் தொடங்குகிறது. தொடக்கத்தில் இசை வேகமாக ஆரம்பித்து, சடுதியாக சோக இசையாக மாறுகிறது. சோக இசையை மீட்டத் தொடங்கும்போது மண்டபத்து ஒளி மங்கி மறைகிறது. திரை மெல்ல விலகுகிறது. மேடையிலே, சற்று மங்கிய ஒளி பாய்ச்சப்பட்டுள்ளது. மேடையின் இடது பாதையில், கீழ்மேடை இடம் பிற்பகுதியை அண்டி, சோஃபா செற்றிகள், பூச்சாடியோடு கூடிய நீள மேசை என்பன உள்ளன. நடுமேடை இடம் பின் மூலையடியில், நிறுத்தியோடு கூடிய மின் விளக்கும், அதனை அண்டி மேல் மேடை இடத்தில், புத்தகங்களோடு கூடிய புத்தக இறாக்கையும் அதன்மேல் அலங்கோலமாகக் கிடக்கும் அலங்காரப் பொருள்களும் இரண்டு மூன்று பெரிய புத்தகங்களும் உள்ளன. மேல் மேடை வலத்தை அண்டி ஒரு கட்டில். அதன் தலைமாட்டில், குத்துவிளக்கோடு கூடிய சிறிய மேசையும் பின் புறத்துள்ள யன்னலை அண்டி, சற்று உயரமான மேசையும் அதன்மேல் மருந்துப் போத்தில் வகையறாக்களும் திறந்தபடியுள்ள ஒரு தடித்த புத்தகமும் காணப்படுகின்றன. நடிகர்கள் மேடைக்குட் பிரவேசிப்பதற்கு, கீழ்மேடை இடத்தின் பக்கச் சுவரிற் கதவொன்றும், நடுமேடை வலத்தின் பக்கச் சுவரில் இன்னுமொரு கதவும் உள்ளன.

இது இளைப்பாறிய டொக்ற்ற(ர்) கந்தப்புவின் இருக்கை அறையும் படுக்கை அறையும் சேர்ந்த பகுதியாகும். இவற்றின் பிரிப்பைக் காட்டுவதற்கு நடுமேடை மத்தியில், நிலைக் கதவைக் குறிக்கும் ஒரு சட்டப்படல் வைக்கப்படலாம். இவ்விரு பகுதிகளும் அவையோருக்கு நன்கு தெரிகின்றன. மேல்மேடை வலத்தை அண்டிய கட்டிலிலே கந்தப்புவினது குழந்தையின் பிணம் வைத்து மூடப்பட்டுள்ளது. கந்தப்பு நரை விழுந்த கிழவர். கட்டிலருகில், முழந்தாளில் குனிந்து நின்று முனகி முனகி விம்மிக்கொண்டிருக்கிறாள் கந்தப்புவின் மனைவி. அவளும் வயது போனவள் தான். மருந்துப் போத்தில் வகையறாக்கள் உள்ள மேசையில் கைகளை ஊன்றியபடி, பக்கவாட்டாக யன்னலினூடாக வெறித்துப் பார்த்தபடி நிற்கிறார் டொக்ற்ற(ர்).

நெறியாளர் மேடையில் வந்து அவரது அறிமுகத்தை முடித்துப் போகும்வரை இருவரும் சோகச் சிலையாக நிற்கிறார்கள். இசை சோகமழை பொழிகிறது. நெறியாளர் பேசத் தொடங்கியதும் இசை மெல்லத் தேய்ந்து, அவர் சென்றதும் கூடி, பின் வசனங்களுக்கு இடங்கொடுக்கும் வகையிலே தேய்ந்து மறைகிறது.

**நெறியாளர்** : (மேடையில் உள்ள பொருள்கள், நடிகர்களைத் கவனித்தப்படி கீழ் மேடைக்கு வந்து) இரு துயரங்கள். இந்த நாடகத்தினுடைய மூலம் அன்ற்றன் ச்செக்வோவ் எழுதின ஒரு சிறுகதை. அந்தச் சிறுகதையிலை நாடக அம்சங்கள் நிறைய இருக்கெண்டு தோன் றிச்சுது, எனக்கு. அது தான், நாடகமாக்கித் தரச்சொல்லிக் கேட்டேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகையன்தான் நாடகமாக்கித் தந்தவர். அங்கை நிக்கிறவர்தான் டொக்ற்ற(ர்) கந்தப்பு. இது அவருடைய மனைவி. அவைக்கு ஒரேயொரு பிள்ளை. அந்தப் பிள்ளை இப்ப கொஞ்சம் முந்தித்தான் மோசம் போயிட்டுது. வயிற்றோட்டம் - படுவன் எண்டு தமிழிலை சொல்லுறது..... வயசான காலத்திலை தான் அவைக்கு அந்தப் பிள்ளை பிறந்தது. அவையும் அந்தப் பிள்ளையை ஆசையாயும் கவனமாயும் தான் வளத்தவை. என்ன செய்யிறது? அந்தக் கவலையிலைதான் அவரும் அவற்றை பெண்சாதியும் நிக்கினம். இந்தத் துக்கமான செய்தியோடைதான் நாங்கள் நாடகத்தை ஆரம்பிக்கிறம். சரி, உங்கடை ரசனைக்குக் குறுக்கை நான் நிக்கிறது சரியில்லை. நீங்கள் நாடகத்தைப் பாருங்கோ.

(நெறியாளர் போகிறார். கந்தப்பு தலைமயிரை ஒதுக்கிக்கொண்டே வெளிப்புறமாகப் பார்க்கிறார். பின்னர் பெருமூச்சு விடுகிறார். சட்டைப்பையைத் துழாவி, இருபது முப்பது நொடிகளுக்குப் பிறகு ஒரு கைலேஞ்சியை எடுக்கிறார். பிறகும் காற்சட்டைப் பையில் எதையோ தேடுகிறார். ஒரு நெருப்புப் பெட்டி அகப்படுகிறது.சிறிது நேரம் அதை வருடிக்கொண்டிருந்துவிட்டு, பிணத்தின் தலைமாட்டில் உள்ள குத்துவிளக்கில் ஒரு திரியை இட்டு ஏற்றுகிறார். பிறகு சில ஊதுவத்திகளையும் பற்றவைத்துப் பிணத்தருகிலே வைக்கிறார். சிறிது நேரம் குனிந்து பார்த்துக்கொண்டு நிற்கிறார். கண்களை ஒரு தடவை மூடித் திறந்துவிட்டு வெளியே வருகிறார். கதவு மணி அலறுகிறது. டொக்ற்ற(ர்) சட்டைத் தெறியைக்கூடப் பூட்டாமல் வெளியே வந்து பார்க்கிறார். மனோகரன் விரைந்து நுழைகிறான்.)

**மனோகரன்** : டொக்ற்ற(ர்) இருக்கிறாரா, வீட்டிலை?

**கந்தப்பு** : ஓ....... நான்தான் டொக்ற்ற(ர்). என்ன வேணும்?

**மனோகரன்** : ஓ...... சந்தோஷம், டொக்ற்ற(ர்). நல்ல காலம். நீங்கள் வீட்டிலை இருந்தது. (டொக்ற்றரின் கைகளைப் பற்றிய படி) உங்களை எனக்குத் தெரியும், டொக்ற்ற(ர்). என்ற்றை பேர் மனோகரன். மிசிஸ் ஆறுமுகத்தின்ற்றை றிலேஷன். நீங்கள் ஓரிடமும் வெளியாலை போகாமல் இருந்ததே பெரிய காரியம். உடனே என்னோடை வரவேணும் டொக்ற்ற(ர்). என்ற்றை சம்சாரத்துக்குச் சுகமில்லை. கடும் வருத்தம். ஆபத்து. கார் கொண்டு வந்திருக்கிறன் டொக்ற்ற(ர்).

(படபடப்புடன் பதறிப் பேசுகிறான், மனோகரன். கந்தப்பு எதுவும் பேசவில்லை. குனிந்தபடி நிற்கிறார்.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனோகரன்** : நீங்கள் வீட்டிலை இருப்பீங்களோ இல்லையோ எண்டு பயந்து கொண்டுதான் வந்தனான். வழி முழுவதும் இதே கவலைதான், எனக்கு. அப்பிடியே அந்தரிச்சுப் போனேன் டொக்றற(ர்). சட்டையைப் போட்டுக் கொண்டு வாருங்கோ. உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும்.

*(கந்தப்பு முகத்தில் எந்தவித சலனமும் காட்டாமல், சோகத்தோடு பெருமூச்சு விட்டபடி மேலே பார்க்கிறார்)*

**மனோகரன்** : டொக்றற(ர்), நடந்தது இதுதான். பஞ்சாட்சரம் வந்தவன், என்னைக் காணிறதுக்கெண்டு - எங்கடை வீட்டுக்கு. கொஞ்ச நேரம் பலதையும் பத்தையும் பேசிக்கொண்டு நாங்கள் இருந்தம். பிறகு எல்லாருமாய்த் தேத்தண்ணி குடிச்சம். பஞ்சாட்சரத்துக்கு வயலின் வாசிக்கிறது கேக்க நல்ல விருப்பம். அவன் வயலின் வாசிக்கச் சொல்லிப் பாமாவைக் கேட்டான். அவள் உடனை வயலினை எடுத்து வாசிச்சாள். திடீரெண்டு அவள் கையை நெஞ்சிலை வைச்சபடியே அலறினாள். அப்பிடியே பொத்தெண்டு விழுந்து போனாள். அவளைத் தூக்கி, கட்டிலடிக்குக் கொண்டு போய் ஆறுதலாய்ப் படுக்க வைச்சம். நெத்தியிலை பாம் பூசி, முகமெங்கும் தண்ணி தெளிச்சுப் பாத்தம். ஆள் அசையவே இல்லை, மரக்கட்டை மாதிரிக் கிடக்கிறாள். இது அனூறிசிம் எண்டு தான் நான் நினைக்கிறன். அவவின்றை தகப்பனார் கூட அனூறிசிம் வந்து தான் செத்தவராம். அதை நினைக்கத் தான் பயமாயிருக்கு.

*(டொக்றற(ர்) எதையும் காதில் வாங்கிக் கொள்ளாதவர் போல மவுனமாய் நிற்கிறார்.)*

**மனோகரன்** : நீங்கள் உடனை வெளிக்கிடுங்கோ டொக்றற(ர்). சட்டையைப் போட்டுக்கொண்டு வாங்கோ.

*(கந்தப்புவின் கைகளை இரு கைகளாலும் பற்றியபடியே அழைக் கிறான், மனோகரன் கைகளை விடுவித்துப் பின்வாங்கியபடியே ஒரு அசுமாத்தமும் இன்றிப் பேசுகிறார்.)*

**கந்தப்பு** : மன்னிக்க வேணும் ஐஞ்சு நிமிஷத்துக்கு முந்தித்தான் என்றை பிள்ளை மோசம் போயிட்டுது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**மனோகரன்** : ச்..ச்..ச்.. (சிறிது நேரம் பொறுத்து) ஆ, கடவுளே! எப்ப டிப்பட்ட அசந்தர்ப்பமான வேளையிலை நான் வந்திருக்கிறேன்! என்ன அதிட்டக் குறைவான நாள் ... ஆனால், ஆர் தான் நினைச்சிருப்பினம், இப்பிடி நடக்கும் எண்டு. ச்... ச்... ச்...

(யோசனையில் ஆழ்ந்தபடியே போவதா, விடுவதா என்று தயங்குகிறான், மனோகரன் டொ'க்ற்றரின் கையை உரிமையுடன் நெருக்கமாகப் பற்றியபடி)

**மனோகரன்** : மன்னிச்சுக் கொள்ளுங்கோ டொக்ற்ற(ர்). தயவு செய்து கேளுங்கோ நான் சொல்லிறதை. உங்கடை நிலைமை எனக்கு விளங்குது. பரிபூரணமாய் விளங்குது. இந்த வேளையிலை உங்களை வரச் சொல்லிக் கேக்கிறது எவளவு வெக்கக்கேடான காரியம். கடவுளுக்குத்தான் தெரியும். நான் படுற பாடு. ஆனால் என்ன செய்யிறது? வேறை வழியில்லை, டொக்ற்ற(ர்). நீங்களே யோசிச்சுப் பாருங்கோ... நான் வேறை ஆரிட்டைப் போறது? உங்களை விட வேறை டொக்ற்றரே இல்லை, இந்த ஊரிலை, வேறை ஊருக்குப் போய்த் தேடிப் பிடிச்சு வாறதுக்கிடையிலை.... இது மிச்சம் ஆபத்தான வியாதி. பாமாவின்றை தகப்பனும் அனூறிசிம் வந்து தான் செத்தவர். பொல்லாத நோய். அனூறிசிம் டொக்ற்ற(ர்). அவர் கன காலம் வருத்தமாயும் கிடக்கேல்லை. திடீரென்று ஒரு நாள்...... டொக்ற்ற(ர்), நீங்கள் எனக்கு இப்ப கடவுள் போலை. தயவு செய்து மறுக்காமல் வாருங்கோ. டொக்ற்ற(ர்), நான் எனக்காகாய்க் கேக்கேல்லை. வேறை ஒரு உயிருக்காய்க் கேக்கிறென். தயவு செய்து ..... ப்லீஸ் .... (சிறிது நேரம் மவுனம். கந்தப்பு திரும்புகிறார்.)

[மனோகரனுக்குப் பின்காட்டியபடி சில நொடி நிற்கிறார். பின்னர், இயந்திரம் போல உள்ளறைக்குப் போகிறார். அங்குள்ள குத்து விளக்கைத் தூண்டிவிட்ட பிறகு, எண்ணெய்ப் போத்திலை எடுத்து எண்ணெய் விடுகிறார். கையை ஒரு துவாயாலே துடைத்த பிறகு, பிணத்தின் அருகில் நின்று ஒரு வெற்றுப் பார்வையைப் படிய விடுகிறார். தமது மூக்கினை விரல்களால் அர்த்தமின்றிப் பிடித்து விட்ட பிறகு, நாடியைத் தடவுகிறார். மேசையிலே விரித்தபடி இருந்த ஒரு மொத்தமான புத்தகத்தை எடுத்து, நடுப்பக்கத்தைப் பார்க்கிறார். பின்னர் அப்புத்தகத்தின் பக்கங்களை விறுவிறு என்று முன்னும் பின்னும் புரட்டுகிறார். நெற்றியின் முகட்டை விறுவிறு என்று உரசி விட்டுக்கொண்ட கந்தப்பு வெளிக்கூடத்துக்கு வருகிறார்.]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**மனோகரன்** : (ஆறுதலாய் பெருமூச்சு விட்டபடி) அப்பாடா - வாருங்கோ, டொக்ற்ற(ர்). (மனோகரனைக் கண்ட பிறகுதான் அப்படி ஒருவன் தன் வீட்டில் வந்து நிற்குறான்; தன் மனைவியின் நோய்க்கு வைத்தியம் பார்க்கும் பொருட்டுத் தன் வீட்டுக்கு வருமாறு தம்மை அழைத்தான் என்ற நினைவு டொக்ற்றருக்கு உண்டாகிறது.)

**கந்தப்பு** : ஓ - நான் - அப்பவே சொன்னெனே, வர ஏலாதெண்டு. தயவு செய்து என்னைக் கரைச்சல் செய்யாதையும்.

**மனோகரன்** : இல்லை, டொக்ற்ற(ர்), உங்கடை நிலைமை எனக்கு நல்லாய் விளங்குது. நான் என்ன, கல்லுச் சிலையா, அல்லது மரக்குத்தியா - நல்லாய்த் தெரியும், நீங்கள் எப்படிப்பட்ட மன நிலையிலை இருக்கிறீங்கள் எண்டு. நானும் மனிசன்தான். ஒரே ஒரு பிள்ளை யை, அதுகும் இந்த வயசிலை - பறிகுடுக்கிறதெண்டால், அது எவ்வளவு ஏமாற்றமாய் இருக்கும்.... எவ்வளவு துக்கமாய், கவலை யாய் இருக்கும்.... அதெல்லாம் எனக்குப் பூரணமாய் விளங்கும். ஆனால், நான் ....... கேக்கிறது எனக்காகாக இல்லை, டொக்ற்ற(ர்). வேறை ஒரு உயிர் சீவத்தறுவாயிலை இருக்குது. சாகக் கிடக்கிறவள் என்ற்றை சம்சாரம் அந்தக் கிறீச் செண்டகுளறலைக் கேட்டிருந்தீங்கள் எண்டால், முகத்தைப் பாத்திருந்தீங்கள் எண்டால், என்ற்றை கிலேசம் உங்களுக்கு விளங்கும். கடவுளே, கடவுளே - ச த்தியமாய் நான் நினைச்சென், நீங்கள் உடுப்புப் போடத்தான் உள்ளை போயிட்டீங்கள் எண்டு. டொ'க்ற்ற(ர்), ப்ளீஸ், வாருங்கோ. நேரம் பொன்னானது. மண்டாடிக் கேக்கிறென். நீங்கள் வரத்தான் வேணும் - பளீஸ்..

**கந்தப்பு** : (தெளிவாகவும் திடமாகவும்) மன்னிச்சுக் கொள்ளும். நான் இப்ப உம்மோடை வர ஏலாது.

[இவ்வாறு சொன்ன கந்தப்பு உள்ளே செல்லத் திரும்புகிறார். தொடர்ந்து சென்ற மனோகரன் கந்தப்புவின் கையைப் பிடித்துக் கொள்ளுகிறான்.]

**மனோகரன்** : டொக்ற்ற(ர்), நீங்கள் படுற சங்கடம் எனக்குத் தெரியும். அது எவ்வளவு கடுமையானது எண்டதும் எனக்கு விளங்கும். ஆனால், நான் வரச்சொல்லுறது ஒரு பல்லுக்கொதிக்குப் பரியாரம் செய்யிற துக்கு இல்லை, டொக்ற்ற(ர்). தடிமன் காய்ச்சலுக்கு மருந்து எழுதிக் குடுக்கிறதுக்காக இல்லை, உங்களை நான் வரச்சொல்லி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டாடுறது. ஒரு உயிரைக் காப்பாற்றுறதுக்கு - ஒரு மனிச சீவனைக் காக்கிறதுக்காக ..... (மன்றாட்டமாக) டொக்ற்ற(ர்), மனிச சீவன் தனிப்பட்ட துயரங்களை விட மேலானது. விலை மதிப்பில்லாதது. மனிசத் தன்மையின்ற்றை பேராலை கேக்கிறென், டொக்ற்ற(ர்), உங்கடை மனத் தைரியத்தையும் தியாக சிந்தையையும் காட்டுங்கோ.... தயவு......

**கந்தப்பு** : (பதற்றத்துடன்) தயவு செய்து என்னை இனித் தெண்டிக்க வேண்டாம். வைத்திய தர்ம விதி பதின்மூண்டாம் புத்தகம் முதலாம் பிரமாணப்படி, என்ற்றை கழுத்தைப் பிடிச்சு இழுத்துக் கொண்டு போக உமக்கு உரிமை இருக்கு. வைத்திய தருமப்படி உம்மடை வேண்டுகோளை மறுக்கிறதுக்கு எனக்கு உரிமை இல்லை, விருப்பமெண்டால் என்னை நீர் அப்பிடி இழுத்துக்கு கொண்டுபோம். ஆனால், எந்த வேலையையும் செய்யக்கூடிய நிலையையிலை இப்ப நான் இல்லை. என்னை மன்னிச்சுக் கொள்ளும், மிஸ்ற்ற(ர்) மனோகரன்.

**மனோகரன்** : இல்லை டொக்ற்ற(ர்), நீங்கள் அந்தத் தொனியிலை பேசக்குடாது. வைத்திய தருமத்தைப் பற்றியும் பதின்மூண்டாம் புத்தகத்தைப் பற்றியும் எனக்கு என்ன கவலை? உங்களை கட்டாயப் படுத்துற துக்கு எனக்கு என்ன உரிமை இருக்கு? அப்பிடி நான் கனவிலையும் நினைக்க மாட்டென். இப்ப என்ற்றை சம்சாரத்தை நீங்கள் தான் காப்பாற்ற வேணும். நீங்கள் தான் தெய்வம். நீங்கள் தான் கடவுள். மனமிரங்கி, மனமிசைஞ்சு வாறதெண்டால் வாருங்கோ. இல்லையெண்டால், நான் என்ன செய்ய முடியும்? என்ற்றை தலைவிதி எண்டிட்டுப் போக வேண்டியது தான்..... போறதா? நான் எங்கே போறது? டொக்ற்ற(ர்), உங்களைத் தவிர வேறை கதியே இல்லை. உங்கடை மகன் உங்களை விட்டு, இப்பத்தான் பிரிஞ் சிட்டான் எண்டு சொன்னீங்கள். அப்பிடியெண்டால், என்ற்றை அந்தரம் உங்களைத் தவிர வேறை ஆருக்குத் தான் விளங்கும்? என்னடா, அலம்பிக்கொண்டு நிற்கிறான், மடையன் எண்டு நினையாதையுங்கோ. என்ன பேசுறதெண்டு யோசிக்கிற மனநிலையே எனக்கு இல்லை. தயவு செய்து குறைநினைக்க வேண்டாம். உடனை வாருங்கோ. வைத்தியர் தானே கண்கண்ட தெய்வம்! நீங்கள் வாருங்கோ டொக்ற்ற(ர்). அனூறிசிம் எண்டால் ....... அய்யோ, கடவுளே! டொக்ற்ற(ர்), கன நேரம் நான் மினைக்கெடுத்த மாட்டேன். ஒரு அரை மணித்தியாலம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கந்தப்பு** : *கன தூரம் போக வேணுமா?*

**மனோகரன்** : இல்லை ஒரு நாலு நாலரைக் கட்டை தான் இருக்கும். கார் கொண்டு வந்திருக்கிறென். அரை மணித்தியாலம் எடுக்காது, போய்த் திரும்பி வர மறுக்காமல் வாருங்கோ.

**கந்தப்பு** : *(சிறிது நேரம் யோசித்துப் பெருமூச்சு விட்டபடி) ம்..... (கந்தப்பு உள்ளே சென்று மனைவியையும் குழந்தையையும் மாறி மாறிப் பார்த்தபடி நிற்கிறார். மனோகரன் நிலை கொள்ளாது தவிப்பவனாய் உள்ளான். சிறிது நேரத்தின்பின் கோ'ற்றை மாட்டிக் கொண்டு கைப்பெட்டி சகிதம் வருகிறார், கந்தப்பு, மனோகரன் அவரிடமிருந்து பெட்டியை வாங்கிக்கொண்டு, முன்னே அவரை அழைத்துச் செல்கிறான். நடந்து வெளியேறப் போன கந்தப்பு, ஒரு கணம் நின்று, உள்ளறைப் பக்கம் பார்க்கிறார். மனோகரன் அவர் கையைப் பிடிக்கவே, மெல்லத் திரும்பிப் போகிறார். சோககீதம் மெல்ல இசைத்துக் கூடுகிறது. ஒளி மெல்ல மங்க, திரை மெதுவாக மூடுகிறது.)*

## II

இரண்டாம் காட்சி மனோகரனின் வரவேற்பறையில் நடைபெறுகிறது. மனோகரன் வீடு வசதி உள்ள ஒருவரின் வீடாகக் காட்சி தருகிறது. மேடையின் இடப்பாதியின் பின் பகுதியில், மேல் வீட்டுக்குச் செல்வதற்கான படிக்கட்டுத் தென்படுகிறது. நடு மேடை இடத்தின் பிற்பகுதியிலும் படிக்கட்டுக்கு முன்பாகவும் ஒரு ஷோக்கேஸ் உள்ளது. ஷோக்கேசுக்கு மேல், தொலைக்காட்சி, டெக் போன்ற பொருட்கள் உள்ளன. இடப்பக்கச் சுவரின் நடுப்பகுதியில் ஒரு புத்தக இறாக்கை உள்ளது. மேடையின் வலப்பாதி நடுப்பகுதியில், சோஃவா செற்றிகள் போடப்பட்டுள்ளன. நீள மேசை மீது ஆ(ய்)ஷ்ட்ரேயும் சில கவர்ச்சிப் பத்திரிகைகளும் உள்ளன. இவற்றோடு நிறுத்தியிற் பொருத்திய ஒரு பெண்ணின் ஒரு படமும் வைக்கப்பட்டுள்ளது. நடு மேடை வலத்தின் கீழ் வல மூலையில், நிறுத்தியோடு கூடிய ஒரு மின் விளக்கும் உண்டு. நீளமான செற்றியில் ஒருதலையணையும் குழம்பிய கோலத்திற் கிடக்கும் ஒரு படுக்கை விரிப்பும் காணப்படுகின்றன.

முந்திய காட்சியைவிட இந்தக் காட்சியில் அதிகம் வெளிச்சம் உண்டு. இப்பொழுதுதான் கதாபாத்திரங்களைச் சுவைஞர்கள் முழுமையாகப் பார்க்கிறார்கள். டொ'க்ற்றரின் பெட்டியைத் தூக்கிக்கொண்டு கதவைத் திறந்தபடி மனோகரன் உள்ளே நுழைகிறான். கந்தப்பு பின்னால் வருகிறார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**மனோகரன்** : (அறையைச் சுற்றும் முற்றும் நோட்டமிட்டு, நின்று ஏதாவது அவக்கேடாய் நடந்திருந்தால் ......... கடவுளே! (திடீரென்று கந்தப்பு நிற்கும் பக்கம் பார்வையைத் திருப்புகிறான். அவர் இன்னும் இருப்புக் கொள்ளாமல் அவன் நிற்கும் திசையை நோக்கியபடி, ஆனால் சிந்தனை வேறெங்கோ அலைய வெறிப்புடன் நிற்கிறார். அவரை உரியபடி உபசரிக்க வேண்டும் என்னும் விழிப்பு வர .....)

**மனோகரன்** : இருங்கோ டொக்ற்ற(ர்), இருங்கோ அவை மேலைதான் இருக்க வேணும். நீங்கள் வந்திருக்கிறீங்கள் எண்டு சொல்லிப் போட்டு வாறேன்.[டொக்ற்ற(ர்) ஏதோ முணுமுணுப்பது போல் வாயசைக்கிறார். ஆனால், குரல் வெளிப்படவில்லை.]

**மனோகரன்** : உண்மையிலை, டொக்ற்ற(ர்), உங்கடை பெருந்தன்மையை நினைக்க நினைக்க ....... அதைப்பற்றி என்ன சொல்லிற தெண்டே எனக்குத் தெரியேல்லை. சத்தியமாய்ச் சொல்லிறென், டொக்ற்ற(ர்) ..... சரி, சரி ..... ...... நீங்கள் இருந்து கொள்ளுங்கோ. நான் அவைக்குச் செ ால்லிப்போட்டு வாறென்.

[கடகட வென்று மாடிப்படி ஏறிப் போகிறான். மனோகரன் டொ'க்ற்ற(ர்) இரண்டொரு தடவை தலைமயிரைக் கோதி விடுகிறார். மருந்துக் கறை படிந்த தம் கைகளை ஒருக்கால் மணந்து பார்த்துவிட்டு, பின்னர் அவற்றை உற்று நோக்குகிறார். ஒரே அமைதி சூழ்ந்திருக்கிறது. பின்னர் அறை மேல் மாடியில் ''ஆ!'' என்ற அலறல் கேட்கிறது. ஓர் அலுமாரியின் கண்ணாடி சடாரென அடிபட்டுச் சுக்கல் சுக்கலாக நொருங்கிய சத்தம் கேட்கிறது. பின்னர் சிறிதுநேர அமைதி. மனோகரன் மாடிக்குச் சென்ற படிக்கட்டுப் பக்கமாகக் கந்தப்புவை நோக்குகிறார். மேற்படிக்கட்டில் மனோகரன் நிற்கிறான். அவன் தோற்றம் முற்றாக மாறிவிட்டது. படுபயங்கரமான எதுவோ நடந்து விட்டது போன்ற 'ப'ாவம் அவன் முகத்திலே தெரிகிறது. வருத்தமும், ஆத்திரமும், ஏமாற்றமும் மாறிமாறித் தோன்றுகின்றன. படிக்கட்டால் இறங்கிக் கைகளைப் பிசைந்தபடியே நடுமேடைக்கு வருகிறான். பற்களை நறநறவென்று நெருமிக்கொண்டு ..... ......]

**மனோகரன்** : அவள் என்னை ஏமாத்திப்போட்டாள். ஏமாத்துக்காறி விட்டுட்டு ஓடித் துலைஞ்சு போனாள். வருத்தமெண்டு சொல்லி என்னை டொக்ற்றரிட்டை அனுப்பினது என்னத்துக்கெண்டு எனக்கு அப்ப விளங்கேல்லை. இப்ப விளங்குது, எல்லாம் பஞ்சாட் சரத்தானோடை ஓடிப் போறதுக்காகத்தான். என்னை அனுப்பினவள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொக்றரிட்டை. (கந்தப்புவுக்குக் கிட்ட போய் என்னைக் கைவிட்டிட்டாள், ஓடிப் போட்டாள், ஏமாத்திப் போட்டாள். ஏன் எடி உனக்கு இந்தப் பொய்? ஏன் இந்தப் பசப்பும் பாசாங்கும்? ஏன் இந்தச் சூதும் சதியும் கேலித்தனமும்? என்ன தீமையப்பா, நான் உனக்குச் செய்திருப்பேன்? ஒரு துரோகம் நினைச்சிருப்பெனா? ஏனப்பா நீ ...... இந்த மாதிரிச் செய்தாய்? (கந்தப்புவிடம்) அவள் ஓடிப் போயிட்டாள் டொ'க்றற(ர்). என்னை விட்டிட்டு ஓடியிட்டாள், டொ'க்றற(ர்).

(கண்ணீர் முட்டுகிறது மனோகரனுக்கு ஆத்திரமும் துயரமும் போட்டி போடுகின்றன.

**கந்தப்பு** : அ .... அ .... வருத்தக்காறி எங்கை?

**மனோகரன்** : வருத்தக்காறி, வருத்தக்காறி அவள் வருத்தக்காறி இல்லை. எங்கையோ கிடந்த மூதேசி. என்ன கேவலம் என்ன எளியதனம் கொடும்பாவி இதைப்போலை ஒரு சூழ்ச்சி செய்யிற புத்தி பேய் பிசாசுக்குகூட வராது. என்னை உங்களிட்டை அனுப்பினவள் ..... வருத்தமெண்டு சொல்லி. உண்மையான நோக்கம், அந்த நாய்ப்பயல் பஞ்சாட்சரத்தோடை, அவளின்றை கள்ளப் புரியனோடை ஓடுறதுக்கு அய்யோ, கடவுளே, இதிலும் பார்க்க, நான் செத்திருக்கலாம். இந்த அதிர்ச்சியிலையிருந்து எனக்கு மீட்சி இல்லை ஒரு காலமும் இல்லை.

**கந்தப்பு** : மன்னிக்க வேணும், மிஸ்றற(ர்) மனோகரன் இதெல்லாம் என்ன? என்றை பிள்ளை செத்துப் போச்சு என்றை மனிசி வீட்டிலை துக்கமும் துன்பமுமாய் அழுதபடியே இருக்குது. எனக்கு .... எனக்கு நிக்கவே முடியாதபடி களைப்பாயும் சோர்வாயும் இருக்கு. மூண்டு நாளாய் இரவு பகலாய் எனக்கு நித்திரை இல்லை. இப்பிடி எல்லாம் இருக்க, நீர் ... நீர் .... நீர் என்ன செய்யிறிர்? வேடிக்கை காட்டிறிர். ஏதோ ஒரு படுமோசமான உம்மடை கோமாளிக் கூத்துக்குப் பக்கவாத்தியம் வாசிக்கச் சொல்லி என்னைக் கே'க்கிறிர். பக்கவாத்தியம் வாசிக்கிறது எண்டால்க் கூடிப் பரவாயில்லை. உம்மடை கூத்து மேடைக்குப் பந்தல்காலாய் நிண்டு சுமக்கச் சொல்லிறிர் எனக்கு ஒண்டுமே விளங்கேல்ல.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மனோகரன் கையில் வைத்திருந்த கடிதம் போன்ற ஒரு கடதாசியை வெறுப்புடன் கீழே வீசி எறிந்து ஏதோ, ஓர் அருவருப்பான பூச்சியை மிதிப்பது போல உழக்குகிறான்.)

**மனோகரன்** : எல்லாம் கண்ணுக்கு முன்னையே நடக்கிது. நான்தான் ஒண்டையும் கவனிக்கேல்லை. அவன் ஒவ்வொரு நாளும் ஏன் வந்து போனான் எண்டதைக்கூடி நான் கவனிக்கேல்லை. இண்டைக்கு இந்தப் பஞ் சாட்சரம் ஏன் கார் பிடிச்சுக்கொண்டு வந்தவன்? அதைக்கூட நான் யோசிச்சுப் பாக்கேல்லை. ஏன் கார்? நான் ஒரு குருட்டு மடையன். கண்ணிருந்தும் பார்க்கத் தெரியாதவன். சீ..... நான் ஒரு முட்டாள்.

**கந்தப்பு** : எனக்கு ...... எனக்கு ...... ஒண்டுமே விளங்கேல்லை. இதுக்கெல் லாம் என்ன கருத்து? செருப்பாலை அடிச்சது போலை .... காறித் துப்பினது போலை இருக்கு, உம்மடை வேலை. மனிசன்ற்றை துக்கத்தைப்பகிடி பண்ணிறது போலை இருக்கு. ஒரு மனிசன் செய்யமாட்டான், இப்பிடியான காரியத்தை. இப்பிடி ஒரு விசர்த் தனமான வேலையை நான் இது வரை கேள்விப்பட்டதே கிடையாது.

[தனக்கு அவமானம் நேர்ந்துவிட்டது என்னும் உணர்வு சிறிது சிறிதாக டொ’க்ற்றரின் நெஞ்சிலே விடிந்து கொண்டு வர, சொல்வதென்ன, செய்வதென்ன என்று அறியாதவராக மனம் புழுங்குகிறார்.]

**மனோகரன்** : அப்ப உனக்கு என்னிலை அன்பில்லை. வேறை ஒரு ஆளிலை தான் உனக்கு விருப்பம். சரியப்பா ஆனால், ஏன் இந்த ஏமாத்து? கீழ்த்தரமான துரோகம் ஏன்? எளியதனமான தந்திரத்தாலை என்னப்பா நன்மை உனக்கு? என்ன லாபம்? ஏனப்பா இந்த வேலையை நீ செய்தாய்? நான் உனக்கு என்ன கெடுதி செய்தேன்? (டொக்ற்றரை நோக்கி) டொ’க்ற்றர், என்ற்றை துர்ப்பாக்கியத்தை நீங்களே நேரிலை கண்டிருக்கிறீங்கள். நீங்கள் விரும்பாமலே, சந்தர்ப்ப வசத்தாலை இங்கை வந்து சேர்ந்திருக்கிறீங்கள். உண்மை முழுவதையும் உங்களுக்கு நான் சொல்லுறென். ஒண்டையும் ஒளிக்காமல், மனம் திறந்து எல்லாத்தையும் சொல்லுறென்..... கேளுங்கோ டொக்ற்ற(ர்), இந்த அநியாயத்தை. சத்தியமாய்ச் சொல்லுறென் நான் ஒரு சொல்லுக்கூடப் பொய் பேசேல்லை. எல்லாம் வெளி வெளியாய்ச் சொல்லிறென், உங்களுக்கு. அந்த மனிசியை என்ற்றை உயிரைப்போலை விரும்பினென். இல்லை உயிர் போலை எண்டு சொன்னாலும் போதாது. உயிரைவிட மேலாய் விரும்பினென். அன்பு செலுத்தினென், ஆதரவு காட்டினென்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைக் கும்பிடக்கூடத் தயாராய் இருந்தென். அவளுக்காக எல்லாத்தையும் பலியிட்டேன். தியாகம் செய்தேன். என்ற்றை சொந்தக்காறர் எல்லாரோடையும் சண்டை பிடிச்சென், டொக்ற்ற(ர்) எத்தினை பிழையளெல்லாம் செய்திருப்பள்? அதுகள் எல்லாத்தையும் மன்னிச்சென். என்ற்றை சொந்த அம்மாவோ அக்காவோ அந்த தவறுகளைச் செய்திருந்தால்க் கூட நான் பொறுத்திருக்க மாட்டென். ஏன், அவளை நான் ஒரு கடுகடுப்பான முகத்தோடைகூடப் பார்த்ததில்லை. ஒரு விதமான குறையும் வைக்கேல்லை. அப்பிடி எல்லாம் இருக்க, ஏன் இந்தப் பொய் இவளுக்கு? இந்தக் கபடமும் தந்திரமும் குள்ளப்புத்தியும் ஏன்? உன்ற்றை அன்பு வேணும் என்று நான் பிடிவாதம் பிடிக்கேல்லை. பின்னை, ஏன் இந்த எளியதனம்? என்னிலை உனக்கு அன்பில்லை எண்டால்........ சரி, உன்னை நான் விரும்பேல்லை. இன்னாரோடை தான் நான் ஓடப்போறென், எண்டு சொல்லியிருக்கலாமே! வெளிவெளியாய்க் கதைச்சிருக்கலாமே. இதைப்பற்றி எல்லாம் என்ற்றை கொள்கை என்ன எண்டு உனக்கு நல்லாய்த் தெரியும். பிறகேன் அப்பா, இந்த மூடுமந்திரம்? (நீள் மேசையிலிருந்த பாமாவின் படத்தை எடுத்து முன்னாற் பிடித்துக் கொண்டு) பாருங்கோ, டொக்ற்ற(ர்); இப்பிடிச் சாந்தமான ஒருத்தி, இப்பிடியான கேவலமான ஒரு காரியத்தைச் செய்திருக்க முடியுமா? நீங்களே சொல்லுங்கோ, டொக்ற்ற(ர்) பாருங்கோ இந்தப் படத்தை.

[டொக்ற்றரின் முகத்துக்கு நேரே படத்தை நீட்டுகிறான். டொக்ற்றரின் ஆத்திரம் அதிகரிக்கிறது. மிருக வெறி ஒன்று பளீரிடுகிறது, அவர் விழிகளில் ஒவ்வொரு சொல்லாக அழுத்தி அழுத்தி அவர் பேசுகிறார்]

**கந்தப்பு** : ஏன் காணும், இதை எல்லாம் எனக்குச் சொல்லுறிர்? இதைப் பற்றி எல்லாம் எனக்கு அக்கறையும் இல்லை. கவலையும் இல்லை, எனக்குத் தேவையில்லைக் காணும் உம்மடை சில்லறை இரகசியங்கள். கொண்டுபோய்க் குப்பையிலை போடும் உம்மடை ஒப்பாரியளை. உந்த அழுக்குக் கஞ்சலை எல்லாம் எனக்கு முன்னாலை அவிட்டுக் கொட்டாதையும். எனக்கு நீர் செய்த அவமானமும் இழிவும் போதாதெண்டு நினைக்கிறிர் போலை இருக்கு. நான் உம்மடை வேலைக்காறன் எண்டு நினைச்சிரா, உம்மடை குளறலையும் கூச்சலையும் கேட்டுக் கொண்டிருக்கிறதுக்கு - உம்மடை அவமானங்களைப் பொறுத்துக் கொண்டிருக்கிறதுக்கு? காணும் இதெல்லாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(மனோகரன் கந்தப்புவிடமிருந்து சிறிது பின்வாங்கி ஆச்சரியத்தோடு அவரைப் பார்க்கிறான்.)*

**கந்தப்பு** : ஏன் காணும் என்னை இங்கை கூட்டி வந்த நீர், இப்ப? நீர் கல்யாணம் பண்ணினிர், வேலை இல்லாமல். நீர் உம்மடை உணர்ச்சிமயமான நாடகத்தை ஆடலாம். அல்லது கோமாளிக் கூத்தை ஆடினாலும் சரி தான். உமக்கு வேறை வேலை இல்லை எண்டால் அதுகளைச் செய்து கொண்டு இரும். ஆனால், என்னை ஏன் காணும் இதுகளுக்கை இழுக்கிறிர்? எனக்கும் உதுகளுக்கும் என்ன அலுவல்? உம்மடை காதல்க் கதையளுக்கையும் சல்லாபங்களுக்கையும் என்னை ஏன் கொண்டு வந்து மினைக்கெடுத்துறிர்? என்னை என் பாட்டிலை விட்டிடும். ஆரேன் உம் தரவழி உல்லாசியளோட போய் உம்மடை மனிசத்தன்மை, தியாக சிந்தை, பண்பு, பணியாரம் இதுகளைப்பற்றிப் பேசும். பிரசங்கம் பண்ணும். அல்லது புறுபுறுத்துக் கொண்டு புசத்தும். வேணுமெண்டால் உம்மடை வீணையை எடுத்து, கருணாரசம் ததும்ப ஒரு கீர்த்தனையைப் பிடுங்கி எறியும். நீர் காம்போதியை வாசிச்சால் என்ன, முகாரியிலை அழுது வடிஞ்சால் என்ன? எனக்கென்ன காணும் அதைப்பற்றி? மனிசர் மக்களோட உம்மடை சேட்டையை வைச்சுக் கொள்ளாதையும். மற்றவைக்கு மரியாதை குடுக்கிறது எப்பிடி எண்டு உமக்குத் தெரியாட்டால், அவைக்குக் கிட்டப் போகாதையும். அவளவு தான் நான் சொல்லக் கூடியது.

**மனோகரன்** : மன்னிக்க வேணும். இதுக்கெல்லாம் என்ன கருத்து?

**கந்தப்பு** : கருத்தா கே' க்கிறிர் மிஸ்றற(ர்) மனோகரன்? மனிசரை விளையாட்டுச் சாமான் போலை மதிக்கிறது சரியில்லை எண்டது தான் இதுக்குக் கருத்து. நான் ஒரு டொக்ற்ற(ர்). அத்தர் வாசனையும் பரத்தமை மணமும் இல்லாதவையும், டொக்ற்றர்மாரும் மற்றத் தொழில்காறர் எல்லாரும் உம்மடை வீட்டு விளக்கு மாறுகள் துடைப்பக்கட்டையள் - எண்டா நினைச்சிர்? விருப்பமெண்டால் நீர் அந்த வேலையைச் செய்யும். ஆனால், துன்பப்படுற ஒரு மனிசனைப் பிடிச்சு, கூத்து மேடைக்குக் குத்துக்கல்லாய் வைச்சுப் பாக்கிறதுக்கு உமக்கு உரிமை இல்லை.

**மனோகரன்** : என்ன துணிச்சலோடை நீர் எனக்கு உதைச் சொல்லிறிர்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கந்தப்பு** : என்ற்றை துன்ப நிலையைத் தெரிஞ்ச பிறகும் என்னை இங்கை கொண்டு வந்து, உம்மடை அலம்பல்களைக் கேக்க வைக்கிறதுக்கு உமக்குத்தான் எவளவு துணிச்சல்? மற்றவன்ற்றை மனக்கவலையை நையாண்டி பண்ணிறதுக்கு என்ன உரிமை காணும் இருக்கு உமக்கு?

**மனோகரன்** : உமக்கென்ன விசரா? என்ன கருணை இல்லாத கல்லுத்தூண் நீர்? நானோ கவலையிலை முழுகி இருக்கிறென் .... ..... நீர் .....

**கந்தப்பு** : கவலை. (உரத்து) கவலை. அந்தச் சொல்லை உச்சரியாதையும். உமக்கும் அதுக்கும் வெகு தூரம். கடைச் செலவுக்குக் காசு போதாதவங்களும் கவலைப்படுறதாய்த் தான் சொல்லிறாங்கள். அடைப்பன் வியாதி பிடிச்ச கோழிச் சாவலும் கவலை தான் படுகிது.

**மனோகரன்** : டொக்ற்றர்(ர்), நீர் உம்மை மறந்து பேசுறிர். உப்பிடிப்பட்ட பேச்சுக்குக் கைகாலாலலை தான் மறுமொழி குடுக்கிறது வழக்கம். விளங்குதா, நான் சொல்லிறது? (தன் சட்டைப் பையிலிருந்து இரண்டு காசுத்தாள்களை எடுத்து அவற்றை மேசை மீது அடித்து வைத்து) இந்தாரும். இது நீர் வந்ததுக்காக நான் தர வேண்டிய காசு.

**கந்தப்பு** : எனக்குக் காசு தரத் தெண்டிக்க வேண்டாம் (காசுத் தாள்களை எடுத்துக் கிழித்தெறிகிறார்) அவமானத்துக்கு ஈடாய்க் காசு குடுத்துச் சமாளிக்க ஏலாது.

**மனோகரன்** : டொக்ற்ற(ர்), அளவோடை நிறுத்திக்கொள்ளும்.

**கந்தப்பு** : அளவு என்ன காணும் அளவு? செய்யிறதையும் செய்துபோட்டு, பிறகு எச்சரிக்கை பண்ணிறிரா, எச்சரிக்கை?

**மனோகரன்** : ஓ, நீர் பெரிய டொக்ற்ற(ர்) தான். ஆனால் என்ற்றை நிலைமையையும் கொஞ்சம் யோசிச்சுப் பாரும்.

**கந்தப்பு** : எனக்கென்ன, வேறை வேலை இல்லையா? உம்மைப் போலை பொழுது போகாத புளிச்சல் ஏவறைக்காறன் எண்டா நினைச்சிர் என்னையும்?

**மனோகரன்** : மரியாதைக்காய்ப் பாக்கிறென்.

**கந்தப்பு** : மரியாதையைப் பற்றி என்ன காணும் தெரியும் உமக்கு?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனோகரன்** : டொக்ற்ற(ர்), நீங்கள் இனிப்போகலாம்.

**கந்தப்பு** : போகத்தான் போறென். பின்னை என்ன, உம்மோடை விருந்து சாப்பிடவா வந்தநான்? என்னைக் கொண்டு போய் விடுறதுக்கு ஒழுங்கு பண்ணும்.

**மனோகரன்** : ஓ............. ஒழுங்கு, கொண்டு போய் விடுறதுக்கு ஒழுங்கு. கட்டாயம் செய்யத்தான் வேணும்.

*(மேசை மணியைக் கிடு கிடு என அடிக்கிறான். ஒருவரும் வரவில்லை. மீண்டும் அடிக்கிறான். யாரும் இல்லை கோபாவே சத்துடன் மணியை நிலத்தில் வீசுகிறான். அப்போது ஒரு வேலையாள் வருகிறான்.)*

**மனோகரன்** : எங்கை போய்த் துலைஞ்சிட்டியள் எல்லாரும்? போய்ட்ரை வரிட்டைச் சொல்லு - காரைக் கொண்டு வரட்டாம் எண்டு. இவர் போக வேணும். *(வேலையாள் போகத் திரும்பும்போது)* இந்தா, எல்லா வேலைக்காறரையும் வெளியிலை போகச் சொல்லு. நீ மட்டும் நில். அவங்கள் ஒருத்தருக்கும் இனி இந்த வீட்டிலை வேலை இல்லை. துரோகியள். ஒண்டும் தெரியாதது மாதிரி நடிப்பு. நன்றியில்லாத நாயள். எல்லாரும் போய்த் துலையுங்கோ. ம் ........ ...... நீங்கள் போகலாம்.

*(வேலையாள் டொக்ற்றரின் பெட்டியைத் தூக்கியபடி அவரை அழைத்துச் செல்கிறான். டொ' க்ற்றர் வெறுப்போடும் அருவருப்போடும் சினத்தோடும் வெளியேறுகிறார். மனோகரன் நிலைகொள்ளாமல் இரண்டொரு தரம் அங்குமிங்கும் அலைந்தபின், விறுவிறென்று மாடிப்படிகளில் ஏறி, உள்ளறைக்குச் செல்கிறான். சி றிது நேரத்திற் கைத்துப்பாக்கியுடன் இறங்கியவன், நடு மேடைக்கு வந்து, பாமாவின் படத்தை வெறித்துப் பார்க்கிறான். சஞ்சல இசை வலுக்கிறது. நெறியாளர் பக்கப் படிக்கட்டால் ஏறி, கீழே மேடை நடுப்பகுதிக்கு வருகிறார்.)*

**நெறியாளர்** : என்ன நடந்தது எண்டதை எல்லாம் நீங்கள் பார்த்தீங்கள். மனசார டொக்ற்றருக்குக் கோபம் வாறது நியாயம் தான். குழந்தையைப் பலிகுடுத்த துக்கம் அவருக்கு. எவளவோ தெண்டிச்சுத்தானே, மனோகரனும் கூட்டி வந்தவன், அவரை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்சாதி விட்டிட்டு ஓடியிட்டாள் எண்ட துயரம் மனோகரனுக்கு. துயரம் மட்டுமல்ல. ஏமாற்றமும் தான். அவன்ற்றை துயரம் அவனுக்கு.

ஒருத்தர் துயரத்தை மற்றவருக்குச் சொல்லிப் பங்கிட்டுக் கொண்டால், இரண்டு பேருக்கும் துயரம் குறையும் எண்டொரு தத்துவத்தைச் சில பேர் அடிக்கடி சொல்லிறதை நீங்கள் கேட்டிருப்பீங்கள். ஆனால், இப்ப நீங்களே நேருக்கு நேரை பாத்தீங்கள். துயரப்படுற மனங்களுக்கு, நீதி, நியாயம், தருமம் இதுகளொண்டும் தெரியாது. தங்கடை துயரம் தான், மற்ற எல்லாத்தையும் மூடி மறைச்சுப் போடும். ஆனபடியாலை தான் இவை இரண்டு பேருடைய துயரங்களும் இரண்டு முனையளிலை நிண்டு தத்தளிச்சுதுகள்.

எண்டாலும், டொக்ற்றருடைய வெறுப்பும் சினமும் அவ்வளவு நியாயமானவை அல்ல எண்டு சொல்லவும் இடமிருக்கு. டொ'க்ற்றர் இப்ப வீட்டை போய்க் கொண்டிருக்கிறார். ஒருவேளை நீங்கள் நினைப்பீர்கள், அவர் தன்னுடைய வீட்டிலை இருக்கிற பெண் சாதியைப் பற்றித்தான் யோசிச்சுக்கொண்டு போறார் எண்டு. மோசம் போன அவருடைய பிள்ளையைப் பற்றித்தான் மனவருத்தப்பட்டுக் கொண்டு போறார் எண்டும் சில வேளை நினைப்பீங்கள். ஆனால் உண்மையிலை இப்ப அவருடைய மனத்திலை நிறைஞ்சிருக்கிறது, மனோகரனுடைய வீடு; அவனுடைய பெண் சாதி பாமாவைக் கூட்டிக்கொண்டு ஓடின சோரநாயகன் பஞ்சாட்சரம், அவனைப்போலை ஆக்களின்ற்றை 'சோக்கு', சொகுசு, உல்லாசம், லீலாவினோதங்கள். இதுகளைப் பற்றி எல்லாம் டொ' க்ற்றருக்குத் தீராத கசப்பு, வெறுப்பு. இந்த கசப்பும், வெறுப்பும் அவருக்குச் சாகுமட்டும் தீராது, இரண்டு துயரங்களும் தனித்தனி நிண்டு மோதினதாலை உண்டானதுகள் இரண்டு வெறுப்புகள். இந்த இரண்டு வெறுப்புகளுக்குள்ளையும் டொக்ற்றருடைய வெறுப்புத்தான் கடுமையானது, கசப்பானது.

சரி மேடை அடுக்கணியள் எல்லாம் சிதறுப்பட்டுப் போய்க் கிடக்குதுகள். அதெல்லாத்தையும் ஒழுங்கு செய்ய வேணும். நீங்கள் பாத்துக்கொண்டிருக்கக் கூடியதாய் அந்த வேலையை நான் தொடங்கக் கூடாது. ஆனபடியாலை, உங்களுக்கு வணக்கம் கூறி விடைபெறுகிறென். (பக்கத்தே பார்த்து) தம்பி, இனித் திரையை மூடி விடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரும்பதங்கள்/ பேச்சுவழக்கு

**அந்தரிச்சு** - ஆதரவற்று

**சீவத்தறுவாயிலை** - உயிர் போகும் நிலை

**அனூறிசிம்** - திடீரென ஆளைக் கொல்லும் நோய்

**அசுமாத்தமின்றி** - உணர்வுகளுக்கான அறிகுறியின்றி

**கிலேசம்** - பயம்

## மையக் கருத்து

ஒருவரது துயரத்தையும் மனக் கொந்தளிப்பையும் மற்றவர் புரிந்து கொள்ள முயலாது தனது துயரம்தான் பெரிதென எண்ணுவதால் தோன்றும் முரண்.

## துணைக் கருத்து

- சம்பவங்களால் பாதிக்கப்பட்டுத்துன்பவயப்பட்டவர்களின்துயரவெளிப்பாடு.
- இழப்புகளைச் சந்தித்த பாத்திரங்கள் தத்தம்நிலை நின்று நியாயித்தல்.
- துயரப்படுபவர்கள் நீதி, நியாயம், தர்மம் என்பனவற்றை அனுசரிக்காமை.

## கதைக்களம்

- கந்தப்புவினது வீடு, மனோகரனது வீடு.

## எடுத்துரைப்பு முறை

- யதார்த்த நடிப்புக்கேற்ற பாத்திரப்படைப்பு
- கந்தப்பு, மனோகரன் முதலான பாத்திரங்களின் இயல்புகளை வெளிப்படுத்தி உரையாடல்களினூடாகக் கதையை நகர்த்தல்.
- நெறியாளர் மேடையில் தோன்றி சபையோருடன் உரையாடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாத்திர வார்ப்பு

**பிரதான பாத்திரங்கள்**

டாக்டர் கந்தப்பு

மனோகரன்

**துணைப்பாத்திரங்கள் :**

எடுத்துரைஞர்

நாடகத்தின் ஆரம்பத்திலும் இறுதியிலும் வரும் நெறியாளர் எடுத்துரைஞராகக் காணப்படுகிறார். இவரின் ஊடாகவே நாடகத்தின் உருவாக்கமும் அதன் ஆரம்பக் காட்சிகளும் நாடகப் பாத்திரங்களின் குணச்சித்திரிப்புக்களும் நாடகம் பற்றிய குறிப்புக்களும் விளக்கப்படுகின்றன.

**காட்சிப்படுத்தலினூடாக வெளிப்படும் பாத்திரங்கள்**

டாக்டரின் மனைவி

வேலைக்காரன்

இறந்து விட்ட மகன் (அசையா நிலைப் பாத்திரம்)

**அரங்குக்கு வராத பாத்திரங்கள்**

கந்தப்புவுக்கும் மனோகரனுக்கும் இடையில் நிகழும் உரையாடல்களின் ஊடாக மனோகரனின் மனைவி பாமா, அவளின் தகப்பனார், மனோகரனின் நண்பன் பஞ்சாட்சரம், மனோகரனின் வீட்டு வேலையாட்கள் முதலான பாத்திரங்கள் அரங்குக்கு வராத பாத்திரங்களாக வெளிப்படுகின்றன.

**கந்தப்பு**

- வயோதிபராகவும் வைத்தியராகவும் வரும் கந்தப்பு இந்நாடகத்தின் பிரதான பாத்திரங்களில் ஒருவர்.
- தன் ஒரே ஒரு பிள்ளையை இழந்து தவிப்பவர்.
- பிள்ளையை இழந்த நிலையிலும் தொழில் தர்மம் காப்பவர்.
- பொறுமைசாலியாக இருந்தாலும் ஒரு கட்டத்திற்குமேல் பொறுமை இழக்கும் தன்மையை வெளிப்படுத்துபவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனோகரன்**

- மனைவி பாமா மீது அளவற்ற அன்பு கொண்டவர்.
- மனைவியின் செயலால் வருந்தி அதனால் ஆத்திரம் அடைந்தவர்.
- பிறர்நிலையைப் புரிந்து கொள்ளாமல் தர்க்கிக்கும் இயல்புடையவர்.
- தன் பொறுப்பில் இருந்து தவறாதவர்.

## மொழிநடை

- எளிமையானதும் தெளிவானதுமான மொழிநடை.
- உணர்ச்சிச் செறிவான மொழிநடை.
- யாழ்ப்பாணத்துப் பேச்சுவழக்கு
- தேவைக்கேற்ப பிறமொழிச் சொற் பயன்பாடு.

## கதைப்பின்னல்

- பிள்ளையை இழந்த சோகத்தால் வருந்திக்கொண்டிருக்கும் டாக்டர் கந்தப்பு வினது நிலையைக் கருத்தில் கொள்ளாது நோயிலிருந்து மனைவியைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஆதங்கத்தை மனோகரன் டாக்டரிடம் வெளிப் படுத்தி அவரை அழைப்பதுடன் நாடகம் தொடங்குகிறது.
- டாக்டரை மனோகரன் தன் வீட்டுக்கு அழைத்து வருதலின் ஊடாக கதை நகர்த்தப்படுகிறது.
- மனைவியின் துரோகத்தை அறிதல் திருப்புமுனையாகி அதனால் அவர் அடையும் மனத்துயர் எடுத்துரைக்கப்பட்டு நாடகம் வளர்க்கப்படுகிறது.
- டாக்டர், மனோகரன் ஆகிய இருவரினதும் ஏமாற்றங்கள் நாடகத்தில் முரண் நிலையை ஏற்படுத்துகிறது.
- நிறைவில் நெறியாளர் மேடையில் தோன்றி 'இரண்டு வெறுப்புக்குள்ளும் டொக்டருடைய வெறுப்புத்தான் கடுமையானது, கசப்பானது' எனக் கூறுவதோடு கதை நிறைவுபெறுகிறது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கற்றல் வினாக்கள்

1. கந்தப்பு, மனோகரன் ஆகியோரின் மனப்போராட்டம் வெளிப்படுத்தப் படுமாற்றினை எடுத்துக்காட்டுக.

2. 'இரண்டு வெறுப்புக்குள்ளும் டொக்ற்றரின் வெறுப்புத்தான் கடுமையானது கசப்பானது' என்ற ஆசிரியரின் கூற்றை நீர் ஏற்றுக்கொள்கிறீரா? காரணங் காட்டி விளக்குக.

3. 'உம்மடை கூத்துமேடைக்குப் பந்தல்காலாய் நிண்டு சுமக்கச் சொல்கிறீர்' என்ற கூற்று நாடகத்திற்கு வலுச்சேர்க்குமாற்றினை விளக்குக.

4. நாடகத்தில் நெறியாளர் தோன்றிப் பார்வையாளருடன் உரையாடும் உத்தி யின் பொருத்தப்பாடு பற்றிக் கருத்துரைக்குக.

5. நாடகமுறைகளுக்கு ஏற்ப அதில் கையாளப்படும் உத்திகள் மாற்றமுறுகின்றன. இருதுயரங்கள் நாடகப் பிரதியை முன்வைத்து கருத்துரைக்குக.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாவல்

# ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கின்றது



வ. அ. இராசரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவல் ஆசிரியர் அறிமுகம்

| | |
|---|---|
| **பெயர்** | வ. அ. இராசரத்தினம் |
| **காலம்** | 05.06.1925 - 22. 02. 2001 |
| **இடம்** | மூதூர், திருகோணமலை |
| **கல்வி** | ஆசிரியர் பயிற்சி<br>மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை<br>மூதூர் றோமன் கத்தோலிக்க பாடசாலை<br>மூதூர் புனித அந்தோனியார் பாடசாலை |
| **பணி** | அதிபர்<br>ஆசிரியர் |
| **படைப்பு** | கவிதை – பூவரசம் பூ (மொழிபெயர்ப்பு) முதலியன<br>சிறுகதை – தோணி, அறுவடை முதலியன<br>நாடகம் – முதற் துரோகம், முதல் முழக்கம் முதலியன<br>கட்டுரை – முற்போக்கு இலக்கியம் முதலியன<br>நாவல் – துறைக்காரன், கிரௌஞ்சப் பறவைகள் முதலியன<br>வரலாறு – மூதூர் புனித அந்தோனியார் கோயிலின் பூர்வீக வரலாறு |
| **விருது** | கலாபூஷணம்<br>வடக்குக் கிழக்கு ஆளுநர் விருது |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 1

சாயந்தரம் மூன்று மணி தாண்டினாலும் இன்னமும் சூடும் வெக்கையும் தாங்க முடியாமற்தான் இருந்தது. பங்குனி வெய்யிலிற் தாமோதரம் தன் கைப்பெட்டி யுடன் வீட்டையடைந்தான். வீட்டு முற்றத்திலிருந்த மாமரத்தின் கீழ் கற்பன் பாயில் அறிதுயிலிற் கிடந்த மயில்வாகனம் காலடிச் சத்தம் கேட்டு எழுந்து கொண்டார். எழுந்தவர் ''கடிதம் போட்டிருந்தயெண்டாக் கிண்ணியாத்துறையடிக்குச் சைக்கி ளோட தம்பிய அனுப்பியிருப்பன்'' என்றவாறு பாயைச் சுருட்டிய படியே ''புள்ள தம்பி வந்திற்றான்'' என்று குரல் கொடுத்தார்.

''துறையடியில இருந்து நான் அம்பலவாணனோட சைக்கிளில தான் வந்தனான்'' என்று கூறிக்கொண்டே தாமோதரம் வீட்டிற்குள் நுழைந்தான்.

மகன் வந்தாலென்ன? மகேசனே வந்தாலென்ன? மயில்வாகனத்தால் இன்னும் படுத்திருக்க முடியாது. வீட்டிலே தரிக்கவும் முடியாது. முகத்தைக் கழுவித் தேநீரைக் குடித்ததும் காவுதடியிற் தொங்கும் குடங்களோடு இப்போ நடக்கத் தொடங்கினாற்தான் இருட்டு முன்னே பொன்னாங்காணிப் பட்டிக்குச் செல்லலாம். சுணங்கவே கூடாது. முன்னிருட்டுக்காலம்.

மயில்வாகனம் கிணற்றை நோக்கிச் சென்றார். காய்ச்சப்பட்டுக் கொண்டிருக்கும் எருமைப்பாலின் மணம் வீட்டுக்குள்ளும் வெளியிலும் கமகமத்துக் கொண்டி ருந்தது. வீட்டினுள்ளே சென்று தன் சிறிய கைப்பெட்டியை வைத்த தாமோதரம், அங்கிருந்து வெளியேறித் தனியாக ஒதுங்கியிருந்த அடுக்களைக்குள் நுழைந்தான்.

அங்கே பென்னம் பெரிய மண் மிடாவிற் காய்ச்சிய எருமைப்பாலைப் பாற் பேணிகளிலும் சிறிய போத்தல்களிலும் ஊற்றி உறையிட்டு முடித்த தெய்வானை தன் கைகளைச் சேலைத் தலைப்பிற் துடைத்துக் கொண்டு ''ஆறாந்திகதி தானே லீவு என்று எழுதியிருந்தாய். ஒரு கிழமைக்கு முதல் வந்திற்றியே. முதல்ல சாப்பிடு. பஸ்ஸில வரக்குள்ள சாப்பிட்டிருக்க மாட்டாய்'' என்று அடுக்கிலிருந்த மண் பீங்கானை எடுத்தாள்.

''வோணாம்மா, நான் வரக்குள்ள பன்குளத்துக் கடையில் வடிவாச் சாப்பிட்டிற்றன்'' என்ற தாமோதரம், ''ஏனம்மா என்னைக் கண்டதும் சௌந்தரம் கதைக் காமப் போறாள்'' என்று தாயிடம் கேட்டான். ''உன்னைக் கண்டதும் அவளுக்கு வெக்கம் வந்திற்று. இன்னமும் அவள் சின்னப்பிள்ளையில்லை'' என்ற தெய்வானை, ''அதுசரி, ஆறாந்திகதி தானே பள்ளிக் கூடம் எல்லாத்துக்கும் லீவு. நீ என்ன ஒருகிழமைக்கு முன்னாலேயே வந்திற்றா'' என்று மகனிடம் மீண்டும் கேட்டாள்.

இதற்குள் கிணற்றடியிலிருந்து உடம்பைத் துடைத்துக் கொண்டே வந்த மயில்வாகனம் அடுக்களைக்குள் நுழைந்து ''உன்னோட கதைக்கக்கூட நேரமில்லை மகன். நாளைக் காலையில் பட்டியால வந்தபிறகுதான் நேரங்கிடைக்கும்'' என்று அலுத்துக்கொண்டே, ''அது சரி, ஏன் ஒரு கிழமை முன்னாலேயே வந்திற்றாய்?'' என்று தாய் கேட்ட கேள்வியை, அவரும் கேட்டார்.

''எங்களுக்கு ரெஸ்ற் முடிஞ்சிற்று. ஆவணி மாசத்தில ஏ. எல் சோதனை. அந்தச் சோதனை எடுக்கிறவங்களையெல்லாம் நேரத்தோடயே அனுப்பி வருஷங்கழிச்ச அடுத்த நாளே வரச் சொல்லியிருக்கார் பிறின்சிப்பல். நான் அடுத்த மாதம் பதினைஞ் சாந் திகதி போகவேணும்'' என்று விளக்கினான் தாமோதரம்.

தெய்வானை தந்தைக்கும் மகனுக்கும் தேநீர் கொடுத்தாள். அடுக்களைக் குத்திகளில் அமர்ந்தபடியே இருவரும் தேநீரைப் பருகினர். தேநீரைக் குடித்து முடித்ததும் வெளியே வந்த மயில்வாகனம் அடுக்களைக்கு முன்னாலிருந்த பரணிலே சார்த்தி வைக்கப்பட்டிருந்த காவுதடியை எடுத்துக் கொண்டார். பரணிலே கழுவப்பட்டுக் காய்ந்து கொண்டிருந்த இரண்டு பென்னம்பெரிய குடங்களையும் எடுத்து அவற்றின் கழுத்துக்களை வளைத்துக் கட்டப்பட்டிருந்த நார் வளையங்களுள் காவுதடியைப் புகுத்தித் தரையில் வைத்தபடியே வெற்றிலைப் பையை எடுத்தார். தெய்வானை சீனிச் சுருளையும், வெற்றிலை, பாக்கு, புகையிலை அடங்கிய இன்னொரு சரையையும் கொண்டு வந்து சுருளை ஒரு குடத்திலும், சரையை அடுத்த குடத்திலும் வைத்தாள். அவைகள் பட்டிக்காரருக்கு, வெற்றிலை போட்டு முடித்த மயில்வாகனம் தன் காக்கிச் சட்டையையும் போர்வையும் எடுத்துத் தோளிலே போட்டுக் கொண்டார். போட்டுக்கொண்ட தன் வலது தோளின் மேற்காவு தடியைத் தூக்கி வைத்து ''நான் போயிற்றுவாரன்'' என்றபடி நடக்கத் தொடங்கினார்.

காவுதடியைத் தோளில் வைத்ததுமே எங்கிருந்தோ ஒரு வேகம் வந்து விடுகின்றது. காவுதடியின் அசைவுக்கேற்பத் தாளலயத்துடன் தன் தந்தையார் வேகமாக நடப்பதைப் பார்த்தபடியே தாதோதரன் நின்றான். கோயிலுக்கு முன்னாலிருந்த ஒழுங்கையில் இறங்கிக் கரச்சை வெளியில் நடக்கும் அவர் உருவம் மறையும் வரையில் அவன் பார்த்துக்கொண்டே நின்றான்.

மயில்வாகனத்துக்கு வயது ஐம்பதுதானிருக்கும். காவுதடியைச் சுமந்து காய்த்துப் போன தோள்கள், கட்டுமஸ்தான உடற்கட்டு, சற்றே குள்ளமானவர் எனினும், வசம்பு போல மெலிந்து வைரித்திருந்தமையாற் குள்ளம் எடுபடவில்லை. பரந்த நெற்றியில் எப்போதுமே துலாம்பரமாகத்திருநீறு அணிந்திருப்பார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எத்தனை ஆண்டுகளாக அவர் இந்தக் காவுதடியைச் சுமக்கிறார் என்பது தாமேதரத்துக்கு தெரியாது. அவனுக்கு அறிவு தெரிந்த நாளிலிருந்து அவர் சுமக்கிறார். அதற்கு முன்னரும் காவுதடியைச் சுமந்தேயிருப்பார்!

இதோ இப்போது காவுதடியைச் சுமந்து செல்லும் அவர் ஆலங்கேணிக் கரைச்சையைத் தாண்டிப் பூவரசந் தீவுத் திடலில் ஏறி, மீண்டும் கரைச்சையிலிறங்கிக் கண்டற் காட்டுத் துறையைத் தாண்டி வயல் வெளிகளூடே நடந்து மாவலிக் கரையிலுள்ள பொன்னாங்காணிப் பட்டியை அடையும்போது இருட்டிவிடும்.

பட்டியில் நுளம்புகளோடு போராடி இராத்தங்கி, அதிகாலையிற் பாற் குடங்களைத் தூக்கிக் கொண்டு ஊருக்கு வர ஏறத்தாழப் பத்து மணியாகிவிடும். பத்து மணியிலிருந்து நான்கு மணிவரையுமே ஓய்வு அந்த ஓய்வு நேரத்திற் செம்பாதிநேரம் தாமரைத் தீவுக் கள்ளுக்கொட்டிலிற் கழியும். கள்ளுக்கொட்டிலிலிருந்து திரும்பி வீட்டுக்கு வருகிறபோதெல்லாம் அவர் சொல்வார். ''என்ர சின்ன மகன் யாழ்ப்பாணத்தில பெரிய படிப்புப் படிக்கிறான். அவன் படிச்சி வந்தப் பிறகுதான் என்ர காவுதடியை கழற்றுவான்''.

அவரின் காவுதடி, பாற்குடங்களை மட்டுமல்ல ஓரோர் வேளை பட்டியை அண்மிய காட்டிலே வேட்டையாடப்பட்ட காட்டுமிருகங்களின் இறைச்சியையும் சுமந்திருக்கிறது. ஆவணி மாதத்து அருங்கோடையிற் குளங்கள் வற்றிவிட அந்த குளத்து ஆம்பல்களுக்கிடையே அகப்பட்டவரால், சுங்கான் போன்ற நன்னீர் மீன் களின் புகையூட்டப்பட்ட கருவாட்டையும் சுமந்திருக்கிறது குடும்பச் சுமையயைக் குறைக்கும் கைங்கர்யத்தில் அக்காவுதடி காலங்காலமாக அவருக்குக் கைகொடுத் திருக்கிறது!

இப்படியாகத் தனக்குள் எண்ணிக் கொண்ட தாமோதரம் கிண்ற்றடிக்குச் சென்று தண்ணீரை அள்ளி அள்ளித் தலையிற் கொட்டிக் கொண்டான். கிணற்றின் பின்பக்கமாக அடைக்கப்பட்டிருந்த கொல்லைக்குள் கத்தரியும் தக்காளியும் வெண்டையும் காய்த்துக் கொழித்துக் கொண்டிருந்தன. ஒருபக்கத்தில் வேலியோரமாக இருந்த ஒரே ஒரு வற்றாளை வரம்பில் இலைகள் பழுப்படைந்து ஏன் இன்னமும் என்னைக் கல்லாமல் விட்டு வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டுக்கொண்டிருந்தது.

ஆலங்கேணிக் கிராமம் முழுமையுமே மணற்பாங்கானதுதான் ஆனால் அந்த மணலிலும் மனித முயற்சியின் காரணமாகப் பசுமை படர்ந்தேயிருந்தது. ஒவ்வொரு வீட்டு வளவுக்குள்ளும் பெண்கள் குடங்குடமாக நீரைச் சுமந்து ஊற்றிக் காய்கறிகளும் கிழங்குகளும் பயிரிட்டிருந்தனர்.

தாமோதரம் குளித்துக் கொண்டிருக்கையில் தெய்வானை கொல்லைப் பட லையைத் திறந்து, கைக்கிண்டியால் வற்றாளை வரம்புகளைக் கிளறிக் கிழங்குகளைப் பிடுங்கிக் கொண்டிருந்தாள். அவள் அருகேயிருந்த ஓலைப் பெட்டியில் செக்கச் சிவந்த சீனி வற்றாளைக் கிழங்குகள் நிறைந்து கொண்டிருந்தன.

தாமோதரம் தன் நீராடலை முடித்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தான். அது இரண்டு அறைகளும் அறைகளுக்கு முன்னால் விசாலமான பெரிய மண்டபமும் அமைந்த வீடு. சுவர்கள் செங்கல்லாலும் களி மண்ணாலும் ஆனவை. சுவர்களுக்குச் சுண்ணாம்பு பூசப்பட்டிருந்தது. தரைக்குச் சீமெந்துப் பூச்சு. ஆனால் ஓலைக் கூரைதான். வீட்டுக்குள் நுழைந்த தாமோதரம் தன் பெட்டிக்குள்ளிருந்து நாலு முழத் துண்டையும் சேட்டையும் எடுத்துக் கொண்டான். நெல்லியடி மத்திய மகாவித்தியாலத்தில் சர்வகலாசாலைப் புகுமுக வகுப்பிற் படிக்கும் தாமோதரம் பாடசாலையில் நீளக் காற்சட்டையும் சப்பாத்தும் அணிவான். ஆனால் தன் பிறந்த ஊரான ஆலங்கேணியில் அவன் வேட்டியே உடுப்பான். ஆலங்கேணிக் கிராமம் இன்னமும் காற்சட்டை நாகரிகத்துக்குத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்ளவில்லை.

உடையணிந்த தாமோதரம் மண்டபத்து நிலையிலே தொங்கிய விபூதிச் சிரட்டையிலிருந்து பாம்பு விரலால் திருநீற்றைத் தொட்டு நெற்றி நடுவில் அழுத்திப் பூசிய போது 'தம்பி நீ வரட்டும் என்றுதான் ஒரு வற்றாளை வரம்பைப் பிடுங்காம விட்டிருந்தானான், இதைச் சாப்பிட்டிற்றுப்போ. யாழ்ப்பாணத்தில வற்றாளைக் கிழங்கு இல்லையாம் என்று தட்டை நீட்டினாள்' தட்டிலே இருந்த வற்றாளைக் கிழங்குகளிலிருந்து ஆவி பறந்து கொண்டிருந்தது.

தாமோதரம் வற்றாளைக் கிழங்கின் மெல்லிய சிவப்புத் தோலை உரித்து அவற்றை வெள்ளையாக்கிச் சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் தெய்வானை கேட்டாள். 'எங்கே போப்போறாய் மாமா வீட்டயா?' 'இல்லம்மா, முதல்ல நான் பெரிய வாத்தியாரைச் சந்திக்க வேணும்.'

'ஓமோம், அந்த மனிசன் தானே நீ ஸ்கொலர்சிப்பில யாழ்ப்பாணம் போய்ப் படிக்கிற துக்குக் காரணம். பொயிற்று வாற வழியிலதானே மாமா வீடும் வரக்குள்ள அங்கயும் போய்ற்று வா'

தாமோதரம் அதற்கு விடையளிக்காமலே அம்மாவிடம் கேட்டான். 'அண்ணன் வரவில் லையா அம்மா?'

'அவன் இன்னமும் திருக்கிணாமலையால வரவில்லைப் போல இருக்கு. சிலவேளை அவன் வர இருட்டாயும் போகும். நல்லா இருட்டினப் பிறகு வந்தா னெண்டா இஞ்ச வர மாட்டான். காலையில் தயிர்ப் பேணி எடுக்கத்தான் வருவான்'.

'இப்ப அவரும் குடிக்கிறாராமே'

'அப்படிப் போலத்தான் கிடக்கு. அப்பா கள்ளுக் கொட்டிலில குடிச்சா, மகன் சீல் சாராயம் குடிக்கிறான் போல. ஆனாநான் இன்னமும் அவன் குடிச்சதை காணல்ல. தயிர் விக்க நாளாந்தம் திருக்கிணாமலைக்குப் போறான். இங்கே இல்லாத சாராயக்கட அங்கே இருக்கு. வியாபாரத்த முடிச்சிற்று வரக்குள்ள இரண்டு போத்தல் சாராயம் கொண்டு வந்து இஞ்ச விக்கிறானாம். சிலவேளை அவனுங் குடிக்கலாம். உனக்கெப்படித் தெரியும் அவன் குடிக்கிறான் எண்டு?'

'அண்ணா சாடை மாடையாக் குடிக்கிறதாக மயில்வாகனம் எனக்குக் கடிதம் எழுதியிருந்தான். இந்த வருஷம் மாட்டுப் பொங்கலன்றைக்கு அவனுக்கு நல்ல வெறியாம்'

'இந்த ஊரில வெறி வைக்காதவனே பிறக்க மாட்டான் போல இருக்கு' என்று வெறுத்துக் கொண்டே தெய்வானை மீண்டும் அடுக்களைக்குட் சென்று தேநீர்க் கோப்பையுடன் வந்தாள்.

தேநீரைக் குடித்து முடித்த தாமோதரம் 'அம்மா நான் வாத்தியாரிட்டப் போயிற்று வாறன்' என்று தெருவிலிறங்கி நடந்தான். பங்குனி மாதத்தின் இறுக்கம் சற்றுத் தளர்ந்திருந்தது. மெதுவாக அசைந்த கொண்டலில் முற்றத்து மாமரத்தின் தளிர்கள் சோம்பிக் கொண்டே அசைந்தன. தாமோதரம் முற்றத்து மாமரத்தை தாண்டிப் புழுதி படிந்த மணல் ஒழுங்கையினூடே பாடசாலையை நோக்கி நடந்தான்.

தாமோதரம் தந்தையாரைப் போலல்லாது சற்று நெடுத்து வளர்ந்திருந்தான். தாயைப் போல. நிறத்திலும் அவன் தாயையே கொண்டிருந்தான். செம்மைபடர்ந்த அவன் முகத்திலே உதட்டின்மேலே தலைப்புப் பழுத்த கறுத்தச் சீனட்டி நெற்கதிரின் வாக்கில் மீசை அரும்பிக் கொண்டிருந்தது. கனவுகாணும் கண்கள் தலைக்குள் எத்தனையோ சிந்தனைகள். மனதுக்குள் எத்தனையோ ஆசைகள்.

ஒழுங்கை மணலில் கால் புதைத்து அவன் நடந்து செல்கையில் அடுத்த வீட்டுத் தெருவேலியின் கிடுகுக் கண்களினூடாக இரண்டு மனிதக் கண்கள் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தன. அவன் தன் வீட்டிற்குத் தன்னையே தேடி வருகிறான் என்ற எண்ணம் அக் கண்ணுக்குடையாளின் மனத்தில் வெட்கந்தோய்ந்த இன்பக் கிளர்ச்சி களை எழுப்பிக் கொண்டிருந்தது. ஆனால் தாமோதரம் மணல் ஒழுங்கையில் நேராக நடப்பதைக் கண்டு அக்கண்கள் கலங்கின. அதை அறியாதவனாய் தாமோதரம் நடந்து பாடசாலையை அடைந்தான். அவன் தேடிவந்த தலைமை ஆசிரியரும் பாடசாலை வாயிலிலேயே நின்றார்.

# அத்தியாயம் 2

கிராமத்தின் மத்தியில் இருந்த அப்பாடசாலை றோமன் கத்தோலிக்க மிஷனால் ஆரம்பிக்கப்பட்டது. இந்த வட்டாரத்தில் அந்த மிஷனரிகளின் தலைமைத்தனமான மூதூரில் இருக்கும் புனித அந்தோனியார் பாடசாலைக்கு அடுத்ததாக அவர்களது பெரிய பாடசாலை ஆலங்கேணியிற்தான் இருந்தது. அப்பாடசாலையின் தலைமையாசிரியர் தான் சின்னத்தம்பி.

சின்னத்தம்பி வாத்தியார் யாழ்ப்பாணத்து நெல்லியடியைச் சேர்ந்தவர். கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக ஆலங்கேணிப் பாடசாலையில் அவர் தான் தலைமையாசிரியர். பிறவிச் சைவராகிய அவர், எப்படியோ கிறிஸ்தவச் சகோதரர்கள் மட்டக்களப்பில் நடாத்திய ஆசிரிய பயிற்சிக்கல்லூரியிற் சேர்ந்த மூன்று ஆண்டு பயிற்சியை முடித்துக் கொண்டு ஆலங்கேணிக்கு ஆசிரியராக வந்தார். ஐந்து ஆண்டுகளின் பின்னால் அப்பாடசாலையின் தலைமையாசிரியர் ஓய்வுபெற்ற போது அவரிடத்திற்கு உயர்த்தப்பட்டிருந்தார்.

அவர் வரவின் பின்னர் பாடசாலை எவ்வளவோ முன்னேற்றங்கண்டது. ஆரம்பப் பாடசாலையாக இருந்த பாடசாலை சிரேஷ்ட பாடசாலையாக உயர்ந்தது. அது மட்டுமல்ல, ஆங்கிலமும் நன்கு தெரிந்த சின்னத்தம்பி வாத்தியார் மாணவர்களுக்கு ஆங்கிலமும் படிப்பித்தார். சாதாரணமாகப் புத்தியறிந்த பின்னர் தங்கள் பாடசாலைப் படிப்பை முடிந்துவிடும் பெண்களிற்கூட ஒருசிலர் மேற்படிப்புப் படித்தனர். சைவமத போதனைகூட அப்பாடசாலையில் ஒழுங்காக நடைபெற்றது. புதிதாக மிஷனைக் கையேற்ற அமெரிக்கக் குருமார் அதற்குத் தாராளமாக இடங்கொடுத்தனர்.

பாடசாலையில் மிகக் கெட்டிக்காரனாக இருந்த தாமோதரம் எட்டாம் வகுப்புப் புலமைப்பரிசிற் பரீட்சையிற் சித்தி பெற்றதும், மேற்படிப்புப் படிப்பதற்கு வந்தாறு மூலைக்குப் பதிலாகத் தமதூரான நெல்லியடியைத் தெரிவு செய்து அங்குள்ள மத்திய மகாவித்தியாலயத்திற்கு அனுப்பி வைத்தார் சின்னத்தம்பி வாத்தியார். தாமோதரத்திற்குப் பிரமாண்டமான எதிர்காலம் இருக்கிறதாக அவர் கணித்தார்.

அவர் கணிப்புப் பிழைக்கவில்லை. தாமோதரம் வருடம் ஒரு வகுப்பாகச் சித்தியடைந்து, தற்போது சர்வகலாசாலைப் புகுமுக வகுப்பில் கடைசி ஆண்டில் விஞ்ஞானம் படிக்கிறான். சித்தியடைந்தால் சர்வகலாசாலையில் அவனுக்கு உபகாரச் சம்பளம் கிடைக்கும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன், அவன் சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திர வகுப்பிற் சித்தியடைந்த போது தந்தை மயில்வாகனம் அவன் படிப்பை நிறுத்தி ஏதாவது உத்தியோகத்திற்கனுப்ப வேண்டும் என்று விரும்பினார். ஆனால் சின்னத்தம்பி ஆசிரியர் அதற்குச் சம்மதிக்கவில்லை. தாமோதரம் மேற்படிப்புப் படிக்க வேண்டும் என்று வற்புறுத்தி அவன் தந்தையை அதற்குச் சம்மதிக்க வைத்தார்.

நெல்லியடிக்குச் சென்று ஊர் உலகத்தை அறிந்து கொண்ட தாமோதரமும் தான் ஒரு டாக்டராக வேண்டும் என்று கனவு கண்டான். ஆகக் குறைந்தது ஒரு விஞ்ஞானப் பட்டதாரியாகவாவது வரவேண்டும் என்று விரும்பினான். ஆலங்கேணிக் கிராமத்தின் முதலாவது பட்டதாரியாக வேண்டும் என்ற ஆர்வத்தோடு படித்தான்.

தாமோதரத்தைக் கண்ட தலைமையாசிரியர், 'வாரும் வாரும்! இன்றைக்குத் தான் வந்தீரா? இந்த வழியாகத்தானே வந்திருப்பீர்? எனக்குத் தெரியவில்லையே' என்று வரவேற்றுப் பாடசாலைக் கட்டிடத்துள் அழைத்துச் சென்றார். சென்று கொண்டிருக்கையில் 'கிண்ணியாவிலிருந்து நான் இந்த வழியாக வரவில்லை சேர், கிண்ணியாத் தபாற்கந்தோருக்கு வந்திருந்த அம்பலவாணன்ர சைக்கிளில் ஏறிக் கொண்டு குட்டிக்கரச்சைப் பக்கமாக மேல் வழியால வந்தனான். அதுதான் நீங்கள் காணவில்லை' என்று விளக்கமளித்தான் தாமோதரம்.

பாடசாலைக்குள் நுழைந்ததும் தன் பெரிய மேசையடியில் இருந்த கதிரையில் அமருமுன் சின்னத்தம்பி ஆசிரியர் இன்னோர் கதிரையை இழுத்துப் பக்கத்திற் போட்டு இதில் இரும் என்று சொல்லி தானும் தன் கதிரையில் அமர்ந்தார்.

ஆனால் தாமோதரம் அந்த மேசைக்குப் பக்கத்தில் தன் ஆசிரியருக்கு முன்னால் அவருக்குச் சமதையாகக் கதிரையில் உட்கார விரும்பவில்லை. நான் இப்படியிருக் கிறேன் சேர், என்று சொல்லிக் கொண்டே பக்கத்திற் கிடந்த் டெஸ்கில் அமர்ந்து கொண்டான்.

முன்னால் இருந்த மேசையில் பாடசாலை இடாப்புகளும் சம்பவத்திரட்டுப் புத்தகமும், வேறு புத்தகங்களும் ஒழுங்கற்று இருந்தன. ஆசிரியரின் வலது பக்க மூலையில் சுருட்டுப் புகையிலை ஒன்றின் அரைவாசியும் சுருட்டுப் பற்ற வைத்த நெருப்புக் கொள்ளியும் இருந்தன. நெருப்பு அவிந்து கரியாகி மேசையிற் சாம்பற் தூகள்கள் கொட்டியிருந்தன. தேநீர் குடித்த கிளாஸ் ஒன்றும் மேசையில் இருந்தது. பக்கத்திலே கோதுமை மாவைக் கொண்டு கிளறிய பசைச் சட்டி ஒன்று இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம், அந்த மேசைதான் சின்னத்தம்பி ஆசிரியரின் ஆஸ்தானபீடம். அந்த ஆஸ்தான பீடத்தில் அமர்ந்து படிப்பித்துக் கொண்டே மரக்கறியும் வெட்டுவார். கீரையும் அரிவார். வெங்காயத்தையும் உரிப்பார். எது எப்படியிருப்பினும் எல்லா வகுப்புக்களிலும் பாடங்கள் ஒழுங்காகவே நடக்கும். ஒன்றரை மணிக்குப் பாடசா லை முடியும் போது ஆசிரியரின் சமையலும் முடிவடைந்திருக்கும். பாடசாலை முடிந்ததும் சின்னத்தம்பி ஆசிரியரைத் தவிர மற்றைய ஐந்து ஆசிரியர்களும் பாடசாலையை விட்டுப் போய்விடுவார்கள். அடுத்தநாட் காலையிற்தான் அவர்களை பாடசாலையிற் காணலாம். ஆனா, சின்னத்தம்பி ஆசிரியர் மதியச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு ஒரு சுருட்டைப்பற்ற வைத்து பாடசாலைக்கு முன்னால் தெருவோரத்தில் நிழல் கவித்து நின்ற ஆலமரத்தின் கீழே தன்படங்குச் சாய்கதிரையில் அமர்ந்து ஒரு கோழித்தூக்கம் போட்டு விட்டு மூன்று மணிக்கெல்லாம் மீண்டும் தன் ஆஸ்தானபீடத்தில் அமர்ந்து கொள்வார். பெரிய வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடம் நடாத்துவார். இன்று ஆங்கிலப்பாடம் முடிவடைந்து விட்டது போலும் வெளியே இருள் பரவிக்கொண்டு வந்தது.

கொஞ்சம் இரும் என்று எழுந்து சென்று அறைக்குள்ளேயிருந்த பெற்றோமக்ஸ் விளக்கை எடுத்துவந்து கொளுத்தும் முயற்சியிலீடுபட்டார். சில நிமிடங்களில், ஆலங்கேணிக் கிராமத்துக்கு அறிவொளியைக் கொடுத்துக் கொண்டிருந்த அப் பாடசாலையில் பெற்றோமக்ஸ் விளக்கு பிரகாசமாக எரிந்து இருளைக் கடிந்து கொண் டிருந்து. அந்த விளக்கொளியில் அக்கிராமத்துப் பாடசாலை மாணவர்கள் பலர் வந்து மௌனமாகத் தம் பாடங்களைப் படிப்பார்கள். தங்கள் வீட்டுப் பாடங்களைச் செய்வார்கள். அந்தப் பெற்றோமக்ஸ் விளக்கொளியில் தாமோதரமும் நான்கு ஆண்டுகள் படித்திருக்கிறான்.

மீண்டும் வசதியாகச் சின்னத்தம்பி ஆசிரியர் தம் இருக்கையில் அமர்ந்து கொண்டதும் தாமோதரம் அவரிடம் கேட்டான். ''சௌந்தரம் பாடசாலைக்கு வாறதில்லையாமே. அம்பலவாணன் எனக்கு எழுதியிருந்தான் சேர்''

மச்சாளில் மெத்தக் கரிசனைதான், நானும் எவ்வளவோ தெண்டித்துப் பார்த்திட்டன். அவள் பெரிய மனுஷியான பிறகு உன்ர மாமா அவளைப் பாடசாலைக்கு அனுப்பமாட்டன் என்றிட்டார். என்னால ஒண்ணுஞ் செய்ய முடியல்ல'' என்றார் சின்னத்தம்பி.

'அறிவுகெட்ட ஜன்மங்கள்' என்று முணுமுணுத்துக் கொண்டான் தாமோதரம்.

இராப்படிப்புக்காக பிள்ளைகள் தங்கள் புத்தகங்களோடு வந்து கொண்டிருந் தார்கள். பாடசாலைக்கு முன்னால் மணல் மண்டிய தெருவில் திருகோண மலைக்குச்

சென்றிருந்த தயிர் வியாபாரிகளும் கடற்படைத் தளத்தில் வேலை செய்பவர்களும் அலுத்துக் களைத்து வீடு சென்று கொண்டிருந்தார்கள். ''நான் வாறன் சேர் இன்றைக்கு எனக்கு அலுப்பாயிருக்கு. நாளைக்கு நானும் இங்கே வந்துதான் படிக்கப்போறன். இப்ப சும்மா உங்களைக் கண்டு போகத்தான் வந்தனான்'' என்று விடை பெற்றான் தாமோதரம்.

'சரி போய் வாரும்' என்று அவனை வழியனுப்பினார் சின்னத்தம்பி.

தாமோதரம் பாடசாலையிலிருந்து வெளியேறியபோது இருளிலே ஒன்றுமே புலப்படவில்லை. தெருப் படலையில் சற்றுத் தாமதித்தான். கண்கள் இருளுக்கு பழகிக் கொண்டன. கன்னங்கரிய இருளிலே தெருவின் வெண்மணல் பளிச்சென்று வழியைக் காட்டிற்று. தாமோதரம் வீட்டை நோக்கி நடந்தான்.

அவனுக்குத் தன் கிராம மக்களின் அறியாமையையிட்டு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. பதின்மூன்று பதினான்கு வயதிற் பெண்கள் பராயமடைந்ததும் அதை ஊருக்கெல்லாம் பறையடிப்பது போல ஒலிபெருக்கியை முடுக்கிவிட்டு, நீராட்டு விழா நடத்தி அதன் பின் அந்தப் பெண்ணுக்கு அறிவின் பிரகாசமே படக்கூடாது என்று எண்ணியவர்களாய் அவள் பாடசாலைக்குச் செல்வதை நிறுத்திவிடுவார்கள். இது என்ன கொடுமை! சௌந்தரமும் இதற்கு விதிவிலக்கல்ல என்ற கசப்பான எண்ணங்கள் மனத்தைக் குடைய அவன் மணலிற்கால் புதைய நடந்து கொண்டிருந் தான்.

பிள்ளையார் கோயிலடியை அடைந்து விட்டான். கோயிலுக்கு எதிரிலேதான் அவன் மாமனாரின் வீடு. அங்கே விளக்கொளி தென்பட்டாலும் வீடு நிசப்தமாகத்தான் இருந்தது. காலையிலே மாமாவைக்கண்டு அவருக்குச் சூடாக இரண்டு வார்த்தை சொல்ல வேண்டுமென்று மனத்துட்கறுவிக்கொண்டு மேலே நடக்கையில் எதிரே குள்ளமான ஒரு உருவம் தள்ளாடி வந்து கொண்டிருந்தது.

தாமோதரம் தரித்து நின்று இருளிலே வந்த அந்த உருவத்தைக் கூர்ந்து கவனித்தான். நிச்சயமாக அது கோணாமலைக் கிழவர் தான் என்று நிதானித்துக் கொண்ட தாமோதரம் இந்த நேரத்தில் அவரின் கண்ணிற் பட்டுவிடாமல் எப்படியாவது தப்பித்து விட வேண்டும் என்று விரும்பினான்.

ஆனால் அதற்குள் அவனை நெருங்கிவிட்ட அந்த கிழவர் ஒரு தடவை காறித் துப்பி விட்டு யார்ரா அவன்? என்று உறுமியபடி கேட்டது.

இனி அவரிடமிருந்து விடுபட முடியாது என்று உணர்ந்த தாமோதரம் நான்தான் பெத்தப்பா என்றான்.

நான் - எண்டா யார்ரா- அவன் பெரிய கொம்பன் இங்கால வாடாபாப்பம்' என்று அவன் கையை எட்டிப் பிடித்துக்கொண்டது.

'நான் தான் பெத்தப்பா தாமோதரம்' என்று தன்னைத் தானே அறிமுகப்படுத்திக் கொண்டான் தாமோதரம்.

யாரு மயில்வாகனத்திட மகனா?

'ஓம் பெத்தப்பா. இண்டைக்குத்தான் யாழ்ப்பாணத்திலிருந்து வந்தன்'.

அப்படிச் சொன்னதும் கோணமாமலைக் கிழவர் அவனைக் கட்டியணைத்துக் கொண்டார். அவர் வாயிலிருந்து வந்த புளித்த கள்ளின் கோரமான நெடி தாமோதரத்துக்கு அருவருப்பாக இருந்தாலும் அவனும் அவரைக் கட்டியணைத்துக் கொண்டான். ஒருவாரமாகச் சவரஞ் செய்யப் படாமலிருந்த அவரின் தாடி மயிர் நெருஞ்சி முள்ளாக அவன் தோளிற்குத்தியது. 'ஏண்டா வந்த உடன பெத்தப்பாவை வந்து பார்க்கல' என்று அக்கிழவர் கடிந்து கொண்டபோது பின்னேரம் வீட்ட வந்தனான் பெத்தப்பா. ஆனால் பின்னேரத்திலே நீங்க வீட்ட இருக்க மாட்டீங்களே என்று நெஞ்சாரப் பொய் சொன்னான் தாமோதரம்.

'இப்ப இந்த இருட்டில எங்க போறா? வீட்டபோகாலமைக்கு வீட்ட வா' என்று சொல்லி அவனை விட்டு விட்டுத்தள்ளாடித் தள்ளாடி முன்னேறினார் கோணாமலைக்கிழவர்.

அவரின் பிடியிலிருந்து விடுபட்ட தாமோதரம் தன் குரல் கேட்டுத் தெருப் படலைக்கு வந்து எட்டிப்பார்த்த சௌந்தரத்தைக் கண்டு கொள்ளாதவனாக விறுவிறு என்று வீட்டை நோக்கி நடந்தான். கோணாமலைக் கிழவருக்கு வயது அறுபதும் இருக்கலாம் எண்பதும் இருக்கலாம். அவர் வயதை மதிக்கவே முடியாது. கிழவனாக இருந்தாலும் திடகாத்திரமான தேகக்கட்டு, இப்போது தள்ளாடிக் கொண்டு நடக்கும் கிழவர் வயலில் இறங்கி ஏர்க் காலைப் பிடித்தாரானால் ஏர் இழுக்கும் மாடுகள் களைத்துச் சோர்ந்து நடை பயிலத் தயங்கினாலும் கோணாமலையாருக்கு களைப்பு ஏற்படாது.

கிழவருக்கு கண்டக் காட்டிலே முப்பது ஏக்கருக்கு மேல் மானாவாரிக் காணி இருந்தது. நான்கு சோடி எருத்து மாடுகளும் இருந்தன. பட்டியிலே நூற்றுக்கும் மேற்பட்ட உருப்படிகள். மாரி தொடங்கித் தலை மழை பெய்ததும் அவர் கண்டற்காட்டு வயலுக்குப் போய் விடுவார். முதலில் குடியிருப்புத் திடலை உழுது இராசவள்ளி, வற்றாளை என்று கிழங்குகளைப் பயிரிட்டு மீதி நிலத்தில் கச்சான் விதைப்பார். தனது கறிக்காக கத்தரியும் வெண்டியும் மிளகாயும் நடுவார், அந்த வேலை முடிந்ததும் முதலில் பள்ளப் பகுதியை உழுது மூத்த நெல்விதைப்பார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பின்னர் படிப்படியாக திடலை உழுதுகாலங்குறைந்த சீனாட்டியை விதைத்தால் தைப்பூசம் கழிய எல்லாமே அறுவடைக்குத் தயாராகிவிடும்.

அருவி வெட்டிச் சூடடித்து வீட்டுக்குத் திரும்ப பங்குனி நடுப்பகுதியாகி விடும். அந்த ஆறு ஏழு மாதங்களும் கண்டக் காட்டு வெளியிலே ஒரு தபஸியாகத்தான் அவர் வாழ்க்கை நடத்துவார். அவர் வேளாண்மைச் செய்கை ஒரு மகாயக்ஞம்! அந்த கேள்வியை முடித்துக் கொண்டு வந்தாரானால் அடுத்த மாரி தொடங்கும் வரை சாயந்தர வேளைகளில் தாமரைவில் கள்ளுக் கொட்டிலிற்றான் அவரைக்காண முடியும்!

காலையிலே பருத்தித்துறை வத்தைக்காரருக்காக நெல் அளந்து கட்டுவார். வியாபாரத் துக்கென்று அவர் கட்டிய நெல்லும், அவரது வயலில் விளைந்த நெல்லும் வீட்டிலே மூட்டை மூட்டையாக அடுக்கப்பட்டிருந்தன. ஆலங்கேணிக் கிராமத்திலே செயலுள்ள மனிதராக விளங்கிய அவர் தாமோதரத்தின் தாய்வழிப் பூட்டான். தன் பூட்டன் தனது முன்னோர்களின் ஊரான வடமராட்சியில் உயர்கல்வி கற்றான். என்பதில் கோணாமலையாருக்கு ஒரு பெருமை!

## அத்தியாயம் 3

தாமோதரம் வீட்டை அடைந்தபோது அவன் தாயும் சின்னத் தங்கையும் முற்றத்திலிருந்த மாமரத்தின் கீழே பாயில் அமர்ந்திருந்தார்கள். இரண்டு தம்பிமாரும் பாடசாலைக்குப் படிக்கப் போய் விட்டார்கள் போலும். மாமரத்தின் கீழே அரிக் கேன் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. தாமோதரம் பாயில் வந்தமர்ந்த போது 'நீ வந்திருக்கிறாய் என்று கேள்விப்பட்டு மாமா இங்கே வந்தார். நீ அவர் வீட்டுக்கு போனியா?' என்று கேட்டாள் தெய்வானை.

'ம்' என்று உறுமிய தாமோதரம் 'நான் அங்க போகல்ல. வாத்தியாரிட்டத்தான் போனன்' 'நீ அங்கை போயிட்டாய் எண்டுதான் நான் நினைச்சுக் கொண்டிருந்தன்'

'வந்த உடன அவர் வீட்ட போய் கையெழுத்து வைக்க வேணுமோ' 'எப்பவும் போறப் போல போறதுதானே முந்தியெல்லாம் அங்ககிடந்துதானே விடிவாய்', 'அந்தக் கதை இருக்கட்டும். எனக்குப் பசிக்குது சாப்பிடவேணும்' என்றான் தாமோதரம். தெருப்படலையைத் திறந்து கொண்டு அவன் தம்பிமார் இருவரும் வந்து கொண்டிருந்தார்கள். ஒருவன் கையில் ரோச்லைற்றும் கூரான நீண்ட இரும்புக்கம்பி ஒன்றும் இருந்தது. அடுத்தவன் கையில் நீண்ட தகட்டுக் கத்தியும் குட்டிச் சாக்கும் இருந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாக்குப் பை கனமாகவே இருந்தது. அவர்கள் இருவரும் எங்கே போய்வருகிறார் கள் என்பதைத் தெரிந்து கொண்ட தாமோதரத்திற்கு ஆத்திரம் குமுறிப் பொங்கியது. கொட்டியாபுரக்குடாவின் கரையோரமாகக் கிண்ணியா ஊடாகச் செல்லும் திருக்கோணமலை மட்டக்களப்பு பிரதான பாதையிலிருந்து அரை மைல் தூரத் திற்றான் ஆலங்கேணிக் கிராமம் அமைந்துள்ளது. மெயின் வீதிச் சந்தியிலிருந்து தெற்காக நடந்தால் கிண்ணியாக்குடாவிலிருந்து கிழக்காக ஓடும்கட்டையாற்றத் தாண்டித்தான் ஆலங்கேணிக்குச் செல்ல வேண்டும். மேற்குப் பக்கமாக குறிஞ் சாக்கேணி உப்பு நீராறு வடக்கு தெற்காக ஓடுகிறது. வெள்ள நேரத்தில் அவ்வாற்றின் கிழக்குப் பக்கமாக இருக்கும் உப்புக் கரைச்சையில் முழங்காலளவு நீர் தேங்கும். இந்த ஆற்று வளத்தின் காரணமாக ஆலங்கேணியில் நண்டுகளும் இறால்களும் குறை வின்றிக் கிடைக்கும்.

இரவிலே தென்னோலைச் சூள் வெளிச்சத்திலோ அல்லது மின் சூள் ஒளியிலோ ஆற்றோரங்களில் நண்டு குத்துவது ஆலங்கேணிக் கிராமத்தில் பெரியவர்களுக்கும் இளைஞர்களுக்கும் பிடித்தமான பொழுதுபோக்கு.

அதற்குத்தான் ஆறாம் வகுப்பும் எட்டாம் வகுப்பும் படிக்கும் தம்பிமார் இருவரும் சென்றிருக்கிறார்கள் என்று அறிந்த போது தாமோதரத்தின் மனம் குமுறியது. ஆனாலும் தன் கோபத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் மனதுட் கறுவிக் கொண்டிருந்தான். ஆனாலும் இரவுணவாக பிட்டையும் நண்டுக் கறியையும் ரசித்துச் சாப்பிட்டான். சாப்பிட்டு முடித்தபோது சாயந்தரம் மிகமிக மெதுவாக மாந்தளிர்களை அசைத்த கொண்டற் காற்று அசமந்து அற்றுப் போயிருந்தது. எங்கும் இலை அசையவில்லை. காற்றாடவில்லை, ஒரே புழுக்கமும் அவிச்சலுமாக இருந்தது! தாமோதரம் மண்டபத்துள் மடித்துச் சுவரோடு சார்த்தப்பட்டிருந்த சாக்குக்கட்டிலை எடுத்து முற்றத்தில் விரித்தான். அதனைக் கண்ட தெய்வானை இப்ப சுகமாகத்தான் இருக்கும். ஆனா விடியப்புறத்தில் சரியான பனி. அந்தக் குளிரில படுத்துக்க மாட்டா, கட்டில் விரிச்சு மண்டபத்துக்குள்ளேயே படு என்று சொல்லி அவனைத் தடுத்தாள். ஆனா தாமோதரம் கேட்கவில்லை. கட்டிலின் மேலே நான்காக மடித்த அம்மாவின் வைல் சேலையை விரித்து அதன்மேல் தலையணையை வைத்த தாமோதரம் தலையைச் சரித்த சற்று நேரத்திற்கெல்லாம் நித்திரையாகி விட்டான். அவனுக்குப் பயணித்து வந்த அலுப்பு.

தெய்வானை கட்டிலுக்கு சற்று தூரத்தில் நெருப்புச் சட்டியைக் கொண்டு வந்து வைத்து அதன் மேல் கொத்துக் கொத்தாக வேப்பங் குழைகளை அடுக்கிய போது நெருப்புச் சட்டியிலிருந்து புகை எழுந்தது. 'இந்தப் புகைக்கு எந்த நுளம்பும் வராது' என்ற திருப்தியோடு அடுக்களைப் பக்கம் சென்றாள். அதன் கதவு சிக்காராகச் சாத்தப்பட்டுத்தான் இருந்தது. உள்ளே உறையிடப்பட்டிருந்த பாற் பேணிகள்

இருந்தன. அவள் வளர்க்காத அயல் வீட்டுப் பூனைக்குத் தெய்வானை பயந்தாள். 'பயப்படாதே இதோ நான் காவலுக்கு இருக்கிறேன்' என்று சொல்வது போல கதவருகில் படுத்துக் கிடந்த வீரன் உறுமியது. அதன் உறுமலிற் திருப்தியை அடைந்தவளாகத் தெய்வானை மீண்டும் முன்பக்கமாக முற்றத்துக்கு வந்த போது தாமோதரம் அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருந்தான். இரவின் மௌனத்தைப் பிளந்து கொண்டு வடக்கே கட்டையாற்றுக் கரைச்சப் பக்கமிருந்து மனிதக் குரல்கள் கேட்டுக் கொண்டிருந்தன. இரவு ஒன்பது மணிக்கு மேல் ஆலங்கேணி கிராமத்தில் அக்குரல்கள் பழக்கமானவைதான். ஆனால் அக்குரல்கள் கிராமத்தின் பல பக்கங்களிலுமிருந்து நாளுக்கு ஒரு இடத்திற் கேட்கும். இன்று வடக்கே கட்டையாற்றுப் பக்கமாக இருந்து வருகிறது. 'கொச்சியான்ற வீட்டுப் பக்கந்தான் சத்தங் கேட்குது சும்மா வெறியில கிடந்து கத்துறானுகள்' என்று அலுத்துக் கொண்ட தெய்வானை மண்டப வாயில் சீமெந்துத் தரையில் முந்தானையை விரித்து படுத்துக் கொண்டாள். நன்றாக பூசிமினுக்கிய சீமெந்துத் தளத்தின் குளுமை பங்குனி மாத புழுக்கத்துக்கு இதமாக இருந்தது. படுத்ததும் தெய்வானை கண்ணயர்ந்து விட்டாள்.

முற்றத்திலே படுத்திருந்த தாமோதரம் அதிகாலையிலேயே விழித்துக் கொண்டான். அவன் தாயார் சொன்னதுபோல அந்த அதிகாலை கடுமையான குளிராகத்தான் இருந்தது. அந்தக் குளிர்தான் அவனை எழுப்பிவிட்டிருக்க வேண்டும். எழுந்துவிட்ட தாமோதரம் கட்டிலில் விரித்திருந்த சேலை மடிப்பை விரித்துக் கால்களையும் தலையையும் கூடச் சேலையால் போர்த்துக் கொண்டு மீண்டும் மல்லாந்து படுத்தான், அதிகாலைக் குளிருக்கு அந்தப் போர்வை இதமாக இருந்ததே தவிர நித்திரை வரவில்லை.

தலையை மூடியிருந்த சேலையை சற்று நெகிழ்த்திய போது மாங்கொத் துகளினூடே அர்த்த சந்திரன் நிலவைப் பொழிந்து கொண்டிருந்தது. திடீரெனச் செட்டைகளைத் தட்டிக்கொண்டு சௌந்தரத்தின் வீட்டுப் பனிச்சை மரத்திலிருந்து சேவல் கூவியது. அதைத் தொடர்ந்து ஊரிலுள்ள எல்லாச் சேவல்களும் முறை வைத்துக் கூவின. அக்கூவல்களிடையே மணல் ஒழுங்கையில் சரசரத்துச் செல்லும் கட்டை வண்டிகளின் சப்தமும், கிலுகிலுத்துப் பறந்து செல்லும் கரிச்சான் குருவிகளின் ஓசையும் கேட்டன. தூரத்தே குட்டிக்கரச்சிப் பள்ளிவாயிலிலிருந்து பாங்கு சொல்லும் மோதீனின் குரல் காற்றிலிழைந்து வந்தது. இந்த மண்ணுலகத்து நல்லோசைகளை யெல்லாம் கேட்டபடி படுத்துக் கொண்டிருந்தான் தாமோதரம்.

மண்டபத்தின் தாழ்வாரத்துப் பந்தலில் பற்றிப் படர்ந்திருந்த கொடிமல்லிகைப் பூக்களின் நறுமணத்தை அனுபவித்துக் கொண்டே தாமோதரம் கட்டிலில் மல்லாந்து படுக்கையில் கிழக்கு வெளுக்கத் தொடங்கிக் கூம்பிய முகைவிரிவது போலக் காலை மலர்ந்து கொண்டிருந்தது. வரவர மாட்டுவண்டிகளின் சப்தம் அதிகரித்தது. அவை மணல் ஒழுங்கையால் சென்று வேலும் மயிலும் கடைச்சந்தியிற் திரும்பி கரைச்சையில்

இறங்குகையில் பாதி இடிந்திருந்த மதகிலே டொக்கென்று ஏறிவிழும் சப்தம் காலை நேரத்தில் நாராசமாகக் கேட்டது. அந்த ஒலியை மீறிக் கொண்டு பிள்ளையார் கோயிலிருந்து சங்கொலி கிளம்பியது.

அதற்கு மேலும் தாமோதரத்தாற் படுத்திருக்க முடியவில்லை. எழுந்து கட்டிலை மடக்கி மாமரத்தோடு சாத்தி வைத்துவிட்டுப் பின்னாலிருந்த மல்லிகைப் பந்தலைத் தாண்டி மண்டபத்துள் நுழைந்து சுவரின் ஆணியிற் தொங்கிய மெய் கண்டான் நாட்காட்டிக்கு மேலாகத் தொங்கிய சட்டையை எடுத்து உடம்பிலே மாட்டிக் கொண்டான். மண்டபத்துள்ளிருந்து பார்க்கையில் அடுக்களைக்குள்ளே விளக்கு எரிவது தெரிந்தது.

## அத்தியாயம் 4

ஆனால் தாமோதரம் அடுக்களைப்பக்கம் செல்லாமல் மீண்டும் முற்றத்துக்கு வந்து தெருப்படலையைத் திறந்து தெருவோரத்தே நின்ற சின்னஞ்சிறிய வேப்பங் கன்றின் குச்சியை உடைத்துப் பல் விளக்கிக் கொண்டிருந்த போது அவன் அண்ணா நாகேந்திரம் தோளிலே காவுதடியுடன் வந்து கொண்டிருந்தான். காவுதடியின் இரு அந்தங்களிலும் இரண்டு பெரிய தடிப்பான அட்டைப் பெட்டிகள் தொங்கிக் கொண்டிருந்தன. தாமோதரத்தைக் கண்டதும் எப்ப தம்பி வந்தாய்? என்று ஆச்சரியத் தோடு கேட்டான் நாகேந்திரம்.

'நேற்றுத்தான் அண்ணா வந்தேன்' என்றான் தாமோதரம். ஆனால் அவன் பதிலைக் காதில் வாங்கிக் கொள்ள நேரமில்லாதவனைப் போல் தெருவின் தகரக்கதவைத் தள்ளித் திறந்து கொண்டு தன் காவுதடியுடன் அடுக்களைப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தான்.

அவனுக்குப் பின்னால் தெருக்கதவு தானாகவே மூடிக்கொண்டபோது கதவின் பின்னால் கயிற்றில் கட்டப்பட்டு மேலே உருளையிற் தொங்கிக் கொண்டிருந்த போத்தல் பெருஞ்சத்தமாய்க் கதவில் முட்டிக்கொண்டது. வெளியே நின்ற தாமோதரம் தெருப்படலையை மெதுவாகத் திறந்து அண்ணனின் பின்னால் அடுக்களைப் பக்கஞ் சென்றான்.

அடுக்களைக்குட் சென்ற நாகேந்திரமும் அம்மாவும் அட்டைப் பெட்டி களுக்குள்ளே தயிர்ப் பேணிகளை அடுக்கிக் கொண்டிருந்தனர். சின்னத் தங்கையும் அவர்கள் இருவருக்கும் உதவி செய்து கொண்டிருந்தாள். தயிர்ப்பேணிகளை அடுக்கிக்கொண்டே தெய்வானை கேட்டாள் ''என்னாடாமனே, உன்னிட்ட இருந்து எனக்கு ஐம்பது ரூபா நிலுவையா இருக்கு. தாறகதையே கதைக்கிறாய் இல்ல. மாட்டுக்கார வல்லிபுரம் எனக்கென்ன சும்மாவா பால் தாரான்?'' என்றாள் அம்மா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இன்றைக்கு வெள்ளிக்கிழமை. நேவில வேலை செய்கிறவனுக்கெல்லாம் சம்பளம். ஆனா அவன்கள் வீட்டவர ஐந்து மணிக்கு மேலாயிரும். அது மட்டும்நான் திருக்கிணா மலையில நிக்கேலா நாளைக்கு நான் அவங்களிட்டக் காசப்பிரிச்சிடுவன். பின்னேரம் உனக்கு காசத்தருவன்'' என்றான் நாகேந்திரம்.

'சரிதான், நாளைக்குக் காசு வராட்டி இந்த வியாபாரத்தையே விட்டிற வேண்டியது தான்' என்று மகனிடம் கண்டிப்பாய்ச் சொல்லிய தெய்வானை இரு பெட்டிகளிலும் சரியாக இரு நூற்றைம்பது பேணிகளை அடுக்கி முடித்தாள். அடுக்கி முடித்ததும் இந்தா தேத்தண்ணி குடி என்று அவனிடம் தேநீர்க்கோப்பையை நீட்டினாள்.

தேநீரை வாங்கிக்குடித்த பின்னர், நாகேந்திரன் தயிர்ப்பேணிகள் அடங்கிய பெட்டிகளை மெதுவாக வெளியிலே கொண்டு வந்து வைத்து, அவைகளின் மேலேயிருந்த கயிற்று வளையத்தில் காவுதடியின் இரு அந்தங்களையும் லாகவமாக நுழைத்துக் காவுதடியைத் தோளில் வைத்து இரு பக்கப் பாரத்தையும் சமன் செய்வதற்காய் தோளில் வைத்த காவுதடியைச் சற்றுப் பின்னால் நகர்த்தி நடக்கத் தொடங்கியதும் அவனது தங்கை முன்னால் ஓடிச் சென்று தெருக் கதவைத் திறந்து பிடித்தபடி நின்றாள்.

அடுக்களைக்குள்ளிருந்து அவனுடனே வெளியேறி நடந்து வந்த தெய்வானை அதுசரி வெறும் பேணிகளைக் கொண்டு வரவில்லையே. இன்றைக்கு என்னத்தில பாலூத்திறது? என்று கேட்டாள்.

'நேத்துத் திருக்கிணாமலையால வர நல்லா நேரஞ் செண்டு போச்சு. அதால அப்படியே வீட்ட போயிற்றன் தங்கச்சிய அனுப்பி வெறும் பேணியை எடுத்துக்கம்மா' என்று நடையிலேயே பதில் சொல்லிக் கொண்டு தெருப்படலையைத் தாண்டி மண் ஒழுங்கையில் இறங்கித் தோளிலுள்ள கா ஆட, ஆட விசுக்கு விசுக்கென்று நடந்தான் நாகேந்திரம்.

இவைகளையெல்லாம் பல்தேய்த்துக் கொண்டிருந்த தாமோதரம் தன் தாய் மீண்டும் அடுக்களைக்குள் வந்ததும் முகத்தைக் கழுவிக் கொண்டு அடுக்களைக்குள் நுழைந்தான். குத்தியில் அமர்ந்து கொண்ட தாமோதரத்திற்குத் தெய்வானை சுடச்சுடத் தேநீர் கொடுத்தாள். அதைக் கொஞ்சங் கொஞ்சமாக சுவைத்துக் கொண்டே 'அம்மா அண்ணனைப் பார்த்தாப் பரிதாபமாக இருக்கு. விடியற் காலையிலே காவுதடியைச் சுமந்து போறான். திருக்கிணாமலை வெயில் எல்லாந்திரிஞ்சி பொழுது படத்தான் வீட்டுக்கு வாறான்'

யார நோகிறது? இந்தக் கறுமத்த அவன்தான் தேடிக் கொண்டான். முளைக்க முன்னம் அவனுக்குக் கல்யாணம். இந்த ஆனி பொறந்தாத்தான் அவனுக்கு இருபத்தொரு வயசு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். ஆனி மாதத்தில் அவன் பிறந்ததாலை அந்த வருடம் தம்பலகாமக் கோணேசர் திருவிழாவுக்குக் கூட நான் போகல்ல'

'ஆனா அப்பா சண்டை பிடிச்சாலு, நீயும்தானே அம்மா கல்யாணத்துக்குச் சம்மதிச்சா'

என்ன செய்றது? குமர்ப்பழியைத் தேடிக்கொள்ளக் கூடாது என்றுதான் சம்மதிச்சன். செம்பர்ர பெட்டை வடிவான பெட்டைதான். பயல்பூந்து கொண்டு அங்கேயே இருந்திற்றான். அதுகளும் இதுதான் தாயம் எண்டு பூதாக்கலத்தில சோறு போட்டிற்றுகள் இனி என்ன செய்வது என்று நானும் சம்மதிச்சன். அந்த நாய்க்குக் கோணாமலையப்பா தம்பலகாமத்தில் கல்யாணம் பேசினார். அங்கின முடிச்சிருந்தான் என்டா ரெண்டேக்கர் நீர்ப்பாய்ச்சல் காணியாவது கிடைச்சிருக்கும்.

இஞ்ச போன இடத்தில ஒரு மண்ணாங்கட்டியும் இல்ல. அதனால காத்தடியச் சுமக்கிறான். இது அவன்ர தலவிதி!

ஆத்திரத்துடனும் ஆற்றாமையுடனும் அனுதாபத்தோடும் பேசி முடித்த தெய்வானை தன் மகளைக் கூப்பிட்டு இரண்டு முட்டைகளைக் கொடுத்து இதைக் கொண்டேய் ஆத்தைக்கிட்டக் கொடுத்திற்று வாம்மா. அவ அண்ணாக்கு அப்பம் அனுப்புறன் என்று சொன்னவ கொடுத்திற்று வரக்குள்ள பெரியண்ணாட்டப் போய் வெறும் பேணியையும் எடுத்திற்றுவா என்றாள்.

இலட்சுமி முட்டைகளை வாங்கிக் கொண்டு ஓடினாள். தாமோதரம் மண்டபத்துட் சென்று தலைவாரி முகப்பூச்சையும் பூசிக்கொண்டு தெருவுக்கு வந்தான்.

தெருவோரத்தேயிருந்த பனிச்சை மரம் வளவுக்குள்ளேயிருந்த மாமரத்திற்குப் போட்டியாகக் கண்ணைப் பறிக்கும் இளஞ்சிவப்பு நிறத்தில் இளந்தளிர்களைப் பொதுளிக் கொண்டு குடைகவிந்து நின்றது. எதிர்வளைவுக்குள்ளே மூலஸ்தானம் மட்டும் கல்லால் அமைந்த பிள்ளையார் கோயிலின் முன்னால் அமைந்திருந்த ஓலைப்பந்தலின் கீழ் இருந்த கல்லில் பூசாரியார் செவ்வரத்தம் பூக்களை வைத்துக் கொண்டிருந்தார். பூவரசந்தீவுப் பக்கமிருந்து வரும் மாட்டு வண்டிகளும் கொண்டு கண்டக்காட்டை நோக்கிப் போகும் வண்டிகளும் தெருவிலே புழுதியைக் கிளப்பிச் சென்றன. சந்தியில் வேலும் மயிலும் தேத்தண்ணீர்க்கடையில் பிளேன்ரீ அடிக்கும் சப்தம் அமர்க்களமாகக் கேட்டது.

தாமோதரத்துக்கு என்ன செய்வது என்று தோன்றவில்லை. மாமாவின் வீட்டிற்குப் போகலாம் என்று எண்ணம் தோன்றியது. ஆனாலும் இந்த அதிகாலையிலா போவது? என்று அந்த எண்ணத்தைக் கைவிட்டுப் பனிச்சை மரப்பக்கமாக நடந்தான். எதிரேயுள்ள கோயில் வளவு முழுவதும் சருகுகள் நிறைந்து காணப்பட்டன. இன்று


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெள்ளிக்கிழமை வழிபாட்டுக்காக வரும் பாடசாலைச் சிறுவர்கள் வளவைக் கூட்டிப் பெருக்குவார்கள் என்று பூசாரியார் எண்ணிக் கொண்டிருக்கிறார் போலும்.

அவருக்கென்ன சம்பளமா? அந்தக் கோயிலுக்கு எந்த அரசன் நிவந்தம் கொடுத்திருக் கிறான்? கூறு சங்கு தோல் முரசு கொட்டோசையைப் பூசாரியார் நேரத்துக்கு நேரம் கொடுத்து வருகிறாரே அது போதாதா?

கோயில் வளவைக் கூட்டிப் பெருக்கலாம் என்று முன்னேறிய தாமோதரத் தைத் தேநீர்க்கடைப்பக்கமிருந்து வந்த கைதட்டல் திரும்பிப் பார்க்க வைத்தது. தேநீர்க் கடைக்குள்ளிருந்து பாலாவும் பரமனும் வந்து கொண்டிருந்தார்கள். அவசர அவசரமாக வந்த பாலா தாமோதரத்தின் கைகளைப் பிடித்துக் கொண்டு எப்படாப்பா வந்த நீ. பாடசாலை லீவு விட்டாச்சா என்று கேட்டான்.

என்ர கிளாசுக்கு மட்டும் லீவு. ஆனாச் சித்திரை வருஷங் கழிச்ச அடுத்தநாள் போகவேணும். ஆவணி மாதத்தில் கடைசிச் சோதனை புரட்டாசியில தான் மறுபடியும் இங்க வருவன்.

அப்ப நல்லதாப் போச்சு, நாளைக்கு நீ இல்லியே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தன்.

ஏன் என்ன சங்கதி? என்று வினாவினான் தாமேதரம், ஒண்ணுமில்லை நம்ம எம். பி. நாளைக்கு காலையில இஞ்ச வாரார். நேற்றுத்தான் அறிவிச்சிருந்தார். நாளைக்கு பத்து மணியளவில வந்து சாயந்தரந்தான் திரும்புவாராம். இந்த ஊரில மக்கள்ர குறைகளை அறிய வேண்டுமாம், அதுக்குத்தான் வாறாராம் என்று விளக்கினான் பாலா.

தொடர்ந்து 'இன்னமும் பெரியையாட்டக் கூடச் சொல்லல்ல. மத்தியானச் சாப்பாட்டை பாடசாலையிலேதானே எம்.பிக்குக் கொடுக்க வேணும்' என்றான் பரமன்.

பரமன் ஆலங்கேணி இளைஞரிடையே ஒரு முக்கியமான பேர்வழி. இரண்டு நிலைக் கண்ணாடிகளும் நான்கு யப்பானியப் பெண்களைத் தனித்தனியே சட்டமிட்ட படங்களும் மண்சுவரிற் தொங்கும் சலூன் என்னும் சிகையலங்கார நிலையத்தை அவன் நடத்தி வந்தான். நான்கு படங்களுக்கும் நடுவாகப் பேரறிஞர் அண்ணாத்துரையின் படம் தினம் தினம் புத்தம் புது மாலைகளுடன் காட்சியளிக்கும். அத்தோடு அவன் சலூனுக்கு நாள் தவறாமல் வீரகேசரி வரும். வாரந்தவறாமல் சுதந்திரன் பத்திரிகையும் வரும். சுயமரியாதைக்காரர்களின் சின்னஞ்சிறிய புத்தகங்களும் அங்கே இருக்கும். இதனால் பனிச்சமர நிழலில் அவன் சலூனுக்கு முன்னால் எப்போதுமே இளைஞர் கூட்டம் ஒன்று குழுமியிருக்கும். அத்தோடு அவன் கையிற் தினந்தினம் காசு புரளும்.

கடந்த ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நடந்த போது அவன் சலூனும் பனிச்சைமர நிழலுந்தான் தமிழரசுக் கட்சிக் காரியாலயமாக விளங்கின.

நெல்லியடியிற் படித்துக் கொண்டிருந்த தாமோதரத்திற்குச் சோஷலிச தத்து வார்த்தங்களிற் பிடிப்பு ஏற்பட்டிருந்தாலும் ஆலங்கேணியில் அந்தக் கந்தபதத்துவம் எடுபடாது என்ற விவகாரம் தெரியும். ஆகவே ஊரோடு சேர்ந்து அவனும் தமிழரசுக் கட்சி ஆதரவாளனானான்! மேலும் இரண்டு வருடங்களுக்கு முன்னே நாட்டில் நடந்த இனக்கலவரம் தமிழ் மக்களை எல்லாம் ஏதோ ஒரு கட்சியின் கீழ் ஒன்றிணைய வேண்டும் என்ற எண்ணத்தையும் ஏற்படுத்தியது.

ஆலங்கேணியைப் பொறுத்த வரையும் இனக்கலவரம் என்ற ஒன்று நடக்கவில்லைதான். ஆனாலும் தன் எருமைகளைத் தேடிக் கொண்டு திருக்கிணா மேட்டுக்குச் சென்ற மாட்டுக்கார வல்லிபுரம் அக்கலவரத்தின் போது அருகேயிருந்த மன்னம்பிட்டிக்குச் சென்று பொலநறுவையிற் கலவரத்தில் மாட்டிக் கொண்டு ஒரு மாதத்திற்குப் பின்னர்தான் ஊருக்கு வந்து சேர்ந்தார். பொலநறுவைக் கலவரத்தைப் பற்றி அவர் கூறிய கதைகள் ஆலங்கேணி மக்களுக்கும் உணர்ச்சியை ஊட்டிற்று, அந்தக்கால கட்டத்திற்தான் பரமனின் முயற்சியால் பாலா தமிழரசுக் கட்சிக் கிளையை ஆலங்கேணியில் ஆரம்பித்தான்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னால் பாராளுமன்றத் தேர்தல் வந்தது. இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டு நடைபெற்ற மூன்று பாராளுமன்றத் தேர்தல்களிலும் ஆலங்கேணி மக்கள் மூதூர்த் தொகுதியிற் பெரும் பான்மையினராக வாழ்ந்த முஸ்லிம் ஒருவருக்கே வாக்களித்தார்கள்.

ஆலங்கேணியின் அருகாமையிலிருந்த கிண்ணியா மிகப் பெரிய முஸ்லிம் கிராமம். கிழக்கிலங்கையிலே காத்தான்குடிக்கு அடுத்ததாகப் பெரிய கிராமமான கிண்ணியாவிலிருந்துதான் மூதூர்த் தொகுதி எம். பி. ஒருவர் வரக்கூடியதாக இருந்தது.

கிண்ணியா அபேட்சகர் யாரோ ஒருவருக்கு எந்த விதமான உணர்வும் பிடிப்பும் இன்றி வாக்களித்த ஆலங்கேணி மக்கள் தம் கிராமத்திற் தமிழரசுக்கட்சிக்கிளை நிறுவப்பட்ட பின்னர் தமிழரசுக்கட்சி நிறுத்திய தமிழ் அபேட்சகருக்கு உணர்ச்சி வயப்பட்டு வாக்களிக்கக் கூடிய வகையில் மூதூர்த் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதி ஆக்கப்பட்டது. தமிழரசுக்கட்சிப் பிரசாரத்தில் தாமோதரமும் உற்சாகமாக ஈடுபட்டான்.

அந்த ஆண்டு அடுத்தடுத்து நடந்த இரு தேர்தல்களிலும் ஆலங்கேணி மக்களும், அயலிலுள்ள ஈச்சந் தீவு, உப்பாறு என்ற கிராமங்களின் தமிழ்மக்களும் தமிழ் அபேட்சகருக்கே வாக்களித்தனர். தங்கள் கட்சியும், தமது அபேட்சகரும் இரண்டு

தேர்தல்களிலும் அமோக வெற்றியடைந்தமையை தமிழரசுக் கட்சியைத் தாபித்த இளைஞர்கள் மகழ்ச்சியுடன் கொண்டாடினர். ஊரிலுள்ள கிழடுகட்டைகள் தங்கள் சொந்தக்காரன் எம். பி. யாகிவிட்டான் என்று பெருமைப்பட்டார்கள்.

அந்தப் பாராளுமன்ற அங்கத்தவர் வெற்றிவிழா கொண்டாடக் கிராமத்திற்கு வந்த பின்பு ஒன்பது மாதங்கள் கழித்து மீண்டும் கிராமத்தவர்களைச் சந்திக்க வருகிறார்.

அவருக்குக் கோலாகலமாக வரவேற்பு அளிக்க வேண்டும். அட்ரஸ் பேப்பர் எழுதி வாசிக்க வேண்டும் என்று உற்சாகத்துடன் சொன்னான் பரமன்.

தாமோதரம் சொன்னான், அவரை வரவேற்கத்தான் வேண்டும். ஆனால் அதற்காகப் பந்தல் போடவோ மேடை அமைக்கவோ, லவுட்ஸ்பீக்கர் கட்டவோ தேவையில்லை. ஏனென்றால் அவர் முதற் தடவையாக இங்கு வரவில்லை.

மக்களின் குறைகளைக் கேட்கவே இங்கு வருகின்றார். அதற்காக நாம் மக்களுக்கு உதவிசெய்து அவர்களை நெறிப்படுத்தலாம். நாம் செய்ய வேண்டியது அதுதான்.

அவன் சொன்னதைப் பாலாவும் ஆமோதித்தான் ஆனாற் பரமனுக்கோ கூட்டம் வேண்டும் மாலை வேண்டும், ஒலிபெருக்கி வேண்டும் என்றிருந்தாலும் வேறு வழியின்றிப் பரமனும் அவர்களுக்கு உடன்பட்டாலும் எம்.பிக்கு நல்ல பூமாலைகளாவது போட வேண்டும். உன்ர மச்சாள் சௌந்தரம் சோக்காக மாலை கட்டுவாள். போனமுறைவரவேக்ககுள்ள அவள் தான் மாலை கட்டித்தந்தாள்.

திருக்கிணாமலையில் கூட அப்படி மாலையை நான் பார்க்கல, அவட்டச் சொல்லி இரண்டு மாலையாவது கட்டித்தா'' என்றான் பரமன்.

ஓ அதுக்கென்ன? என்றான் தாமோதரம்

அத்தோட சாப்பாட்டு விஷயம். ஒரு கிடாய் அறுத்துப் பாடசாலையில விருந்து போடுவம்.

ஒரு ஆளுக்காகவா ஒரு கிடாய்?

அவர் என்ன திருக்கிணாமலையில இருந்து தனியாவா வருவார்? அத்தோட அவர் வாறார் என்ற கேள்விப்பட்டு மூதூரில இருந்தும் கட்டப்பறிச்சானில் இருந்தும் ஆக்கள் வருவாங்க. எப்படியும் முப்பது பேருக்குக் குறையாது. ஒரு ஆடு அடிக்கத்தான் வேணும்.

அதைப்பற்றி தலைமை வாத்தியாரோட யோசிப்பம் என்றான் தாமோதரம். அப்போது பாடசாலை தாழ்வாரத்திற் தொங்கிய தண்டவாளத்துண்டில் இரும்புக் கம்பியால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்து எழுப்பிய ஓசை, பாடசாலை தொடங்க இன்னமும் அரை மணித்தியாலம்தான் இருக்கிறது என்று செய்தியை ஆலங்கேணிக் கிராமம் முழுமைக்கும் அறிவித்தது. தெருவிலே மாணவர்களும் மாணவிகளும் தங்கள் புத்தகங்களுடன் பாடசாலையை நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

அப்ப நான் போய்க் கடையைத் திறக்கிறன். நீர் போய்ச் சௌந்தரத்திட்ட மாலை கட்ற விஷயத்தை இப்பவே சொல்லும் என்ற பரமன் தாமோதரத்தின் கையைப்பிடித்துக் கொண்டே கடைப்பக்கம் செல்கையில் தாமோதரத்தின் மாமா வீட்டுத் தெருப்படலையைத் திறந்து அவனை உள்ளே தள்ளி விட்டுப் பாலுவோடு சேர்ந்து மேலே நடந்தான்.

## அத்தியாயம் 5

தெருப்படலையைத் தாண்டி வெண்மணலில் இறங்கித் தன் மாமனார் வீட்டை நோக்கி நடந்தான் தாமோதரம். ஆலங்கேணிக் கிராமத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஓட்டு வீடுகளில் அவனது மாமனார் வீடும் ஒன்று. இரண்டு அறைகளும், ஒரு பூஜையறையும் கொண்ட வீட்டின் முன்னால் விசாலமான விறாந்தையும் கொண்ட அவ்வீட்டுக்குச் செல்லும் வழியில் ஒரு ...... அகலமான மணற்பாதையின் இரு மருங்கிலும் செங்கற்கள் நடப்பட்டுச் சுண்ணாம்பு தீட்டப்பெற்றிருந்தது. கற்களுக்குப் பின்னால் கிராமத்தவரால் ''கானல் வாழை'' என்றழைக்கப்படும் 'கனாஸ் செடிகள்' மஞ்சளும் சிவப்புமாகப் பூத்திருந்தன. அவற்றினிடையே சமமான இடைவெளிகளில் குரோட்டன்கள் பல்வேறு நிறங்களிலும் இருபக்கமும் அணிவகுத்து நின்றன. விறாந்தைக்கு முன்னால் பென்னம் பெரிய பந்தலில் கொடி மல்லிகை படர்ந்திருந்தது. மல்லிகைப் பூக்களின் சுகந்தம் மனத்துள் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கிக் கொண்டிருந்தது.

வீட்டினுள்ளே சந்தடியைக் காணவில்லை. அரைச் சுவருக்கு மேலே மரக்கிராதி களடிக்கப்பட்ட விறாந்தையின் முன் கதவு மூடப்பட்டிருந்தது. தாமோதரம் பூந்தோட்டப் பாதை வழியே நடந்து மல்லிகைப் பந்தலை அண்மியபோது சௌந்தரம் மண் குடத்தை இடுப்பில் வைத்துத் தண்ணீர் சுமந்து கொண்டு வந்தாள். வரும் வழியிலிருந்த குரோட்டன்களிலும் கனாஸ்களிலும் இருந்து நீர் சொட்டிக் கொண்டிருப்பதைப்போல அவள் பாவாடையிலும் கைகளிலும்கூட நீர் சொட்டிக் கொண்டிருந்தது. வைகறையின் குளுமையில், வெண்பனி தோய்ந்து, இளநகை சிந்தி அரும்பிக் கொண்டிருக்கும் மல்லிகையைப் போலவே அவள் தோற்றமளித்தாள்.


Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மானாக வெருண்டு, தாமோதரத்தைக் கண்டதும் அவள் ஓடி விடுவோமா என்று நினைந்து எப்படியோ சுதாகரித்துக் கொண்டு தான் சுமந்து வந்த தண்ணீர்க் குடத்தைப் பயந்து போனவள்போல மல்லிகையின் அடியிற் சரித்தாள். சரித்து முடித்ததும் குடத்தை அங்கேயே வைத்து விட்டுப் பின் பக்கமாகத் திரும்புகையில் ''எங்கே போகிறாய் மாமா இல்லையா?'' என்று அதட்டலாகக் கேட்டான் தாமோதரம்.

''அப்பு தம்பலகாமம் போயிற்றார், நில்லுங்க வாறன்'' என்று நாணிக் கொண்டே பின்பக்கமாகப் போனாள் சௌந்தரம்.

தாமோதரம் அவளைத் தன் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு தன்னந்தனியனாகத் தம்பலகாமம் சென்றிருக்கிறான். அவளுக்கு அடித்திருக்கிறான். ஏன் அவளை முத்தமிட்டுக்கூட இருக்கிறான். அப்போதெல்லாம் எந்தக் கூச்சமும் அடையாதவள் இப்போது மட்டும் ஏன் இப்படி வெட்கப்படுகிறாள்.

ஆனாலும் அவள் வெட்கப்படுவதும் அழகாகத் தான் இருக்கிறது. அவன் எட்டாம் வகுப்புப் படிக்கையில் மூதூர் வேதக்காரவாத்தியார் வைத்திருந்த பைபிளிலிருந்து ஞானி சலமோனின் உன்னதப்பாடல்களைப் படித்திருக்கிறான். அந்தப் பாடல் வரிகள் அவன் ஞாபகத்திற்கு வந்தன.

என்னே உன் அழகு! என் அன்பே

என்னே உன் அழகு!

மயிர்கத்தரித்த பின் குளிப்பாட்டப்பட்டுக் கரையேறும்

ஆட்டு மந்தை போன்றவை உன்பற்கள்

உன் இதழ்கள் செம்பட்டு நூலிழைகள்

கன்னங்கள் வெடித்த மாதுளம்பழம் போன்றவை

உன் தனங்கள் இரண்டும்

லீலிகளின் இடையெ மேயும்

இரட்டை மான்கன்றுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானி சலமோனின் உந்நதப் பாடல் அடிகளைத் தாமோதரம் அசைபோட்டு நினைந்து பரவசப்பட்டுக் கொண்டிருக்கையில் சௌந்தரம் வீட்டினுட்புறமாக வந்து விறாந்தைக் கதவைத் திறந்து 'வாருங்கள் அத்தான்' என்று அவனை அழைத்தாள்.

'உன் நாவின் அடியிற் தேனும் பாலும் இருக்கின்றன என்ற சலமோனின் அடிகளை நினைத்துக் கொண்டான் தாமோதரம். கதிரையில் வந்து அமர்ந்த பின் அப்பா எங்கே'? என்று மீண்டும் கேட்டான்.

சௌந்தரம் அறைக்கதவின் நிலையிலேயே சார்ந்து கொண்டு நின்று ஏதோ சொல்ல வாயெடுத்தபோது அவர் தம்பலகாமம் போயிற்றார். கோடைப் போக விதைப்புக்கு அங்கே வயல் உழக்கிறாங்க. பெருமிதியை முடிச்சுக் கொண்டுதான் வருவார், என்று சொன்ன அவள் தாய் அபிராமி, 'இருங்க தம்பி வாறன்' என்று விட்டு மீண்டும் பின்புறமாக அடுக்களைப் பக்கம் நடந்தாள்.

அவள் தம்பலகாமத்திற் பிறந்தவள். அங்கே நாயன்மார் திடல் ஆலமரத்தடிக்குப் பக்கத்தில் அவள் பிறந்த வீடு இருக்கிறது.

தெருவைக் கடந்து கரைச்சைத் திடலுக்குப் போகும் வயல் வெளியில் அவளுக்கு ஐந்து ஏக்கர் நீர்ப் பாய்ச்சற் காணி சீதனம் அந்த வயலை உழக்கத்தான் தன் மாமனார் சென்றிருப்பார் என்றெண்ணிக் கொண்டே 'உன்னோட நான் கோவம்' என்றான் தாமோதரம்.

'அதுதான் நேற்று வராததிலிருந்து தெரியுமே'

'ஓஹோ'

'என்ன ஓஹோ, இப்பமாமாவைத் தேடிக்கொண்டு வந்தீங்களாக்கும். அவரில்லை யெண்டு போகப்போறீங்களாக்கும்.'

என்று விஷமமாகச் சிரித்தாள் சௌந்தரம்.

தாமோதரம் முகத்தைச் சற்றுக் கடுமையாக்கிக் கொண்டு 'நீ ஏன் பாடசாலைக்குப் போகல்ல'

'அதை உங்கட மாமாட்டக் கேளுங்க'

'ஏன், அவர் போக வேண்டாம் என்றாரா?' அவள் பதில் சொல்லவில்லை.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தாமோதரம் மீண்டும் பேசினான். 'அப்பா சொன்னார் என்று நீயும் போகாமல் இருந்திற்றாய். எல்லாம் நீ இந்த ஊரிலே பிறந்த கொடுமை. நீயும் தம்பல காமத்தில் பிறந்திருந்தாப் படிப்பை நிறுத்தியிருக்க மாட்டாய். இந்த நாட்டில் முடியாதெண்டு அந்த ஊரில் ஆணும் பெண்ணும் இந்தியாவுக்குப் போய்க் கிராஜீவேட் பண்ணிற்று வாறாங்க'.

சௌந்தரம் அதற்கும் மௌனமாகவே இருந்தாள். இப்ப இந்தியாவுக்குப் போகத் தேவையில்லை. எஸ். எஸ். சி. மட்டும் ஆலங்கேணியிலேயே படித்து ஆகக் குறைந்தது ஒரு ஆசிரியை ஆகலாம். ஆலங்கேணியில் முதலாவது ஆசிரியையாக நீ ஆவாய் என்று நான் கனவு கண்டேன்.

அப்போதுங் கூடச் சௌந்தரம் தன் மௌனத்தைக் கலைக்கவில்லை!

'மாமாட்ட நான் சொல்லுறன். இனிமேலாவது நம்ம பாடசாலைக்குப் போறியா?'

பாடசாலைக்குப் போகாம விட்டு மூணுமாசத்துக்கு மேல ஆச்சு. இனிமேல் போறதெண்டா எனக்கு வெக்கமாக்கிடக்கு. மாமி கூட நான் பாடசாலைக்குப் போறத விரும்பல்ல' என்றிழுத்தாள் சௌந்தரம்.

'எல்லார்ர விருப்பத்துக்கும் நீ ஆட ஏலாது. நீ கட்டாயம் பள்ளிக்குப் போகத்தான் வேணும்' என்று கடுமையாகச் சொன்னான்.

'எனக்குஞ் சேர்த்து நீங்க படிச்சுக் கொள்ளுங்க. பின்னேரத்தில் நான் ரீச்சரிட்டத் தையல் படிக்கிறன் அது எனக்குப் போதும்.'

'அப்ப நான் சொல்றதக் கேக்க மாட்டா?

இதற்குள் அடுக்களைக்குள்ளிருந்து அபிராமி வந்துவிட்டாள். டிஷ் ஒன்றிலே ஆவி பறந்து கொண்டிருக்கும் இராசவள்ளிக் கிழங்குப் புக்கையும் கரண்டியும் இருந்தது. அதை முன்னாலிருந்த ஸ்டூலில் வைத்து விட்டுச் சாப்பிடுங்க தம்பி என்றாள். இது தான் தருணம் என்று சௌந்தரம் வீட்டுக்குள்ளே போனாள். தாமோதரம் தன் விருப்பு வெறுப்புகளை வெளிக்காட்டிக்கொள்ளாமற் சாப்பிடத் தொடங்கினான்.'

'என்ன தம்பி, பாடசாலை லீவு விட்டிற்றா. இன்னமும் இங்கிலீசுக்குச் சித்திரை பிறக்கவில்லையே' என்று கேட்டாள் அபிராமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எங்கட வகுப்பு மட்டும் விட்டிற்றாங்க. ஆனா நான் வருடம் களித்து அடுத்த நாளே போகவேணும். ரியூசன் வகுப்பு இருக்கு. ஆவணியிலே சோதனை' என்றான் தாமோதரம்.

அபிராமிக்கு அதற்கும் மேலே என்ன பேசுவதென்று தெரியவில்லை. அவளும் கதவு நிலையிற்சார்ந்து கொண்டு முந்தானைத் தலைப்பை முறுக்கிக் கொண்டு நின்றாள். கழுத்திலே கிடந்த கனமான தாலிக்கொடியும் கைகளிற் கிடந்த வளையல்களும் பளபளத்து மின்னின.

தாமோதரம் மீண்டும் பேச்சைத் தொடங்கினான். ''மாமா எப்போது வருவார்?''

''அவர் விடியப்புறத்திலேயே போய்ற்றார். இன்றைக்கு நல்ல நாள். பங்குனி உத்தரம். திருக்கிணாமலைக் கோணேசர் திருவிழா. பெருமிதியை இன்றைக்குத் தொடங்குவார். ஐஞ்சு நாளாவது ஆகும். புதன் கிழமைக்குப் பிறகுதான் வருவார்'' என்ற அபிராமி, ஏன் தம்பி, நீங்க அவசரமா அவரைப் பார்க்க வேணுமா?'' என்று கேட்டாள்.

''இல்லை மாமி நாளைக்கு இங்க எம்.பி. வாறாராம். முக்கியமான வேலை இருக்கு. நானும் நிக்கவேணும் என்று எல்லாப் பொடியன்களும் சொல்றாங்க''

''அப்படியா? சாப்பிடவேயில்லையே, வைச்சது அப்படியே இருக்கே.''

''போதும் மாமி'' என்று தாமோதரம் சொல்லிய போது சௌந்தரம் பாற் கிளாசுடன் வந்தாள். பரமனின் சலூனிலிருந்து ரேடியோ 'பாலும் பழமும் கைகளில் ஏந்தி' என்று பாடியது. தாமோதரம் பாலைக் கையில் வாங்கிக் கொண்ட போது அபிராமி ''நெல்லுத் தீஞ்சி மணக்கிறாப் போல இருக்கு'' என்று சொல்லிக் கொண்டே அடுக்களைப் பக்கம் அவசரமாக ஓடினாள். தாமோதரம் பாலைக் குடித்துக் கொண்டே ''நீ பள்ளிக்குப் போற சங்கதி இருக்கட்டும். இப்போது நீ எனக்கு ஒருவேலை செய்து தர வேண்டும்''

''என்னத்தான்''

''நாளைக்கு எம். பி. இங்க வாறாராம் அவருக்கு போட இரண்டு அழகான பூமாலை கட்டித்தர வேணும்''

''நான் எட்டாம் வகுப்புத்தானே பாஸ் பண்ணியிருக்கன், பள்ளிக் கூட்டத்தில் பத்தாம் வகுப்புப் படிக்கிற பெண்கள் இருக்காங்க அவங்களிட்டச் சொன்னா ரீச்சரோடு சேர்ந்து அழகான மாலை கட்டித் தருவாங்க''

''அது தெரியாம நான் கேட்கல்ல. ஆனா, இந்த ஊரிலே நீதான் மாலை கட்றதில எக்ஸ்பேட்டாம் என்று ஊரெல்லாஞ் சொல்லுது உன்னால கட்டித்தர ஏலுமா? ஏலாதா? அதைச் சொல்லு'' என்று சற்று ஆத்திரமாகவே கேட்டான்.

''எப்ப மால வேணும்''

''நாளைக்குப் பத்து மணிக்கு முன்ன ஏலுமா ஏலாதா என்று சொல்'' ''எனக்கு வேறு வேல இருக்கு'' என்று எழுந்தான் தாமோதரம்.

''வீட்ட கொண்டு வரவா? அல்லது இங்க வந்து எடுப்பீங்களா?''

''நான் வராட்டித் தம்பியை அனுப்புறன்'' என்ற தாமோதரம் ''அம்மா எங்கே?'' என்று கேட்டான்.

பின் கதவு வழியாகப் பார்த்த சௌந்தரம், ''அம்மா அவித்த நெல்லைப் பாயில கொட்டிப் பரவிக்கொண்டிருக்கா'' என்றாள் சௌந்தரம்.

தாமோதரம் வீட்டுக்குள் நுழைந்து, பின் கதவு வரை சென்று, ''நான் போய் வாறன் மாமி'' என்று கூறி விட்டு வழிநடந்தான்.

குரோட்டன்களுக்கு மத்தியிலுள்ள பாதை வழியே அவன் நடக்கையில் சௌந்தரம் உருவத்தால் அழகி மட்டுமல்ல. மனதிலே சௌந்தர்ய உணர்வும் கொண்டவள். அவள் சௌந்தர்ய உணர்வுக்கு இப் பூந்தோட்டமே சாட்சி என்று எண்ணிக் கொண்டான் தாமோதரம். ஆனால் வீணையைப் பறி கொடுத்த சரஸ்வதி போல அவள் எட்டாம் வகுப்புச் சித்தியடைந்ததோடு வீட்டுக்குள் முடங்கி விட்டாளே என்ற எண்ணம் அவனை வதைத்துக் கொண்டிருந்தது. அவன் பின்னாலேயே சௌந்தரம் வந்து கொண்டிருப்பதை அப்போது தான் கவனித்த தாமோதரம் ''நீ எங்கே; வருகிறாய்? என்று அதட்டினான்''

''உங்கட வீட்ட தான் போக வேணும். மாமி பால் காய்ச்சத் தொடங்கிருவா. அவருக்கு உதவி செய்ய வேணும். முன் படலையைக் கட்டிவிட்டு நான் பின் வழியாய் வேலி 'மங்கடை' குள்ளால உங்க வீட்ட போறன். படலையைக்கட்டத் தான் உங்க பின்னால வாறன்''

''படலைய நான் கட்டிற்றுப் போறன். நீ பின்னாலபோ'' ''ஏன், நான் உங்களோட வாறது உங்களுக்கு விருப்பமில்லையாக்கும்''

தாமோதரம் அவளைப் பார்த்துச் சிரித்தான். சௌந்தரமும் சிரித்தாள். ஒழுங்கையிலே மறி ஆடு ஒன்று பிணை ஆட்டைத் துரத்தி அதைத் தழுவ முயன்று கொண்டிருந்தது.

அதைப் பார்த்த சௌந்தரம் ''ஆடு வந்திரும் அத்தான் படலையை இழுத்துக் கட்டிற்றுப் போங்க'' என்று விட்டு வீட்டின் பின்பக்கமாக நடந்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிப்பான நினைவுகளோடு தாமோதரமும் வெளியிலிறங்கிப் படலையைச் சிக்காராகக் கட்டி விட்டுப் பரமனின் சலூனை நோக்கி நடந்தான்.

கோயிலடியிலே பந்தரின் கீழ்க் குழுமியிருந்த பாடசாலைப் பிள்ளைகள் தேவாரம்பாடிக் கொண்டிருந்தனர்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓது வார்தமை நன்னெறியுய்ப்பதும்....

சின்னத்தம்பி வாத்தியார் இடுப்பிற் சால்வையைக் கட்டிக் கொண்டு துலாம் பரமாக நீறு பூசிய நெற்றியின் மையத்திற் சந்தனப் பொட்டு மிளிரக் கைகூப்பியபடி தேவாரம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

## அத்தியாயம் 6

பரமனின் சலூன்களிலிருந்து சில யார்களுக்கு அப்பால கோயிலின் எதிர்த்திசையில் அவ்வூர் வாசிகசாலை இருந்தது. வைரமான காட்டு மரங்களைத் தூண்களாக நட்டு அத்தூண்களின் இருமருங்கிலும் நெருக்கமாக வரிச்சுத்தடிகளை கட்டி அத்தடிகளிடையே குழைத்த கழிமண்ணைச் செலுத்தி வைக்கப்பட்ட சுவர். அதன் மேல் ஓலைக் கூரை. ஒரு அறையும் மண்டபமும் கொண்ட நீளமான கட்டிடம். மண்டபத்துள்ளே கிடந்த மேசையின் இருபக்கமும் இருந்த டெஸ்குகளின் ஒன்றிலே தாமோதரம் சென்று உட்கார்ந்து கொண்டான். ஏற்கனவே சின்னவனும் தங்கராசனும் அருணனும் வந்திருந்தார்கள். பாலாவும் பரமனும் இன்னும் பத்துப் பன்னிரண்டு இளைஞர்களோடு வந்து கொண்டிருந்தார்கள்.

கோயிலிலே மாணவர்கள் தம் பிரார்த்தனையை முடித்துக் கொண்டு இவ்விருவராக அணிஅணியாய் முதலிலே ஆண்களும் பின்னர் பெண்களுமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். கடைசியாய் சென்ற தலைமை ஆசிரியரிடம் பாலா ஏதோ பேசி விட்டு அவசர அவசரமாகத் தன் கூட்டத்தினரோடு வாசிகசாலையை அடைந்தான். வாசிகசாலையிற் கூட்டம் தொடங்கியது. ஆரம்பத்தில் தாமோதரம் தேவாரம் பாடினான்.

'நிரைகழலரவஞ் சிலம் பொலியலம்பும் நிமிலர்நீறணி திருமேனி...' கூட்டத்திற்கு பாலா தலைமை வகித்தாலும் தாமோதரமே அக் கூட்டத்தில் முக்கியஸ்தனாக இருந்தான். 'நாளைக்கு வரப்போகும் எம். பி தன் கடமைக் காகத்தான் இங்கே வருகிறார். அதற்கு தடல்புடலான வரவேற்பு அவசியமில்லை. அவரிடம் நம்மூரின் குறைகளையும் தேவைகளையும் சொல்வது தான் முக்கியமானது' என்ற அவனது கருத்தை எல்லோருமே ஏற்றுக் கொண்டாலும் பரமனுக்கு அது திருப்தியாக இல்லை. அவனுக்கு பூமாலை, மேடை, லவுட்ஸ்பீக்கர் என்று ஒரு விழா வேண்டும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அதற்காக அவன் எவ்வளவு செலவழிக்கவுந் தயார். நாளாந்தம் அவனிடம் காசும் புழக்கத்திலுள்ளது.

ஆனாலும் மற்றவர்கள் தம் கிராமத்தின் தேவைகளை ஆராய்ந்தார்கள்.

'ஊருக்கு ஒரு உபதபாற் கந்தோர் வேண்டும். பத்துச் சத முத்திரை வாங்கவும் சின்னக் கிண்ணியாவுக்குச் செல்ல வேண்டியுள்ளது' என்றான் அருளன்.

''நம்ம வாசிகசாலைக்கு ஒரு நல்ல கட்டிடம் வேணும்'' என்றான் பரமன்.

''இவையெல்லாம் வேண்டுந்தான். ஆனால் நமது மக்களின் அடிப்படைத் தேவை இவைகளல்ல. விவசாயத்தையும் கால் நடைகளையும் நம்பி வாழ்பவர்கள் நம்மூரவர். ஊரவர்களுக்கு கண்டற் காட்டு மானாவாரிக் காணியைத் தவிர வேறு காணிகளே இல்லை. அந்த மானா வாரிக் காணியும் எவ்லோருக்கும் இல்லை. கந்தளாய்க் கொலனித் திட்டத்தில் நீர்ப்பாய்ச்சல்களையும் மேட்டுக் காணியும் கொடுத்துங் கூட நம்மூரில் இருந்து இரண்டே இரண்டு குடும்பங்கள் தான் அங்கு சென்றன. மற்ற எவருமே பிறந்த ஊரை விட்டுப்போக விரும்பவில்லை. ஆகவே நமக்கு முதற் தேவை கண்டக் காட்டுமானாவாரித் தரைக்கு நீர் பாய்ச்சல் ஏற்படுத்துவதுதான். அந்த வெளியில் இருந்து கூப்பிடு தூரத்தில் தான் மகாவலி கங்கை ஓடுது.

அடுத்து கண்டக் காட்டுத் துறையடிக்கு நல்லபாதை வேண்டும். ஒரு நல்ல றோட் மட்டும் இருந்தால் நம்மூரவர்கள் மாட்டுப்பட்டிகுச் சைக்கிளிலோ - ஏன் காரிலேயே சென்று பாலைக் கொண்டு வரலாம். காவுதடியில் சுமக்கத் தேவையில்லை. ஆகவே கண்டக் காட்டு வெளிக்குத் தண்ணீரும், அங்கு போகத் தெருவுந்தான் நமது முக்கியத் தேவைகள்'' என்று தெளிவு படுத்தினான் தாமோதரம்.

கூடியிருந்த வாலிபர்கள் தாமோதரத்தை ஒரு முகமாக ஆதரித்தார்கள். எம். பி. யிடம் கொடுப்பதற்கான மனுவைத்தயாரிக்கும் படியும் கூட்டம் அவனைக் கேட்டுக் கொண்டது. பாடசாலை முடிந்ததும் தலைமை ஆசிரியரோடும் ஆலோசித்து அம்மனுவை எழுதுவதாகத் தாமோதரம் ஒப்புக் கொண்டான். பாராளுமன்ற அங்கத்தவரை வாசிகசாலையிற் சந்தித்து மனுவைக் கொடுப்பதெனவும், மற்றைய விடயங்களை பாடசாலையிலேயே நடத்த வேண்டும் எனவும் கூட்டம் தீர்மானித்தது. இத்தீர்மானங்களை எடுத்து கூட்டம் முடிவடைகையில் ஏறத்தாழப் பதினொரு மணியாகிவிட்டது. வேலும் மயிலும் கடையிலிருந்து பரமன் கொண்டு வந்த சோடாப் போத்தல்களை அவர்கள் குடித்துக்கொண்டிருக்கையில், வெளியே பங்குனி மாத வெய்யில் ஆலங்கேணி மணலை வறுத்துக்கொட்டிக்கொண்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இந்தச் சுடுமணலிலே சோளங்கொட்டையைப் போட்டால் பொரிஞ்சு போகும். காண்டாவனம் தொடங்கிட்டுப்போல' என்றான் பரமன்.

காண்டாவனம் இல்லை. காண்டவ தகனம் என்று திருத்தினான் தாமோதரம்.

'அது என்ன தகனமடாப்பா? என்று கேட்டான் அருளன்'

''இந்நாட்களிற் தான் அருச்சுனன் காண்டவம் என்ற வனத்தை எரித்தானாம். அதனாற் தான் இந்த நாட்களில் சூடும் வெக்கையும் அதிகரிப்பதாக நம் கிராமத்தவர்கள் நம்புகிறார்கள்''

''ஆனால் உண்மை அதுவல்ல. சித்திரை முதல்வாரத்தில் தான் சூரியன் இலங்கைக்கு நேரே உச்சங் கொடுக்கிறான். அதனால்தான் சூடு அதிகரிக்கிறது'' என்று விளக்கினான் தாமோதரம்.

தாமோதரம் காலையில் வீட்டை விட்டுப் புறப்பட்டு வருகையில் காலில் செருப்பின்றியே வந்தான். இப்போது வெறுங்காலுடன் வீட்டுக்குப் போவதை எண்ணிய போது அவனுக்கு திகிலாயிருந்தது. மெதுவாக பனிச்சை மரத்தடிக்கு வந்து அதன் நிழலின் குளுமையிற் சில விநாடிகள் தரித்து நின்று அங்கிருந்து வேலி ஆமணக்குள் விழுத்தும் நிழலில் காலடிகள் பதியுமாறு ஓடியே சென்றான் வீட்டுக்கு. யாழ்ப்பாணம் படிக்கச் சென்றதன் பின்னர் ஐந்து ஆண்டுகளாக காற் செருப்பைக் கழற்றாததினால் அவன் பாதங்கள் சூட்டைத்தாங்கும் சக்தியை இழந்திருந்தன.

வேர்த்துக் களைத்து வந்தவன் முற்றத்தின் மாமரத்தின் கீழ் சற்று தரித்து நின்று அதன் பின்னர் வீட்டை அடைந்தான். வீட்டுவிறாந்தையில் சௌந்தரம் ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். தாமோதரத்தைக் கண்டதும் அவள் தன் இருக்கையிலிருந்து எழுந்து நின்றாள். அவள் அறைக்குள் ஓடமுடியாதபடி தாமோதரம் அறைக்கதவின் வாசலிற் போய் நின்றான். தாமோதரம் அவள் கையில் இருந்த புத்தகத்தைப் பார்த்தான். அது கடந்த ஆண்டுப் பொதுத் தேர்தலுக்கான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம். அதன் அட்டையில் ஸ்ரீமாவோ அம்மையாரின் படம் இருந்தது. அந்த அம்மையாருடைய கட்சியிற் போட்டியிட்ட அயலூர் முஸ்லிம் அபேட்சகர் அவ்விஞ்ஞாபனத்தை ஆலங்கேணியில் எல்லா வீடுகளுக்குமே கொடுத்திருந்தார். அவ்விஞ்ஞாபனத்தை பார்த்தபடியே,

''உலகிலேயே முதலாவது பெண் பிரதமரை இந்த நாடு பெற்றெடுத்திருக்கிறது. ஆனால் அப் பெண் பிரதமரின் நாட்டுப் பெண்களுக்கு எட்டாம் வகுப்புக்கு மேலே படிக்க விருப்பமில்லை'' என்றான் தாமோதரம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் குத்தலைக் கேட்டதும் சௌந்தரத்திற்கு ஆத்திரம் வந்தது. காலையில் தண்ணீர் குடத்தோடு நின்ற போதிலிருந்த வெட்கம் இப்போது இல்லை. குட்டக் குட்டக் குனியக் கூடாது என்ற அவள் மனத்தில் எண்ணினாள். அந்த எண்ணத்தில்

''அந்த அம்மையார் ஒண்ணும் பட்டதாரி இல்லை அவருடைய கணவர் தான் ஒக்ஸ்போட் பட்டதாரி'' என்றாள் பளிச்சென்று.

''அப்போ எதிர்காலத்தில் பிரதமராகலாம் என்ற எண்ணமாக்கும்''

''எனக்கு பிரதமராக வரவேண்டிய தேவையில்லை'' ஆனால்

''ராணியாகவே இருக்கவே விரும்புகிறேன்''

''சரிதான் இப்ப இந்த உலகில இருக்கிற இங்கிலாந்து ராணியும் போனா அதுக்குப்பிறகு கடதாசிக் கூட்டத்தில் தான் நாலு ராணி இருப்பாங்க''

''நானும் ராணியாத்தான் இருப்பன்''

''எந்த நாட்டுக்கு''

ஏதாவது ஒரு நாட்டுக்குத் தான் ராணியாக இருக்க வேணுமோ?

''பிறகு''

''சொல்லட்டா''

அவள் என்ன சொல்லப் போகிறாள் என்பது தாமோதரத்திற்குத் தெரிந்தாலும் அதை அவள் வாயாற் கேட்கவே அவன் விரும்பினான். ஆகவே ''சொல்லேன்'' என்றான்.

''நான் உங்களுக்குத்தான் ராணி'' என்ற சௌந்தரம் இரு கைகளாலும் தன் கண்களைப் பொத்திக் கொண்டாள்.

தாமோதரம் அவள் வலதுகை மணிக்கட்டைக் குரங்குப்பிடியாகப் பிடித்துக் கொண்ட போது அவள் தன் அடுத்த கையை அவன் மேல் வைத்து 'விடுங்கத்தான்' என்று திமிறினாள். ஆனால் தாமோதரம் விடவில்லை. நாணிச் சிவந்து விட்ட அவள் கன்னங்களில் முத்தமிட வேண்டும் என்று அவனுக்குள் கிளர்ந்தாலும் அதற்கும் அவனால் முடியாமல் இருந்தது. அவனுக்கும் வெட்கமா? அல்லது எல்லை மீறக் கூடாது என்ற நினைப்பா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 7

''அந்தா மாமிவாரா விடுங்க அத்தான்'' என்றதும் தாமோதரம் தன்பிடியைச் சடாரென விட்டு விட்டு வாசற் பக்கமும் உட் பக்கமும் பார்த்தான். சௌந்தரம் கலகலவென நகைத்தாள் நகைத்துக் கொண்டே

'மாமி இங்கே இல்லை. நான் இந்தா, இதில ஈச்சந்தீவுக்குப் போய்ற்றுச் சுணங்காம வாறன் என்று சொல்லிற்று அவ வெளிய போயிற்றா. இப்ப வந்தாலும் வருவா' என்றாள் சௌந்தரம்.

'அப்பாவும் இல்லையா'?

'அவர் வழக்கம் போலக் காலையிலேயே போயிற்றார்

சனிக்கிழமை வந்தது. காத்திருந்தபடியே பாராளுமன்ற அங்கத்தவரும் வந்தார். தாமோதரத்தின் யோசனைப்படி அடக்கமான உபசாரம் அவருக்கு. சௌந்தரம் கட்டிக்கொடுத்த பூமாலையைத் தாமோதரம் அவருக்கு அணிவித்தான். அதனைத் தொடர்ந்து பல பூமாலைகள்.'

ஊரவர்களின் தேவைகள் எழுதப்பட்ட மனுவை அவரிடம் கொடுத்து அதைச் ச பைக்கு விளக்கிய போது ஊரவர் எல்லோருமே வியந்தார்கள். எவ்வளவு நறுக்காக விஷயத்தைச் சொல்லியிருக்கிறான் என்று ஊரவர் எல்லோருமே பாராட்டினார்கள். ஏற்கனவே தேர்த்தல் பிரச்சார நாட்களில் அவனைத் தெரிந்தாலும், இப்போது பாராளுமன்ற அங்கத்தவர் தாமோதரத்திடம் பல கேள்விகளைக் கேட்டு அவனைப் பற்றி நன்றாக அறிந்து கொண்டார். இந்தக் கிராமத்தின் முதலாவது டாக்டராக வரவேண்டும் என்று அவனுக்கு ஆசி வழங்கினார். கூட்டத்தை முடித்துக் கொண்டு மதிய உணவை உண்ணும் போது பிற்பகல் மூன்று மணியாகிவிட்டது. சாப்பிட்டு முடிந்ததுமே அவர் போய்விட்டார்.

எல்லாமே சுமூகமாக முடிந்திருந்தாலும் பரமனுக்கு மட்டும் மனக்குறை. அவனுக்கு எதற்கும், எல்லாவற்றிற்கும், ஒலிபெருக்கியும் பாட்டும் மேடைப் பேச்சும் வேண்டும்! அவைகளின்றிக் கூட்டம் முடிந்ததிற் குறை பட்டுக் கொண்டாலும் அவன் ஆனந்தமாகவேயிருந்தான்.

விருந்து நடந்த பாடசாலை மண்டபத்தை மீண்டும் ஒழுங்குபடுத்தி வைத்து விட்டு அந்த விருந்திற்காகச் சௌந்தரத்தின் வீட்டிலிருந்து எடுத்த சில பீங்கான்களையும், கிளாஸ்களையும் எடுத்துக்கொண்டு அங்கே சென்ற போது, மேற்கே பரந்துகிடக்கும்


Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கரைச்சைகளுக்கு மேலாகத் தூரத்தே தலையை நிமிர்த்திக் கொண்டிருந்த கந்தளாய்க் குன்றுகளிடையே தகதகத்த செம்பந்தாய்ச் சூரியன் விழுந்து கொண்டிருந்தது. செக்கர் வானின் ஒளி அசையாது விறைத்து நிற்கும் தென்னோலைகளிலும், இலையையசைக் காமல் ஸ்தம்பித்து நிற்கும் மரங்களிலும் படர்ந்துவிகசித்தது.

தெருப்படலையைத் திறந்து கொண்டு தாமோதரம் நுழைந்துபோது மல்லி கைப் பந்தரின் கீழே சௌந்தரம் புன்னகை பூக்க நின்று கொண்டிருந்தாள். அந்திச் செவ்வானம் போல மின்னும் அவள் முகத்தில், நெற்றியிலிருந்த கருஞ்சாந்துப் பொட்டு அவள் முகத்திற்கு மேலும் அழகூட்டியது. நீண்ட பின்னல் முடிவடைந்த விடத்திலே கட்டப்பட்டிருந்த சிவப்பு றிபன் வண்ணாத்திப் பூச்சியைப் போல மார்பில் மொய்த்துக்கிடக்க அவள் பந்தற்கப்பிற் சார்ந்தபடி நின்று கொண்டிருந்தாள்.

தான் கொண்டுவந்த பிரம்புக் கூடையை அவளிடம் கொடுத்து 'கூட்டத்திற்கு நீயும் வந்திருக்கலாமே' என்றான் தாமோதரம்.

'வாசிகசாலையிலே நடந்த கூட்டத்தை வேலிக்குள்ளால பாத்தன்'

மறைப்புக்காகக் கட்டின கிடுகு வேலிக்குள்ளால தான் உலகத்தைப் பார்க்குது நம்ம பெண்சமூகம்.

எப்பதான் இவர்கள் நேரடியாக உலகத்தைப் பார்க்கப் போகிறார்களோ. இந்த வேலியெல்லாம் எப்பதான் தொலையப்போகிறதோ? என்று அலுத்துக்கொண்டான் தாமோதரம்.

'வளவுக்கு வேலியில்லாட்டிக் கட்டாக்காலி மாடு வந்து எல்லாத்தையுமே மேய்ஞ்சிடும்' என்றவள், இருங்க அத்தான் தேத்தண்ணி கொண்டுவாறன் என்று அடுக்களைப்பக்கமாக நடந்தாள்.

'வேண்டாம் வேண்டாம்' என்று அவளைத்தடுத்து நிறுத்திய தாமோதரம் 'எம்பியையும் அனுப்பி எல்லாத்தையும் ஒழுங்கு பண்ணிவைச்சிட்டு இப்பதான் சாப்பிட்டிற்று வாரன். எனக்கு அலுப்பாய்க் கிடக்கு நான் போய்ப்படுக்கப் போறன்' என்று விளக்கங் கொடுத்துவிட்டு அவள்பதிலை எதிர்பாராமலே வீட்டுக்குப் போனான் தாமோதரம்.

அவன் வீட்டு முற்றத்தில் மாமரத்தின் கீழே சாக்குக் கட்டில் விரித்தபடியேதான் கிடந்தது. அலுத்துக்களைத்து வந்த தாமோதரம் பொத்தென்று கட்டிலில் விழுந்து படுத்தான். சில வினாடிகளிற் தன்னை மறந்து நித்திரையாகிவிட்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தம்பி தம்பி' என்று யாரோ உருட்டி உருட்டி எழுப்பிய போது தான் தாமோதரம் எழுந்து சோம்பல் முறித்துக் கொண்டு கண்களை விழித்துப் பார்த்தான். அவன் முன்னால் அண்ணன் நாகேந்திரம் நின்றான். வீட்டினுள்ளே விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

'இப்பதானா அண்ணா வாறீங்க?'

''இல்ல யாழ்ப்பாணத்திலிருந்து வந்த உன்னோட ஆறுதலாக் கதைக்க வேணும் என்று ஐஞ்சு மணிக்கு முதல் வந்திற்றன். ஆனா நீ நித்திரையாயிருந்தாய் வீட்ட போயிற்று இப்பதான் வாறன்''

''ஓமண்ணா, அலுப்பாயிருக்கெண்டு சரிஞ்ச நான் என்னையறியாமலே நித்திரை கொண்டிற்றன்''

அதுக்கென்ன, உன்ர படிப்பெல்லாம் எப்படியிருக்கு?

'எப்ப சோதனை'

'ஆவணி மாசத்தில'

அப்ப இந்த வருஷம் நீ தம்பலகாமத் திருவிழாவுக்கு வரமாட்டாய் போல

'ஓமண்ணா வரத்தான்மாட்டன். ஆனிக்கடைசியிலோ இல்லாட்டி இங்கிலீசுக்கு ஆடி பிறந்த பின்போதான் திருவிழா வரும். இந்த வருஷம் அதுக்கு எப்படி அண்ணா வாறது? ஏனண்ணா இந்த முறை ஏதும் விசேஷமோ?

என்ன விசேடம் நடக்கப் போகுது எண்டு இப்ப எப்படிச் சொல்ல முடியும். அளவெட்டியில் இருந்து திறமான நாதஸ்வரம் வருகுதாம். மட்ராஸ் ரேடியோவில எல்லாம் வாசிக்கிற கூட்டமாம்

பத்மநாதன் குழு தானே. நான் யாழ்ப்பாணத்தில பல இடங்களில் கேட்டிருக்கேன். அதுக்காகச் சோதனையை விட்டிற்று இங்கு வாறதா?

அதுக்கில்ல என்ர தம்பி நல்லா படிச்சு டாக்டரா வரவேணும் எண்டு நேத்திக்கடன் வச்சி வருஷா வருஷம் நான் காவடி எடுக்கிறன். நான் மூத்தபிள்ளையாக இருந்தும் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் உதவாம அலைக்கழிஞ்சு போனன். நீயெண்டான நல்லா வாறதுக்கு அந்தக் கோணேசர்தான் அனுக்கிரகம் பண்ணவேணும்.

தன் பிழையை உணர்ந்து இறைவனிடம் மன்னிப்புக் கேட்கும் பக்தனைப் போலத் தன்னிடம் பேசும் தன் அண்ணனிடம் தாமோதரத்துக்கு ஒரு அனுதாபம் ஏற்பட்டது. வாலிப மிடுக்குடன் கவலையாற்றுத்திரிய வேண்டிய இந்த வயதிலே அண்ணாவின்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மனதில் என்னென்ன கவலைகளோ! அப்பா அவனோடு முகங்கொடுத்து பேசாமலிருப்பது அவன் மனத்தை பூவைக் குடையும் வண்டு போலக் குடைந்து கொண்டிருக்கிறதா?

தாமோதரம் யோசித்துக் கொண்டிருக்கையில் இந்த வருஷம் நீ திருவிழாவுக்கு வர முடியாதுதான் ஆனா இப்ப இங்க நிக்கிற ரெண்டு கிழமைக்குள்ள எப்பெண்டான ஒரு நாளைக்குத் தம்பலகாமம் போய்க் கோணேசரைக் கும்பிட்டிற்று வா. இந்தா இத வச்சிக்க என்று அவன் கைகளில் இரண்டு பத்து ரூபா நோட்டுக்களைத் திணித்தான் நாகேந்திரம்.

அண்ணனின் இரண்டு கைகளையும் பொத்திப் பிடித்துக் கொண்ட தாமோதரம் 'எப்பெண்டாலும் இல்லண்ணா நாளைக்கே போறன்' என்று சொல்கையில் அவன் கண்கள் கலங்கின. குடும்பத்தில் உதவாக்கரை என்று எண்ணப்பட்ட தன் உடன் பிறப்பு தன்னிடம் எத்தனை அன்பும் பாசமும் கொண்டவனாக இருக்கிறான் என்றெண்ணிய போது அவன் மனம் புல்லரித்தது.

''சரி தம்பி நான் போயிற்று வாறன் இப்ப போய்ப் படுத்தாத்தான் பலபலவென்று விடியக்குள்ள எழும்பலாம்'' என்று சொல்லிக் கொண்டே நாகேந்திரம் தன் வீட்டிற்கு புறப்பட்டான். தாமோதரமும் எழுந்து தன் உடைகளை களைந்து மண்டபத்திற்குள் இருந்த கொடியிற் போட்டு வேற்றுடை மாற்றிக் கொண்டு துவாயுடன் கிணற்றை நோக்கி நடந்தான். பங்குனி புழுக்கத்திற்கு உடம்பில் குளிர்ந்த தண்ணீர் படுவது இதமாகத்தான் இருந்தது. தாமோதரம் குளித்து முடிந்ததும் அம்மா சாப்பிடக் கூப்பிட்டாள். 'சோறா எனக்கு வேண்டாம்' என்றான் தாமோதரம்.

'சோறில்லை இடியப்பம் அவிச்சிருக்கேன்' என்றாள் தெய்வானை.

தாமோதரம் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் அண்ணன் கோணேசர் கோயிலுக்குப் போகும்படி கேட்டுக் கொண்டதை அம்மாவிடம் சொன்னான்.

'எனக்குத் தெரியும். பின்னேரம் என்னட்டச் சொன்னவன். அவன் விரும்புறாப் போலக் கோயிலுக்குப் போய் அர்ச்சனையும் பண்ணிற்று வாவன்'

'ஓம் அம்மா வெய்யில் ஏறமுன்னம் விடியப்புறமே வெளிக்கிட வேணும். ஆனாச் சைக்கிள் இல்லியே. இதுக்குப் பிறகு யாரிட்டப் போய்க் கேட்பது'

ஒருத்தரிட்டையும் கேக்க வேணாம். மாமாட சைக்கிள் அவர் வீட்டதான் இருக்கு. அவர் வயலடிக்குச் சாமான்கள் ஏத்திற்று வண்டியிலதான் போறார். நீ காலமையோட போய்ச் சைக்கிளை எடுத்திற்றுப் போ என்று அவன் கவலையைப் போக்கினாள் தெய்வானை.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'எனக்குத் தெரியாதே. மாாம சைக்கிளில போயிருப்பார் என்றுதான் நினைச்சன். காலையில போய் சைக்கிளை எடுத்திற்றுப் போறன்' என்று தாமோதரம் கையலம்பி விட்டு மண்டபத்துட் சென்றான். பாயை விரித்து படுத்துக் கொண்டாலும் தாமோதரத்துக்கு நித்திரை வரவில்லை. அவன் நினைவுகளில் சௌநதரம் தோன்றி னாள், வைகறைப் பனியிற் தோய்ந்து இதழ் விரிக்கும் மல்லிகையைப் போல், அவள் மல்லிகைப் பந்தரடியிற் தண்ணீர் குடத்தோடு நின்ற தோற்றமும், அதே பந்தரின் கீழ் செக்கர் வானத்தின் செம்மை முகத்திற் படரத் தன் ஒற்றைப் பின்னலை மார்பின் மேல் தொங்க விட்டபடி கருஞ்சாந்துப் பொட்டு நெற்றியில் மின்ன அவள் நின்ற அழகும் அவன் நினைவுகளிற் காட்சியளித்தன. தனக்குப் பின்னாற் சின்னஞ் சிறுமியாய்த் தன் வாலாகவே திரிந்தவள் இப்போது எவ்வளவு வளர்ச்சி அடைந்து விட்டாள்? 'தங்கம் உருக்கித் தழல் குறைத்துத் தேனாக்கிய' அந்த உருவமும் இனிமையும் எப்படி அவளுக்கு இந்த ஒரு சில மாதங்களில் வந்து விட்டன?

சென்ற ஆண்டு தம்பலகாம திருவிழாவிற்குச் சென்றிருந்த போதும் அவள் சிறுமியாகத்தான் இருந்தாள். திருவிழாக் கடைத் தெருவெல்லாம் தன்னோடுதான் சுற்றினாள். தாமோதரம் கோணேசர் கோயிலையும் தம்பலகாமத்தையும் நினைத்துக் கொண்டான்.

## அத்தியாயம் 8

கோணேசர் தாயினும் நல்ல தலைவராகத் திருகோணமலைப் பட்டினத்திற்தான் குடியிருந்தார்.

அவர் எப்போது தொடக்கம் அங்கிருக்கிறார் என்பது சரித்திர ஆசிரியர்களுக்கே சரியாகத் தெரியாதாம்.குளக்கோட்டு மன்னன் அவருக்கு கோயில் கட்டி கந்தளாய்க் குளத்தையும் அதனருகே வயல்களையும் ஏற்படுத்தினானாம். இப்படி பழம் பெரு மையுடனும், செல்வச் செழிப்புடனும் இருந்த கோணேசர் கோயிலை **1624** ஆம் ஆண்டு கொன்ஸ்ரன்ரின் டிசா என்ற போர்த்துக்கீசத் தளபதி இடித்துத் தரைமட்டமாக்கி கோயிற் கற்களைக் கொண்டு கோட்டை கட்டினானாம்.

ஆனால் அவன் கோயிலை இடித்த போது அவனது பக்தர்கள் கோயிலிலிருந்த மூல விக்கிரகங்களைத் தூக்கிக் கொண்டு காட்டுக்குள் ஓடி ஒளித்தார்களாம். அப்படி ஒளித்தவர்கள் தாங்கள் கொண்டு வந்த விக்கிரகங்களைக் கோயிலுக்கு பொருத்தமான இடம் எனத் தாங்கள் தேர்ந்தெடுத்த இடத்தில் வைத்துச் சின்னஞ்சிறிய கோயிலைக் கட்டி வழிபட்டார்களாம். கடலோரத்துக் குன்றிலே இருப்பதைவிட மருத நிலத்து மத்தியிலே இருப்பதைத்தான் கோணேசரும் விரும்பினார் போலும், அதனாற்றான்


Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மூன்று நூற்றாண்டுகளில் இலங்கையிலேயே ஒரு மகத்தான இராஜகோபுரத்தையும் தனக்கு அமைத்துக் கொண்டு தன் பரிவாரங்களோடு தம்பலகாமத்தில் வாழ்கிறார். தான் இடம் பெயர்ந்து வந்தாலும் ஆதிகோணே நாயக்கராகத்தான் அங்கே மிளிர் கிறார்! வருடாவருடம் ஆனி உத்தரத்தில் அவருக்கு திருவிழா நடக்கும். அந்த திருவிழாக்களைத்தான் அறிவறிந்த காலத்திலிருந்து தவறவிடவில்லை. கச்சான் காற்று சீறியடித்து, ஆலங்கேணியைச் சூழவுள்ள உப்பங்கழிகளில் எல்லாம் நீர் வற்றி உப்புப் பொரிந்து கிடக்கும் அந்தத் தரவையைத் தாண்டி கெண்டக் காலளவு நீரோடும் உப்பு நீரோடையைத் தாண்டிச் ''சமாவச்ச தீவில்'' ஏறினால், அதன் பின்னர் ஒரேவெளி இடக்கை பக்கமாக கிண்ணியாக் குடாக்கடலின் அருகாமையிற் சடைத்து வளர்ந்திருக்கும் நீர் முள்ளிச் செடிகளின் மேலே கண்டல் மரங்கள் வலக்கை பக்கமாக ஒரே வெளி, வெளி....

அந்த நெடுங்கரச்சை வெளியில் மாலை மயங்கிக் கொண்டு வருகையில் திருவிழாவிற்குச் செல்லும் ஆலங்கேணி வண்டிகளின் சவாரி முன்னே செல்லும் வண்டியைப் பக்கமாக வந்து முந்திச் செல்கையில் வண்டிக் குள்ளிருக்கும் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் தான் எத்தனை மகிழ்ச்சி இந்த வண்டிச் சவாரிக்காகவே தம் காளை மாடுகளைப் போஷித்து வளர்ப்போர் சிலர்.

மாட்டு வண்டிகளை முந்திக் கொண்டு முகத்திலடிக்கும் சோழகக் காற்றை எதிர்த்துச் செல்லும் இளைஞர்களின் துவிச்சக்கர வண்டிகளின் மணிச் சப்தம் வண்டிக் காளைகளின் கழுத்து மணிகளின் சப்தத்திற்குப் போட்டியாகக் கேட்டுக் கொண்டிருக்கும். முள்ளியடிப் பாலத்தை அடைந்து விட்டால் அதன் பின் தம்பலகாமந்தான்.

அங்கிருந்து பார்த்தால் நடுப் பிரப்பந்திடலடித் தென்னை மரங்கள் தெரியும். இப்படியாகத் திருவிழா தொடங்க முன்னமே கோயிலடிக்குப் .போய் விடுபவர்கள், கோயிலைச் சுற்றி சுவாமி வலம் வந்து முடியும் அதிகாலையிலேயே மீண்டும் ஆலங்கேணிக்குத் திரும்பி விடுவார்கள். பதின்மூன்றாம் திருவிழா வரையும் இது நடக்கும்.

பதினான்காம் திருவிழா ஆலங்கேணி மக்களின் உறவினர்களான தம்பலகா மத்துப் பெரிய புள்ளிகளின் உபயம். அந்தத் திருவிழாவுக்கு ஆலங்கேணியிலிருந்து செல்லும் வண்டிகள் அதிகமாக ஒன்றும் திரும்பி வரா தங்கள் உறவினர்களின் வீடுகளில் தங்கியிருந்து பதினெட்டாந் திருவிழாவையும் பன்றி வேட்டையையும் முடித்துக் கொண்டுதான் ஊருக்கு மீள்வர். ஆலங்கேணி மக்கள் மட்டுமல்ல, நான்கு துறைகளைக் கடந்து கட்டைப் பறிச்சானிலிருந்து வந்த மக்களும் தங்கள் வண்டி மாடுகளோடும், சைக்கிள்களோடும் தங்கி விடுவர். நடுப்பிரப் பந்திடலிலும், நாயன்மார் திடலிலும், வர்ணமேட்டுத் திடலிலும், கரைச்சைத் திடலிலும், அதிகமாக எல்லாரது வீடுகளிலும்

ஆலங்கேணியிலும் கட்டைப்பறிச்சானிலுமிருந்து வந்தவர்கள் விருந்தினராக இருப்பர் அவர்களுக்கெல்லாம் அங்கு ராஜோபசாரமான விருந்து!

சென்ற ஆண்டு யாழ்ப்பாணத்திலே இருந்து வந்தவன் கரைச்சைத்திடலிலே ஒரு வீட்டின் விருந்தினனாக இருந்தான்.

திருவிழா முடிந்து வந்து நித்திரை செய்தவன் காலை எட்டு மணிக்கு மேல் எழுந்து குளித்து விட்டு கரைச்சைத்திடலூடாகச் செல்லும் வீதியிலிருந்து மேற்கே தெரியும் கோயில் கோபுரத்தைப் பார்த்தான்.

எதிரேயிருந்த வயல்களில் வரம்பு நிறைந்த தண்ணீருக்கு மேலே பச்சை பசேலென்ற நெற்பயிர்கள் அவை குலை குலையாய்க் காய்த்துப் பால் முற்றி அன்னம் வாங்கி தலை சாய்த்து வெறிகாரனைப் போல கச்சான் காற்றில் தள்ளாடிக்கொண்டிருந்தன. அந்தப் பசுங்கதிர்களுக்கு மேலாகக் கோயிற் குடியிருப் புத் திடலில் தங்கள் உச்சந்தலைகளை கச்சான் காற்று அடக்கச் 'சாமியாடி'க் கொண்டிருக்கும் தென்னை மரங்கள். தென்னை மரங்களுக்கு மேலாக ஆதிகோணை நாயகரின் கோபுரமும் கலசமும் கம்பீரமாக தோற்றமளித்துக் கொண்டிருந்தது.

சோறுடைய சோழவள நாட்டின் தலை நகரான தஞ்சாவூரையும் அதன் பொன் கொழிக்கும் வயல்களின் நடுவே சோழ மாமன்னன் ராஜராஜன் கட்டிய பெருவுடையார் கோயில் என்ற பிரகதீஸ்வரர் ஆலயத்தையும் அதன் நிழல் சாயாக் கோபுரத்தையும் தாமோதரம் திரைப்படங்களில் தான் பார்த்திருக்கிறான். அந்தத் பிரகதீஸ்வரர் ஆலயத்தின் மறுபதிப்பா இந்த ஆதிகோணை நாயகர் கோயில்? அந்தச் சோறுடைய சோழவள நாட்டின் ஒரு பகுதியா இந்தத் தமபலகாமப் பிரதேசம்?

பார்க்கும் இடமெல்லாம் பங்கப்பழனம். அப்பழனங்களின் நடுவே அமைந் துள்ள தீவுத் திடல்களில் எல்லாம் குலை குலையாய் காய்த்துத் தொங்கும் தென்னை மரங்களின் நடுவே ஓட்டுக் கூரை வேய்ந்த கல் வீடுகள் அவ்வீடுகளின் முன்னால் கற்றூண்களின் மேல் முதிரப் பலைகைகளால் அமைக்கப்பட்ட நெற்பட்டறைகள், அவ் வீடுகளுக்குள்ளே வந்த விருந்தினர்களை வளமாக உபசரிக்கும் இனிய அவர்களுக்குக் குற்றேவல் செய்யும் அயற் கிராமத்தவர்கள்!

ஐம்பத்தெட்டாம் ஆண்டுப் பெருவெள்ளத்தின் போது அவன் தந்தையார் பேராசைப்பட்டு கண்டற் காட்டிலே முப்பது ஏக்கர் வேளாண்மை விதைத்திருந்தார். ஆனாற் குடலைப் பருவத்தில் வெள்ளம் பெருகி அந்தத் கண்டக்காட்டு மானாவாரி வெளி முழுவதையுமே அழித்து விட்டது. அடுத்த வருடம் அவருக்கு விதை நெல்லும் இல்லை; காவுதடி இல்லாவிட்டாற் சோறே இல்லை என்ற நிலை!

ஆனால் வெள்ளம் வடிந்த பின்னர் தம்பலகாமத்தில் கோடைப்போகம் அமோகமாக விளைந்தது. எல்லாப் பட்டறைகளிலும் நெல் ஏறிக் கொண்டது. அந்த வருடம் ஆவணி மாதத்தில் அவன் விடுதலையில் இருந்த போது தந்தையார் வண்டி கட்டிக்கொண்டு தம்பலகாமம் வந்திருந்தார். சின்னையா அம்மாச்சியின் பட்டறையில் இருந்து இரண்டு அவணம் விதைநெல் அளந்து கொண்டார்.

ஆனால் விருந்தினரை உபசரிப்பது என்பது ஒரு விடயம். கொடுக்கல் வாங்கல் வேறு விடயம் என்ற கொள்கை தம்பலகாமத்தில் எல்லாரிடமுமே உண்டு.சின்னையா அம்மாச்சி தயாராக அச்சடித்து வைத்திருந்த புறோ நோட்டில் மூன்று அவணம் நெல்லின் தற்போதைய பெறுமதியை காசாகக் கொடுத்ததாக எழுதிக் கொண்டார். கண்டக்காட்டு வெளி விளைந்ததும் மூன்று அவணம் நெல்லைக் கொண்டு வந்த கொடுத்தால் புறோ நோட்டைக் கொடுத்து விடுவார். மானாவாரிக் காணிக்காரர்களுக்கு அவர் கடன் கொடுப்பதில்லையாம். ஆனாலும் அப்பாவுக்கு கொடுத்தார். ஊர் வழக்கம் போல அடுத்த பங்குனி மாதத்தில் அப்பா மூன்று அவணம் நெல் கொண்டு வந்து கொடுத்துவிட்டார்.

தம்பலகாமம் இத்தனை செழிப்பிலும் செல்வத்திலும் கொழித்தாலும் இன்னமும் தன் பழமையயை விட்டுக் கொடுக்காமறதானிருந்தது. இங்கே சிகை அலங்கரிக்கும் பரமனோடு பழகுவதைத் போலத் தம்பலகாமத்தில் முடியுமா? ''எங்களைப் போல உயர்ந்த சாதி வேளாளர் இந்த இலங்கைச் சிலோனிலே கிடையாது '' என்று கூட்டாம் புலியிலும் கள்ளிமேட்டிலும் வசிப்போர் பெருமை பேசிக் கொள்கின்றனர்.

''நாங்கள் சாதாரண கரையாரல்ல மச்சகந்தியைப் பரிமளாகாந்தியாக்கிய குருகுலத்துச் சத்திரியர்கள்'' என்று மகாபாரதப் பெருமை பேசிக் கொள்கிறார்கள் மற்ற மேடுகளில் உள்ளவர்கள்.

இந்த இரசாரரும் குறைந்த சாதிக்காரர் என்று சிலரைச் சிப்பித்திடலிலே ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அந்தக் குறைந்த சாதிகாரர்களுக்குச் செம்பிலே தண்ணீர் கூடக் கொடுக்க மாட்டார்கள். கோயிற் பிரகாரத்தில் அங்கப்பிரதட்சணம் செய்யக் கூடவிடமாட்டார்கள்!

ஆனால் நல்ல காலமாக, அந்தச் சோறுடைய சோழ நாட்டைப் போல் இந்தக் கிராமத்தில் அக்ரஹாரமும் பிராமணர்களும் இல்லை. இருந்தால் குருலம் என்றும் வேளாளர் என்றும் பெருமை பேசுபவர்களையும், மற்றவர்களையும் சூத்திரர் என முத்திரை குத்தி ஒதுக்கியிருப்பார்கள்!

அங்கேயுள்ளவர்களை எல்லாம் ஒரே குலமாகக் கருதலாம் போல இருந்தது தாமோதரத்திற்கு. அவர்கள் எல்லாருமே விவசாயிகள். 'கார் காக்காத விவசாயிகள்'

என்ற புதிய சாதியினராக அவர்களைக் குறிப்பிடலாம். அவர்கள் தான் மழையை நம்பி இருப்பதில்லையே. அவர்களுக்காக குளக்கோட்டன் கந்தளாய்க் குளத்தைக் கட்டி வைத்திருக்கிறானே! பங்குனிப் புழுக்கத்தையும் நுளம்புக் கடியையும் பொருட்படுத்தாமல் நினைவுகளிற் தோய்ந்து கொண்டிருந்த தாமோதரம் நடுச் சாமமான போதுதான் நித்திரையானான்.

## அத்தியாயம் 9

குட்டிக்கரச்சைப் பள்ளி வாசலிலிருந்த வாங்குச் சத்தம் கேட்டபோது தாமோதரம் விழித்துக் கொண்டான்.

தலைமாட்டிலிருந்த அரிக்கண் விளக்கின் திரியைத் தூண்டி மண்டபத்தை வெளிச்சமாக்கிய பின் பாயைச் சுருட்டி தலையணையையும் விரிப்பையும் பாயின் மேல் வைத்து விட்டு முற்றத்துக்கு வந்தான். முற்றத்து மாமரத்தின் கீழே அப்பா படுத்திருந்த சாக்குக் கட்டிலில், சிங்கப்பூர்பாய் தலையணையோடு சுருட்டப்பட்டு தலைமாட்டில் வைக்கப்பட்டிருந்தது. தந்தையார் எழுந்து சென்றிருக்கிறார் என்று தெரிந்து கொண்ட தாமோதரம் அவர் எங்கே போயிருப்பார்? இன்றைக்குப் பால் கொண்டுவரப் போவதில்லை என்று நேற்றே அம்மாவிடம் சொல்லியிருந்தாரே.

பாற்குடங்களையும் நேற்றுச்சாயந்தரமே தம்பையா அண்ணன் கொண்டு போய்விட்டாரே. அப்படியானால் அதிகாலையில் அப்பா எங்கே போனார்? என்று தன்னுள்ளே கேள்விகளை எழுப்பிக் கொண்டு காலைக் குளிரையும் பொருட்படுத்தாதவனாக வேலியோரம் சென்று வேப்பங்கன்றிற் குச்சியை முறித்துக்கடித்துத் துப்பிக் கொண்டு பல்விளக்கத் தொடங்கினான்.

அடுக்களையைக் கடந்து செல்கையில் ''அப்பு எங்கம்மா'' என்று கேட்டான்.

'இங்கின தான் நிண்டார். வெளிக்குப் போயிற்றார் போல' என்று அம்மா பதில் கொடுத்தாள்.

தாமோதரம் கிணற்றடிக்குச் சென்று கிணற்றுக் கட்டில் துவாயைப்போட்டு விட்டுச் சாரத்தோடு நின்று முழுகத் தொடங்கினான். கிணற்றுக்குத் துலா இருந்தது. ஆனாலும் அவன் கைவாளியினாற் தான் அள்ளி முழுகினான் அவனுக்கு நெல்லியடிக் கிணறுகள் ஞாபகத்துக்கு வந்தன.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னே அவன் பாடசாலையிற் சேர்வதற்காகச் சின்னத்தம்பி வாத்தியாரோடு நெல்லியடி போய்ச் சேர்ந்த போது பிற்பகல் 3 மணி இருக்கும். போய்ச் சேர்ந்ததும் குளிக்க வேண்டும் போல இருந்தது அவனுக்கு. தானாகவே

கிணற்றடிக்குச் சென்றான். கிணற்றை எட்டிப் பார்த்தான். அவனுக்கு நெஞ்சு பகீர் என்றது. இத்தனை ஆழமான கிணற்றிலிருந்து எப்படித் தண்ணீர் அள்ளிக் குளிப்பது? துலாவைப்பார்த்தான் நீள்சதுரக் கங்தூண்களில், அச்சுலக்கையை புகுத்திய ஒரு முழுப்பனைமரமே துலாவாக இருந்தது. துலாவின் அந்தத்திற் கட்டிய பனை நார்க் கயிற்றில் வாளி தொங்கிக் கொண்டிருந்தது. அந்த நார்க் கயிறுதான் துலாக் கொடிபோலும் இத்தனை ஆழமான கிணற்றில் இந்த முழுப்பனைமரத்தை இழுத்து நீர் அள்ளுவதை எண்ணியபோது அவனுக்குத் தலைவிறைத்தது.

கிணற்றடிக்கு வந்த ஆசிரியர் அவன் மலைத்து நிற்பதைக் கண்டு, தானே துலாவைத் தாழ்த்தி கிணற்றடியில் இருந்த பெரிய வாளியிற் தண்ணீர் ஊற்றி ''இப்போ பருமட்டா மேலைக்கழுவும் பின்னேரம் தம்பி வீட்ட போய்க்குளிக்கலாம் அங்க மோட்டரும் பைப்பும் இருக்கு''

மாலையில் ஆசிரியர் அவனைத்தன் தம்பியின் வீட்டிற்குக் கூட்டிச் சென்றார். செட்டிதரை என்ற பிராந்தியத்தில் உள்ள அவர் தம்பி வீட்டுக் கிணறு முன்னர் பார்த்த கிணற்றைவிட ஆழமாக இருந்தது. எட்டிப் பார்த்தால் தண்ணீர் இருப்பதே தெரியாத அளவுக்கு அத்தனை ஆழம்? 'இந்தப்பாதாளத் தண்ணீரை இறைத்தல்லவா யாழ்ப்பாண விவசாயி பயிர் செய்கிறான்' என்று எண்ணிக்கொண்டே ஐந்தடி ஆழத்திலிருந்த தண்ணீரைக் கைவாளியால் மொண்டு தலையில் ஊற்றி ஊற்றித் தன் குளியலை முடித்துக் கொண்டான்.

வீட்டினுட் சென்று சலவை செய்த வேட்டியை உடுத்துச் சட்டையும் தரித்த பின்னர் திருநீறுபூசிக் கொண்டிருக்கையிற் தேநீரை நீட்டிய அம்மா 'ஏன் தம்பி சாப்பிட்டிற்றுப் போவன்' என்றாள். 'இப்ப என்னம்மா சாப்பிடுறது? நான் சைக் கிளில் தானே போறன், அரைமணித்தியாலத்தில் போய்ச் சேர்ந்திருவன். அங்க போய்ச் சாப்பிடலாம்' என்று விட்டு மாமரத்தைக் கடந்து தெருப்படலையைத் திறந்து வெளியேறினான். மாமனாரின் வீட்டு முற்றத்திலே அபிராமி பெருக்கிக்கொண்டு நின்றாள். 'சைக்கிளைக் கொஞ்சம்தாங்க மாமி' என்று தாமோதரம் கேட்ட போதுதான் அவள் நிமிர்ந்தாள்.

''மண்டபத்துக்குள்ளதான் இருக்கு போய் எடுங்க என்ற அபிராமி ஏன் தம்பி எங்க போகப் போறீங்க'' என்று கேட்டாள்.

சைக்கிளை உருட்டிக்கொண்டு மண்டபத்துக்கு வெளியே வந்தவன் ''தம்பலகாமம்'' போப்போறன் என்று விடையளிக்கையில் அறைக்குள்ளிருந்து சௌந்தரமும் வந்தாள். அவளைப் பார்த்தபோது தன் உடன் மாணவன் பொன்னம் பலத்தின் 'கொமென்ற்' ஞாபகத்துக்கு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று ஞாயிற்றுக்கிழமை மாணவர்கள் சிலரோடு சேர்ந்து அவன் பருத்தித்துறைப் பட்டினத்திற்குச் சென்றான். சந்தையை தாண்டிக் கடற்கரைப் பக்கமாகத் தொண்டமானாற்று வீதியாற் சென்றுகொண்டிருக்கையில் எதிரே மெதடிஸ்த பெண்கள் கல்லூரி விடுதி மாணவிகள் தங்கள் மேற்றன் சகிதம் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களைக் கடந்து முடிந்ததும் 'பின்னால மூன்றாவது அணியில இடப்பக்கமாப் போற பொட்டை அரபிக் குதிரைமாதிரி அழகான பெட்டை மச்சான்' என்று கொமென்ற் சொன்னான். அதைக் கேட்டுதான் பொன்னம்பலம் சொன்னான். ''பொட்டைவடிவா வடிவில்லியா என்று இப்படி நேரத்தில சொல்லேலாது'' வெளிக்கிடக்குள்ள எல்லாரும் மேக்கப் பண்ணிக் கொண்டுதான் வருவினம். உண்மையா அழகுதானா என்பதைக் கண்டுபிடிக்க ஒரு பெட்டை விடிஞ்சி படுக்கையால எழும்பின உடனதான் பார்க்கவேணும்.

அவனது விமர்சன நோக்கோடு தான் தாமோதரம் செளந்தரத்தைப் பார்த்தான். அந்த அதிகாலையிற் கூம்பிய இதழ்களை ஒவ்வொன்றாக விரிக்கும் செந்தாமரையைப் போலச் செளந்தரம் அழகாகத்தான் இருந்தாள்.

''நேற்று இதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே அத்தான்''

'நேற்று இரவுதான் தீர்மானிச்சன்' என்ற தாமேதரம் 'மாமாட்ட என்னமாமி சொல்ல? என்று கேட்டான்? ஆனால் நேற்று இரவுதான் தீர்மானிச்சன்' என்றதைக் கேட்டதும் செ ளந்தரத்தின்முகம் சாம்பிற்று முகத்தைத் தொங்கவிட்டபடியே அறைக்குட் சென்றாள்.

மாமாட்டச் சொல்றதுக்கு விசேஷமா ஏதும் இல்ல, என்று அபிராமி சொல்லிக் கொண்டிருக்கையில் தாமோதரம் சைக்கிளை உருட்டிக் கொண்டு வெளியேறி விட்டான். பின் சக்கரத்திற்குச் காற்றுப் போதாது போல இருந்தது. ஆனால் வேலும் மயிலும் கடை அதிகாலையிலே திறந்திருந்தது. அங்கே சென்று காற்றடித்துக் கொண்டு குட்டிக்கரச்சுப் பக்கமாகச் சைக்கிளை மிதித்தான்.

அவன் சென்று கொண்டிருக்கையில். 'இவர் ஏன் தம்பலகாமம் போகிறார்? அதுவும் இரவுதான் அங்கு போவதெனத் தீர்மானித்தாராம்! சென்ற இரவு முழுக்கநான் அவரையே நினைத்து நினைத்து இன்பக் கனவு கண்டு கொண்டிருக்கையில், அவர் மட்டும் என்னை நினைக்கவில்லையா? திடீரெனத் தம்பலகாமத்து நினைவு அவருக்கு ஏன் வந்தது? அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது அழ வேண்டும் போல இருந்தது கண்கள் கலங்கியே விட்டன. அவர் அதற்காகத்தான் போகிறார்.

திருக்கோணமலை சண்முகவித்தியாலயத்தில் போடிங்கில படிக்கிற மனோன் அக்கா இன்றைக்குத் தம்பலகாமம் வந்திருப்பா அவளைப் பார்க்கத்தான் அவர் போயிருக்கிறார்....'

சென்ற ஆண்டு மனோனும் எங்களோடு கூடத் திருவிழாக் கடைத் தெருவெல் லாம் சுற்றினாள். அவள் எவ்வளவு ஆனந்தமாக அவருடன் சிரித்துப் பேசிக் கொண்டு போனாள்? எனக்கு அப்பவே சந்தேகம்; நான் பள்ளிக்குப் போகல்ல என்று அவர் கோபிப்பதற்கு இப்பதான் காரணம் தெரியுது. இல்லாட்டா எவருக்கும் சொல்லாம இப்படி அமுசடக்காத் தம்பலகாமம் போவாரா? படுக்கையிற் கிடந்தபடி சௌந்தரம் இப்படி என்னென்னவெல்லாமோ எண்ணினாள். மனோனுக்கும் அவருக்குமிடையில் ஏதோ இருக்க வேண்டும். சிலவேளை அவளைத்தான்... நினைவுகளின் அகோரத்தில் சௌந்தரத்திற்கு அழுகையே வந்து விட்டது.

ஏன்புள்ள காலையில் ஒரு வேலையும் இல்லியா? சும்மா படுக்கிறா? மாமி வீட்ட போகல்லியா? மனுஷி இருபது முட்டிப்பாலையும் காய்ச்சிப் பேணியில ஊத்தத் தட்டத்தனிய அவதிப்படப் போவுது என்றாள் அபிராமி.

'எனக்குப் போகேலா' என்று வெறுப்புடன் ஆனால் எவருக்கும் கேட்காதபடி தனக்குத்தானே சொல்லிக் கொண்டே சௌந்தரம் கிணற்றடிப் பக்கம் போனாள்.

அன்று அவள் தனது கானல் வாழைகளுக்கும் குரோட்டன்களுக்கும் தண்ணீர் ஊற்றவில்லை. கோழிகளுக்குத் தீன் வைக்கவில்லை. வேறு எந்த வேலையுமே செய்யாமல் கிணற்றடியில் அசமந்து நின்றாள். கிணற்றடியிலே முதுகுத்தோலை உரித்து விடுவது போலச் சுள்ளென்றடிக்கும் காலை வெய்யில் கூட அவளுக்கு உறைக்கவிலலை.

சௌந்தரம் இப்படிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கையில் தாமோதரம் குட்டிக்கரச்சிப் பாடசாலைக்குச் சமீபமாக, கிண்ணியாக்குடா உள்வாங்கிச் செல்லும் ஓடையின் விண்ணாங்கடிப் பரவலை வள்ளத்திலேறிக் கடந்து காக்கா முனையைத் தாண்டிக் குறிஞ்சாக்கேணிச் சந்தியடிக்கு வந்த போது சூரியன் முதுகுப் பக்கமாகத் தீய்த்துக் கொண்டிருந்தான். சந்திக்கப்பாலிருந்த கரச்சையில் முழங்காலளவு நீரில் நின்று கொண்டு கைவலையை வீசி மீன்பிடித்துக் கொண்டிருந்த முஸ்லிம்களின் அரையிலிருந்த 'சிறுவால்' களின் (பொத்தானோ, பக்கிள்சோ, இல்லாத அரைக்காற்சட்டை) மேற்கட்டப்பட்டிருந்த பிரம்புப் பறிகளில் கயல் மீன்கள் துள்ளித் துடித்துக் கொண்டிருந்தன. பெரு வெள்ளத்தின் போது, தம்யதாஸ்தானத்தை விட்டுக் கிளம்பி விட்ட கற்களில் ஏறியும் இறங்கியும் மெதுவாக ஓடிக் 'கோழிமுட்டைக் கரச்சை' யைத் தாண்டிய பின் நெடுங்கரச்சை வெளியூடே சைக்கிளை உழக்கிக் கொண்டு கச்சான் காறறுக்கு எதிராகச் சென்று கொண்டிருந்தான் தாமோதரம்.

வெளியைத் தாண்டிய பின்னர் ''காலிபாஞ்சான்'' ஆறு குறுக்கிட்டது. கச்சான் காற்று வீசத் தொடங்கி இந்தக் கரச்சை வெளியெல்லாம் உப்புப் பொரிந்து

வரண்டு கிடக்கும் காலிபாஞ்சான் மதகிலும் கொண்டக்காலளவு தண்ணீர்தான் இருக்கும். ஆனால் இப்போது காலிபாஞ்சான் ஆற்றில் பெருந்தொடைக்கு மேற் தண்ணீர் போய்க் கொண்டிருந்தது. உப்பு நீர் பட்டாற் சைக்கிளிற் கறள் பிடித்துவிடும் என்பதற்காகத் தாமோதரம் வேட்டியை மடித்து அரைக்கு மேற்கட்டிக் கொண்டு, இரண்டு கைகளாலும் சைக்கிளைப் பிடித்துத் தலைக்கு மேலே உயர்த்திக் தூக்கிக் கொண்டு ஆற்றைத் தாண்டினான். பின்னர், தன் வண்டியில் ஏறி முள்ளியடிப் பாலத்தை அடைந்ததும், சைக்கிளை விட்டிறங்கி தன் சண்டிக்கட்டு வேஷ்டியை அவிழ்த்து நன்றாக உடுத்திக் கொண்டான். சேட்பையில் வைத்திருந்த சிறிய சீப்பினாற் தலையை வாரிக் கொண்டான். சேட் கொலருக்குப் பின்னால் நீளமாக மடித்து வைக்கப்பட்டிருந்த கைக்குட்டையை எடுத்து முகத்தைக் துடைத்தக் கொண்டான். இவ்வாறு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டபின் மீண்டும் சைக் கிளில் ஏறிக்கொண்டு கல்யாண ஊர்வலத்திற் செல்பவனைப் போல மெதுவாக நகர்ந்தான். வழியிலே நடுப்பிரப்பந்திடலிலும் அப்பால் நாயன்மார் திடலிலும் சந்தித்த நண்பர்களுக்கெல்லாம் ''கோயிலுக்குப் போயிற்றுவாறன்'' என்று சொல்லிக் கொண்டு கோயிலை அடைந்தபோது காலைப்பூசை முடிவடைந்திருந்தது. ஆனாலும் கோபுரத்தின் கீழே இருந்த காரியாலயத்தில் அர்ச்சனைக்குப் பணஞ் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொண்டு கோயிலை வலம் வந்தான்.

கோணேசரையும் அவரின் பரிவாரங்கள் அனைவரையும் ஒவ்வொருவராகக் கும்பிட்ட பின்னர் திருநீறணிந்து சந்தனந்தரித்து வலது காதின் மேற் செருகிய பன்னீர்பபூவோடு மீண்டும் வண்டியில் ஏறிக் கொண்டு நாயன்மார் திடலை நோக்கித் திரும்பினான்.

நாயன்மார் திடலிலேதான் அவன் மாமனார் பெண் கொண்டிருந்தார். மாமியாருடைய மூத்த சகோதரி தன் தாயதி வீட்டிற்தான் வாழ்ந்து கொண்டிருந்தாள். அவன், வீட்டையடைந்த போது பேரிளம் பொண்ணான அவள் பெரிய மாமியார் முற்றத்துப் பலா மர நிழலிலே பெரியபானையிற் சமைத்துக் கொணடிருந்தாள்.

தாமோதரத்தைக் கண்டதும் வாருங்கோ தம்பி எப்ப யாழ்ப்பாணத்தால வந்தீங்க? சாப்பீட்டிங்களா? என்று அடுக்கடுகாக கேட்டாள்.

''இப்பதான் மாமி வாறன். நேரடியகாக் கோயிலுக்குப் போயிற்று வாறன்''

''இருங்க தம்பி முதலில் சாப்பிடுங்க'' என்றவள் ''மூத்தவனும் அவரும் உங்கட மாமாவும் வயலுக்குப் போயிற்றாங்க. மனோனும் திருக்கிணாமலையில. பெருமிதி மிதிக்கிறவங்களுக்குச் சமைக்க வேணும்'' என்றவள் பீங்கான்களில் சாப்பாட்டை எடுத்து வந்தாள். பிட்டு, வாழைப்பழம், தயிர், பருப்புச்சொதி, அப்பளப் பொரியல் இத்தனையும் கண்ட தாமோதரம் 'என்ன மாமி எனக்காக இத்தனையுமா?, என்றான்.

''நீங்க வாறதா உங்க மாமா கூடச் சொல்லல்ல. வயலுக்குப் போறவங்க காலையில சாப்பிட்டிற்றுப் போகட்டும் என்றுதான் செய்தன். ஆனா அவங்க எல்லாருமே அரையுங் குறையுமாக கொறிக்சிற்றுப் போயிற்றாங்க'' என்றாள் இராசம்மா. தாமோதரம் காலையுணவை முடித்துக் கொண்டான்.

இராசம்மா தன் சமையல் வேலையில் ஈடுபட்டாள். அவர் கணவன் சொல்லு வார். ''வயல் வேலை செய்றவங்களுக்குச் கூலியைக் குறைச்சாலும் அதைப் பற்றி ஒரு குறையும் ஊரில வராது. ஆனாச் சாப்பாடு மட்டும் சரியில்லாட்டி அதுதான் ஊரில பெரிய வசையாவரும். அதனால ஒழுங்காகக் கறிபுளி இருக்க வேணும்'' இராசம்மா மீன்குழம்பும், இரண்டு மரக்கறிகளும் புளியாணமுமாக எல்லாச் சமையலையும் ஏறத்தாழ முடித்து விட்டாள்.

வெளியே வெய்யில் கொளுத்திக் கொண்டிருந்தது. அந்த வெய்யிலில் வெளியில் இறங்கவே பயமாக இருந்தது. வீட்டுக்குள்ளே சும்மா குந்திக் கொண்டிருக்கவும் முடியவில்லை. மேசையில் ரேடியோவும் இருக்கவில்லை. என்ன செய்வதென்று தெரியாமற் தாமோதரம் மேசையிற் கிடந்த புத்தகங்களைக் கிண்டிக் கொண்டிருந்தான். அந்தப் பாடசாலைப் புத்தகங்களிடையே ஆனந்த விகடன் இதழ்களிலிருந்து பிரித்தெடுத்து ஒழுங்காகக் கட்டப்பட்டிருந்த ஒரு நாவல் இருந்தது. அது 'தேவன்' எழுதிய 'துப்பறியும் சாம்பு' என்ற நாவல். அதன் அட்டையில் மனோன்மனி தன் பெயரை எழுதியிருந்தாள்.

தாமோதரத்திற்கு நாவலோ சிறுகதைகளோ படிப்பதில் அத்தனை ஆர்வம் இல்லை. எப்போதாவது படிப்பான். இன்னாரைத்தான் படிக்க வேண்டும் என்ற வரையறையும் இல்லை. அகப்பட்டதை நேரமிருந்தாற் படிப்பான். எந்த நாவலையும் வாசித்து முடிக்க வேண்டும் என்ற ஆசையும் அவனுக்கு ஏற்பட்டதில்லை. எதையாவது படித்தபின் அரைவாசியில் வேறுவேலை வந்து விட்டால், மீதி அரைவாசியை பின்னர் அவன் படித்ததும் கிடையாது. இப்போது தேவனின் துப்பறியும் சாம்பு என்ற நாவலைப் படிக்க ஆரம்பித்தான். சுவையாகத்தான் இருந்தது.

அவன் படித்துக் கொண்டிருக்கையில் இராசம்மா தன் சமயலை முடித்துவிட்டு, அடுக்களையைக் கூட்டி ஒழுங்கு படுத்திவிட்டு அதனைப்பூட்டிக் கொண்டு உள்ளே வந்தாள். அவள் சர்வாங்கமும் வெயர்த்துக் கொட்டிக் கொண்டிருந்தது.

வீட்டிற்குள் வந்தவள் ''இருங்க தம்பி இன்னும் கொஞ்ச நேரத்தில அத்தான் சாப்பாடு கொண்டு போக வந்திருவார். அதுக்குள்ள நான் போய் இரண்டு வாளித் தண்ணி அள்ளி ஊத்திற்று வாறன். ஒரே அவிச்சலாய் அவியுது'' என்று தனக்குத்தானே சொல்பவள் போலச் சொல்லிக் கொண்டு பின்பக்கமாகப் கிணற்றடியை நோக்கி நடந்தாள்.

தாமோதரமும் எழுந்து தன் சேட்டைக் கழற்றிச் சுவர் ஆணியிற் தொங்கவிட்டு கொடியிலே மடித்துக்கிடந்த சாரத்தை எடுத்துக் கட்டிக் கொண்டு மீண்டும் விட்ட இடத்திலிருந்து படிக்கத் தொடங்கினான்.

பெருமிதி மிதிப்பதற்காகச் சூழவுள்ள வயல்களில் எல்லாம் வரம்பு கொள்ளுமளவு தண்ணீர் இருந்து சூழலைக் குளிர்வித்தாலும் கொழுக்கி ஓட்டுக் கூரையின் வெப்பம் அதை மழுங்கடிப்பதாக இருந்தது. கதிரையிலிருந்து வாசித்துக் கொண்டிருந்தவன் தூங்கி விழுந்து மேசையின் மேற் கைகளிற் தலையைக் கவித்தபடியே நித்திரையாய் விட்டான்.

''மச்சான் எப்படா வந்தா? என்ற குரல் அவனை இவ்வுலகுக்குக் கொண்டு வந்தது. எதிரே தம்பிராசா என்ற அவன் மைத்துனன் நின்று கொண்டிருந்தான். அரையிற் கட்டிய நாலு முழ வேட்டிக்கு மேலாக மார்பிலே திரணை திரணையாய்ச் சுருண்டு கிடக்கும் மயிர்க்கற்றை. கறுப்பு என்று ஒதுக்கவும் முடியாமல் சிவப்பு என்ற மெச்சவும் முடியாமல் கபில நிறமாயிருந்தான். நீண்ட ஆனால் வைரித்த உடற்கட்டு''

'காலையில தான் வந்தன் மச்சான்'

'வயலுக்கு வந்திருக்கலாமே. கிட்டத்தானே இருக்கு'

''வரத்தான் நெனச்சன். ஆனா வெய்யிலா இருந்தது. உங்கட அம்மாவும் போகவேணாம் என்றா கதைப்புத்தகத்தைப் படிச்சுக் கொண்டிருந்த நான் நித்திரை யாகிற்றன்.''

அடுக்களைக்குள்ளிருந்து இராசம்மா குரல் கொடுத்தாள். சாப்பாடெல்லாம் போட்டுவச்சிற்றன். கொண்டு போகலாம் ராசா.

தம்பிராசா அடுக்களைக்குள் வந்தான். தாமோதரமும் அவன் பின்னாற் போனான்.

பனைஓலைப் பெட்டியிற் சோறு போடப்பட்டு வாழை இலையால் மூடப்பட்டிருந்தது. பக்கத்திலே தூக்குக் கயிறு கட்டப்பட்ட மண்பானை புளியாணம் மூன்றும் வெண்கலச் சட்டிகளிற் கறிகள், அம்மூன்று சட்டிகளும் வெள்ளை வெளேர் என்ற தலையணையுறை ஒன்றில் அடுக்கப்பட்டுப் பையின் வாய்கூட்டிக் கட்டப்பட்டிருந்தது. சோற்றுப்பெட்டி வாழையிலைக்கு மேலே அகப்பையும் இரண்டு கரண்டிகளும்.

தம்பிராசாவுடன் வந்த கிண்ணியாவைச் சேர்ந்த வேலையாள் சோற்றுப் பெட்டியைத் தூக்க, தம்பிராசா கறிச்சட்டிகள் இருந்த பையைத் தூக்கிக் கொண்டான். தாமோதரம் புளிப்பானையைக் கயிற்றைப்பிடித்துத் தூக்கிக் கொண்டான். தம்பிராசா இடக்கையில் வாழை இலைக்கட்டுக்களையும் எடுத்துக் கொண்டான்.

''தம்பிய என்னத்துக்குக் கூட்டிற்றுப் போறா அவர் இஞ்ச சாப்பிடட்டும்'' என்றாள் இராசம்மா.

''இல்ல மாமி நானும் அத்தானோட போறன்'' என்று விட்டு நடந்தான் தாமோதரம்.

மூவரும் மெயின் ரோட்டிலே கோயிற்பக்கமாக நடந்து வாசிகசாலைக்குப் பக்கத்தில் நிழல் கவித்து நின்ற ஆலமரத்தைத் தாண்டி, எதிரேயிருந்த தேநீர்க் கடையையும் தாண்டி அரிசி ஆலையின் பக்கமாக வயல் வெளிக்குள் இறங்குகையிற் தாமோதரம் கேட்டான் மச்சான் இந்தக் கடையில தேத்தண்ணி அடிக்கிற சத்தமே இல்ல. தின்ற ச ாமானையும் காணல்ல, ஆனா, ஆக்கள் மட்டும் கனக்கப் பேர் போய் வாறாங்க.

அதுபேருக்குத்தான் மச்சான் தேத்தண்ணிக்கடை ஆனா. அங்க சீலும் விக்குது. வடியும் விக்குது. இரண்டு ரூபாய் குடுத்து ஒரு கிளாஸ் வடி அடிச்சுப்பாரன் மச்சான். இந்த அகோர வெயிலில் கிறுகிறு என்று ஏறும். நுவரெலியாவில இருக்கிறது போல இருக்கும்.

''அப்ப மச்சானுக்கு அடிச்சுப் பழக்கம் போல''

''சீ... எப்பெண்டான அப்பாவுக்கு தெரியாம. அதுவும் இங்க இல்ல. திருக்கிணாமலையில குடிச்சிருக்கன். கிங்ஸ் ஹெட்டலில ஒரு கிளாஸ் அடிச்சிற்றுப் பத்தாம் நம்பர் கடற்ரையில போய் இருந்தா என்ன சுகம்! அப்பாவுக்கு தெரிஞ்சு தெண்டா முதுகுத்தோலை உரிச்சுப் போடுவார்.''

## அத்தியாயம் 10

வேலையை முடிச்சிற்றுப் போகக்குள்ள நா ஒருகால் அடிச்சிற்றுத்தான் போவன் தோழ. அப்பத்தான் வேலை செய்த அலுப்பும் தெரியாது. கோழி முட்டைக் கரச்சைக் குத் தேரில போறமாதிரிப் போகலாம் என்றான் அவர்களோடு வந்த அபூபக்கர்.

மூவரும் வயல் வரவைக்குள் இறங்கிக் கெண்டைக் காலுக்கு மேற்பட்ட தண்ணீரில் சளக் சளக்கென்று அடிவைத்து நீரைச் சேறாக்கிக் கொண்டு நடந்தார்கள். வயல் வரம்புகளிலே ஆமைகள் வெயிற்காய்ந்து கொண்டிருந்தன. அவைகளைக் காட்டித் தம்பிராசா சொன்னான். ''இவங்க எல்லாம் போன ஜன்மத்தில் கோணேசர் சொத்தைக் கொள்ளையடிச்சிச் சாப்பிட்டவங்களாம். இப்ப ஊரில இருக்கிற கழிவு எல்லாத்தையும் சாப்பிடுதுகள்.''

தண்ணீர் சளசளக்க வயல்வழியே நடந்து சென்ற மூவரும் சின்னஞ் சிறிய திடலில் ஏறினர், அந்தத் திடல் முழுவதையும் பென்னம் பெரிய இலுப்பை மரம் தன் கிளைகளாற் கவித்து நின்றது. அம்மரத்தின் கீழே நான்கு வயல்களில் மாடு வளைத்தவர்களும் வரம்பு கட்டியவர்களும் தெத்தி தெத்தியாக இருந்து இளைப் பாறிக் கொண்டிருந்தனர். எல்லாமாக முப்பது பேர் வரை இருக்கும். அவர்களில் அரை வாசிக்குமேற்பட்டவர் கிண்ணியா முஸ்லிம்கள்.

தாமேதாதரத்தைக் கண்டதும் ''எப்ப தம்பி வந்தீங்க?'' என்று பெரிய மாமா கேட்டார்,

தான் நான்கு நாட்களுக்கு முன்னால் வந்த விவரத்தைத் தாமோதரம் தெரிவித்தான். இதற்குள் அவர் தான் இருந்த கற்பன் பாயை மீண்டும் உதறி விரித்து எல்லாருக்கும் சோறு படைக்கத் தொடங்கினார்.

''நானும் மச்சானும் வீட்ட போய்ச் சாப்பிடுவம்'' என்றான் தம்பிராசா.

மற்றைய வயற்காரர்களும் இன்னம் மூன்று பந்திகளிலமர்ந்து சாப்பிடத் தொடங்கினார்கள்.

எல்லாரும் சாப்பிட்டு முடிந்ததும் தம்பிராசா சோறு கொண்டு வந்த பாத்திரங்களை எடுத்துக் கொண்டு தாமேதாரத்தோடு வீட்டுக்கு வந்தான். சாப்பிட்டு விட்டு ஆலமரத்தின் கீழ் வந்தால். அம்மரத்தின் கீழ் எத்தனையோ நண்பர்களும் உறவினர்களும் அவர்களோடு பேசிக் கொண்டிருந்ததிற் பொழுது போனதே தெரியவில்லை தாமோதரத்துக்கு.

சித்திரை வருடப்பிறப்பிற்காகப் பாடசாலை மூடப்பட்டுவிட்டது. பதை பதைக்கும் வெய்யிலிற் பிள்ளைகள் திரிந்து காய்ச்சல் தலையிடியைத் தேடிக் கொள்வார்கள் என்று பெற்றார் பயந்தனர். ஆனால் சிறுவர்களோ கொளுத்தும் வெய்யிலிற் கட்டையாற்றில் இறால் பிடித்தார்கள். இரவானதும் நிலவொளியிற் துள்ளி மகிழ்ந்து விளையாடினார்கள்.

பெருவெள்ளத்தினால் நொடிந்துப் போன மயில் வாகனம் கொட்டியாபுரத்துப் புதுக்குடியேற்றத்திட்டத்தில் நாலு ஏக்கர் நீர்ப்பாய்ச்சற் காணியைக் குத்தகைக்குப் பெற்றுக் கொண்டார். வருடப்பிறப்புக் கழிந்ததும் அங்கு விதைப்பு வேலைகளுக்குச் செல்ல வேண்டும் என்பதையே அடிக்கடி கதைத்துக்துக் கொண்டிருந்தார்.

செல்லையா தம்பலாகமத்து விதைப்பை முடித்துக் கொண்டு வருடப்பிறப் பிற்கு மூன்று நாட்கள் முன்னமே ஊருக்கு வந்து விட்டார். வரும் போதே திருக்கோணமலைக்குச் சென்று வருடப் பிறப்புக்காக எல்லாருக்கும் புத்தாடைகள் வாங்கி வந்திருந்தார்.


Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தனக்கு அவர் சேலை வாங்கி வந்தது சௌந்தரத்திற்கு ஏமாற்றமாக இருந்தது. அவள் அடுத்த தவணை ஆரம்பமாகும் போது மீண்டும் பாடசாலைக்குப் போகவே விரும்பினாள். எப்படியாவது தன் தந்தையை அதற்குச் சம்மதிக்கச் செய்யலாம் என்று அவள் நம்பினாள். ஆனால் அவர் தனக்கு சேலை வாங்கித் தந்திருப்பதைக் கண்டபோது தன் தந்தையார் தன்னைப் பாடசாலைக்கு அனுப்புவதில்லை என அறுதியாக தீர்மானித்து விட்டார் என்றே அவளுக்குத் தோன்றயது.

ஆனாலும் தன் கலக்கத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் ''அத்தானுக்கு ஒன்றும் வாங்கி வரவில்லையே அப்பா'' என்று தான் கேட்டாள்.

''அவனுக்கு என்ன வாங்குவதென்றே தெரியவில்லை. அவன் சோதனை எடுக்கப் போகிறான் காற்சட்டைத் துணி வாங்குவதா அல்லது வேட்டி வாங்குவதா என்று எனகுத் தெரியவில்லை''

அப்போதுதான் அங்கு வந்த தாமோதரம் ''புது வருடத்திற்குக் கோயிலுக்குக் கட்ட வேட்டியே வாங்கியிருக்கலாம்'' என்றான்.

''அப்படியா? பாடசாலையிற் காற்சட்டை போட வேண்டியிருக்குமே என்று யோசி த்தேன் நாளைக்கே வேட்டி வாங்குவோம்''

''தனக்குச் சேலை வாங்கியிருக்கத் தேவையில்லை. அடுத்த தவணை தொடக்கம் பாடசாலைக்குப் போக வேண்டும்'' எனத் தன்னைப் பற்றிச் சொல்வான் எனச் சௌந்தரம் எதிர்பார்த்தாள். ஆனால் தாமோதரம் அதைப்பற்றிப் பேசவில்லை. அது தன்னை அலட்சியம் பண்ணுவதாக அவளுக்குப் பட்டது. தனிமையாயிருந்த போது அவள் கேட்டாள் ''என்னைப் பாடசாலைக்கு அனுப்பும்படி அப்பாவிடம் சொல்லுங்களேன்''

''நீ ஒன்றும் எனக்காகப் பாடசாலைக்குப் போகவேண்டியதில்லை. உனக்கு விருப்பமிருந்தாற் போ. உனக்காக நான் ஏன் வக்காலத்து வாங்கவேண்டும்'' என்று எழுந்தமானமாகச் சொன்னான் தாமோதரம்.

சௌந்தரத்தின் கண்கள் கலங்கின. ஒரோர் வேளை பாடசாலைக்குப் போ என்று கட்டாயப்படுத்துகிறார். இப்போது அலட்சியமகப் பேசுகிறார். இதன் காரணந்தான் என்ன? குழப்பமடைந்த நிலையில், பாவாடை வாங்கி உடுக்க என்று சற்று கோபமாகவே கேட்டாள் அபிராமி.

''நான் ஒண்ணும் கிழவியில்ல. இன்னமும் எனக்கு பதினாறு வயசும் ஆகல்ல''

''அது வயசில்லயா? உன்னோடொத்ததுகள் இந்த ஊரிலே கல்யாணம் முடிச்சிருக்கிறாங்க''

''ஏன் என்னோடொத்ததுகள் இன்னமும் பாடசாலைகசூப் போகிறார்களே. அதைச் சொல்லுங்களேன்''

''அந்த விசயம் எனக்குத் தெரியாது உங்க அப்பா விட்டா நீயும் போ''

''அடுத்த தவணை பாடசாலை தொடங்கியதும் நான் போகத்தான் போறன்''

''போற நேரம் போ, இப்ப சீலையை எடுத்து உடு''

''எனக்கேலாது. பொங்கலுக்கு வாங்கின பாவாடை சட்டை இன்னமும் புது சாத்தான் இருக்கு அதைத்தான் உடுப்பன்''

''அது உன்னிஷ்டம். ஆனா அப்பா கோபிச்சார் எண்டா என்னட்ட முறைப்படாத'' என்றாள் அபிராமி

மயில்வாகனத்தாரும் அன்று குதூகலமாகவே இருந்தார். வீட்டுக்கு அன்று அவர் மச்சான் செல்லையாவும் வந்திருந்தார். இருவரும் கைவிஷேடம் பரிமாறிக் கொண்ட பின்னர் தங்கள் தொழில் சம்பந்தமாகப் பேசிக் கொண்டார்கள். மயில்வாகனம் சொன்னார் ''தம்பலாகமத்தில் மட்டுமா தண்ணிக்காடும் வயல் வெளியும்? அல்லைத் திட்டம் வந்தபிறகு கொட்டியாரத்தில எங்க பார்த்தாலும் தண்ணிக்காடுதான். வயல் வெட்டைதான். முந்திக் குளமாக இருந்த பெரிய வெளி இப்ப வயல் காணியாப் போச்சு. அங்குதான் நாலு ஏக்கர் குத்தகைக்கு எடுத்திருக்கன். மானாவாரி செய்து அலுத்துப் போச்சு. மானவாரிச் செய்கை சூது விளையாடிற மாதிரி'' வந்தாச் சுல் தான் போனாப் பக்கீர் என்று கிண்ணியாக்காரன் சொல்ற பழமொழி போலத்தான்.

மானவாரியோ கோடையோ மண்மாதா விளைய வேணும். அது விளைஞ் சாத்தான் நமக்கு வாழ்கைை என்று சொல்லிச் செல்லையா புறப்படுகையில் எங்க மச்சான் போறீங்க வருஷம் பொறந்த பிறகு வந்த முதல் விருந்தாளி நீங்கதான் எனக்குக் கை விசேஷம் தந்தது நீங்கதான்; இப்ப எங்க போறீங்க என்று சொல்லிக் கையமர்த்தி இருக்கச் செய்து விட்டு வீட்டுக்குட் சென்று பித்தளைக் குடத்துட் கையைவிட்டு தென்னஞ்சாராயப் போத்தலை எடுத்து மூடியைத் திருகித் திறந்தார்.

தென்னஞ்சாராயமும் ஆட்டிறச்சிக் குழம்பும் புது வருடத்தைச் சிறப்பித்தன. அவர்கள் இருவரும் சல்லாபித்துக் கொண்டிருக்கையில் தாமோதரம் எழுந்து வெளியே சென்றான்.

கடந்து ஐந்து ஆண்டுகளாக அவன் யாழ்ப்பாணத்திற் படிக்கிறான். ஆனால் எந்த ஒரு வருடப் பிறப்புக்கும் அவன் அங்கே நின்றதில்லை. ஆனால் இங்கு நடைபெறும் சித்திரை வருடப் பிறப்பன்று வீடுகளில் மரக்கறி உணவுதானாம். கோயிலுக்குப் போவது முக்கியமானதாக இருக்குமாம். ஆடு பங்கு போடுவதும் போத்தல் உடைப்பதும் தீபாவளிக்குத்தானாம். அந்த வழக்கம் அவனுக்குச் சிறந்ததாகவேபட்டது. புது வருடத்தை எவ்வளவோ நம்பிக்கைகளோடு வரவேற்கிறோம். அப்படி வரவேற்கையில் கோயிலுக்குச்சென்று வணங்குவதும், அத்தினத்தில் உயிர்க்கொலை செய்யாதிருப்பதும் நல்லதாகவே அவனுக்குத் தோன்றிற்று. ஆனால், இங்கே யார் அதை நினைக்கிறார்கள்? புது வருடம் மதுவும் மாமிசமுமாகத்தான் தொடங்குகிறது. இதன் காரணந்தான் என்ன? சித்திரை வருடம் பிறக்கும் போது ஊரிலே எல்லா ஆண்களும் இருப்பார்கள். ஆனாற் தீபாவளிக்கு ஊரில் அரை வாசிக்கு மேற்பட்ட ஆண்கள் கண்டக்காட்டு வயல் வெளிகளிலே இருக்க வேண்டிய நிர்ப்பந்தம். அதன் காரணமாகத்தான் வசந்த காலத் தொடக்கமான இச் சித்திரை வருடம் இங்கே குதூகலமாகக் கொண்டாடப்படுகிறதா?

தன் நினைவுளோடு நடந்து வந்தவன் சலூனுக்கு முன்னாலுள்ள பனிச்சை மரத்தையடைந்தான். சலூன் பூட்டப்பட்டிருந்தது. சந்தியிலிருந்த வேலும் மயிலும் கடையும் பூட்டப்பட்டுத்தான் இருந்தது. ஆனாற் கிண்ணியாவிலிருந்து வந்த கடலைத் தட்டிக்காரர்களும் மணிக் கடைக்காரர்களும் கடை பரப்பியிருந்தார்கள். பனிச்சை மரத்தின் கீழே இருந்த கடலைத் தட்டிக் கடையைச் சுற்றிச் சில இளைஞர்கள்! அவர்கள் எல்லாருமே புத்தாடை அணிந்திருந்தார்கள். நெற்றி நிறைய விபூதி. காதிலே பூ. கோயிலுக்குப் போயிருக்கிறார்கள் போலத் தெரிகிறது. கூட்டத்தின் தலைவனாக இருந்த பாலா ''வா மச்சான் வா'' என்று தாமோதரத்தை வரவேற்ற போது அவன் வாயிலிருந்து சாராய வாடை குப்பென்றடித்தது. தட்டிக் கடைக்காரனிடம் சுண்டற் கடலை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்த இளைஞர்களும் வெறியாகத்தான் இருப்பார்கள் போலும். தாமோதரத்திற்கு அவர்களைப் பார்க்கக் கோபமாகவும் இருந்தது; பரிதாபமாகவும் இருந்தது.

தன் உணர்வுகளை வெளிக்காட்டிக் கொள்ளாமல் எல்லாருக்கும் புது வருஷம் போல இருக்கு என்றான் பொதுவாக

''ஓம் மச்சான் நெடுகையுமா? வீட்ட இருந்து குடிக்கவும் ஏலாது. அதுதான் கோயிலுக்குப் போறம் என்று சொல்லிற்று இங்கினைக்க வாறம் என்றான் பாலா.''

''இங்க எங்க அந்தச் சாமான் இருக்கு''


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நேத்தே இரண்டு வாங்கி வச்சிற்றம். பரமன் சலூனைப் பூட்டிற்று வெள்ளை மணலுக்கு அவன்ர அக்கா வீட்டிற்குப் போயிற்றான். ஆனால் எங்களுக்காகப் பின் கதவப் பூட்டாம சும்மா சாத்தியிருக்கான். அதுக்குள்ளதான் போத்தல் வைச்சிருக்கம்'

தாமோதரத்திற்கு அதற்கு மேலும் என்ன பேசுவது என்று தெரியவில்லை. பிரமை பிடித்தவனாய் நின்றான். பாலா உனக்கொரு சங்கதி தெரியுமா? என்று தாமோத்தின் காதுக்குள் கேட்டான்.

''என்ன சங்கதி?''

'என்ர மச்சாள் லட்சுமிக்கும் மட்டக்களப்பு வேதக்கார இங்கிலீஸ் வாத்திக்கும் லவ்''சீ என்ன கதை பேசிற அந்த இஙகிலீஸ் மாஸ்ரர் அருமையான மனுசன். சும்மா வீண் கதையக் கதைக்காத'

'இல்ல மச்சான் இதில உண்மையிருக்கு. அதால தான் நான் அவளைப் பள்ளிக்குப் போக வேணாம் என்று சொன்னாலும் என்னையும் மதியாமப் பாஞ்சு விழுந்து போறா'

ஏன் உன்னைப் போல அவளும் படியாம இருக்க வேணும் என்று விரும்புறியா?

படிச்சது போதும் மச்சான். இன்னமும் படிச்சாலெண்டா அவள் என்னை மதிக்கமாட்டாள். படிச்சிக் கிழிச்சி வாத்தியாராப் போனாளெண்டாப் பிறகு அவளுக்கு ஒரு வாத்தி மாப்பிளைதான் தேவைப்படும்.

## அத்தியாயம் 11

அதில என்ன குற்றம் இருக்குது?

''குற்றம் இல்லத்தான். ஆனால் அவள் எனக்கு வேணும்? அதுக்கு அவள் மேலே படிக்காமல் இருக்க வேணும்''

அவன் பேச்சைக் கேட்கத் தாமோதரத்திற்கு அருவருப்பாகவும், வெறுப் பாகவும் இருந்தது. ''வைக்கற் பட்டறை நாயாக இருக்கிறானே இந்தப் பாலா. தான் படிக்கவில்லை என்பதற்காக அவளையும் படிக்க வேண்டாம் என்கிறானே. இந்த ஆண்டு மார்கழிக்கு அவள் எஸ்.எஸ். சி. சோதனை எடுக்கிறாள். ஆலங்கேணிப் பாடசாலையில் படிக்கும் மூன்று நான்கு குமர்ப் பெண்களில் லட்சுமியும் ஒருத்தி''

சலூனுள்ளேயிருந்து உதடுகளைத் துடைத்துக் கொண்டு, செருமிக் கொண்டு விசுவம் ''ஓம் மச்சான் நீ சொல்றது சரிதான். உன்ர மச்சாள் பின்னேரத்திலயும் இங்கிலீஸ் வாத்திக்கிட்ட ரியூசன் எடுக்கிறா''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சீ, சத்தம் போட்டுப் பேசாதே'' என்று அவனைத் தடுத்த பாலா, தாமோதரத்தின் காதோடு காதாகச் சொன்னான். ''மச்சான் விஷயம் எண்டாப் பொய்தான். ஆனா இப்படி கதை கட்டி விட்டாத்தான் அவள் பாடசாலைக்குப் போறதை நிற்பாட்டுவாள்'' என்றான்.

தாமோதரம் அதிர்ச்சியடைந்தான். இந்தக் கிராமத்தின் இளஞ்சமூகம் எத்தனை கேவலமாவும், குரூரமாகவும் சிந்திக்கிறது? என்று எண்ணுகையில் அந்த எண்ணத்தின் வேதனையை அவனாற் தாங்க முடியாமல் இருந்தது. போதையில் நிற்கும் அந்த முட்டாள்களிடம் இப்போது என்ன சொன்னாலும் பிரியோசனமில்லை என்று எண்ணிணான். மெதுவாகப் பாலாவை அணைத்துக் கொண்டு, ''மச்சான் இப்ப ஒண்ணும் கதைக்காத பின்னேரமா நான் உன்னோட பேசிக் கொள்றன்'' என்றான்.

''என்னத்தைப் பேசுறது? உன்ர மச்சாள் மட்டும் படிக்காம வீட்டோட இருக்கச் சொல்லியிருக்கா. என்ர மச்சாளையும் அப்படியிரு என்று சொன்னாற் குற்றமா? பாப்பம் இனி அவள் பள்ளிக்குப் போற சமத்த'' என்று சொல்லிக் கொண்டே சலூனின் பின் பக்கமாக நுழையப் போகையில் விசுவன் சொன்னான் அங்க ஒண்ணுமில்ல மச்சான்.

''சரிதான் தாமரை வில்லுக் கள்ளுக் கடைக்கும் போக ஏலாது; அங்க கோணா மலையப்பாவும், கிழட்டுக் கணபதிப்பிள்ளை விதானையும் இருக்கும்; வாங்கடா வேறெங்காவது போவம்'' என்று நடந்தான் பாலா. இளைஞர் கூட்டம் அவன் பின்னால் சென்றது.

தாமோதரம் பனிச்சை மரத்தின் கீழே சிந்தித்த படியே நின்றான். சௌந்தரத்தைத் தான் அல்லவா பாடசாலைக்குப் போக விடாமற் தடுத்து வைத்திருப்பதாகப் பாலா குற்றச்சாட்டுகிறான். சில வேளை சௌந்தரம் பாடசாலைக்குச் சென்றால் பாலா லட்சு மியையும் செல்ல விட்டு விடுவானோ? என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

''இல்லை பாலாவுக்கு ஒரு வித தாழ்வு மனப்பான்மை. லட்சுமி படித்து விட்டால் தன்னை மதிக்க மாட்டாள் என்று எண்ணுகிறான். இந்த எண்ணத்தைத் தான் மாற்ற வேண்டும். அதற்கு என்ன செய்யலாம்? விடிந்தால் யாழ்ப்பாணம் நான் போக வேண்டும். அதற்குள் பாலாவின் இந்த எண்ணத்தை தான் மாற்ற வேண்டும். அதற்கு என்ன செய்யலாம்? ஆனால், எப்படி மாற்றுவது என்றுதான் அவனுக்குத் தெரியவில்லை. தலைமை ஆசியரும் ஊரில் இல்லை இருந்தால் அவர் சமாளிப்பார். என்ன செய்யலாம் என்றெண்ணிக்கொண்டே நடந்தான்.

மதிய வெளியிற் தூரத்தே கரச்சை வெளியிற் கானல் நீர் நெளிந்தது. பனிச்சை மரத்தடியிற் சொறி நாய் ஒன்று முடங்கிக் கொண்டு கிடந்தது. தட்டிக் கடைக்கரானின் பீடிப்புகை

கூட ஆடாமல் அசையாமல் அந்தரத்தில் நின்றுகொண்டிருந்தது. சிந்தித்தபடியே அடிமேல் அடி வைத்து நடந்த தாமோதரம், அவனையறியாமலே தன் மாமனார் வீட்டுப் படலையை திறந்து கொண்டு அவன் வீட்டை நோக்கி நடந்தான்.

தெருப்படலையைத் திறந்து கொண்டு பசையற்ற வெண்மணலிலே செளந்தரத்தின் முயற்சியாற் செழித்து வளர்ந்திருந்த பூந்தோட்டப் பாதையின் நடுவே அவன் சென்று கொண்டிருக்கையில் ''மதியமும் சறுகிற்று இன்னமும் அப்பாவைக் காணவில்லையே எங்கபோனாரோ?'' என்ற அபிராமியின் குரலுக்கு எனக்கென்ன தெரியும்? அவர் எங்க போனாரெண்டு என்று செளந்தரம் வெறுப்போடு பதிலளித்தது தாமோதரத்தின் காதுகளில் விழுந்தது.

வாசற்படியிற் கால் வைக்கையிற் தாமோதரம் சொன்னான் 'மாமா வீட்ட இருக்கார்'

அவனைக் கண்டதும் அபிராமி வாங்க தம்பி என்று அவனை வரவேற்றாள். வாசலிலே கிடந்த சாக்கிலே கால்களைத் தட்டித் துடைத்துக் கொண்டு ஆசனத்தில் அமர்ந்தான் தாமோதரம். செளந்தரம் மேசையில் மார்பைப் புதைத்தவாறு தன் இருகைகளாலும் நாடியைத் தூக்கிப்பிடித்துக் கொண்டு தான் நின்ற நிலையைக் கொஞ்சமும் தளர்த்தாதபடி ஒருக்களித்து நின்று கொண்டிருந்தாள். அவளுக்கு ஏதோ கோபம் என்று தாமோதரத்துக்குத் தெரிந்தாலும் அது ஏன் என்று தெரியவில்லை.

உள்ளேயிருந்து அவளைத் தாயார் அழைத்தாள். ''செளந்தரம் இதைக் கொண்டு போ''

அந்தக் குரலைக்கேட்டும் கூடச் செளந்தரம் அசையாமல் தான் நின்றாள். தாமோதரம், அவளது இறுக்கத்தைத் தளர்த்த வேண்டுமென்ற எண்ணத்தில் 'என்ன வருஷப் பிறப்புக்கு புது உடுப்பு ஒன்றையும் காணோம்' என்றான்.

''ஏன் இல்லை. உங்க மாமா பதினாறு முழத்திலே எனக்கு பங்களூர்ப் பட்டுச் சேலை வாங்கி வந்திருக்கிறார்'' என்றாள் செளந்தரம் வெறுப்போடு.

தாமோதரத்திற்கு அவள் கோபத்தின் காரணம் புரிந்தது. சிரித்துக் கொண்டே அவன் சொன்னான் ''இந்தக் காலத்தில பதினாறு முழத்தில சேலையில்லை மிஞ்சிப் போனால் பன்னிரண்டு முழத்தில தான் இருக்கும். அதில சோழித்துண்டை வெட்டினாப் பத்து முழந்தான் தேறும். அதையும் உடுக்க பஞ்சியா?''

''ஏன் மாமா உனக்குச் சேலை வாங்கி வந்தார். இப்போது அது தேவையில்லையே'' என்று தான் தாமோதரம் சொல்வான் என்று அவள் எதிர்பார்த்திருக்க வேண்டும் ஆனால் அப்படிச் சொல்லாமல் தற்காலச் சேலைகளுக்கு இலக்கணம் சொல்வதும், அதற்கும் மேலாக அச்சேலையை உடுத்திக் கொள்ள சொல்வதும் அவளுக்கு ஏமாற்றத்தை கொடுத்தது. வெடுக்கென்று அறைக்குள் நுழைந்தவள் தந்தையார் வாங்கி

வந்த புத்தம் புதிய சேலையை எடுத்து வந்து ''இந்தாஙக உங்க மாமா வாங்கி வந்தத நீங்கதான் உடுத்துங்க'' என்று சேலையை அவன் மடியிற் போட்டாள்.

புத்தம் புதிய நீலப்பட்டுச் சேலை அதன் அகலமான தங்கச் சரிகைகளுடன் அவன் மடியில் விழுந்து கிடந்தது. அதைத் தடவி, அதன் மென்மையை ரசித்துக் கொண்டே அந்த நீலப் புடைவையிற் சௌந்தரம் எப்படி தோற்றமளிப்பாள் என்று நினைத்து அந்த நினைவுத் தோற்றத்தை ரசித்துக் கொண்டே சில வினாடிகள் 'யோக நிஷ்டை' யிலிருந்தான் தாமோதரம், அவன் நினைவிலே

பட்டுக் கரு நீல புடவை பதித்த நல்வயிரம் நட்ட நடு நிசியிற் தோன்றும் நச்சத்திரங்களடி

என்று பாரதியின் கண்ணம்மாப் பாட்டின் அடிகள் நெளிந்தன. அந்தப் பட்டுக் கரு நீல புடவையை உடுத்திக் கொண்டிருக்கும் சௌந்தரத்தின் சேலை மலரொளி போன்ற சுந்தரப் புன்னகையை அவன் ரசித்தான். நீலக்கடல் அலைகளாய் எழும் அவள் நெஞ்சின் குமுறல்களை ரசித்தான்! அவள் வேதனையை இன்னமும் தூண்டி விட்டு வேடிக்கை பார்க்கவும் முனைந்தான். அறைக்குள் போய்விட்டு வந்த சௌந்தரம் அவன் முன்னாலிருந்த மேசையிற் கொண்டு வந்த தட்டை வைத்து விட்டு, அவன் மடியில் கிடந்த சேலையை எடுக்கையில் தாமோதரம் அச்சேலையை அவள் எடுக்காத படி பிடித்துக் கொண்டு உனக்குத்தான் இது வேண்டாம் என்றாயே

''அப்ப நீங்களா உடுத்தப் போறீங்க''

''அப்படித்தானே நீ சொன்னாய்'' என்று சிரித்தான் தாமோதரம்.

''நான் சொல்றதைத்தான் நீங்க செய்றீங்களாக்கும்''

''ஏன் என்னத்தை செய்யல்ல?''

''நான் பாடசாலைக்குப் போறதையிட்டு அப்பா கிட்ட கதையிங்க என்று சொன்னேனே. செய்தீங்களா?'' அவள் குரல் கெஞ்சியது.

ஆனாலும் தாமோதரம் அவள் கெஞ்சலைப் பொருட்படுத்தாமல் ''நான் என்ன கேட்பது அவரிடம்? படிக்கப் போகிறவள் நீ; படிக்க வேண்டியவள் நீ; நீயல்லவா கேட்க வேண்டும்.?''

'நான் கேட்டுத்தான் அவர் விடுகிறார் இல்லையே'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவர் உன்னை இழுத்துப் பிடிச்சுக் கொண்டிருக்கவில்லை. நான் போகத்தான் போவேன் என்று வெளிக்கிட்டால் அவர் தடுக்கமாட்டார் என்றுதான் நான் எண்ணுகிறேன்''

''அவர் போக வேண்டாம் என்று சொல்லிவிட்டார். என்னால் அதை மீறவும் முடியவில்லை. விருப்பமும் இல்லை''

''அப்படி விரும்பாமல் இருப்பதைத் தான் நான் விரும்பவில்லை. அஞ்சுவதற்கு தான் அஞ்ச வேண்டும். எல்லாவற்றிற்கும் அஞ்சக் கூடாது. அப்படி பயப்படுபவர்களை நம்பவும் கூடாது.

நீங்கள் சொல்வதொன்றுமே எனக்கு விளங்கவில்லை. உங்கள் தத்துவங்கள் எனக்கொன்றும் விளங்கவில்லை.

''இதிலே தத்துவம் என்ன இருக்கிறது? ஒருவேளை அப்பா என்னிடம் கதைக்கவேண்டாம் என்று உன்னிடம் சொன்னால் அதையும் கேட்பாய் போல இருக்கிறது. அதைத் தான் நம்பவும் கூடாது என்று சொன்னேன்''

நம்பக் கூடியவர்கள் இருக்கிறார்களாக்கும்.

நெஞ்சுத் துணிச்சலும் நேர்மையும் உள்ள எவரையும் நம்பலாம். கோழைகளை நம்பக்கூடாது.

''துணிச்சல் என்னிடம் இல்லாமல் இருக்கலாம், நேர்மையும் இல்லை என்றா சொல்றீர்கள் என்று ஆத்திரத்தோடு கேட்டாள் சௌந்தரம்''

அறைக்குள் இருந்து கையிலே மோர் குவளையுடன் வந்த அபிராமி ''என்ன தம்பி ஒன்றுமே சாப்பிடவில்லையே நீங்கள். பலகாரம் எல்லாம் அப்படியே இருக்கு''

''வயிற்றிலே இடம் இல்லை மாமி'' என்றவன் முறுக்கொன்றை எடுத்துக் கொறித்தான். அபிராமி உள்ளே சென்றாள். முறுக்கைக் கொறித்துக் கொண்டிருந்த தாமோதரம் ''செளந்தரம் உன்னிடம் ஒரு விஷயம் கேட்க வேண்டும் ரகசியமாக'' என்று பீடிகை போட்டான்.

''என்ன இரகசியம் நான் தான் நம்பக் கூடியவள் அல்லவே''

''அந்தக் கதய விடு. நான் உண்மையா உன்னிட்ட ஒரு விசயம் கேட்க வேண்டும்''

''என்ன விஷயம் கேளுங்களேன்''

''லட்சுமி எப்படி?'' என்று மெதுவாகவே கேட்டான்.

இந்தக் கேள்வி சௌந்தரத்தின் மனதில் ஒரு புதுக் குழப்பத்தை உண்டாக்கிற்று. ஏன் அவளைப் பற்றிக் கேட்கிறார் என்று எண்ணிக் கொண்டே ''அவளுக் கென்ன மெத்தம் நல்லவள். அருமையான குணம். படிப்பிலேயும் மிகக் கெட்டிக்காரி''

''அப்படியா? ஆனால் பாவம் அவளைப் பற்றி ஊரிலே வீணான அபவாதம் கிளம்ப இருக்கிறது''

''எப்படி உங்களுக்கு தெரியும்? அந்த அபவாதத்தைக் கிளப்பப் போவது யார்?''

''பாலாதான். எரிச்சலிலும் பொறாமையிலும் ஏதோ உளருகிறான். எப்படியும் நான் அவனைத் தடுக்க வேண்டும். அதுவும் இன்றைக்கே''

''அவனுக்கென்ன எரிச்சலும் பொறாமையும். லட்சிமி அவன்ர மச்சாள் தானே''

''அதால தான் அவனுக்கு பொறாமையாக இருக்கிறது. அவள் பாடசாலைக்குப் போய்க் கொண்டிருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை.

''ஏனாம் அவன் என்ன புரளி கிளப்ப போகிறான்?''

## அத்தியாயம் 12

''நீ ரகசியமாகவே வைத்துக் கொள். இங்கிலிஸ் வாத்தியாரோட அவளுக்கு காதல் என்று கயிறு திரிக்கிறான். வெறியில சொன்னாலும் அவன் மனதில் அது இருக்கு''

''நாசமாய் போவான். அவளைப் போல குணமான பிள்ளை இந்த ஊரிலேயே இல்லை. அவளயா அப்படிச் சொன்னான்'' என்று ஆத்திரப்பட்டாள் சௌந்தரம்.

''இன்னம் அவன் வெளியால சொல்லலல்ல. இப்படிக் கதையைக் கிளப்ப போறன் என்று என்னட்டத்தான் சொன்னான். ஆனா வெறி முறிஞ்சதும் தான் அவனை சமாளிக்க வேணும்''

''அவனை என்ன சமாளிக்கிறது? அவளிட்ட சொல்லி அவள்ர காற்செருப்பால அந்த நாய்க்கு இரண்டுபோட வேண்டும்'' என்றாள் சௌந்தரம். ஆத்திரத்தில் அவள் உதடுகள் துடித்தன. கைகள் படபடத்தன.

''ஆ, இத்தனை வீரம் இருந்தால் உன்னையும் எதற்கும் நம்பலாம். நம்ம ஊர்ப் பெண்களுக்கு இன்றைக்கு வேண்டுவது இந்த துணிச்சலும் வீரமும் தான். பாரதியார் கூறுவதுபோல நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்தான் நமது பெண்களுக்கு தேவை. ஊர் என்ன சொன்னாலும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பரவாயில்லை. நாம் செய்ய வேண்டியதை செய்வோம் என்ற துணிச்சல் வேண்டும். ஆனால் அந்தத் துணிச்சல் சில ஆண்களுக்குக் கூட இந்த ஊரில இல்லை'' என்றான் தாமோதரம்.

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''ஊர் ஏதாவது சொல்லும் என்று பயந்துதானே உங்கள் அப்பாவும் கூட உன்னைப் பாடசாலைக்குப் போக வேண்டாம் என்கிறார். ஊருக்கு அவர் பயம்: அவருக்கு நீ பயம்: பயப்படாமல் எதிர்த்து நின்றால் அவரும் பணிந்து விடுவார்''

''எதற்கும் ஒரு தடவை நீங்களும் அப்பாவிடம் சொல்லுங்களேன்''

''சொல்லலாம் தான் ஆனால் இந்த விசயத்தில் அவர் மேல எனக்குச் சரியான ஆத்திரமாக இருக்கிறது. அவரிடம் கதைத்தால் ஆத்திரத்தில் அவரிடம் என்ன கதைப்பேனோ எப்படிக் கதைப்பேனோ என்று எனக்கு தெரியாது. அவர் என் மேல் நேசமும் பாசமும் உள்ளவர். என்னைத் தூக்கி வளர்த்தவர். ஏன்; உன்னை விட அதிகமாக அவர் என்னைத் தூக்கி இருக்கிறார். அத்தகையவரிடம் ரசாபாசமாக ஏதும் பேசி விடுவேனோ என்று பயப்படுகிறேன். யாழ்ப்பாணம் போனதும் அவருக்கு இதைப் பற்றி ஒரு கடிதம் எழுதுவேன்''

தன் தந்தையாரிடம் அவன் வைத்திருக்கும் பாசத்தைக் கண்டு சௌந்தரம் மனம் பூரித்தாள். ஒரு கணம் அப்படியே அவனை கட்டியணைத்துக் கொள்ள வேண்டும் போலத் தோன்றிற்று. அடுத்த கணம் ''கடிதம் ரசாபாசமாக .இருந்தால்....'' என்று கேட்டாள்.

''இருக்காது அப்படி எழுத மாட்டேன். ஆற அமர யோசித்தே எழுதுவேன் என்று சொல்லிக் கொண்டே மோரைப்பருகினான்''

''சாப்பிடுங்களேன்'' என்றாள் சௌந்தரம்.

''வேண்டாம். வேண்டுமானால் இரவைக்கு இங்கே சாப்பிடுகிறேன். நான் சொன்னதை மிக ரகசியமாக வைத்துக் கொள். இப்பவே நான் பாலாவைக் காணுவேன்'' என்று எழுந்து வீட்டை நோக்கி நடக்கையில்....

''எப்போது நீங்கள் யாழ்ப்பாணம் போகிறீர்கள்''

''நாளைக்குக் காலையில் போக வேணடும். எட்டரை மணிக்கு திருக்கிணா மலையிலிருந்து பருத்தித்துறை பஸ் பிடிக்க வேண்டும்''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வருஷம் கழிச்ச கையோட அவ்வளவு அவசரமாகப் போக வேண்டுமா? ஒரு நாள் சுணங்கினால் என்ன?''

ஒரு மணித்தியாலங் கூடச் சுணங்க ஏலாது. பிறின்சிப்பல் கண்டிப்பாகச் சொல்லியிருக்கிறார். பிஸிக்ஸ் இன்னமும் கொஞ்சம் படிக்க வேண்டியிருக்கு என்று சொல்லி நடந்தான்.

''சரி போங்க அத்தான். கொஞ்சம் சுணங்கி நான் வீட்ட வாறன்''

''நீலச் சேலையை உடுத்துக் கொண்டா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டான் தாமோதரம்''

'உங்களுக்கு விருப்பமாயிருந்தா உடுத்துக்கொண்டுவாறன்'

''ஓமோம் கூத்துக்கு வேஷம் போடுறாப் போல ஒரு நாளைக்கு சேலை உடுத்துக் கொண்டா, உன் மாணவத்தன்மை ஒன்றும் தொலைந்து போய் விடாது. வெள்ளைப் பாவாடை கட்டவில்லையே என்று சரஸ்வதியும் ஓடி விடமாட்டாள்'' என்று கொண்டே தாமோதரம் வீட்டை நோக்கி நடந்தான்.

சூரியன் மதியத்திலிருந்து சறுகிருந்தாலும் வெயில் அகோரமாகத்தான் இருந்தது. சித்திரை இருபத்தெட்டிற்குப் பின்னர் தான் தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்றின் முன்னறிவிப்பாகச் சாயந்தரமானதும் இடியுடன் மழை பெய்யுமாம் என்று ஊரவர்கள் சொல்வார்கள். அந்த இருபத்தெட்டாங் குழப்பம் வரையும் வெய்யில் இதைப் போலத்தான் கொளுத்தும்.

தாமோதரத்தின் முற்றத்தின் மரத்தின் கீழே அவன் தந்தையாரும் மாமனாரும் ஆளுக்கொரு காத்தான் குடிக்கற்பன் பாயிற் சுகநித்திரை செய்து கொண்டிருந்தார்கள்.

தாமோதரம் மெதுவாகச் சந்தடியின்றி அவர்களைத் தாண்டி வீட்டுக்குட் சென்றான். சாப்பாட்டை முடித்துக் கொண்டு மண்டபத்துள் அமர்ந்திருக் கையில் பாலா கிளப்ப இருக்கும் புரளியைப் பற்றியும் அவனை எப்படித் தடுப்பது என்பது பற்றியுமே எண்ணிக் கொண்டிருந்தான்.

வெய்யில் நிர்ப்பந்தித்து ஏற்படுத்திய அமைதியைக் கிழித்துக் கொண்டு தூரத்தே பெரிய ஆரவாரமும் கூக் குரலும் கேட்டது. பெண்களின் ஓலமும் கேட்டது. சரி தான்! புதுவருடம் அதன் உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டது போலும் என்றெண்ணிக் கொண்டே, அந்தக் கூக்குரல்களை அலட்சியஞ் செய்தவனாக, பாலாவைப் பற்றிய ஏகாக்கிரக சிந்தையனாக இருந்தான் தாமோதரம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று வெய்யில் தணிந்தபோது தாமோதரம் எழுந்து பாலாவைத் தேடிக் கொண்டு நடந்தான். ஊரிலே சித்திரை வருடப் பிறப்பு உச்சிப்போதில் உச்சக் கட்டத்தை யடைச்திருந்தது. தற்போது சற்று தணிந்திருந்தது. மாலையில் மீண்டும் முருங்கை மரம் ஏறமுன்னர் அவன் பாலாவைச் சந்திக்க விரும்பினான்.

மணல் தெருவிலே நடந்து பாடசாலையைத் தாண்டியதும் இடப்பக்கமாகத் திரும்பித் தென்னஞ் சோலைகளினூடே ஒற்றையடிப் பாதையில் நடந்தான். கட்டை யாற்றுக்கரச்சைப் பக்கமாகத் தான் பாலாவின் வீடு இருந்தது.

தென்னை மர நிழலிலே புத்தாடையணிந்த சிறுவர்கள் காசு குலுக்கி விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களிற் பாலாவின் தம்பியும் ஒருவன். அவனிடம் தாமோதரம் கேட்டான்.

''அண்ணன் இருக்காரா?''

''இல்லையே'' என்று கைவிரித்தான் பையன்.

''எங்கே போயிற்றார்?''

''எனக்கென்ன தெரியும்! இன்னமும் சாப்பிடவும் வரவில்லையெண்டு அம்மா பேசிக்கொண்டிருக்கா'' என்றுவிட்டுத் தன் விளையாட்டைத் தொடர்ந்தான் சிறுவன்.

''அவங்க எல்லாம் உப்பாற்றுக்குப் போறாங்க. அங்கிருந்து வரேக்க நான் அவங்களைக் கண்டனான்'' என்றான் இன்னொருவன்.

சரிதான் தாமரைவில்லு கள்ளுக்கடையில ஊர்க்கிழம் எல்லாம் இருக்கும் என்றெண்ணி மறைவாக அந்தக் கூட்டம் உப்பாற்றுக்குத் துறையைத் தாண்டிப் போயிருக்கிறது என்று தீர்மானித்த தாமோதரம் மேலே போகாமல் மீண்டும் வீட்டுக்குத் திரும்பி வந்தான்.

முற்றத்து மாமரத்தின் கீழே சயனித்திருந்த அப்பாவையும் மாமாவையும் அங்கே அவன் காணவில்லை. வீட்டுக்குள்ளேயும் அவர்களைக் காணவில்லை. தாமோதரத்திற்குக் கவலையாக இருந்தாலும் எந்த அடாவடிக்கும் அவர்கள் போக மாட்டார்கள் என்று அவன் நம்பினான். வீட்டுக்குள்ளே சௌந்தரம் தன் நீலப்பட்டுச் சேலையை உடுத்திக் கொண்டிருந்தாள்!

உடுத்து முடிந்ததும் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். இயற்கையாகவே சிவந்த அவள் முகத்தில் நாணத்தின் செம்மையும் படர்ந்திருந்தது. தாமோதரம் திக் பிரமையோடு அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் தலையைக் குனிந்துகொண்டு ''தெருவில சீலை உடுத்துக் கொண்டு வரவெட்கமாக இருந்திச்சு'' என்றாள் குழைந்து கொண்டே. ''சீலை உடுத்துவர என்ன வெட்கம்? உடுக்காமல் வந்தாற்தான் வெட்கப்பட வேண்டும்''

அவன் சொன்னதன் அர்த்தம் பிடிபடாதவள் போலச் சௌந்தரம் இதை உடுத்திக் கொண்டு வேலிக்கால பூந்து வரவும் முடியாது. அதனால தான் பாவாடை யோட வேலிக்கால பூந்து வந்து சீலையை இங்கே உடுத்தன் என்று விளக்கங் கொடுத்தாள்.

''சரிதான் இப்ப ஏன் வெட்கப்படறா?''

''நான் ஒன்னும் வெட்கப்படல இந்தச் சீலை நல்லா இருக்கா என்று கேட்கிறன்''

''சீலை நல்லாயிருக்கு''

''சீலை உடுத்த நான் நல்லாயில்லையாக்கும்''

''நான் அப்படிச் சொல்லவில்லையே. நீ தான் உன்னைப் பற்றி அப்படிச் சொல்ற''

அதுதான் கனநேரமா ஒண்ணும் பேசாம ஊமை மாதிரி இருந்தீங்களே?

''என்னத்தைச் சொல்றது? சில நேரங்களில் நம் உணர்ச்சிகளை வெளியிடுவதற்குச் சொற்கள் வலுவற்றவையாகிவிடுகின்றன. அப்போது பேசாமலி ருப்பதுதான் புத்திச ாலித்தனம் அந்தப் புத்திசாலித்தனத்தோடு தான் உன்னைப் பார்த்துக் கொண்டிருந்தேன்''

''சரிதான் பார்த்துக் கொண்டிருப்பதற்கும் புத்திசாலித்தனம் வேண்டும் என்று எனக்கு இன்றைக்குத் தான் தெரியும்'' என்ற சௌந்தரம் ''நாளைக்குப் பேரகத்தான் வேணுமா? என்று கேட்டாள்''

''கட்டாயமாக அதிலே எந்த மாற்றமும் இல்லை. எட்டரை மணி பஸ்சைப் பிடிக்க விடிஞ்ச உடன் போக வேணும்.''

திருவிழாவுக்கு வருவீங்களா?

நிச்சயமாக வரமாட்டேன். கோணேசர் அடுத்த வருஷமும் விழாக் கொண்டாடுவார். ஆனா இந்த வருஷப் பரீட்சையிலே நான் சித்தியடைய வேண்டும் அப்பதான் தொடர்ந்தும் எனக்கு வாசிற்றிக்கும் ஸ்கொலர்ஷிப் கிடைக்கும்.

''போய் அப்பாவுக்குக் கடிதம் எழுதுவீர்களா?''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எழுதுவேன்''

வெளியே மாலை மயங்கிக் கொண்டிருந்தது. ஊருக்கு மேற்குப் புறமாக இருந்த உப்புக்கரச்சைகளுக்கு மேலால் நிமிர்ந்து நிற்கும் கண்ணாமரங்களுக்கு அப்பால் தூரத்தே தெரிந்த கந்தளாய்க் குன்றுகளில் மாலைச் சூரியன் தலையை மோதி உடைத்துக் கொள்கையில் அந்த இரத்தப்பிரவாகத்தில் மேற்கு வானிற் செம்மை படர்ந்தது. உப்பு நீரிற் குளித்துக் கொண்டிருந்த காகங்கள் தம் சிறகுகளை அடித்து உலர்த்திக் கொண்டு கண்ணாமரங்ககளை நோக்கிப் பறந்து கொண்டிருந்தன. வெப்பந்தணிந்த அந்த மாலைப்பொழுதில் ஊர் மீண்டும் கலகலப்பாயிற்று.

''நீங்கள் போவதாயிருந்தால் நான் நாளைகாலையிலேயே வந்து சந்திக்கிறன். அம்மாவும் ஒரு பார்சல் தருவதாகச் சொல்லியிருக்கா''

''அவலையோ வற்றாளைக்கிழங்கையோ கட்டிப் பெரிய மூட்டையாகத் தந்திராத, என்னால சுமக்க ஏலாது. யாழ்ப்பாணத்தில் அவைகள் தேவையுமில்ல''

## அத்தியாயம் 13

''அப்படி ஒன்றுமில்லை'' என்று சொன்னவள் பின் புறமாய்ச் சென்றாள். தெய்வானை வீட்டிற்குள் விளக்கேற்றினாள். விளக்கொளியில் நீலப்புடவையைக் கட்டிக் கொண்டு செளந்தரம் ஒரு தேவதையைப் போல ஒல்கி ஒசிந்து நடப்பதைக் கண்கொட்டாமற் பார்த்துக் கொண்டிருந்தான். விளக்கேற்றிய அம்மாவோடு சேர்ந்து செளந்தரமும் வந்து முன் விறாந்தையில் அமர்ந்து கொண்டபோது தாமோதரம் தன் பிரயாணத்திற்கான பெட்டியை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்தான். பெட்டியை அடுக்கி முடிந்ததும். '' நான் கொஞ்சம் வெளியே போய்ற்றுவாறன்'' என்று கிளம்பினான் தாமோதரம். அப்பா என்னதான் கோபித்துக் கொண்டாலும் அவன் தன் அண்ணாவின் வீட்டிற்குப் போக வேண்டும் என்று விரும்பினான். அது தெய்வானைக்கும் தெரியும்.

அவன் விருப்பை உணர்ந்த செளந்தரம் ''எங்க போகப் போறீர்கள் என்று எனக்குத் தெரியும். நான் மாமாட்ட நிச்சயமாச் சொல்வேன்'' என்று பயமுறுத்தினாள்.

''சொல் எனக்குப் பயமில்லை. என்னதான் இருந்தாலும் அவன் என் சகோதரன் இரத்தத்தின் இரத்தம்'' என்ற தாமோதரம் வெளியே சென்றான்.

அவன் தாயார் சொன்னாள் ''இளமை முறுக்கில் அவன் தான் விரும்பிய பெட்டையோட போயிற்றான். அதைத் தவிர அவன் ஒரு குற்றமும் செய்யல்ல, தானும் தன்பாடுமா வாழ்றான். இவர்தான் அவள் சாதில குறைவு என்று கழிச்சி வைச்சிருக்கிறார். எத்தனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைக்கென்றுதான் பார்ப்போமே'' என்று ஆதங்கப்பட்டுக் கொண்டாள்.

''மாமி அத்தானை நான் சும்மா வெருட்டினனான். பெரிய அத்தானோட நானும் கதைக்கிறனான்தான். அப்பாவும் மாமாட கோபம் ஆறும் வரையும் கொஞ்சக் காலம் பொறுத்திருப்பம் என்கிறார்.'' என்றாள் சௌந்தர்யம் குற்ற உணர்வோடு.

''எனக்குத் தெரியும். அண்ணா இவனோட எவ்வளவு நேசமோ அவ்வளவு நேசம் மூத்த மருமகனிலயும். ஆனால் அவரிட்டக் கூடச்சொல்லாமல் அங்கே மாட்டுப்பட்டுக் கொண்டான். ''

''பெரியத்தான் இன்றைக்கு வரவில்லியா மாமி''

''அப்பாக்குப் பயத்தில வரல்ல. ஆனா மத்தியானம் அவர் நித்திரையாயிருக்க குள்ள வேலிக்கு மேலால மகனைத் தூக்கித்தந்தான். கொஞ்ச நேரம் நான் வைத்திருந் தன். பிறகு அவன்ர அழுகை பொறுக்காமக் கொடுத்தனுப்பிற்றன்.

''காலம வீட்டையும் வந்தார் மாமி, அப்ப வீட்டில் அப்பாவும் இல்ல, என்னோட கொஞ்சநேரம் கதச்சிற்றுப் போயிற்றார். அவரைப் பார்த்தால் எனக்கும் வேதனையாக இருக்கிறது. எப்படி மெலிந்து போனார்'' என்று அனுதாபப்பட்டாள் சௌந்தரம்.

இருள் குமைந்து விட்டது. முன்னிருட்டுக் காலம் தொட்டால் ஒட்டிக்கொள் வது போன்ற மையிருட்டு, பனிச்சை மரத்தில் மின்மினிப் பூச்சிகள் கண்சிமிட்டின. சந்தியிலே வேலும் மயிலும் கடையில் இருந்த பெற்றோமக்ஸ் விளக்கின் ஒளி தெரு விலே குமைந்த இருளின் நெஞ்சைப் பிளந்து கொண்டிருந்தது. அந்த இருளிலே வெளியே சென்றிருந்த சிறிய பிள்ளைகள் மூவரும் வீட்டுக்கு வந்தனர். அவர்களின் புதுவருடக்கோலாகலம் அப்போதுதான் முடிவடைந்தது போலும், தெய்வானை அவர்களைக் கடிந்து கொண்டாள். எட்டு வயது நிறைந்த தன் ஒரே பெண்ணை அடிக்க முயன்றாள். ஆனாற் சௌந்தரம் அவளைத் தடுத்தாள்.

கண்களைக் கசக்கி அழுது கொண்டிருந்த தன்மகளிடம் ''கொஞ்சநேரம் வீட்டில இருந்து கொள். நான் மச்சாள அவட வீட்ட விட்டிற்று வாறன்'' என்று கிளம்பினாள்.

''நானும் வாறன்'' என்று சிணுங்கினாள் மகள்.

''பகல் முத்திலாக் காவடியாட்டம் ஆடிற்று. இப்பத்தான் வந்திருக்கா, அதுக்குள்ள மறுபடியும் ஆடிற்று வரப்போறாவாம். போய் இருடி'' என்று அவளை விரட்டினாள் தெய்வானை.

''அவளும் வரட்டும் மாமி, நானும் இன்று முழுதாக அவளைக் காணல்ல மாமி'' என்று அவளுக்கு பரிந்து பேசினாள் சௌந்தரம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சரி வா ஒரே பொம்புளப்பிள்ளை என்று அப்பா செல்லங்குடுத்துக் கெடுத்துப் போட்டார்.' என்று சொல்லித் தெய்வானை புறப்பட்டதும் சௌந்தரத்தின் கையைப் பிடித்துக் கொண்டு இந்திராணியும் குதூகலத்தோடு புறப்பட்டாள்.

வெளியே வந்தபோது சில கணங்களுக்கு அவர்களுக்குப் பாதை புலப் படவில்லை. ஆனால் கண்கள் இருளுக்குப் பழகிக் கொண்டதும் அந்த மையிருட்டிலே தெருப்படலைக்குச் செல்லும் பாதை, பனங்குருத்தால் முடைந்த பாயைப்போல வெண்பச்சையாக விரிந்து கிடந்தது. தெருவிலிறங்கியதும் வேலும் மயிலும் கடையின் பெற்றோமக்ஸ் விளக்கொளி தெருவை ஒளிசெய்து கொண்டிருந்தது. அந்த விளக்கொளியிற் பட்டுச்சேலை சரசரக்கப் புதுமணப்பெண்போல நடந்து செல்லச் சௌந்தரத்திற்கு வெட்கமாக இருந்தது. இருளிலே முக்காடு போட்ட முஸ்லிம் பெண்கள் ஆடவர் கண்களுக்குப் பட்டு விடுவோமோ என்ற அச்சத்தில் நடப்பதைப் போலச் சௌந்தரமும் வேலியோரமாக மறைப்புக்காக கட்டப்பட்ட கிடுகுகளை உரசியவாறு நடந்து கொண்டிருந்தாள்.

''ஏன் பிள்ளை வேலியோரமாப் போறாய், பூச்சி பொட்டுக்கிடக்கும் நடுறோட்டால வா'' என்று அவள் கையைப் பிடித்து நடுவீதிக்குக் கொண்டு வந்தாள் தெய்வானை.

நாணிக்கொண்டு வேகமாக நடந்தாள் சௌந்தரம். மாமியை முந்திக் கொண்டு தெருப்படலையைத் திறந்து உள்ளே போனாள். அவளுக்கு முன்னம் இந்திராணி ஓடிவிட்டாள். தன்னை அம்மா மீண்டும் வீட்டுக்குக் கொண்டுபோய் விடுவாளோ என்ற பயம் அவளுக்கு.

தெருப்படலையில் நின்று கொண்டே ''நான் போய்ற்று வாறன் பிள்ளை. மாமா வந்த பிறகு அவரையும் கூட்டிக்கொண்டு வீட்ட வாறன் எண்டு அம்மாட்டச் சொல்'' என்று கொண்டே திரும்ப எத்தனிக்கையில் ''ஏன் மச்சாள் வாங்களேன்'' அவள் கையைப் பிடித்தாள் அபிராமி.

''வீட்டில் ஒருத்தரும் இல்ல. அவர் வந்ததும் இரண்டு பேருமா வாறம்'' என்று அவள் கையை விலக்கி விட்டுத் திரும்பி நடந்தாள்.

''அப்ப காத்துக்கொண்டேயிருப்பன்''

''ஓமோம், எச்சாமஞ் சென்றாலும் வருவம்'' என்று விட்டுத் தன் வீட்டுக்குப் போனாள் தெய்வானை.

தெருப்படலையைத் திறந்து அவள் உள்ளே சென்ற போது அப்போதுதான் அவள் கணவரும் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அவர் சற்று உற்சாகமாக இருந்தார். ''தாமன் எங்கே?'' என்று அவர் கேட்டார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

''கொஞ்சம் முன்னதான் வெளிக்கிட்டுப் போனான். நாளைக்காலையில் யாழ்ப் பாணம் போறவன் இரவைக்குள்ள சந்திக்கிற ஆக்களைச் சந்திக்கவேணாமா?

''யாரைச் சந்திக்கிறது? சற்றுச் சூடாகவே கேட்டார்.''

''எனக்கென்ன தெரியும்? இளந்தாரிப்பிள்ளைஎற்ற இதையெல்லாங் கேட்டுக் கொண்டா இருக்க''

''சும்மா மறைக்காத. நானும் அத்தானும் ஈச்சந்தீவில இருந்து வரக்க அவனைக் கண்டம். நீ சும்மா மறைக்காத''

தெய்வானை ஒன்றுமே பேசாமல் அவர் பின்னால் நடந்தாள். அன்றிரவு செல்லையர் வீட்டில் அவர்களிருவருக்கும் சம்பிரமமான விருந்து. ஈச்சந்தீவிலிருந்து அறாவிலைக்கு வாங்கி வந்திருந்த தென்னஞ்சாராயத்தைச் சுவைத்துக் கொண்டே கோழிக்கறியையும் பிட்டையும் ஒரு வெட்டுவெட்டினார்கள்.

மயில்வாகனத்தாரும் அவர் மனைவியும் வீட்டுக்குத் திரும்பிய போது நடுச் சாமமாயிருந்தது.

வீட்டுக்குட் சென்று அமர்ந்து கொண்ட மயில்வாகனம் 'அந்த மூத்த தறுதலையைப் பார்க்கத்தான் அவன் போறான். ம் எனக்கென்ன? நான் மட்டும் தான் இந்த வீட்டில தட்டத்தனியா இருக்கன். மற்றெல்லாரும் அந்தத்தறுதலையின் பக்கந்தான்' என்றான் ஆற்றாமையோடு.

தெய்வானை ஒன்றும் பேசாமற் சில கணங்கள் இருந்து விட்டு 'அது சரி, நீங்கரெண்டுபேரும் ஏன் ஈச்சந்தீவுப் பக்கம் போனீங்க' என்று கேட்டாள் சிரித்துக்கொண்டே.

★ ★ ★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 14

''நாங்க தேவையாத்தான் போனம். சரி சரி அத்தார் காத்துக் கொண்டிருப்பார். வெளிக்கிடு நீயும். அங்க போவம் இரவைக்குச் சாப்பாடு அங்கதான்!

அடுத்த கணமே தெய்வானை 'சரி' என்று சொல்லிச் சேலையை மாற்றிக் கொண்டு புறப்பட்டாள். போய்க் கொண்டிருக்கையிலே மயில்வாகனம் சொன்னார் 'ஆவணிபிறக்கட்டும் அவன்ர படிப்பு முடிஞ்சுதோ முடியல்லியோ அவனுக்குக் கல்யாணத்த முடிச்சி வைக்கவேணும்,'' என்றார்.

பஸ்ஸிலே யாழ்ப்பாணத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கையில் ஊர் நினைவுகள் தாமோதரத்தின் நெஞ்சை நிறைத்துக் கொண்டிருந்தன. அன்று அதிகாலையிலேயே அவன் மாமனாரும் சௌந்தரமும் தன்னை வழியனுப்ப வீட்டுக்கு வந்திருந்தனர். மாமனார் அவனுக்கு நூறு ரூபா பணம் கொடுத்தார். அவரிடம் விடைபெற்றுக் கொண்டு வந்தவன் தெருப்படலையை அடைந்த போது மாமனாரின் முன்பாக ஏதுமே சௌந்தரத்திடம் பேசாமல் வந்து விட்டதை நினைத்துக் கொண்டு எதையோ விட்டு விட்டு வந்தவனைப் போல் வீட்டுக்குட் சென்று சௌந்தரத்தின் கையைப் பிடித்துக் கொண்டு 'நான் போய் வருகிறேன்' என அவளிடம் விடைபெற்றுக் கொண்டதையும் எண்ணிக் கொண்டான். அவளிடமிருந்து பிரிகையில் அழுதாளா அல்லது சிரித்தாளா என்பதை அவனால் நிதானிக்க முடியாமல் இருந்தது. நேசம் மறக்கவில்லை நெஞ்சம் நினைவு முகம் மறக்கலாமோ என்ற பாரதியாரின் பாடலை அவன் எண்ணிக் கொண்டான்.

அதற்கும் மேலால் அந்த அதிகாலையிலேயே அவனை வழியனுப்ப பாலா வந்து விட்டான். அவன் தான் கிண்ணியாத்துறை வரையும் அவனைச் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு வந்தான். அது மட்டுமல்ல சைக்கிளை இக்கரையில் வைத்துப் பூட்டிவிட்டு கிண்ணியாத்துறையைத் தோணியிற் கடந்து திருகோணமலை வரையும் வந்து பஸ்ஸில் ஏற்றியும் விட்டான். வரும் வழியில் அவன் சொன்னான் ''நேற்றுக் கொஞ்சம் ஓவராய்ப் போச்சுது அம்மாவுக்கும் தெரிஞ்சு போச்சு விடிய விடியப் பேசிக் கொண்டிருந்தா''

''பேசுவதா? உங்களையெல்லாம் கட்டி வைச்சி உரிச்சி உப்புத்திடாவ வேணும்'' என்றான் தாமோதரம்.

''ஒரு நாட் கூத்துத்தானே. இனிச் சீவன் கிடந்தாத் தீபாவளி வரட்டும். அதுக்குள்ள தொழில் துறையைப் பார்க்க வேணும். நாளைக்கே நான் பொன்னாங் காணிக்கு போறன். அங்க போய் இரண்டு ''தொடுவை''க் கிடாவை சாய்ச்சிக் கொண்டு


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கங்கையைக் கடந்து சங்கு வேலிக்குப் போக வேணும். அங்க ஒரு நாப்பது ஏக்கர் வயலடி இருக்கு. நாப்பதேக்கருக்கும் மாட்டு ''விசக்களை எட்டு அவணம் வரும். கொட்டியாரத்து அவண விலைக்கு இரண்டாயிரம் ரூபா''

''அதென்ன கொட்டியாரத்து அவணம்''

''உன்ர படிப்புக்கு இது விளங்காதுதான். நம்ம ஊரிலயும் தம்பலகாமத்திலயும் எழுபத்தைஞ்சு கொத்தா நாலுசாக்கு ஒரு அவணம். கொட்டியாரத்தி அறுபது கொத்துக் கொண்ட ஆறு சாக்கு ஒரு அவணம்''

''அந்தக் கணக்கு இருக்கட்டும் நேற்றுக்கதச்ச கத''

''என்ன மச்சான் நேத்துக் கதச்ச''

''லட்சுமியைப் பற்றி ஞாபகம் இல்லையா''

'ஓ அதுவா? அந்தப் பெட்டைக்குச் சரியான கிறுக்கு'

''அதுக்காக அவள் படிக்கிறதைக் குழப்பப் போறியா?

''என்ன படிப்பு அவவுக்கு. அவ என்ன பீ.ஏ.யா படிக்கப் போறா?''

''ஏன் படிச்சா என்ன?''

''பெட்டைக் கோழி கூவி விடியாது மச்சான்''

''இல்லை, நீ சொல்வது முழுப்பிழை. நல்லா யோசிச்சுப் பார். நம்ம பள்ளிக் கூடத்திலே படிப்பிக்கிறத்துக்கு இதுவரை கொட்டியாரத்தில இருந்தும் யாழ்ப்பாணத் தில இருந்தும்தான் வாத்திமார் வந்தாங்க. இன்னம் பத்து வருஷத்தில பார். ஆணும் பெண்ணுமா நம்ம ஊரிலயும் பத்துப் பட்டதாரி இருப்பம். இருக்க வேணும். அப்ப டியாக வளர வேண்டிய சமுதாயத்தைச் சின்னஞ்சிறு கதைகள் பேசிக் கெடுத்துப் போடாத.''

''சத்தியமாகக் கெடுக்க மாட்டன் தாமு. நேற்றுக் கதச்சது குடிகாரன் கதை. இப்ப விடிஞ்சு போச்சு. குடிகாரன் பேச்சு விடிஞ்சாப் போச்சு''

''உண்மையாகவா?''

''சத்தியமாக'' பாலா தாமோதரத்தின் கையிலடித்துச் சத்தியஞ் செய்தான். தொடர்ந்து நான் அந்தக் கதையையே கதைக்க மாட்டன். நாளை விடிஞ்சா நான் ஊருக்குத் திரும்பி வர ஒரு மாசமோ இரண்டு மாசமோ செல்லும்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்படியா, நான் உன்னை நம்புறன். எனக்குச் சந்தோஷமா இருக்கு'' என்று சொல்லிக் கொண்டு தான் தாமோதரம் பஸ் ஏறினான்.

நான்கு மணியான போது பருத்தித்துறை பஸ் நெல்லியடியை அடைந்த போது தாமோதரம் பாடசாலைக்குச் செல்லாது இடையிலே சின்னத்தம்பி ஆசிரியரின் வீட்டில் இறங்கினான்.

சின்னத்தம்பி அவனை அகங்குளிர வரவேற்றார். தனக்கு எதிர்காலத்திற் பெருமை தேடித்தர இருக்கும் தன் மாணவனிடம் 'இப்ப பாடசாலையில் ஹொஸ்ரல் திறபடாது. சமையற்காரர் எல்லாம் வீட்டுக்கு போயிருப்பாங்க. பாடசாலை தொடங்க மட்டும் இங்கேயே இருந்து கிளாசுக்குப் போ. நான் ஏற்கனவே பிறின்சிபலிட்டையும் கதைச் சிற்றன்.

தாமோதரம் அவரை ஒப்புக் கொண்டு தன் படிப்பிலே தீவிர அக்கறை காட்டினான். மற்ற எல்லாவற்றையும் மறந்தாலும் தன் மாமனாருக்கு உருக்கமான ஒரு கடிதம் எழுதினான், அதிலே கல்வியின் அவசியம் பற்றிக் குறிப்பிட்டுச் சௌந்தரத்தைத் தொடர்ந்து பாடசாலைக்கு அனுப்ப வேண்டும் என்றும் கேட்டிருந்தான்.

ஆலங்கேணியிற் பழைய பத்தத்திப்பிரகாரமே வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. சித்திரை வெய்யில் வறுத்துக் கொட்டியது. மயில்வாகனம் தான் குத்தகைக்கெடுத்த பெரிய வெளி வயலை விதைத்து முடித்திருந்தார். வைகாசி மாதம் பிறந்த போது சாயந்தர வேளைகளில் வானம் இருண்டு இடித்து முழுக்கி மின்வெட்டி மழை பொழிந்த போது அதிகாலையில் அந்த ஈரத்தைத் தொட்டு புஸ்புஸ்வென்று வீசிய இளஞ்சோழகம் சித்திரைச் சூட்டைத் தணித்தது. அந்தக் காற்றிலே லட்சிமியைப் பற்றிய அபவாதமும் மிதந்து வந்தது! ஆனால் அந்தப் புரளியைப் பாலா கிளப்பவில்லை. அவன் அன்று சொன்னதை யாரோ ஒருத்தன் கிளப்பி விட்டிருந்தான். அக்கதை ஊரெல்லாம் பரவியது. இதைப்பற்றி ஏற்கனவே தாமோதரம் மூலம் தலைமை ஆசிரியர் அறிந்திருந்தார். ஆகவே அந்தப் புரளியைச் சாமர்த்தியமாக அடக்கினார்.

லட்சிமியும் எதையும் தாங்கும் இதயம் உள்ளவளாக இருந்தாள். அவள் அந்த அபவாதத்தைச் சட்டை செய்யவில்லை. அவள் குடும்பத்தினரும் அதைப் பொருட்படுத்தவில்லை. ஆனால் அந்தக் கதைகளுக்குப் பாலா தான் காரணம் என அவர் நம்பினார். பாலா ஊரிலே அந்தக் கதை அடிபட்டுக் கொண்டிருக்கையில் அவன் கங்குவேலியே எருமைக் கடாக்களின் பின்னால் திரிந்து கொண்டிருந்தான்.

ஆனாலும் அந்தக் கதைகளினால் சௌந்தரத்தின் பாடசாலைப் படிப்புக்கு நிரந்தரமாகவே முற்றுப்புள்ளி வைத்து விடச் செல்லையா விரும்பினார். 'கண்ணுக்குத் தைத்த'' தன் மகளைப் பாடசாலைக்கு அனுப்ப அவர் தயங்கினார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆனால் சௌந்தரம் வீராவேசத்துடன் போராடினாள். அவளின் போராட்டமும் தாமோதரத்தின் கடிதமும் அவரைப் பணிய வைத்தன. நீண்ட நாட்களின் பின் பாலா இவ்விடயங்களை எல்லாம் நீண்ட கடிதத்தில் எழுதினான்.

வழமைபோல ஆனிமாதத்தில் தம்பலகாமம் ஆதிகோணை நாயகர் கோயிலிற் கொடி ஏறிற்று. பதினான்காம் திருவிழாவிற்கு வரும்படி சௌந்தரம் எழுதிய கடிதத்தைத் தாமோதரம் ஆத்திரத்தோடு சுக்குநூறாகக் கிழித்தெறிந்தான்.

ஆடிமாதம் மணலைவாரியிறைத்துக் கொண்டு சோழகக் காற்று கடூரமாக வீசிற்று. கரச்சைகளில் நீர் வற்றி உப்புப் பொரிந்து கிடந்து மரங்கள் தம் செழுமை குன்றி வர வண்டு காய்ந்து இலையுதிர்த்தன. ஆடிக் கச்சானில் ஆதிகோணை நாயகர் எழுந்தருளி சமாவச்ச தீவு ஆலங்கேணியூடாக மகாவலி கங்கைக் கரையை அடைந்து, இரவு முழுவதும் தீர்த்தக் கரையிற் தங்கியிருந்து காலையிற் கங்கையில் ஆடித்தீர்த்தம் ஆடினார். அமாவாசை கழித்தபின் தாமோதரத்துக்குப் பரீட்சை தொடங்க இருந்தது.

பரீட்சையில் அவன் மிகச் சிறப்பாகப் பாடசாலையிலே முதல்வனாகச் சித்திய டைவான் என்று ஆசிரியர்கள் எல்லாருமே நம்பினார்கள். ஆவணி விடுதலையின் போது சின்னத்தம்பி ஆசிரியர் அவனைத்தம் வீட்டுக்கு அழைத்துக்கொண்டார். அங்கிருந்துதான் அவன் பரீட்சை எழுத ஆயத்தமாகிக் கொண்டிருந்தான்.

பரீட்சை தொடங்கிவிட்டது!

ஆனால் விஞ்ஞானப் பாடங்களிற் தோற்றும் தாமோதரத்திற்குப் பரீட்சைக்கு இன்னமும் இரண்டு வாரங்களுக்கு மேற் காத்திருக்க வேண்டியிருந்தது. தாமோதரம் பரபரப்போடு ஆனால் நம்பிக்கையோடு பரீட்சையை எதிர்பார்த்துக் கொண்டிருந் தான். அப்போது தான் சின்னத்தம்பி ஆசிரியருக்கு அந்தத்தந்தி வந்தது. அந்தத் தந்தி யைச் சின்னத்தம்பி ஆசிரியரால் நம்பவே முடியவில்லை. அவர் விடுதலைக்காக ஊருக்குப் புறப்பட்டு வருகையிலும் மயில்வாகனம் மிக்க ஆரோக்கியமாகத்தான் இருந்தார். அவருக்கு திடீரென எப்படி மரணம் வந்தது.

ஆசிரியர் குழம்பினார், நல்ல வேளையாக அத்தந்தி வந்தது தாமோதரத்திற்கு தெரியாது. அவன் வெளியே போயிருந்தான். தாமோதரத்துக்கு அந்த விஷயத்தைச் சொல்லி அவனையும் ஆலங்கேணிக்கு அழைத்துப் போவதா? என்று யோசித்தார். கடைசியாக அவனுக்கு இன்னமும் பதினைந்து நாட்களே தான் இருக்கின்றன. ஆகையால் அவனுக்கு விஷயத்தைத் தெரிவிக்காமல் தான் மட்டும் ஆலங்கேணிக்குப் போவது எனத் தீர்மானித்தார். ஆனால் அவர் மனைவி அத்தீர்மானத்தை எதிர்த்தாள். ''நீங்கள் இங்கிருந்து சொல்லாமற் போகலாம். ஆனால் அவன் ஊரிலிருந்து யாராவது அவனுக்கு இதைப்பற்றி தெரிவிக்காமலா இருக்கப்போகிறார்கள்? தந்தையின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணத்தையாவது அவன் காணவேண்டும். அவனையும் அழைத்துக் கொண்டு வேண்டுமானாலும் நானும் வருகிறேன்' என்றாள் அவர் மனைவி.

மீண்டும் குழம்பிய அசிரியர் அவள் சொல்வதிலுள்ள உண்மையைப் புரிந்து கொண்டு அடுத்த நாட்காலையிலே அவனையும் அழைத்துக் கொண்டு ஆலங்கே ணிக்குப் புறப்பட்டார். தாமோதரம் ஏன் என்று துளைத்துத் துளைத்து அவரைக்கேட் டான். 'எனக்கு மிகமிக முக்கியமான ஒரு காரியம் திருகோணமலையிற் பார்க்க வேண்டியிருக்கிறது. நீயும் படித்து நன்றாக களைத்து விட்டாய். உனக்கு ஓய்வு வேண்டும். அதற்காக இரண்டு நாட்கள் ஊரிலிருந்து கோணேசர் கோயிலுக்குப் போய் விட்டு மூன்றாம் நாளே இங்கு வரலாம்'' என்று மட்டும் சொன்னார் ஆசிரியர்.

அவர் சொல்லைத் தாமோதரம் என்றைக்குமே தட்டியதில்லை. உடனே அவ ருடன் புறப்பட்டான். பிற்பகல் இரண்டு மணியளவில் கிண்ணியாத்துறையை அடைந்தான். அங்கேதான் ஆசிரியர் சொன்னார் ''உன் அப்பாவுக்கு கடுமையான

சுகவீனம்'' என்று நேற்று தந்தி வந்தது.

தாமோதரம் அதிர்ந்து போனான் ஏதோ நடக்கக் கூடாதது நடந்து விட்டதாக அவன் உள்ளுணர்வு சொல்லிற்று, துறையடியிலேயே ஓவென்றழுது விட்டான். துறையடியிற் காத்திருந்த பாலாவும், மணியனும் அவர்களிருவரையும் தங்கள் தங்கள் துவிச்சக்கர வண்டிகளில் ஏற்றிக் கொண்டு சந்தியிற் திரும்பிக் கட்டையாற்றுப் பாலத் தைத் தாண்டி ஊரின் வெண்மணலிற் சைக்கிளை உருட்டிக் கொண்டு நடக்கையில் பறை மேளச் சப்தம் கேட்டது! ஒப்பாரிக்குரல் சீறியடிக்கும் கச்சான் காற்றின் ஓசைக் கும் மேலாற்கேட்டது.

## அத்தியாயம் 15

தாமோதரம் தலையிலடித்துக் கொண்டு ஓவென்று அழுதான். அவனை எதிர் கொண்டு வந்த நாகேந்திரம் தம்பியைத் தழுவிக்கொண்டு 'நான்தாண்டா அப்பாவைக் கொண்டிற்றன். என்னால அவர் செத்துப் போனார்' என்று குமுறி அழுதான். தாமோதரமே அவனைத்தேற்ற வேண்டியிருந்தது! இருவரும் கட்டியணைத்துக் கொண்டு அழுதனர்.

வீட்டுக்கு முன்னால் புதிதாகப் போடப்பட்டிருந்த பந்தலின் கீழ் மயில் வாகனம் தன் சேலம் பட்டுவேட்டியுள்ளே நீட்டி நிமிர்ந்து படுத்திருந்தார். தலைப்பாகையின் சந்தனப் பொட்டிற்குக் கீழே மின்னிய அவர் முகத்தின் கன்னங்கரிய மீசையின் கீழே உதடுகளிற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னகை அவருக்கே உரித்தான அந்தக்குறுஞ்சிரிப்பு.

தாமோதரத்தைக் கண்டதும் குழுமியிருந்த ஊர்முழுவதும் மீண்டும் ஆர்ப்பரித்து அழுதது. அம்மா அவனைக் கட்டியணைத்துக் கொண்டு புலம்பினாள். தாமோதரத்திற்கு இதயமே நின்றுவிட்டதைப் போல இருந்தது. எதிர்காலம் அவனுக்குப் புலப்படவில்லை. நிகழ்காலம் ஏதோ ஒரு பொய்மையாய் இருந்தது. இறந்த காலம் மட்டுமே தெளிவாகத் தெரிந்தது.

அவனைக் கட்டியணைத்துக் கொண்டிருந்த தாயிடமிருந்த செல்லையா தாமோதரத்தை விடுவித்து அணைத்துக் கொண்டு பந்தலுக்கு வெளியே வந்த போது அவராலும் அழாமல் இருக்க முடியவில்லை.

அதன் பின்னர் விடயங்கள் துரிதகதியில் நடந்தன. செல்லையா தன் தங்கையின் கணவருக்கு ஐயரைக் கொண்டு கிருத்தியங்கள் செய்து சுடலையில் தகனம் செய்யத்தான் முயன்றார். ஆனால் திருக்கோண மலையிலிருந்து ஐயரை கொண்டு வர முடியாமல் இருந்தது. அன்று அவருக்கு குச்சவெளியில் ஒரு கிருத்தியமாம்! நாளைவரையும் காத்திருக்கவும் முடியாது. ஆகவே தாமோதரம் வந்த சில மணித்தியாலங்களில் உள்ளூர்ச் சேமக்காலையில் அவர் பிரேதம் அடக்கம் செய்யப் பட்டது. சேமக்காலைக்குச் சென்றவர்கள் திரும்புகையில் இருள் கவிந்து விட்டது. வீட்டிலே சற்று முன்னர் இருந்த ஒப்பாரியும் அழுகையும் கூச்சலும் குழப்பமும் அடங்கியிருந்தது. தலைவிரி கோலமாகக் கதறிய பெண்கள் தலை முழுகிவிட்டு அலங்காரங்கூடச் செய்து கொண்டிருந்தார்கள். ஆண்கள் தலைமுழுகிய பின்னர் அலுப்பிற்கு கொஞ்சம் ''போட்டுவிட்டு'' உற்சாகமாக இருந்தார்கள். பெற்றோமக்ஸ் விளக்குகள் இரண்டு வீட்டுக்குள்ளும் வெளியிலுமாக ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்தன. கட்டுக்காவல் தளர்ந்ததினாற் சிறுவர்கள் நிலவொளியில் வெண்மணலிற் புழுதியைக்கிளப்பி விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஆசிரியர் சின்னத்தம்பி

'ஊரைக்கூட்டி ஒலிக்க அழுதிட்டுப்
பேரை நீக்கிப் பிணம் என்று பேரிட்டுச்
சூரையங்காட்டிலே கொண்டு போய்ச்சுட்ட பின்
நீரில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே''

என்ற திருமூலரின் திருமந்திரத்தை நினைந்துக் கொண்டார். அவர் பந்தலுக்குக் கீழே பாயில் மல்லாந்து படுத்திருந்தார். அவர் பக்கலில் தாமோதரமும் நாகேந்திரனும் சோகமே உருவாக அமர்ந்திருந்தனர். காலந்தான் அவர்கள் சோகத்தை ஆற்ற வேண்டும் என்றெண்ணியவராகச் சின்னத்தம்பி மௌனமாகவே இருந்தார்.

''முந்தநாள் பின்னேரம் தான் அப்பா பெருவெளியிலிருந்து வந்தார். இரண்டு மூன்று நாட்களில் வேளாண்மை வெட்டவேண்டும் என்று சொன்னார். காலையில் நெஞ்சுக்க நோகுது எண்டார். வாயுச் சேட்டை என்று உள்ளியைக் குடுத்திற்றுக் கிண்ணியா ஆஸ்பத்திரிக்குக் கூட்டிப் போக இருந்தன். ஆனா அதுக்குள்ள அவர் போயிற்றார். தாமோதரத்தின் பக்கலில் வந்த அம்மா அழுதழுது சொன்னாள்.

அதைக்கேட்ட தாமோதரம் மீண்டும் மௌனமாக அழத்தொடங்கினான். அழுது முடிந்ததும் இந்த ஒய்வுக் காகத்தானா என்னை யாழ்ப்பாணத்திலிருந்து கூட்டிற்று வந்தீங்க என்று சின்னத்தம்பி ஆசிரியரிடம் குமுறிக் கேட்டான். சின்னத்தம்பி ஆசிரியர் அவன் தலையை இலேசா வருடினார். அவன் கேள்விக்கு அவரால் விடையளிக்க முடியவில்லை.

காலம் யாருக்காகவும் கவலைப்படவும் இல்லை, காத்திருக்கவும் இல்லை. மூன்றாம் நாள் எட்டுச் சடங்குகள் நடந்தன. அடுத்த நாட்காலையிலேயே சின்னத்தம்பி ஆசிரியர் தாமோதரத்தையும் கூட்டிக்கொண்டு யாழ்ப்பாணம் செல்லப்புறப்பட்டார். என்ன செய்யலாம் தம்பி எல்லாம் விதிப்படி தான் நடக்கும். நீ நடந்ததை மறந்து முதலில் சோதனையை எழுது. கோணேசர் கைவிடமாட்டார் என்று செல்லையா தாமோதரத்தை தேற்றி வழியனுப்பினார்.

''எல்லாத்துக்கும் அண்ணா இருக்கேண்டா, நீ தைரியமாகப்போ'' தைரியம ளித்தான் நாகேந்திரம். அம்மா தலையைத் தடவிக் கண்ணீருடன் வழியனுப்புகையில் சௌந்தரமும் அவள் பக்கலில் விழிகளில் அருவி சொட்ட நின்றாள்.

யாழ்ப்பாணம் சென்ற தாமோதரம் சின்னத்தம்பி ஆசிரியரின் தேற்றுதல் களுடனும் ஆசிகளுடனும் பரீட்சையை எழுதிவிட்டு மீண்டும் அவருடன் ஆலங் கேணிக்கு வந்தான். அவருக்கும் விடுதலை முடிந்துவிட்டது.

கச்சான் காற்று முற்றி அதன் அந்திமதசையை அடைந்தது. மாண்டு மடிவதற்கு முன் எதையாவது செய்து தீருவோம் என்ற வீராப்போடு சூறாவளியாய்ச் சுழற்றிய டித்தது. கிணறுகளில் நீர் வற்றியது. வாரியடித்த புழுதியைச் சுமந்து கொண்டு மரங்களெல்லாம் கருகித் தீய்ந்தன. வரட்சியும் வெப்பமும் ஊரைக்கருக்கியது. தாமோதரமும் நெருப்பில் விழுந்த பூவாய்க் கருகிக் கொண்டிருந்தான்.

'கணவன் இறந்துவிட்டான் என்ற செய்தியைக் கேட்டதும் மனைவி உண்ணாமல், உறங்காமல் கல்லைப் போல உணர்ச்சிகளற்று இருந்தாளாம் என்று கல் என்ற ஒரு ஆங்கிலக் கவிதையைத் தாமோதரம் படிந்திருக்கிறான். அந்தக் கவிதையில் வரும் பெண்ணைப் போலவே தாமோதரமும் செயல் மறந்து, சிரிப்பு மறந்து, கலகலப்பு மறந்து, உணர்வுகள் மதர்த்துப் போனவனாக வாழ்ந்து கொண்டிருந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்தம்பி வாத்தியார் அவன் கவலைகளை மறந்திருக்க வேண்டும் என்பதற்காகப் பாடசாலைக்கு வந்து படிப்பிக்கும்படி கேட்டார்.

இதற்குள் நாகேந்திரம் பெரிய வெளியில் தன் தந்தையார் செய்த வயலை அறுவடை செய்து சூடு குவித்து விட்டு வந்தவன். சூடுமிதிப்பதற்காக மீண்டும் பெரிய வெளிக்குப் பயணந்தொடங்கினான்.

தானும் அவனோடு புறப்பட்டு வருவதாக தாமேதரம் சொன்ன போது நாகேந்திரம் அவனைக் கண்டிப்பாக வரவேண்டாம் என்றான். எனவே வேறு வழியின்றிப் பாடச ாலைக்குச் சென்று அங்கே படிப்பிக்கத் தொடங்கினான். சம்பளமற்ற சேவகம்!

அம்மாவையும் தம்பிமார் இருவரையும், தங்கையும் காப்பாற்ற வேண்டும். அதற்குத்தான் ஒரு உத்தியோகந்தேடிக்கொள்ள வேண்டும் என்று அவன் விரும் பினான் துன்ப நினைவுகளாற் பரீட்சையைக் கூடச் சரியாக எழுதவில்லை. பரீட்சையில் என்ன எழுதினான் என்றே அவனுக்குத் தெளிவில்லை. முதற்தடை வையிலே நன்கு சித்தியடைந்து சர்வகலாசாலைக்குச் சென்றாற்தான் தொடர்ந்தும் உப காரச்சம்பளம் கிடைக்கும். ஆனால் பரீட்சையில் சித்தியடைவதே நிச்சயமில்லை. ஆகவே மேலே படிக்கும் வாய்ப்பும் இல்லை என அவன் எண்ணினான்.

ஆனால், நாகேந்திரம் மட்டும் "நீ தொடர்ந்து படிக்கத்தான் வேண்டும்" என்று சொல்லிக்கொண்டிருந்தான். ஆனால் அவன் சொல்வது நடை முறையிற் சாத்தியமாக இராது என்று எண்ணித் தாமோதரம் வேலை தேடுவதில் முனைந்தான்.

பாலா அவனுக்கு வழிகாட்டினான். புதிதாக கட்டிய பாடசாலைகள் சிலவற்றை அரசாங்கம் பொறுப்பேற்க இருப்பதாகவும் அவைகளில் ஒன்றான சுங்கான் குழிப் பாடசாலையில் தாமோதரத்தின் பெயரை பதிவதாகவும் அவன் சொன்னான்.

ஊரிலிருந்து ஆறு மைல்களுக்கப்பால் காட்டுப் பிரதேசத்தில் ஓர் குளம். கோடை யிலும் சுமார் நூற்றைம்பது ஏக்கர்களுக்கு அக்குளத்தில் இருந்து நீர்ப்பாய்ச் சலாம். குளத்தை அண்டிய மேட்டுப்பகுதியில், ஆலங்கேணிக் கிராமத்தவர் சிலர் குடியேறியிருந்தார்கள். ஒரு பாடசாலை அவர்களுக்கு வேண்டுமென்று பாலா அங்கோர் ஓலைக் கொட்டிலைக் கட்டிப் பாடசாலையும் நடத்தினான். இப்போதும் அவன்தான் அப்பாடசாலையின் மனேஜர்!

பாலா தாமோதரத்தையும் கூட்டிக்கொண்டு எம்பியிடம் சென்றான்.

தாமோதரத்திடம் துக்கம் விசாரித்து விட்டு அவர் ஏன் தம்பி அவசரப்படுகி றீர்? உமக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது. வேண்டுமாயின் நான் உம்மை ஒரு கிராம சேவகர் ஆக்குகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது தொகுதியில் புதிதாக ஒன்பது கிராமசேவகர்கள் நியமிக்கப்பட இருக்கிறார்கள்'' என்றார்.

''இல்லை, எனக்கு வேறு எந்த உத்தியோகமும் வேண்டாம். ஆசிரியனாகவே நான் விரும்புகிறேன். அப்போதுதான் மேலே படிக்கலாம்'' என்று வாதிட்டான் தாமோதரம்.

'அப்படியா? எனக்குத் தடையில்லை. இந்தமாதம் அரசாங்கம் சுங்கான் குழிப் பாடசாலையைக் கையேற்கும். அதற்கான ஒழுங்குகள் முடிவடைந்துவிட்டன'' ''அங்கேயா? எனக்குக் கண்டிப்பாக உத்தியோகம் கிடைத்தால் நன்றாக இருக்கும். படித்து ஒரு டாக்டராக வேண்டும் என்று கனவு கண்டேன். அது முடியாமற் போய்விட்டது. இப்போது ஆகக்குறைந்தது ஒரு பட்டதாரியாக வாவது வர வேண்டும். ஏகலைவன் துரோணரின் உருவச்சிலையைப் பார்த்து வணங்கிக் கொண்டே வில்வித்தை வித்தகனானது போல நானும் என்னாற் செல்ல முடியாத அந்த பல்கலைக்கழகத்தின் கட்டிடங்களைப் பார்த்துக் கொண்டே பட்டதாரியாக வேண்டும் என்று சொன்ன போது அவன் கண்கள் கலங்கின.

அவன் முதுகிற் தட்டிக்கொடுத்த பாராளுமன்ற அங்கத்தவர் ''முதலில உத்தியோக நியமனம் வரட்டும். அதன் பின்னர் கண்டிக்கு மாற்றம் எடுக்கலாம். ஆனால் ஏகலைவன் கட்டைவிரலைத் தட்சணையாகக் கொடுத்துத் தான் கற்ற வித்தையையே செயற்படுத்த முடியாதவனானதுபோல நீரும் நிதானத்தை இழக்கக்கூடாது அமைதியாயிரும்'' என்றார்.

அவர் கூறியது போலவே அடுத்த மாதமே அரசாங்கம் சுங்கான் குழிப் பாடசாலையைப் பொறுப்பேற்றது. தாமோதரத்திற்கு அப் பாடசாலையில் உத்தியோகம் கிடைத்தது.

அந்தக் கிராமப்புறப் பாடசாலையில் இருந்து கொண்டு மேலே படிக்க முடியுமா? என்று கவலைப்பட்டான் தாமோதரம். மாதங்கள் கடந்தன பரீட்சை முடிவுகள் வெளியாகின. அவன் நான்கு பாடங்களிலும் சாதாரண சித்தியடைந்தான்!

இதற்குள் தனியார் பாடசாலைகளையெல்லாம் அரசாங்கம் சுவீகரித்துக் கொண்டது. ஆலங்கேணி மிஷனரிப் பாடசாலையும் அரசாங்கப் பாடசாலையானது. தாமோதரம் விஞ்ஞானப் பாடங்களிற் சித்தியடைந் திருந்தமையினால் சின்னத்தம்பி ஆசிரியரின் முயற்சியினால் அவனக்கு ஆலங்கேணிப் பாடசாலைக்கு மாற்றம் கிடைத்தது.

ஆனால், தாமோதரம் கண்டிக்கு மாறுவதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான்!

ஆனால், சின்னத்தம்பி ஆசிரியர் அவனை நெறிப்படுத்தினார். ஆங்கில இலக் கியம் படிக்க முயன்றவனைத் தடுத்து ''அதைப் படிப்பிக்க நல்ல ஆசான் வேண்டும். இங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கான ஆசிரியர்கள் இல்லை. மீண்டும் விஞ்ஞானப் பாடங்களை எடுத்துச் சர்வகலாசாலைக்குச் சென்றாலும் நான்கு ஆண்டுகள் சம்பள மற்ற விடுதலைதான் கிடைக்கும். ஆகவே வெளிவாரி மாணவனாகக் கலைப்படிப்புப் படிக்கலாம். தமிழ், சமயம், தர்க்கம் போன்ற பாடங்களை நாமாகவே படிக்கலாம். விடுதலைக் காலங் களில் யாழ்ப்பாணம் சென்று ரியூசன் எடுத்தாற் போதும். இதற்கிடையில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு பயிற்சிக்கு அழைக்கப்பட்டால் அதற்குப்போம் பலாலியில் இருந்து கொண்டு மேற்படிப்பும் படிக்கலாம். சம்பளமும் கிடைக்கும்.

காலம் அவன் துயரத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக மாற்றிக் கொண்டிருந்தது. தந்தையாரின் முதலாம் ஆண்டுத் திவசமும் வந்தது. அச்சடங்கு மிகச் சுருக்கமாகவே நடந்தது. அதை நடத்துவதில் அவன்தன் மாமனாரோடு வாழ்வில் முதல் முறையாக அபிப்பிராய பேதப்பட்டான்! என்றாலும் நீண்ட நாட்களின் பின்னர் அன்று தான் அவன் சௌந்தரத்தோடு சற்று கலகலப்பாகக் கதைத்தான். அவன் கூறிய கருத்துக்கள் சில அவளைக் குழப்பின.

''எனக்கு எத்தனையோ கடமைகள் இருக்கின்றன. எனக்குக் கிட்டாத சர்வகலா சாலைப் படிப்பு என் தம்பிமாருக்கும் தங்கைக்குமாவது கிடைக்க வேண்டும்''

'ஒருவரும் அதைத் தடுக்கவில்லையே' என்றாள் சௌந்தரம்.

''ஆனால் பொருளாதார நிலைதடுக்கும். ஒரு டாக்டராகிக் கைநிறைய சம்பா தித்தால் அந்தப் பிரச்சினை எழாது. இப்போது நான் ஒரு சாதாரண ஆசிரியன். என் பொருளாதார நிலையைக் கொண்டு தான் என் வாழ்க்கை அமைய வேண்டும்''

''நீங்கள் சொல்வதொன்றும் விளங்கவில்லையே''

'விளங்கிக் கொள்ளாத வரை நல்லதுதான்' என்ற தாமோதரம் சற்ற யோசித்து விட்டு ''எதற்கும் இந்த மார்கழி மாதம் எஸ். எஸ். சி. யை எடு'

சளந்தரம் அவன் சொல்வதை தலைகுனிந்த படி கேட்ட போது அவள் கண்கள் கலங்கின.

'அழுது என்ன செய்வது? எனது சகோதரங்களுக்காக நான் என்னுடைய ஆசைகள் சிலவற்றைத் தியாகம் செய்ய வேண்டியிருக்கும். ஆதலால் எந்த நம்பிக்கையும் மனதிலே வளர்த்துக் கொள்ள வேண்டாம், என்றவன் அதற்கு மேலும் பேச முடியாதவனாகச் சென்று விட்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் வார்த்தைகள் செளந்தரத்தின் காதுகளில் நாராசமாகப் பாய்ந்தன. மனக் கோட்டைகள் சரிந்து கொண்டிருந்தன. கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. இதயம் விம்மிப் பெருகியது. கால்கள் நிலை கொள்ளாமல் தள்ளாடி விழுந்து விடுவாள் போல இருந்தது. யன்னற் கம்பிகளைப் பிடித்தபடி வெளியே செல்லும் தாமேதரனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

காலடிச் சப்தம் கேட்டு தெய்வானையைக் கண்ட போது அவள் கண்களைத் துடைத்துக் கொண்டாள். அதைக் கண்ட தெய்வானை கேட்டாள், ஏன் பிள்ளை அழுகிறாய்?

என்ன நினைத்தாளோ தெரியாது. செளந்தரம் தன் மாமியின் மார்பிற் புதைந்து கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

தெய்வானை என்ன நடந்திருக்கும் என்பதை ஊகித்துக் கொண்டாள். கொஞ்ச நாட்களாகத் தாமோதரத்தின் போக்கை அவள் அவதானித்தே வருகிறாள். செளந்தரத்தை அவன் அலட்சியப்படுத்தியே வருகிறான். தான் மேலே படிக்க முடியவில்லையே என்ற ஏக்கமும் மன உளைச்சலும் அவனுள்ளே விசித்திரமான மனச் சிக்கல்களை உண்டாக்கியிருந்தன.

ஒரு நாள் அவள் தாமோதரத்திடம் கேட்டாள். ''ஏன் நீ மாமா வீட்டுக்குப் போறதில்லை''

''ஏன் போக வேண்டும்? அவர்களுக்கு ஏன் நம்பிக்கை வளர்க்க வேண்டும்'' என்னடா இப்படிச் சொல்கிறாய். இதைக் கேட்டால் அண்ணாச்சிக்கு நெஞ்சு வெடிச்சிடும்..... எதைப்பற்றியும் நான் கவலைப்படவில்லை. யார் நெஞ்சாவது வெடிக்கட்டும். என்ர தம்பிமாரையும் தங்கையையும் பற்றித்தான் எனக்குக் கவலை''

''இன்ப என்னடா அவர்களுக்குக் குறை''

''அம்மா, மடத்தனமாப் பேசாதீங்க அவங்கட நல்வாழ்வுக்காக நான் எப்படியெல்லாமோ மாறவேணும்''

''அதுக்காக''

''அம்மா இந்த வயதில அப்பா செத்துப்போவார் என்று நாம் கனவு கூடக்காணல்ல. இது தலைவிதி என்பீங்க. அதுபோலத்தான் நானும் செளந்தரத்தைக் கல்யாணம் முடிக்காம இருக்கலாம். அதையும் தலைவிதி என்று நெனைச்சிக் கொள்ளுங்க. அந்த விதியை பிரம்மா எழுதல்ல. நான் எழுதிக் கொண்டிருக்கன்.''


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 16

னக்கு மகனைப் புரிந்து கொண்டது போலவும் தோன்றிற்று. புரியாமலும் இருந்தது. ஆனாலும் தன் மாமனாருக்கு முன்னால் அவன் பெட்டிப் பாம்பாக அடங்கி விடுவான் என்று எண்ணினாள்.

அவள் மார்பிற் தலையை புதைத்துக் கொண்டு விம்மியழுத சௌந்தரம் தலையை நிமிர்த்திக் கொண்டு ''ஏன் மாமி இப்படி எல்லாம் பேசுறார், எனக்கு வாழ்வே போயிரும் போல இருக்கு'' என்றாள் சௌந்தரம்.

''சீ இப்படி எல்லாம் பேசாத; அவன் எதையோ நெனச்சிக் கொண்டு எதையோ சொல்றான். மாமி இருக்க மட்டும் நீ பயப்படாதே''

சௌந்தரம் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு சிரித்தாள்.

''மாலைபடுற நேரத்தில அழாமப் போய் முகத்தைக் கழுவிக் கொண்டு வா'' என்றதும் அவள் கிணற்றடிக்குச் சென்றாள்.

வெளியே சென்ற தாமோதரம் சௌந்தரத்திடம் ஏன் இத்தனை கடுமையாகப் பேசினோம் என்று நினைத்த போது அவனால் தாள முடியவில்லை. பாவம்! அவள் அழுது கொண்டிருப்பாள் என்று எண்ணினான். சிலவேளை அம்மாவும் அழுவாள் என்றெண்ணிக் கொண்ட தாமோதரம் மேலே எங்கும் போக முடியாதவனாக வீட்டுக்குத் திரும்பினான். வீட்டிலே விளக்கொளியில் சௌந்தரத்தின் முகம் பளிச் சென்று மின்னியது. ஆனாலும் அவள் அழுதிருக்கிறாள் என்பதை வீங்கியிருக்கும் அவள் முகம் சொல்லிற்று.

வீட்டுக்குள் வந்த தாமோதரம் அவள் கரத்தைப் பற்றிக் கொண்டு 'அழுதாயா?' என்றான். அவள் பட்டென அவன் கரங்களை விலக்கிக் கொண்டு 'விடுங்கள் என்னோடு கதைக்க வேண்டாம். என் நம்பிக்கைகளை வளர்க்கவும் வேண்டாம்' என்றாள்.

''இனிமேல்தானா அது வளர வேண்டும்?

''வளர்ந்திருந்ததையும் வெட்டிச் சரித்து விட்டீர்களே''

''அது முருங்கை மரம்போல வெட்ட வெட்டத் தழைக்கும்''

''இன்னமும் வளர்த்துக் கொள்வதற்கு நான் முட்டாளுமல்ல. சுயமரியாதை இல்லாதவளும் அல்ல. தயவு செய்து இனிமேல் என்னிடம் கதைக்க வேண்டாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபம் அவள் முகத்திற் செம்மை சேர்த்தது. நீலக் கடலின் ஆழப்பரப்பிலே வட்டப்படகோட்டும் அவள் வண்ணவிழிகளை, துடிக்கும் அவள் செம்பவள உதடுகளைத் தாமோதரம் பார்த்துக் கொண்டேயிருந்தான். தன் வெற்றியை உணர்ந்து கொண்ட சௌந்தரம் ''இந்த வருஷம் எஸ். எஸ். சி. யில நான் நிச்சயமாப் பாஸ் பண்ணுவன். அதன் பிறகு என்னாலும் சுதந்திரமாக நிமிர்ந்து நிற்க முடியும்'' என்று ஆத்திரத்தோடு சொல்லிவிட்டு வீட்டுக்குச் சென்றாள்.

அவள் பின்னாலேயே சென்ற தாமோதரத்தை நீ ஏன்ரா அந்தப் பிள்ளையைச் சுத்திக் கொண்டு திரியிரா? என்ர அண்ணனுக்கு அவள் ஒண்டும் பாரமாப்போகல்ல. நீதான் வச்சாக் கொம்பு சிரைச்சா மொட்டை என்று எண்ணிக் கொள்ளாதே'' என்று ஆத்திரத்தோடு சொன்னாள் தெய்வானை.

சரிதான், தாங்கள் பேசியதை எல்லாம் அம்மாவும் கேட்டுக் கொண்டு தானிருந்திருக்கிறாள் என்றெண்ணிய தாமோதரம் தலையைக் குனிந்து கொண்டு வீட்டை விட்டு வெளியேறினான்.

மார்கழி மாத முற்பகுதியில் ஆசிரியகலாசாலைப் பயிற்சிக்கான அழைப்புக் கடிதம் தாமோதரத்துக்கு வந்தது. தாமோதரத்துக்கு அது அத்தனை பிடிப்பாக இல்லை. பட்டதாரி ஆவதைப்பற்றியே அவன் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

ஆனாலும் சின்னத்தம்பி ஆசிரியர் அவனை விடவில்லை ''பட்டதாரியாக ஆவதை விட விஞ்ஞானப்பாடத்திற் பயிற்றப்பட்ட ஆசிரியராவது மேலானது என்றே எனக்குப்படுகிறது. மேலும் பலாலிக்குச் சென்றால் வெளிவாரிப்பட்டப்படிப்பிற்கும் ஆயத்தம் பண்ணலாம்'' என்று அவனுக்கு உபதேசம் செய்தார்.

அவன் உபதேசம் பெறுகையில் சௌந்தரம் கிண்ணியா மகாவித்தியாலயத்தில் எஸ். எஸ். சி. சோதனை எழுதிக் கொண்டிருந்தாள்.

தை பிறந்த போது தாமோதரம் பலாலிக்குப் புறப்பட்டான். மாரிமழையில் கரைச்சை கள் நிரம்பி வழிந்தன. கட்டையாற்று மதகுக்கு மேலால் ஓடைத் தண்ணீர் கரைபுண்டது. பாடசாலைக்குப் போகும் வழியில் கோணாமலைக் கிழவர் வீட்டு நாவல் மரத்தடியில் முழங்காலளவு தண்ணீர் தேங்கி நின்றது. மாரித்தவளையின் சப்தம் இரவிலே கர்ணகடூரமாகக் கேட்டது.

யாழ்ப்பாணம் புறப்பட முன்னர் தாமோதரம் தன் மாமனார் வீட்டுக்குப் போனான். செல்லையாவிற்குத் தாமோதரத்துக்கும் தன் மகளுக்குமிடையில் ஏற்பட்ட வாக்குவாதமோ தம் மகளின் சபதமோ எதுவுமே தெரியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மருமகனை வரவேற்ற அவர் ''இரண்டு ஆண்டுகள் தானே. பாத்திருக்கப் போயிரும். பத்திரமாய் போய்வா தம்பி'' என்று அவனை வழியனுப்பினார்.

ஆனாலும் தாமோதரம் உடனடியாகப் போய்விடவில்லை.

அவன் சௌந்தரத்தைத்தான் காத்துக் கொண்டு நிற்கிறான் என்பதையுணர்ந்து கொண்ட செல்லையா அவ்விடத்தை விட்டெழுந்து பின்பக்கமாகச் சென்றார்.

நிமிடங்கள் பல கடந்தும் சௌந்தரம் வரவில்லை. காத்துக்கொண்டிருந்த தாமோதரம் அங்கு தற்செயலாக வந்த தன் தங்கையிடம் ''மச்சாள் இல்லியா? என்று கேட்டான்.''

''குசினிக்க இருக்காள் அண்ணா''

''போய் வரச்சொல்லடி''

''அவ வரமாட்டா அண்ணா. உங்களோட கோபமாம்'' என்றாள் இந்திராணி.

தாமோதரம் பின்பக்கமாகச் சென்று அவளைக் கூப்பிடுவோமா என்று எண்ணினான். ஆனாலும் அது அவனுக்குக் கௌரவக் குறைச்சலாகவும் பட்டது.

அவன் யோசித்துக் கொண்டிருக்கையிலே சௌந்தரம் அவள் முன்னாள் பிரஸன்னமானாள். ஒரு வார்த்தையும் பேசாதவளாய் அவன் முன் அகோவியமாக நின்றாள்.

''பேசமாட்டாயா?'' தாமோதரம் கேட்டாள்.

சௌந்தரம் மௌனித்தே நின்றாள்.

அவளது மௌனம் தாமோதரத்திற்கு ஆத்திரத்தைக் கொடுத்தது. ''இவ்வளவு பிடிவாதமா?'' என்று சொல்லிக் கொண்டே அவளது கையைப் பற்றினான்.

மாரிகாலத்தே மணற் காட்டிலே திடீரென முளைத்த செங்காந்தள் என்று தெரிந்து கொள்ளப்படாமலே சிவந்திருக்கும் கார்த்திகைப்பூப் போன்ற அவள் விரல்களையும் உள்ளங்கையையும் மெதுவாக வருடினான்.

அவள் அவனைத் தடுக்கவில்லை. அவனது ஸ்பரிசத்தை ரசித்தவளாக அவள் நின்றாள். உதடுகள் அவனோடு ஆயிரம் ஆயிரம் பேச வேண்டும் என்று துடித்தன. ஆனால் வார்த்தைகள் வெளிவரவில்லை.

அவள் என்ன சொல்கிறாள் என்பதை அவள் கண்களிலிந்து படித்துக்கொண்ட தாமோதரம் அவள் கைகளை முத்தமிட்டுவிட்டு ''நான் போய் வருகிறேன்'' என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் சொல்லிவிட்டுப் புறப்பட்டான். தெருப்படலை வரை வந்து வழியனுப்பினாலும் சௌந்தரம் தன் வாயைத் திறக்கவேயில்லை.

காலம் ஓடிக்கொண்டிருந்தது. எஸ்.எஸ்.சியிற் திறைமையாக சித்தியடைந்தாள். ஆனால் அதனைக் கூட அவள் தாமோதரத்திற்கு அறிவிக்கவில்லை. பாலாதான் அதை அவனுக்கு அறிவித்து அவளுக்கும் விரைவில் ஆசிரியப்பதவி கிடைக்கும் என நம்பிக்கை தெரிவித்திருந்தான்.

ஆனி பிறந்தபோது வழமை போல ஆதிகோணைநயகர் விழாக் கொண்டாடினார். ஆனாலும் தாமோதரத்துக்கு முன்னையதைப்போல அவ் விழாவிற் சிரத்தை இருக்கவில்லை. பலாலியிலிருந்து அவன் வரவேயில்லை.

ஆடிமாதம் பிறந்தபோது ஊரிலே மிக முக்கியமான சம்பவம் ஒன்று நடந்தது. இருபது ஆண்டுகளாகப் பாடசாலைத் தலைமையாசிரியராக இருந்த சின்னத்தம்பி ஊருக்கு மாறிப் போக இருந்தார். ஊரோட மாற்றம் என்ற தமிழாசிரியரின் ''ஜீவன்முக்தி'' இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் அவருக்குச் சித்தித்தது. அதுவும் பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்ததால்.

அவரது பிரியாவிடை விழாவிற்கு தாமோதரமும் விடுதலை வாங்கிக் கொண்டு வந்திருந்தான். ஊரே ஒருமித்துத் திரண்டு ஒரு வாரகாலமாக அவருக்கு ஒரு மாபெரும் பிரியாவிடையை விழாவாகவே நடத்திற்று.

அந்தப் பிரியாவிடை விழாவிலே சின்னத்தம்பி ஆசிரியர் ''நான் இங்கே வந்தபோது இங்கே நான்கே நான்கு ஆசிரியர்கள். எவருமே ஊரவர் இல்லை. அன்றைக்கிருந்த ஓலைக் கொட்டிலைக் கற்கட்டிடமாக்கினேன் உங்களின் உதவியுடன். இப்போது இங்கே இரண்டு மண்டபங்கள் இருக்கின்றன. பதினான்கு ஆசிரியர்கள் இருக்கிறார்கள். எல்லாருமே இவ்வூரவர்கள். அவர்களை உருவாக்க இருபது ஆண்டுகள் எடுத்தன. இன்னும் சில வருடங்களில் இங்கே பல பட்டதாரிகள் இருப்பார்கள். டாக்டரும் என்ஜினியரும் கூட வருவார்கள். ஆசிரியர்கள் மட்டுமல்ல பல உத்தியோகங்களிலும் என் மாணவர்கள் இருப்பார்கள். இந்த நிலையை அடைய இருபது ஆண்டுகள் காத்திருந்தேன். இப் பாடசாலையின் ஆசிரியர்களுக்கும் நான் ''காத்திருங்கள்'' என்ற மந்திரத்தைத் தான் உபதேசிக்கிறேன். ஆம், காத்திருப்பதிலேதான் இவ்வூரின் முன்னேற்றமே இருக்கிறது. இக் கிராமத்து இளைஞர்கள் காத்திருப்பதில்லை. இளம் வயதிலேயே வாழ்க்கையை அனுபவிக்கத் தொடங்கிக் கஷ்டப்படுகிறார்கள். இதுதான் இவ்வூரின் முக்கிய குறைபாடு'' என்று கூறினார். அவரின் பேச்சை அவ்வூர் இளைஞர்கள் புரிந்து கொண்டார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில் சௌந்தரம் ஈச்சந்தீவு பாடசாலையில் ஆசிரியை ஆனாள். அதன் ஞாபகார்த்தமாகத் தாமோதரம் அவளுக்கு ஒரு நூலைப் பரிசாக அனுப்பியிருந்தான்.

நேருவின் இளைய சகோதரி கிருஷ்ணாவின் சுய சரித்திரமே அந்நூல். ''விதி என்ன செய்யும்?'' என்ற தலைப்பில் அந்நூல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருந்தது. அந்நூலின் ஒரு அத்தியாயத்தின் தலைப்பில் ''இதைக் கருத்தாகப் படிக்கவும்'' எனத் தாமோதரம் குறிப்பிட்டிருந்தான். சௌந்தரம் அந்த நூலையும் விசேடமாக அவன் குறிப்பிட்டிருந்த பகுதியையும் ஆர்வத்தோடு படித்தாள்.

இளவயதினளான கிருஷ்ணா காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம் ஒன்றிற்குத் தன் சகோதரனுடன் சென்றிருந்தாள். அங்கே ராஜா ஹத்திசிங் என்ற இளைஞனைச் சந்திக்கின்றாள். அவனில் காதல் கொள்கிறாள். இருவருமே காதலிக்கிறார்கள்.

ஊருக்கு மீண்ட சில நாட்களில் கிருஷ்ணா தன் சகோதரனுக்கு தன் மனதைத் திறந்து காட்டினாள். நேருஜிக்கு எவ்வளவோ ராஜீய அலுவல்கள். இந்த விவகாரத்தைக் கவனிக்க அவருக்கு நேரமேயில்லை.

சில மாதங்கள் கழிந்த பின்னர் தன் தங்கையிடம் ''நான் அவனைப் பற்றி அறிய வேண்டும்'' என்று மட்டும் சொன்னார்.

கிருஷ்ணா இதைத் தன் காதலனுக்கு அறிவித்திருந்தாள். ராஜா ஹத்திசிங் சற்றுக் குறும்பன். குறும்புத்தனமாக நேருவுக்குத் தன்னைப் பற்றி எழுதினான். வயது, நிறம், உயரம், நிறை, மார்புச் சுற்றளவு போன்ற பல விடயங்களைக் குறிப்பிட்ட காதலன் இறுதியில் தொழில் வேலையில்லாத வக்கீல் என்றும் இனிச் செய்ய இருப்பது அரசியலிற் சேர்ந்து அலைக்கழிவது என்றும் குறிப்பிட்டிருந்தான்.

இதை வாசித்த நேருவுக்கு மூக்குக்கு மேலே கோபம் வந்து விட்டது. இயல்பாகவே அவர் முன்கோபி, தனக்கு வந்த கோபத்திற்கு தங்கையை அழைத்து ''இந்தக் குறும்பனுக்கு உன்னை மனைவியாக்க என் சம்மதம் கிடைக்காது'' என்று ஆத்திரத்தோடு சொன்னார்.

கிருஷ்ணா பதட்டமடையவில்லை. ஆத்திரப்படவுமில்லை. அவள் காத்திருந் தாள். ஒன்றிரண்டு ஆண்டுகளல்ல. பன்னிரண்டு ஆண்டுகள் காத்திருந்தாள். கடைசியாய் நேருஜி தன் தங்கைக்கு அவள் காதலனான அந்தக் குறும்பன் ராஜா ஹத்திசிங்கையே மணம் முடித்து வைத்தார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இதைக் கூர்ந்து படித்த சௌந்தரம் 'கிருஷ்ணா நேருவால் மட்டுமல்ல, என்னாலும் காத்திருக்க முடியும். பன்னிரண்டு ஆண்டுகள் அல்ல யுகம் யுகாந்திரமாகக் காத்திருக்க முடியும்' என இரத்தினச் சுருக்கமாக எழுதித் தன் கடிதத்தை எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உம்மோடு உற்றோமேயாவோம். உமக்கே நாமன்பு செய்வோம்' என்ற பாசுர அடிகளுடன் முடிந்திருந்தாள்.

## பின்னுரை

**முப்பது ஆண்டுகள் கடந்து விட்டன. இப்போது ஆலங்கேணி வெண்மணற் கிராமம் எங்கே? அவ்வூருக்கு அறிவொளி பரப்பிய பாடசாலை எங்கே? அருள்சுரந்த பிள்ளையார் கோயில் எங்கே? நிழல் கவித்து நின்ற பனிச்சை மரம் எங்கே? மாமரங்களும், தென்னைகளும் எங்கே? எருமைப் பாலின் நறுமணம் வீசும் குடிசைகளும் எங்கே?**

**ஆசிரியர்கள் மட்டுமல்ல பட்டதாரிகள், டாக்டர்கள் என்ஜினியர்கள், கல்வி அதிகாரிகள், விவசாயிகள் என்ற எல்லாருமே அன்னிய ஊர்களிலும் அகதி முகாம்களிலும் வாழ்ந்து கொண்டு தங்கள் அழகான வெண்மணற் கிராமத்திற்கு எப்போது செல்வோம் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள்.**

**ஆம், காத்துக் கொண்டேயிருக்கிறார்கள்! எப்போ அவர்கள் தங்களது வெண்மணற் கிராமத்துக்குப் போவார்கள் என்பதை அவர்களின் தோன்றாத் துணையான ஆதிகோணை நாயகரே அறிவார்.**

**நிறைந்தது.**

★ ★ ★ ★ ★


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அருஞ்பதங்கள்/ பேச்சுவழக்கு

**புளியாணம்** - புளிக்குழம்பு

**துலாம்பரம்** - வெளிப்படை

**அசமந்து** - மந்தமாக / சுறுசுறுப்பில்லாமல்

**மகா யக்ஞம்** - பெரிய யாகம் / பெரிய தவம்

**மானாவாரி** - மழையின் மூலம் கிடைக்கும் விளைச்சல்

**பட்டி** - ஆடு மாடு என்பவற்றின் தொகுதி / அவற்றை அடைக்கும் இடம்

**பூதாக்கலம்** - மணமகனுக்கு மணமகள் முதல் முறையாகச் சோறு கொடுப்பது

**படலை** - ஓலை, மட்டை என்பவற்றினால் அமைக்கப்பட்டு வேலியோடு பொருத்தப் பட்டிருக்கும் கதவு

## மையக் கருத்து

பின்தங்கிய கிராமங்களின் முன்னேற்றத்திற்கான பாதையாக கல்வி அமைகின்றது. அதுவே தனி மனிதர்களின் முன்னேற்றத்திற்கும் சமூகத்தின் வளர்ச்சிக்கும் வழிவகுக்கும்.

## துணைக் கருத்து

- பெண்கல்வியின் அவசியம் ; கிராமங்களில் காணப்பட்ட, பெண்களின் கல்வியை இடைநிறுத்தும் வழக்கத்தை மாற்றிப் பெண்களும் கல்வி பெறவேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றது.
- மனிதர்களின் மெல்லிய உணர்வுகளையும் வாழ்க்கைப் போராட்டத்தையும் பிரதிபலிக்கின்றது.
- மென்மையான காதலையும் கடமைக்காகக் காதலைத் தியாகிக்கத் துணியும் மனப்பான்மையையும் காதலுக்கான காத்திருப்பையும் பேசுகிறது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- கிராமங்களின் அழகையும் குடும்பங்களின் எளிமையான வாழ்வியல் முறைமை களையும் வெளிப்படுத்துகிறது.
- கிராமங்களில் குடும்ப உறவுகளுக்கிடையேயான அன்னியோன்னியத்தையும் உறவாடும் முறைமையையும் வெளிப்படுத்துகிறது.
- கிராமங்களின் முன்னேற்றத்தில் உடலுழைப்பின் பங்கினையும் முன்னிறுத் துகின்றது.
- இளவயதுத் திருமணங்களின் விளைவு - இளவயதில் திருமணம் செய்வதால் வாழ்க்கை முழுவதும் கஷ்டப்பட வேண்டிய நிலையினை எடுத்துக் காட்டுகின்றது.
- ஒருவரது மரணம் ஏற்படுத்தக்கூடிய பாதிப்பு - ஒருவரது மரணம் அவரோடு தொடர்புபட்டவர்களைப் பாதித்து, வாழ்க்கையைப் புரட்டிப்போடும் முறையை சித்திரிக்கின்றது.

## கதைக்களம்

- தனது தனித்துவத்தையும் எழிலையும் இழந்துவிடாத, நவநாகரிக வளர்ச்சி பெறாத ஆலங்கேணிக் கிராமமே இந்நாவலின் பிரதான கதை நிகழ்களமாகும்.
- தம்பலகாமம், நெல்லியடி ஆகிய கிராமங்களும் கதை நிகழ்களங்களாக அமைகின்றன.

## கதைப்பின்னனி

- நாவலாசிரியரின் வாக்குமூலத்தின்படி ஆலங்கேணிப் பாடசாலையில் தலைமை யாசிரியராகப் பணியாற்றிய நெல்லியடியைச் சேர்ந்த சின்னத்தம்பி (அதே பெயரையுடைய) உண்மைப்பாத்திரம். உண்மைச் சம்பவங்களையும் கற்பனை யான அழகுபடுத்தல்களையும் சித்திரிப்புக்களையும் கொண்டு எழுதப்பட்டதே இந்த நாவலாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாத்திர வார்ப்பு

- நாவலின் பிரதான கதாபாத்திரம் தாமோதரம். ஏனைய கதாபாத்திரங்கள் தாமோதரத்தோடு தொடர்புபட்ட வகையில் படைக்கப்பட்டுள்ளன.

  - தலைமை ஆசிரியர் சின்னத்தம்பி
  - மாமன் மகள் செளந்தரம்
  - தந்தை மயில்வாகனம்
  - தாய் தெய்வானை
  - அண்ணன் நாகேந்திரம்
  - தாய்மாமன் செல்லையா
  - மாமி அபிராமி
  - நண்பர்கள்
    - பாலன்
    - பரமன்
    - சின்னவன்
    - தங்கராசன்
    - அம்பலவாணன்
  - பாலனின் மச்சாள் இலச்சுமி
  - தாய்வழிப் பூட்டன் கோணமலைக் கிழவர்
  - தம்பலகாமத்து மாமியார் இராசம்மா
  - பெரிய மாமா
  - மச்சான் தம்பிராசா
  - இங்கிலீஸ் வாத்தியார்
  - தாமோதரத்தின் தம்பிமார் (இருவர்)
  - தாமோதரத்தின் தங்கை
  - பிரதேச பாராளுமன்ற உறுப்பினர்
  - தம்பலகாமத்து மாமா வீட்டு வயலில் வேலை செய்யும் வேலையாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாமோதரம்**

- நாவலின் பிரதான பாத்திரம்.
- கல்வியில் ஆர்வமும் கடின உழைப்பும் உடையவன்.
- தந்தையின் திடீர் மரணத்தால் தன் இலட்சியத்தை / ஆசையை அடைய முடியாது தவறவிட்டவன். இருப்பினும் கடின உழைப்பால் ஆசிரியரானவன்.
- தனக்குக் கிடைக்காத உயர்கல்வி வாய்ப்புத் தனது சகோதரர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக உழைப்பதோடு, தனது காதலையும் தியாகம் செய்ய முன்வந்தவன்.
- குடும்பத்தினர் மீது பாசமும் மரியாதையும் உடையவன்.
- பெண்கள், கல்வி கற்க வேண்டும் என்ற கொள்கை உடையவன்.
- தலைமைத்துவப் பண்பு மிக்கவன், பிறரது நல்லபிப்பிராயத்தைத் தனதாக்கியவன்.

**சௌந்தரம்**

- தாமோதரத்தின் மாமன் மகள்.
- தாமோதரத்துடன் சிறுவயது முதல் பழகி, பின்பு காதல் வயப்பட்டவள்.
- எட்டாம் வகுப்பிற்குமேல் பாடசாலைக்கு அனுப்ப தந்தை மறுத்தமையால் கல்வியை இடைநிறுத்தியவள்.
- ஆரம்பத்தில் கல்வியில் ஆர்வமற்றவளாக இருந்தாலும் பின்னர் தாமோதரத்தின் வற்புறுத்தலால் போராடி, கல்வி கற்று ஆசிரியையானவள்.
- உறுதியான காதலால் தாமோதரத்திற்காகக் காத்திருக்கும் பொறுமை மிக்கவள்.
- சுயகௌரவமும் தன்மான உணர்வும் மிக்கவள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைமை ஆசிரியர் சின்னத்தம்பி**

- அர்ப்பணிப்பும் அயரா உழைப்பும் பொறுமையுமுடைய பாத்திரம்.
- மாணவர்கள் மீது அன்பும் அவர்களது முன்னேற்றத்தில் அக்கறையும் உடையவர்.
- மாணவரது முன்னேற்றத்தைக் கண்டு மகிழ்ச்சி கொள்பவர்.
- கல்விக்கூடாக சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் முனைப்புடையவர்.
- ஆற்றலும் ஆளுமையும் நிறைந்தவர்.

**மயில்வாகனம் (தந்தை)**

- கடின உழைப்பாளி.
- கண்டிப்பும் பற்றுறுதியும் உடையவர்.
- அமைதியானவர்.
- உறவினர்களோடு சிறந்த உறவைப் பேணுபவர்.

**தெய்வானை (தாய்)**

- பொறுப்பான குடும்பத் தலைவி.
- இடைவிடாத முயற்சியும் உழைப்பும் உடையவர்.
- உறவினர்கள், ஊரவர்களோடு அன்பாகப் பழகுபவர்.
- பிள்ளைகளிடம் அன்பும் அக்கறையும் கொண்டிருந்தாலும் கணக்கு வழக்கு விடயத்தில் கண்டிப்பானவர்.
- சிறந்த தாய்மைப் பண்புடையவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாகேந்திரம் (அண்ணன்)**

- இளமையில் விட்ட தவறினால் (அவசரப்பட்டு திருமணம் செய்தமையால்) வாழ்வில் பல கஷ்டங்களை அனுபவிப்பவன்.
- கஷ்டப்பட்டு உழைக்க வேண்டிய நிலையில் இருப்பவன்.
- பெற்றோர்மீது மரியாதையும் குடும்பத்தினர்மீது பாசமும் கொண்டவன்.
- தந்தையின் மரணத்தின் பின் குடும்பப் பொறுப்புகளைச் சுமக்க வேண்டும் என்ற முனைப்பை வெளிக்காட்டுபவன்.

**செல்லையா (தாய்மாமன்)**

- பொறுப்புணர்வுள்ள குடும்பத் தலைவர்.
- பெண்பிள்ளைகளை, குறித்த வயதிற்குப் பின்னர் பாடசாலைக்கு அனுப்புவதில்லை என்ற கருத்தினையுடையவர்.
- மகளின் பிடிவாதத்தாலும் மருமகனுக்கிருந்த விருப்பாலும் அவளைத் தொடர்ந்தும் பாடசாலைக்குச் செல்ல அனுமதித்தவர்.
- பிள்ளைகள்மீதும் உறவினர்கள்மீதும் அன்புடையவர்.
- பிறரை மதித்து நடப்பவர்.

**பரமன்**

- அரசியல் ஈடுபாடுடைய பாத்திரம்.
- போலியான / ஆடம்பரமான செயற்பாடுகளின்மீது அதிக ஈடுபாடு காட்டுபவன்.
- செலவு செய்வதில் தாராளமானவன்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**பாலா**

- கல்வியில் திறமையை வெளிப்படுத்தாதவன்/ கல்வியை இடை நிறுத்தியவன்.
- பெண்கள் கல்வி கற்பதை விரும்பாதவன்.
- தனது தேவைக்காக எத்தகைய அவதூறுகளைப் பரப்பவும் தயங்காதவன்.
- இறுதியில் தன்னைத் திருத்தி, கொள்கையை மாற்றிக் கொண்டவன்.

## எடுத்துரைப்பு முறை

- கதாசிரியரின் கூற்றாகவும் / சித்திரிப்பாகவும் இந்நாவல் அமைந்துள்ளது. தேவைக்கேற்ப பாத்திர உரையாடல்களினூடாகவும் கதை நகர்த்தப்படுகிறது.
- கிராமிய எழிலையும் இயல்பையும் வெளிப்படுத்தும் வகையிலும் மனித உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையிலும் பொருத்தமான முறையில் வர்ண னைகள் கையாளப்பட்டுள்ளன.
- கதைக்கருவுக்கு ஏற்றவகையில் பாத்திரங்கள் படைக்கப்பட்டு அவற்றின் ஒத்திசைவுகள், முரண்பாடுகள் ஆகியனவற்றின் ஊடாக மையக்கருத்து வெளிப்படும் வண்ணம் கதை கூறப்படுகிறது.
- நாவலின் சாராம்சம், ஆலங்கேணிக் கிராமத்தில் நடைபெற்ற பிரியாவிடை வைபவத்தில் சின்னத்தம்பி ஆசிரியரை உரையாற்ற வைத்ததனூடாக வெளிப் படுத்தப்படுகிறது.

## மொழிநடை

- கதையோட்டத்திற்கும் பாத்திரங்களின் இயல்புகளிற்கும் பொருத்தமான முறையிலமைந்த மொழியாட்சி.
- இலகுவாகப் புரிந்துகொள்ளத்தக்க வகையில் சிறிய தொடர்களில் அமைந்த வாக்கியங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கதைசொல்லியின் கூற்றுக்கள் நியமத் தமிழிலும் பாத்திர உரையாடல்கள் மூதூர்ப் பிரதேச பேச்சுத் தமிழிலும் அமைந்துள்ளன.
- வர்ணனை, காட்சிப்படுத்தல் என்பனவற்றிற்கும் ஏற்ற விதமான மொழிக் கையாட்சி.

## கதைப்பின்னல்

- நாவலின் பிரதான பாத்திரம் (கதாநாயகன்) தாமோதரம். நெல்லியடியில் படித்துக் கொண்டிருக்கும் அவன் ஆலங்கேணிக் கிராமத்திற்கு விடுமுறைக்காக வருவ திலிருந்து கதை ஆரம்பமாகிறது.
- படிப்படியாகப் பாத்திரங்களும் சூழலும் சம்பவங்களும் அறிமுகப்படுத் தப்பட்டு கதை நகர்த்தப்படுகிறது.
- வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு கல்வியின் வளர்ச்சி இன்றியமையாதது என்பதை வலியுறுத்தும் விதமாகவும் பெண் கல்வியின் அவசியத்தை எடுத்துக் காட்டுவதாகவும் கதை பின்னப்பட்டிருந்தாலும் ஆரம்பம் முதல் இறுதிவரை மென்மையான காதலுணர்வுகள் வெளிப்படும் வகையில் கதை வளர்க்கப்படுகிறது.
- கதையின் திருப்பு மையமாக தாமோதரத்தின் தந்தையின் மரணம் அமைந்து விடுகிறது.
- இறுதியில் தாமோதரம் தனது இலட்சியத்தை அடையமுடியாவிட்டாலும் ஆசிரியராகிறான். சௌந்தரமும் ஆசிரியை ஆகின்றாள். இவர்கள் இருவருமே கடமைகளை நிறைவேற்றிய பின்னர்தான், தாம் இணையலாம் எனக் காத்திருப்பதாகக் கதை முடிவடைகிறது.
- தாமோதரம், சௌந்தரம் ஆகிய இருவரது காத்திருப்பை கிருஸ்ணாநேருவின் காத்திருப்போடு தொடர்புபடுத்திக் கதையை நிறைவு செய்திருப்பது சிறப்பானது.
- பின்னுரையில், கதை நிகழ்ந்து முப்பது ஆண்டுகள் கடந்த நிலையில் கல்வியின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி இருந்தாலும் இடப்பெயர்வின் விளைவாக ஊர் திரும்பும் விருப்புடனான காத்திருப்பு எடுத்துக்காட்டப்படுகிறது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கற்றல் வினாக்கள்

1. ஆலங்கேணிக் கிராமமக்களின் வாழ்வியல் அம்சங்கள் நாவலில் சித்திரிக் கப்படுமாற்றினை விபரிக்குக.

2. சின்னத்தம்பி வாத்தியார் என்னும் பாத்திரம் நாவலில் பெறும் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.

3. 'ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது' எனும் தலைப்பு நாவலின் கதைப்போக்குடன் பொருந்துமாற்றைத் தெளிவுபடுத்துக.

4. 'உலகிலேயே முதலாவது பெண் பிரதமரை இந்த நாடு பெற்றெடுத்திருக்கிறது. ஆனால் அப்பெண் பிரதமரின் நாட்டுப் பெண்களுக்கு எட்டாம் வகுப்புக்கு மேலே படிக்க விருப்பமில்லை'

   'என்னத்தைப் பேசுகிறது? உன்ர மச்சாள் மட்டும் படிக்காம வீட்டோட இருக்கச் சொல்லியிருக்கா என்ர மச்சாளையும் அப்படியிரு என்று சொன்னாற் குற்றமா? பாப்பம் இனி அவள் பள்ளிக்குப் போற சமத்த'

   மேற்குறித்த கூற்றுக்களில் பாத்திரங்களின் மனோநிலைகள் வெளிப்படு மாற்றினை விளக்குக.

5. 'வேறுபடும் குணவியல்புகளையும் கொள்கைகளையும் உடைய பாத்திரங்களை இந்த நாவல் கொண்டுள்ளது' இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுக.

6. 'நாவலின் கதையோட்டத்திற்கு இயைபாக இயற்கைஎ்ய வர்ணிப்பதில் வ. அ இராசரத்தினம் கைதேர்ந்தவர்' ஆராய்க.

7. சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் அவர்கள் பெறும் இடத்தினையும் இந்நாவல் எவ்வாறு வெளிப்படுத்துகிறது, ஆராய்க.

8. நாவலின் பிரதான வெளிப்பாட்டு விடயமாகக் காதலைக் கொள்வது பொருத்த மானதா, உமது விடைக்கான காரணத்தைத் தெளிவுபடுத்துக.


9. பிரதேச நாவலின் பண்புகள், இந்நாவலில் புலப்படுமாற்றினை விளக்குக.

10. 'சமூக மாற்றத்தில் கல்வியே பெரும் பங்கு வகிக்கின்றது' நடைமுறை அனுபவங்களை முன்வைத்து ஆராய்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ISBN 978-955-25-0569-0
P01
3020037
A/L TAMIL DRAMA LITERA: -12/13
Rs. 230.00

නූතන දෙමළ ප්‍රබන්ධ හා නාට්‍ය සාහිත්‍ය (දෙ.)

2020 / T / අති / 5-2 / 4000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org